

# கிருஷ்ண பக்தி

அல்லது

# குணமணி.


ஆசிரியை,

கும்பகோணம் K. வெங்கட்டராமய்யர் குமாரியும்,

K. V. கிருஷ்ணன் சகோதரியுமான

ஸ்ரீமதி K. V. நாகமணி.



கும்பகோணம்,

கிருஷ்ணமணி பிரசுராலயத்தாரால்

பிரசுரிக்கப்பட்டது.

PRINTED AT THE SRI KALANIDHI PRESS, KUMBAKONAM.

1940.


காபிரைட் ரிஜிஸ்டர்.]

[விலை அணா 12.

# முகவுரை.

கிருஷ்ணபக்தி அல்லது குணமணி என்னும் புத்தகம் முழுவதையும் படித்தேன்; இது, தன் பெய நுக்கேற்ப அழகிய முறையில் அமைந்து விளங்குகிறது; ஒரு குடும்பவாழ்க்கையின் தொடர்பைக்கொண்டு உலகப் போக்கைத் தம்மால் இயன்ற அளவு இப்புத்தகத்தின் ஆசிரியர் விளக்கியிருக்கிறர்; இப்புத்தகம், தன்னை முழுவதும் வாசிக்கச்செய்யுந் தன்மை பெற்றதாய்த் திகழ்கின்றது; நம் பாரதபூமி அதனிலும் நம் தமிழ்நாடு நல்லறிவு மிக்க மேல்லியலாரைப் பெற்று விளங்குவதென்பதற்கு இப்புத்தகத்தை எழுதியவர் ஓர் உதாரணமாவர்; இப்பதிப்பிலே எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை முதலியவை காணப்படுகின்றன; இவை இரண்டாம் பதிப்பு வெளிவரும்போது நீக்கப்பட்டுவிடுமென்று நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை எம் தமிழ் மக்கள் நன்கு ஆதரித்து, இதனை எழுதியவருக்கு மிக்க ஊக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

இங்ஙனம்,

8-5-1940.
9, வராகக் குளம்
வடகரை.

பி. ஸ்ரீநிவாஸய்யன்,
தமிழ் ஆசிரியன்,
நேட்டிவ் ஹைஸ்கூல்,
கும்பகோணம்.

# அபிப்பிராயம்.

இந்நூல், நம் நாட்டின் இக்காலச் சமூக வாழ்க்கையிற் காணப்பெறும் இன்னல்களிற் சிலவற்றைத் தெற்றென விளக்கிக்காட்டுவதுடன் மனமொழி மெய்கள் ஒரு வழிப்படக் கடவுண்மாட்டுத் தைலதாரைப்போன்று இடையறாத பக்திபூண்டு ஒழுகுவோர்க்கு இக்காலத்தும் இறைவன் இன்னருள் சுரந்தருள்வான் என்னும் உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளமை பாராட்டற்பாலதாம். நம் சமயச் சார்பினும் தெய்வபக்தியினும் நம்நாட்டுப் பெண்மணிகள் ஆடவர்களுக்கொப்ப முன்னணியில் வைத்து எண்ணத்தக்க பெருமைவாய்ந்தவர்கள் என்பதற்கு அறிகுறியாய் இச்சரித சம்பந்தமான தலைவியர்கள் விளங்குவது மற்றுமொரு சிறப்புடைத்தென்னலாம்.

இந்நூல், இவ்வாசிரியையின் முதற் பிரசுரமான கன்னி முயற்சியாதலின், இதனைத் தொடர்ந்து இவர் இனி வெளியிடும் நூல்கள் மேலும் பல திருத்தமுற்றுச் சிறப்புடன் மிளிருமென நம்புகிறேன்.

KUMBAKONAM,
8—5—40.

L. SRINIVASAN,
Tamil Pandit,
Government College.

உ

# முன்னுரை

பக்த வத்ஸலன் எனப் பெயர்பூண்ட எம்பெருமான் அனேக பக்தர்களை அனேக விதமாய்ப் பரிபாலித்த பிரபு, அறிவிலும், வயதிலும் சிறுமியாகிய என்பால் அன்பு கூர்ந்து, இக்கதையை எழுதும்படி அருள்புரிந்த என் குரு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திருவடிக் கமலங்களில் என் மனப்பூர்வமான த்யானத்துடன் இக்கதையைச் சமர்ப்பிக்கிறேன்.

இக்கதையில் வார்த்தைகளில் ஏதேனும் பிசகுகளிருந்தபோதிலும், வாசகர்கள் அதை அதிகமாகக் கவனியாது இதிலுள்ள அர்த்தசாரங்களை மட்டும் உட்கொள்ளக் கோருகிறேன். நாஸ்திகம் தாண்டவமாடும் இக்காலத்தில் அன்பர்களனைவரும் இப்புத்தகத்தைப் படித்தால் நல்லுணர்ச்சி பெருகி, நாஸ்திகரும் ஆஸ்திகராய் முன்னேற்றமடைந்து கடவுளின் கருணைக்குப் பாத்திரர்களாவார்களென நம்புகிறேன்.

சிறுமியாகிய என்னால் இயற்றப்பட்ட இக்கதையின் மீது மிக்க அன்போடு முகவுரையும், மதிப்புரையும் எழுதி ஆதரித்த கனம் தமிழாசிரியர்கள் அவர்களுக்கு என் மனமார்ந்த நமஸ்காரம் உரித்தாகுக.

கும்பகோணம்,
8—5—40.

இங்ஙனம்,
K. V. நாகமணி.

உ

கடவுள் துணை.

# "கிருஷ்ண பக்தி"

அல்லது

# "குணமணி"

## அத்தியாயம் 1.

### மணிகளின் உதயம் – பிரகாசத்தின் சந்திப்பு.

பூவுலக வைகுண்டமென்று பல புராணங்களிலும் சகல பெரியோர்களாலும் புகழப்பெற்று ஸ்ரீ பத்மநாப க்ஷேத்திரமென்று கீர்த்திவாய்ந்து விளங்கும் திருவனந்தபுர வாசியானவும், தர்மம், தானம், தயை, தாக்ஷண்யம், துணம், ஈவு, இரக்கம், பச்சாத்தாபம், அஹிம்ஸை முதலிய தர்மங்களைத் தன் ஆதீனமாகக் கொண்ட தனவந்தரும், சத்ய சந்தருமான நித்யதர்மப் பிரபுவின் மாளிகையில் அன்னக்கொடி பறக்க, வந்த வந்த பேர்களுக்கெல்லாம் ஆசார உபசாரத்தோடும், பக்தி விஸ்வாசத்தோடும், பஞ்சபக்ஷ பரமான சகிதமோடு போஜனமளித்துத் தாம்பூலம் கொடுத்து திருப்தி செய்வித்த பிறகுதான், தான் போஜனம் செய்வார். அவரது மனைவி ஸத்ய ரூபியும் நற்குணம், சாந்தம், பொறுமை, சத்யம் இவைகளைக் கைக்கொண்டு, பதி-பக்தியைப் பூஷணமாக அணிந்து கொண்டிருப்பதுடன், பர்த்தாவின் வார்த்தைக்கு பதில்கூறு மனத்தினையுடையவளாயிருந்தாள். எள்ளென்பதற்குமுன் எண்ணெயாய்

நிற்பாள். குனிந்த தலை நிமிராள். பதியின் பணிவிடைசெய்ய கொஞ்சமேனும் அஞ்சாள். இறைந்தொரு வார்த்தை பேசாள். சௌந்தர்யத்தில் மஹாலெக்ஷ்மியைப்போன்றவள். சைதன்ய பிரபுவாகிய ஸ்ரீ கிருஷ்ண பக்தியிலீடுபட்டு அவர் புகழைப் பாடிக்கொண்டாடி, எக்காலமும் பரமானந்த சாகரத்தில்மூழ்கி கற்பின் சக்ரவர்த்தினியாய் இலங்கினாள்.

சுக்கிலபக்ஷ சந்திரன்போல சதிபதி இருவரும் மங்காது விளங்குங்கால், சந்ததி இல்லாக் குறையினால் வருந்தி, மனம் நொந்து, அநேக தான தர்மங்கள் செய்து வந்தனர். கோயில் குளம் முதலியனவும் கட்டி வைத்தார்கள். தினப் பொழுதும் தீன சரண்யன் திருவடியை மறவாதிருந்தார்கள்.

இப்படியிருக்க, தேவாதி தேவனான ஸ்ரீமந் நாராயணரின் திருவருளால், ஸத்யரூபியின் கர்ப்பத்தினின்றும் அதி சௌந்தர்யமுள்ள ஓர் புதல்வி பிறந்தாள். செந்தாமரையை யொத்த பாதமும், நீர்ச்சுழியைப்போல் தொப்பினும், ஆலிலைபோல் வயிறும், சங்கைப்போல கழுத்தும், செம்பவழம்போலுதடும், தீர்க்கமுள்ள மூக்கும், கெண்டை நிகர்த்த விழியும், காமன் கை வில்லைப்போல் புருவமும், அர்த்த சந்திரன்போல் நெற்றியும், கருவண்டுபோல் மயிர் சுருட்டியும், தந்த பாவைபோல் சரீரமும், பௌர்ணமி சந்திரன்போல் விளங்கும் புத்ரியைக் கண்ட நித்யர் ஆனந்தமுற்று பத்மதீர்த்தத்தில்நீராடி, பீதாம்பர மணிந்து அந்தணர்களை அழைத்து விளைதானம், கோதானம், வஸ்திர தானம் இன்னும் அநேக ஆயிர தானங்களை அபரிமிதமாய் வழங்கி, சகல பெரியோர்கள் ஆசீர்வதிக்கக் குழந்தைக்குக் "குணமணி" என நாமஞ்சூட்டி, அதி அன்போடு சீராட்டித் தாலாட்டிக் கொஞ்சிக் குலாவி; தண்டை சிலங்கை, பாதஸரம், அரைச்சிலங்கை, கிங்கணி, சங்கிலி, கை வளை, கணையாழி முதலான அநேக ஆபரணங்களால் குழந்தையை அலங்கரித்து, நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தார்கள்.

இப்படியாகக் குணமணிக்கு ஐந்து வயதாகியது. "விதை ஒன்று போட சுரை ஒன்று முளையாது" என்ற ஆன்றோர்

வாக்கின்படி குணமணியும் தன் தாய் தந்தையரைப் போல் தெய்வ பக்தியில் ஈடுபட்டு ஓர் கிருஷ்ண விக்ரஹத்தை வைத்துப் பூஜிக்கலானாள். பொழுதொருபுறம் விடியுமுன் பூங்காவனம் செல்வாள். புஷ்பங்களைப் பறிப்பாள். விதவிதமாய் இசைப்பாள். கண்ணபிரான் மார்பில் அணியச் செய்வாள். பூஜிப்பாள். கர்ணாம்ருதமான கீர்த்தனங்களைப் பாடுவாள். ஸதா காலமும் எம்பெருமான் சந்நிதியை விட்டகலாள். மீண்டும் அதிதியைக் கண்டால் விரைந்தோடி நமஸ்கரித்து எதிர்கொண்டழைத்துவந்து தன் தந்தையிடம் விடுவாள். அவர்களும் அதிக சந்தோஷத்தோடு வந்த அந்தணர்களுக்குப் பாத பூஜைசெய்து அர்க்கிய பாத்திரம், ஆசமனீயம்கொடுத்து, சோடச உபசாரங்களுடன் போஜனமளித்து அவர்களை ஆஸ்வாசப்படுத்தித் தாம்பூலம் கொடுத்துப் பிறகு தாய் தந்தையுடன் போஜனம் செய்வாள். கற்பூர விளக்கும், நெய் தீபமும், ஊதுபத்திகளுடன் பரந்தாமனின் சந்நிதியில் எப்பொழுதும் வாடாமல் இருந்து கொண்டே இருக்கும்.

இஃது இப்படியிருக்க, க்ஷீராப்திவாசனை ஸ்ரீ ஹரியின் கிருபாகடாக்ஷத்தினால் ஸத்யரூபி மீண்டும் கர்ப்பமுற்று நல்ல சுபயோக சுபதினத்தில் ஓர் புதல்வனை ஈன்றாள். காரிழை தேவகி தனயன் கண்ணனைப்போலவும், கௌஸல்யா புத்திரன் இராமனைப்போலவும், பார்வதி பாலன் வேலனைப் போலவும், சூரிய காந்தியையொத்த முகாரவிந்தமும், சந்திர மண்டலம் போல் அவதரித்த குலக்கொழுந்தாகிய புத்ர சிகாமணிக்கு ஜாத கர்மம், நாம கர்மம், விதை தானம், ஸ்வர்ண தானம் இன்னும் அநேகவித தானங்களும் அதிவிமரிசையாய் நடத்தினர். சகலமான பேர்களும் குழந்தையின் பேரழகைக் கண்டு ஆனந்த மெய்தினர். அங்குள்ள பல பெரியோர்களும் குழந்தையின் முகக்குறிகண்டு குழந்தைக்கு "ஞானமணி" என்ற பெயர் ஒன்றே பொருத்தம் என, அதன்படியே குழந்தையின் பெற்றோர்களும் அன்று முதல் அக் குழந்தைக்கு ஞானமணி என்ற நாமஞ்சூட்டி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தனர். அவ்வண்ணமே அக்குழந்தையும், நாளொரு வடிவும்; பொழுதொரு அழகுமாக ரீந்தித்

தவழ்ந்து, நடந்து, ஓடி விளையாடி, மழலைமொழி பகர்ந்து வளர்ந்து வந்தது. இப்படியாகச் சிலநாள் சென்றதும், வழக்கம் போல் குணமணி கிருஷ்ண பரமாத்மாவின் பூஜைக்கு மலர் கொய்ய நந்தவனம் சென்ற சமயம், கிருஷ்ண பரமாத்மா, ருக்மணி தேவி, பாமா ஆகிய மூவரும் குணமணியின் பக்திக்கு மெச்சிக் கொண்டாடி அகமகிழ்ந்து, அந் நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். புஷ்பம் கொய்யும் குணமணியின் கண்ணுக்கு ஒரே சூரியகாந்தி பூவைப்போல் தோன்ற, அவைகளைப் பறிக்க ஆசையுற்ற குணமணியும் அப்பூக்களைக் கொய்ய தனது கைகளை நீட்டுங்கால், கொடிய அரவம்தீண்ட, சோகமுற்றுப் பதறி "ஹா! அருட்பெருஞ் ஜோதியான அய்யனே! உனக்கணியவெனக் கொய்த இம்மலர்களை உனக்கு அர்ச்சித்து அகமகிழ பாக்கியமற்ற யான், இவ்விதம் இந்நந்தவனத்தின்கண் கொடிய அரவத்தால் உயிரிழக்க நேர்ந்ததே! ஹே பரந்தாமா! ஹே கருணாநிதே! ஹே கண்ணா!" எனக் கதறி மூர்ச்சித்து உயிரிழந்தாள். இதையறிந்த கிருஷ்ணன், ருக்மணி, பாமா மூவரும் விரைந்தோடிவந்து குணமணியின் பரிதாபநிலைமையை அறிந்த பரந்தாமன் மிகுந்த அன்புடன் ஆசீர்வதிக்க குணமணி உயிர்பெற்றெழுந்து கண்ணபிரான் சேவையைக் கண்ணாரக் கண்டாள். கை கூப்பினாள். ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தாள். கண்ணன் அந்தர்த்தியானமானார். குணமணி திடுக்கிட்டெழுந்தாள். "கண்ணா! ஏன் மறைந்தாய்? கிருஷ்ணா எங்கே சென்றாய்?" என்று சொல்லிக்கொண்டே நந்தவனமெல்லாம் தேடினாள். ஓடினாள். ஆனால் பரந்தாமனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வாடிய வதனத்துடன் புஷ்பங்களை எடுத்துச்சென்று வழக்கம் போல் பூஜித்தாள். அகமகிழ்ந்தாள்.

நிற்க, நித்திய தருமப் பிரபுவின் அளவற்ற தனம் நாளடைவில் அவரது அன்னதானத்தினால் குறைந்துகொண்டே வந்து கடைசியில் பைசா பாப்பராகிவிட்டார். பரம ஏழையான நித்திய தருமரும், அவர் மனைவியும் குழந்தைகளும் மூன்று நாளாய் அன்ன ஆகாரத்திற்கு வழி இல்லாமல் பட்டினியாய்க் கிடக்கலானார்கள். ஆயினும், எப்படியேனும் தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய உறுதியுடன், உபாதானம் வாங்க

லாயினர். இப்படியாக கொஞ்சநாள் சென்றது. ஒருநாள் புஷ்ப வனத்தில் குணமணியை மதயானை துரத்த, குணமணி பதறியோட அவ் யானையும் அவளை விடாது துரத்திற்று. மனம் நடு நடுங்கி, "ஹே கிருஷ்ணா! ஜகந்நாதா!! அம்பிகே!!! ஜகதீச்வரி என்றலரும் சப்தம், குதிரை சவாரிசெய்யும் சுப்பிரகாசன் என்ற வாலிபன் காதிற்கு எட்ட, இதைக் கவனித்த சுப்பிரகாசன் விரைந்தோடிவந்து, கீழே இறங்கி, குணமணி கீழே விழுந்து மூர்ச்சித்திருப்பதையும், யானை விரட்டி வருவதையும் அறிந்து யானையை விரட்டி குணமணியின் மூர்ச்சையைத்தெளிவித்து ஆஸ்வாசப்படுத்தலானான். குணமணிஎழுந்து சுப்பிரகாசனைப்பார்த்து காதல் அடைந்தாள். அவனும் குணமணியின் மீது மையல்கொண்டான். ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டனர். இருவரும் காதல்கொண்டு இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றுமுதல் கனவிலும் நினைவிலும் குணமணியின் ஞாபகமாகவே இருந்தான் சுப்பிரகாசன். எவ்விதம் அவளை அடையப்போகிறோம் என்ற ஏக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆனால், தான் குணமணியைத் தவிர வேறு எந்தப்பெண்ணையும் மணமுடிப்பதில்லை என்ற பிரதிக்ஞை கொண்டு தன் மனதைச் சற்றே திடப்படுத்திக் கொண்டான். இது இங்ஙனமிருக்க, தன் வீடுசென்ற குணமணி தான்கண்ட சுப்பிரகாசனின் தேஜஸை நினைந்துருகி, எந்தவிதத்திலும் சுப்பிரகாசனையே தன் நாயகனாகக் கொள்ளவேண்டுமென்ற ஆசையோடு இருந்தாள். கடவுளைக் கோரினாள்.

இப்படியாகச் சூரியனது கிரணம் எவ்வளவு வேகமாகப் பரவுகிறதோ அவ்வளவு வேகமாய் நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. குணமணிக்கும் வயதுசெல்ல சரியான பருவத்தை எய்தினாள். இதைக்கண்ட அவளது பெற்றோர்கள் தனது பெண்ணின் விவாகம்பற்றி சிந்திக்கவேண்டிய காலமும் வந்தது. ஆனால், தற்போது அவர்களிடம் பொருளுமில்லை. முன்பு அவர்களைச் சுற்றிக்கொண்டிருந்த மனிதர்களின் அருளுமில்லை,

அந்தோ! பாபம். என்ன செய்வார்கள். எல்லாம் இறைவன் அருள் என்று எண்ணிச் சதிபதிகள் இருவரும் தங்கள் குறைகளைத் தீர்க்க வல்லவர் ஸ்ரீ பரந்தாமன்தான் என்று எண்ணி அவனது பாதாரவிந்தங்களையே சரண்புகுந்து முன் நடத்தியதுபோலவே பஜனையை நடத்திக்கொண்டு தங்கள் காலத்தை கடத்திக்கொண்டிருந்தனர்.

---

## அத்தியாயம் 2.

### கவலைதீர கடவுள் அனுக்கிரஹம்.

நிற்க, சுப்பிரகாசனின் தகப்பனரான வித்யாவல்லபர் எனும் நாகர்கோவில் தாசில் பிரபுவும், மனைவி கோமளாங்கியும், தன் முதல் புத்ரன் பாபுவும், இளையகுமாரன் சுப்பிரகாசனும் கல்யாண பக்குவத்தை அடைந்துவிட்டபடியால் இருவருக்கும் சேர்த்து தன் மனையிலேயே விவாஹத்தை நடத்தவேண்டுமென எண்ணிக்கொண்டிருந்தனர்.

அப்போது லாசிந்திரத்திலிருந்து பணக்கார மிராசுதாரான மகாலிங்கையாின் பெண் சுலோசனாவை தாசில் பிரபுவின் புத்திரன் பாபுவுக்கு மணம் முடிக்கலாமென்றெண்ணிப் பிரபுவிடம் கேட்க, அவரும் சம்மதிக்கவே விவாஹம் நிச்சயிக்கப்பட்டது. அவரது மனைவி கோமளாங்கி சுலோசனாவின் தாய் தந்தையர் மிகுந்த பணக்காரர்கள் என்று தெரிந்துகொண்டபடியால் கலியாணத்தை சீக்கிரம் நடத்தத்தூண்டினார்கள். பிரபுவும் சந்தோஷங்கொண்டு, கோமளாங்கி! நீசொல்வது உண்மைதான். சீக்கிரத்திலேயே இம்மாதம் இருபத்திநான்காம் தேதி முகூர்த்தம் வைத்துவிடலாமென்று எண்ணுகிறேன் என்றார். சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஓர் சேவகன் தபால் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தான். அதைப் பார்க்க பணம் வசூலிக்கத் திருவனந்தபுரம் போக உத்திரவு வந்திருந்

ததுகண்டு, அதிகநாள் தாமதித்தால் விவாஹத்திற்கு இடையூறு என்றெண்ணி, அன்றைய தினமே திருவனந்தபுரத்திற்கு குதிரை ஸஹிதம் புறப்பட்டார்.

திருவனந்தபுரம் சென்ற பிரபு அங்கே ஒருநாள் தாமதிக்க நேர்ந்தது. ஆகையால் ஒரு மரத்தில் குதிரையைக்கட்டிவிட்டு அங்கு சமீபத்திலிருந்த ஒரு வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்தார். தாகம் அதிகமாயிருந்தது. ஆகையால் யாரேனும் பக்கலில் உள்ளார்களோ என்றுபார்க்க, அவ்வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே வரக்கண்டார். பிரபு அப்பெண்ணைப் பார்த்து குழந்தாய் உன் பெயரென்ன என்று கேட்டார்.

குணமணி:- மாமா! என்பெயர் குணமணி.

பிரபு:- பெண்ணே! கொஞ்சம் தாகமாக இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தருகிறாயா?

குணமணி:- இதோ கொண்டுவருகிறேன்.

என்று சொல்லிவிட்டு கொஞ்சம் மோர் தீர்த்தம் கொண்டு வந்து கொடுத்தாள். பிரபுவும் தாகசாந்தி செய்துகொண்டார். சற்று சயனித்து நித்திரை செய்தார். உபாதானம் வாங்கிக் கொண்டுவந்த நித்யர் தன் வீட்டுத் திண்ணையில் நித்திரைச் செய்யும் பிரபுவைப் பார்த்து, "இவர் யார்? இவர் ஏன் இப்படி அயர்ந்து நித்திரைச் செய்கிறார்?" என்று சொல்லிக்கொண்டிருந்த குரல் கேட்டு, நித்ய தர்மர் வரவை அறிந்த சத்யரூபி, புஷ்பம் ஜலமும் கொண்டுவந்து பாதங்களை அலம்பி, புடவைத் தலைப்பினால் துடைத்து, புஷ்பங்களால் பூஜித்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து, அதிக அன்போடு பதியை வரவேற்றாள். நித்திய தர்மரும் சீக்கிரம் சமையல் செய்யும்படி சத்யாவுக்கு உத்தரவளித்துவிட்டு, பூஜைசெய்ய ஆரம்பித்தார். நித்யரின் பூஜை முடிவதற்குள் சத்யாவின் சமையலும் முடிந்துவிட்டது. அறுசுவைப் பதார்த்தங்களைப் பகவானுக்கு நிவேதனஞ்செய்து நித்யர் பூஜையை முடித்துக்கொண்டு எழுந்து நித்திரை செய்யும் பிராமணரை எழுப்ப, அவரும் திடுக்கிட்டு எழுந்தார்.

நித்யர்:- ஸ்வாமி! போஜனத்திற்கு வாருங்கள்.

பிரபு:- தாங்கள் யார்?

நித்யர்: நான் ஓர் ஏழைப்பிராமணன். என்பெயர் நித்யதர்மன்.

பிரபு:- என்னை ஏன் அழைக்கிறீர்கள்.

நித்யர்:- போஜனத்திற்கு வாருங்கள்.

பிரபு:- ஏன்? என்ன விசேஷம்?

நித்யர்:- விசேஷம் ஒன்றுமில்லை. போஜன காலத்தில் ஒருவர் வந்தால் அவர்களைப் பட்டினியாய் வைத்துவிட்டு நான் சாப்பிடுவதில்லை.

பிரபு:- அப்படியானால் நான் இங்கிருந்தால்தானே சாப்பிடமாட்டீர்? போய்வருகிறேன்.

நித்யர்:- அப்படி சொல்லக்கூடாது.

பிரபு:- இல்லை, எனக்கு அவசரமாக ஓர் இடத்திற்குப் போகவேண்டியிருக்கிறது. இப்பொழுதே போகவேண்டும்.

நித்யர்:- சுவாமி, நீங்கள் பட்டினியாய்ப் போனால் நாங்களும் பட்டினிதான். தயவுசெய்ய வேண்டும்.

பிரபு:- இவ்வளவு தூரம் சொல்லுகிறபோது என்ன செய்கிறது.

நித்யர்:- பரவாயில்லை. வாரும் ஸ்வாமி!

இருவரும் எழுந்து உள்ளேசென்று போஜனம்செய்ய அமர, இருவருக்கும்சத்யரூபி அதிக லஜ்ஜையுடனும், பயபக்தி விஸ்வாஸத்துடனும், அறுசுவைப் பதார்த்தங்களைப் பரிமாற, இருவரும் போஜனம் செய்து எழுந்து கைகால் சுத்தம் செய்துகொண்டு தாம்பூலம் தரித்து, இருவரும் உட்கார்ந்து, இவர் ஆசார உபசாரத்தையும், நற்குணத்தையும், பூஜ ஸ்தல மகிமையையும், பக்திப் பிரதாபத்தையும் கண்ணாரக்கண்ட பிரபு மிக ஆச்சர்யமுற்ற பிரபு, அண்ணா! தாங்கள் என்னஜாதி என வினவினார்.

நித்யர்:- வடமாள். தாங்கள்?

பிரபு:-நானும் அதுதான். குழந்தைக்கு விவாஹமாகிவிட்டதோ?

நித்யர்:- இன்னும் ஆகவில்லை.

பிரபு:- சரி. அப்படியானால், தங்கள் பெண்ணை என் புதல்வனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்கிறீர்களா?

நித்யர்:- தாங்கள் இன்னார் என்று தெரியவில்லையே!

பிரபு:- என் பெயர் வித்யாவல்லவன். என் ஊர் நாகர்கோவில். என்னை எல்லோரும் தாசில் பிரபு என்று சொல்வார்கள்.

நித்யர்:- ஸ்வாமி! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்கு ரொம்பவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

பிரபு:- ஏன்?

நித்யர்:- இல்லை! நானோ பரம ஏழை. நீங்களோ பெரிய பிரபு; அப்படியிருக்க, என் குழந்தையை தங்கள் புத்திரனுக்கு விவாஹம் செய்துகொள்வதென்பதுதான்.

பிரபு:- நீங்கள் சொல்வதைக்கேட்டால் என் மனமானது மிகப் பரதவிக்கிறது. பணமிருந்தால் பெரியோர் என்றும், இல்லாதவர் சிறியோர் என்றும் பேதம் எண்ணுபவன் நானல்ல. எனக்குப் பணம் வேண்டாம். குணமே பிரதானம். ஸ்வாமி! தங்களைச் சம்பந்தியாக அடையவேண்டுமென என் மனம் மிகவும் ஆவல் அடைகிறது. பிறகு தங்கள் அபிப்பிராயம்.

நித்யர்:- தங்கள் அபிப்பிராயப்படியே ஆகட்டும்.

பிரபு:- பண விஷயத்தைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். ஊர்போய் இன்னும் நான்கு தினங்களில் கடிதம் எழுதுகிறேன்.

நித்யர்:- எல்லாம் வல்லவனருள். (தாசில் விடைபெற்றுச் சென்றார்.)

நிற்க, பிரபுவின் மனைவியாகிய கோமளாங்கி, வருவதற்குப் போன புருஷன் இன்னும் வரவில்லையே; கால தாமதம் செய்

தால் கல்யாணம் நின்றுவிடும்போல் இருக்கிறதே! இப்படிக் கவலையற்று உட்கார்ந்திருக்கிறாரே என்று சொல்லிக்கொண்டே வாசலில் வழி பார்த்துக்கொண்டிருக்கும் சமயம் அவரும் வந்து சேர்ந்தார். அதிக சந்தோஷத்தோடு "நாதா! தாங்கள் சென்ற காரியம் எப்படி? காயா? பழமா?" என்று, வினவ;

பிரபு:- நல்ல கனிந்த பழம்தான். என்று அதிக உல்லாஸத்தோடு கோமளா! நம் சுப்ரகாசனுக்கும் ஓர் வரன் நிச்சயித்திருக்கிறேன்.

கோமளாங்கி:- எந்த ஊர்?

பிரபு:- திருவனந்தபுரம்.

கோம:- யாருடைய பெண்ணோ?

பிரபு:- நித்ய தர்மப் பிரபுவின் பெண்.

கோம:- பணக்காரர்தானே?

பிரபு:- (சற்று புன்னகைபுரிந்து) கோமளா! எல்லோரும் குலம், கோத்திரம், குணம், சௌந்தர்யம் இவைகளை அல்லவோ கேட்பார்கள். அவைகளை விட்டு, பணக்காரரா; ஏழையா என்று கேட்கிறாயே! வெகு பேஷ்!

கோம:- ஓஹோ! அது வேறையா? எதற்கும் வெள்ளையப்பன் தான் முக்கியம் என்பது தெரியாதா?

பிரபு:- அது வாஸ்தவந்தான். ஆனாலும் அதைவிட குணம்தான் முக்யம்,

கோம:- பணமில்லாதவன் பிணத்திற்குச் சமானம்.

பிரபு:- குணமில்லாதவன் குப்பைக்கும் கேடாம்.

கோம:- (கோபத்தோடு) தாங்கள் சொல்வதைப் பார்த்தால் ஒன்றுமில்லா ஓர் ஏழைப் பெண்ணைப் பார்த்து நிச்சயித்திருக்கிறீர்கள்போல் தோன்றுகிறது. அப்படியானால் என்னுடைய குழந்தைக்குக் கல்யாணமே வேண்டாம் (என்று அழ ஆரம்பித்தாள்.)

இதைக்கண்ட தாசில் பிரபு அவளது கோபத்தை நீக்கி, சந்தோஷப்படுத்தி எப்படியும் சுப்ரகாசனுக்குக் குணமணியையே விவாஹம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் மறுபடியும் சிரித்துக்கொண்டு, கோமளாங்கி! என் காதற்கனியே! உனக்கு ஏன் இத்தனைக் கோபம்? நான் ஒன்றும் அறியாதவனு? நம் அருமைப்புதல்வனுக்கு ஓர் ஏழைப்பெண்ணைப்பார்த்து நிச்சயித்துவருவேனு? என் கண்ணே! நீ புத்தியிற் சிறந்தவளாகையால் உன் மனதைப் பரிசோதித்தேனே தவிர, உண்மையில் அவர்கள் ஏழையல்ல. அவர்களுடைய தனத்தை அளவிட எவராலும் முடியாது. அந்தப் பெண்ணின் சௌந்தர்யத்தை வர்ணிக்க ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும் ஆகாது. உனக்கு சுப்பிரகாசன் மேலுள்ள ஆசையை இன்றுதான் நன்கறிந்தேன் என்ற உண்மைபோல் நவின்ற வார்த்தையைக் கேட்ட கோமளாங்கி உண்மையென கோபத்தைவிட்டு சந்தோஷத்தோடு கலியாணம் நாகர்கோவிலிலேயே நடக்கிறபடியால் அதற்காக வேண்டிய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தாள். தாசில் பிரபுவும் தன் மனதிற்கும், மனைவியின் மனதிற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறதே என்று ஆச்சரியம் அடைந்தார். அவர்கள் இவ்வளவு ஏழையாயிருப்பதைத் தன் மனைவி அறிந்தால் கண்டிப்பாய் கலியாணத்தைத் தடுத்துவிடுவாள் என்றறிந்து, அவளுக்குத்தெரியாமல் அடுத்த தெருவில் ஓர் வீட்டில் நாலைந்து பரிசாரகர்களைக்கொண்டு, நித்யதர்மர் செய்யவேண்டிய பக்ஷணவகைகள் எல்லாம் செய்யச்சொல்லி மேலும், நகைகள், புடவைகளும், சோமன்களும், சகலவித பாத்திரப் பண்டங்களும் தயார்செய்துவிட்டு பிறகு நித்யதர்மருக்கு கடிதம் எழுதினார்.

## அத்தியாயம் 3.

### இன்பமும் – துன்பமும்.

நிற்க; திருவனந்தபுரத்தில் சத்யரூபி, நாதா! நம் குணமணியை தன் புத்திரனுக்கு விவாகம் செய்துகொள்வதாகவும், ஊர்போய்ச் சேர்ந்தவுடன் கடிதம் எழுதுவதாகவும் சொன்னீரே ஏன் இன்னும் ஒன்றும் எழுதவில்லை என்று மிக்க தாழ்வான குரலுடன் கேட்க,

நித்யர்:- பிரியே சத்யா! உனக்கு ஏன் இச்சபலம்? தாசில் பிரபுவின் புத்திரனுக்காவது நம் குழந்தையை விவாகம் செய்யவாவது? இதை நீ நம்புகிறாயோ?

சத்யரூபி:- பிராணநாதா! அனாதரக்ஷகனாகிய அவன் அருள் இருந்தால் ஏன் நடக்காது?

நித்யர்:- பிரியே! எதுவும் அவன் செயல்.

இவ்விதமாக இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வாயிலில் தபால்காரன் "ஐயா! ஐயா!! தபால், தபால்" என கூப்பிடும் சப்தம் கேட்டது. சட்டென்று தன் பேச்சை நிறுத்தி, சத்தியரூபி வெளியே சென்று தபால் காரனிடமிருந்து கடிதத்தைப்பெற்று, தன் பர்த்தாவினிடம் கொடுக்க, அவரும் அதைப் பிரித்துப் படித்தார். அக்கடிதத்தில், "குணமணியின் முகூர்த்தம் 24-ந்தேதி" என்று வரையப்பட்டிருந்ததைப் பார்த்து, மனமகிழ்ச்சியுடன் தனது மனைவிக்குத் தெரிவிக்க, அவளும் மகிழ்ந்தாள். ஆனால் சத்யரூபியின் மனம்மட்டும் கொஞ்ச நேரத்தில் சஞ்சலத்திற்குள்ளாயிற்று. உடனே தனது மகளைக் கட்டிக்கொண்டு "என் அருந்தவச்செல்வமே! நாம் ஒரு காலத்தில் பெரிய பணக்காரர்களாக இருந்தோம். ஆனால், தற்போது வெகுநாள் பிள்ளைப்பேறின்றி வருந்தி, ஈசனருளால் கிடைத்த உன் கல்யாணத்திற்கு ஒன்றும் செய்யப் பொருளில்லாது போனதே ஹே! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா!! அடியார்க்கடியராய் இருப்போனே! எங்களை வீணே இவ்விதம் தவிக்கவிட்டுச் சோதிப்பது தருமமாகுமா!" என்று வாய்விட்டலறினாள்' இதைக்கண்ட நித்யதர்மர் "ஸத்யா! ஏன் வீணில் கவலைப் படுகிறாய்? எல்லாம் அவன் செயல். விதியை வெல்ல யாரால் ஆகும். நம்மால் ஆகக்கூடியது எது? எல்லாம் அவனிஷ்டப் படியே நடக்கும், நீ ஒன்றிற்கும் கவலைப்பட வேண்டாம்' என்று ஒருவாறு தனது மனைவியைத் தேற்றினார். கற்றுணர்ந்த சத்யா சர்வம் பகவத் ஸங்கல்பம் என, வருத்தத்தை நீக்கி, சந்தோஷத்துடன் பரமனின் சந்நிதியில் நின்று பக்தியுடன் பாடி, பரமனை நமஸ்கரித்து நாகர்கோவிலுக்குப் புறப்பட வேண்டிய நிமித்தம் பிரயாணத்திற்குச் சித்தமாயினாள்.

பின்; நித்திய தருமர், சத்யரூபி, குணமணி, ஞானமணி ஆகிய நால்வரும் நாகர்கோவில் வந்தடைந்தனர். இவர்கள் வரவைக்கண்ட பிரபு அதிக ஆவலாய் வரவேற்று ஓர் பங்களாவில் இறங்கும்படிச்செய்து, தான்செய்துவைத்திருந்த ஆடை ஆபரணங்கள் எல்லாவற்றையும் நித்திய தருமர் இறங்கியிருந்த பங்களாவில் கொண்டுவைக்கும்படி கோதண்டராமனிடம் சொல்ல, அவனும் அச்சாமான்களை எல்லாம் கொண்டுவைத்து விட்டுப் போனான்.

கோதண்டராமன் எல்லா நற்குணங்களும் பொருந்தியவன் தான். ஆனால், தன் வேடிக்கைக்காக தாசில்பிரபுவுக்கும், அவரது மனைவிக்கும் ஏதாவது சண்டை ஏற்படுத்திவிடுவது அவன் குணம். அதற்கேற்ப, இன்றும் அவரது மனைவி கோமளாங்கியிடம்சென்று, " அம்மாமீ! அம்மாமீ! இந்த மாமா செஞ்சதக் கேட்டீர்களா?" என்று சொல்ல, கோமளாங்கி தலை தெரிக்க "ஏண்டா? என்னடா" என்றாள்.

கோத:-அந்த மாமாவுக்குக் கொஞ்சங்கூட புத்தி இல்லை அம்மாமி.

கோம:- அவருக்குப் புத்தியில்லாட்டா நீயாவது கொஞ்சம் சொல்றதுதானே.

கோத:-இல்லேன்னு சுப்ரகாசனுக்கு இந்தப் பொண்ணைத்தவிர வேறே ஆம்படல்லியா!

கோம:- ஏன்? இந்தப்பொண்ணுக்கு என்ன குத்தம்?

கோத:- குத்தமென்ன! சம்பந்திபேர் நித்ய தர்மராம்; அவரது ஆம்படையா பேர் ஸத்யரூபியாம்; பொண் பேர் குணமணியாம். புள்ளை ஒண்ணிருக்கு அதன்பேர் ஞானமணியாம். எல்லாம் ஒரே கிண்டாமணியாகத்தானிருக்கு. அவாளோடே பேரைப்பார்த்தா லெக்ஷாதிபதியைப்போலே இருக்கு. ஆனால் உண்மையிலே பிக்ஷாதிபதி என்பதற்கு சந்தேகமேயில்லை.

இவ்வார்த்தைகளைக் கேட்ட கோமளாங்கி அடிவயிற்றில் இடி விழுந்தவள்போல் அலறத் தொடங்கினாள். ஆனால் நம் கோதண்டனும் சும்மாயிருக்காமல் இதற்கே இவ்வளவு பாடு படுகிறீர்களே! இன்னும் சொச்சத்தையும் கேட்டா என்ன தான் பண்ணுவேளோ! என்று சொன்னான்.

கோம:-சொச்சமென்னடா? இன்னும் வேறேயிருக்கு? அதை யுந்தான் சொல்லித் தொலையேன்.

கோத:- நானென்னத்தைச் சொல்லப்போகிறேன் போங்க. நாலு நாளைக்கி முந்தி அடுத்த தெருவில் ஒரு வீட்டில் நாலு பரிசாரர்களைக்கொண்டு பருப்புத் தேங்காய், லட்டு முறுக்கு முதலிய சகல பக்ஷண வகைகளையும் தயார் பண்ணச் சொன்னார். மார்வாடியிடமிருந்து நெரையா நகை களையும், புடவை சோமன் ஏராளமாயும் வாங்கிக்கொண்டு வந்து அந்தாத்திலே வைத்தார். இதெல்லாம் ஏதுக்கு? நம் மாத்துக்குத்தானு நினைச்சுண்டிருந்தேன். இன்னிக்கு வந்து, நாமுன்னாடி சொல்லல்லே அந்தச் சம்மந்திமார் எல்லாம் கந்தல் புடவை சோமன்களைக் கட்டிக்கொண்டு கையில் ஒரு பித்த மடிசஞ்சியோடே வந்தா அவளைப் பாத் தோண்ணே மாமாவுக்கு இருந்த சந்தோஷத்துக்கு கங்கு கரையேஇல்லை. ஒரு குதியொன்று குதிச்சுண்டு அவாளை அழைச்சிண்டுவந்து ஒரு பங்களாவில் கொண்டுவந்துசேர்த் தார். நாங்க சேஞ்சுவைத்திருந்த பக்ஷணம் பாடியையும், நகை நட்டுகளையும், புடவை, சோமன்களையும் கொண்டு போய் அவாள்கிட்டே கொடுக்கச் சொல்லிட்டார். எல்லாத்தையும் நான்தான் கொண்டேகொடுத்தேன். எனக் கென்னமோ கொஞ்சம் அங்கலாப்பாய்தானிருக்கு. என்று சொல்லிக்கொண்டே பையன் மெதுவாய் அதைவிட்டு நழுவ ஆரம்பித்தான்.

கோமளாங்கியின் கோபத்திற்கோர் எல்லையில்லை. “ஐயோ என் தலைவிதி இப்படியா ஆகவேண்டும். நான் எவ்வளவோ ஆசை வைத்திருந்தேன். என் ஆசையெல்லாம் நிராசையாய் போச்சே!” என்று சொல்லி பெருமூச்சு விட்டுக்கொண்டே

கீழேவிழுந்து மூர்ச்சையானாள். அது சமயம் தற்செயலாய் அங்குவந்த தாசில்பிரபு தன் மனைவியிருக்கும் நிலைமையைக் கண்டு, அவளை நோக்கி "கோமளாங்கி! ஏன் இந்த அலங் கோலம்? உன்னை யார் என்ன சொன்னார்கள்? எழுந்திரு. ஏனிப்படி மௌனம் சாதிக்கிறாய்?" என்று வெகு அவசரமாயும் மிகப் பிரியமாகவும் கேட்டார். ஆனால், கோமளாங்கியோ வெகு கோபத்துடன் "போதும்! போதும்!! உங்கள் நடலம்" என்றாள்.

தாசில்பிரபு:- கோமளாங்கி! ஏன் கோவப்படுகிறாய்! உனக்கு என்னவேண்டும்?

கோம:- வேண்டுவது வேறே யிருக்கிறதா? அந்தப் பாழுங் கடவுள் என்னை என்றுதான் கொண்டு போகப் போகிறானோ?

தாசில்பிரபு:- ஏன்? என்ன விசேஷம்? ஏனிப்படி தாறுமாறாய் உளறுகிறாய். உனக்கென்ன குறைநேர்ந்தது?

கோம:- ஆஹா! எனக்கென்ன குறைவு. உம். இவ்வளவு பித்தலாட்டமா?

தாசில்பிரபு:- பித்தலாட்டமா? யார்செய்தது? எப்போ செய் தார்கள்.

கோம:- ஓஹோ! பாவம். ஒன்றுமறியாதவர் அல்லவா நீங்கள். அது கிடக்கட்டும். நித்யதர்மர் லக்ஷாதிபதிதானே!

தாசில்பிரபு:- ஆம். அதில் என்ன சந்தேகம்.

கோம:- ஆம், ஆம் சந்தேகமென்ன? பிரபுதான். ஆனால் பிக்ஷாதி பிரபு.

தாசில்பிரபு:-என்ன கோமளா! உனக்கென்ன பைத்தியமா? அவருடைய மகிமையை நீ அறிந்தாயில்லை. அவர்களின் பகவத் பக்திக்கும்; அப்பெண்ணின் நற்குணத்திற்கும் எவரும் ஈடாகார், மேலும், அவர் தம்பி மைசூரில் மந்திரி யாக இருக்கிறார். இப்பொழுது கல்யாணம் சீக்கிரம் எதிர்

பாராமல் ஏற்பட்டதால் ஒருவேளை அவர் வரமுடியா திருக்கலாம். பிறகு வந்து பார்த்தால் உனக்கு எல்லாம் நன்றாய் விளங்கும்.

கோம: ஆம், ஆம். சொல்வதெல்லாம் பொய்யும் பிற்றலாட்டமு மாய் இருக்கிறதே தவிர, உண்மையைக்காணேன் என்று சொல்ல, இதைப்பொருட்படுத்தாத தாசில்பிரபு மிகுந்த கோபத்துடன், அடீ கோமளா ! உனக்கு இவ்வளவு கர்வம் எங்கிருந்து வந்தது ? நீ எவ்வளவு சொன்னாலும்சரி; என் புத்திரன் சுப்பிரகாசனுக்கு குணமணியைத்தான் விவாகம் செய்துகொள்ளப் போகிறேன். மரியாதையாயிருந்து உன் அலுவல்களைக் கவனி போ! என்று சொல்லி விட்டுத்தன் அலுவல்களைப் பார்க்கச்சென்றார்.

பாவம் ! கோமளாங்கியோ பெண். அவளால் பிரபு செய் வதைத்தடுத்து வேறெதும் செய்யமுடியுமா? ஒருநாளும் ஆகாது சதாகாலமும் அழுதுகொண்டும், குணமணியை வாய்க்கு வந்த வாறு திட்டிக் கொண்டுமிருந்தாள். கோமளாங்கியோ, பணம் பணம் என்ற பேராசைப் பிடித்தவள். பிரபுவோ குணத்தை விரும்பும் குணசீலர். அவர் குணத்திற்கொப்ப, தற்போது நித்ய தர்மர் பணத்தில் தரித்திராயினும், குணத்தில் அதிபதியாய் இருந்தார். ஆதலால் கோமளாங்கி மிகுந்த அகங்காரங்கொண்டு " என் அருமையான சுப்ரகாசனுக்கு இந்த அனாதைப் பிரேதமா மனைவி ? ஐயோ ! இந்த அனியாயம் எங்கு நடக்கும் ? " என்று அழுதுகொண்டிருந்தாள்.

அப்போது சுப்ரகாசன் அங்குவர, தாய் அழுவதைக்கண்டு மனம் பொறாதவனாய் " அம்மா ! ஏன் அழுகிறாய் ? உன்னை யாரென்ன செய்தார்கள் " என்று வினவினான்.

கோம:– அப்பா என் கண்ணே ! உன் தலைவிதி இப்படியாக வேண்டுமா ?

சுப்ர:- ஏன் அம்மா ! அப்படிச் சொல்லுகிறாய். எனக்கென்ன வந்துவிட்டது.

கோம:- கண்மணியே உனக்கும் உங்கப்பா கல்யாணம் நிச்சயித்திருக்கிற. வயிற்றெரிச்சலை நான் எங்குசொல்லி அழுவேன்.

என்றதைக்கேட்ட சுப்பிரகாசன் அசலூரிலிருந்து அன்று தான் வந்திருக்கிறபடியால் அவனுக்குத் தன் கல்யாண விஷயம் ஒன்றும் தெரியாது. தாய் சொன்ன வார்த்தையைக் கேட்டதும், குணமணியின் ஞாபகமானது மார்பைத் துளைக்க ஆரம்பித்தது. "என்ன! எனக்கா! கல்யாணமா! தகப்பனரா நிச்சயித்தார்! எனக்கிப்பொழுது கல்யாணத்திற்கு என்ன அவசரம்" என்று கேட்டான்.

எல்லாம் உங்க அப்பாவோட கூத்துத்தான் என்ற கோமளாங்கியின் வார்த்தையைக்கேட்டதுதான் தாமதம்; சுப்பிரகாசன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பது நான்முகனேயறிவார். ஸரி. தகப்பனர் நிச்சயித்திருக்கும் பெண் குணமணியல்ல. ஏதோ ஓர் பிரபுவினுடைய பெண்ணாகத்தானிருக்கும், நான் காதலித்த குணமணியைத் தவிர, மற்றொரு பெண்ணையும் மணம்புரியேன், உயிர்த்தரியேன். இனி செய்வது யாதுமறியேன். என்று ஒன்றும் விளங்காமல் கல் சிலைபோல் நின்றான். கோமளாங்கி, மறுபடியும் அழுத கண்ணும் சிந்தையுமாய், "என் தவமணியே! என்னாசையெல்லாம் நிராசையாய் விட்டது. உன்னழகிற்கும், சமத்திற்கும், பொருளிற்கும் தகுந்த ஓர் பிரபுவின் பெண்ணை நிச்சயிக்காமல், ஓர் ஏழைப் பெண்ணைப் பார்த்து விவாகம் செய்யும்படியாகி விட்டதே." என்றாள் கோமளாங்கி.

சுப்பிர:- என்ன! பரம ஏழையா! யாரது? எந்த ஊர்?

கோம:- என்னமோ.........திருவனந்தபுரமாம்.

சுப்பிர:- திருவனந்தபுரமா! பேரென்ன?

கோம:- நித்திய தருமனும், அந்தப் பெண் பேர் குணமணியாம்.

இவ்வசனத்தைக் கேட்ட மாத்திரத்தில் சுப்பிரகாசன் எல்லையில்லாத சந்தோஷத்துடன் அகமகிழ்ந்து, முகம் மலர்ந்து புன் சிரிப்புடன் "தேடிப்போன கனி காலில் கிடைத்ததேன"

மனம் மிகச் சந்தோஷித்து "அம்மா பணம் எதற்கு; பணம் பாஷாணமல்லவா! அப்பா என்ன ஒன்றுமறியாதவரா! இதற்காக வருந்துவதழகாகுமா!

கோம:- நீயும் அப்பாவுடன் சேர்ந்துகொண்டாயோ, எப்படியாவது கல்யாணம் ஆனால் போதுமென்று எண்ணமோ?

சுப்பிர:- அம்மா, என்மீது ஏன் கோபிக்கிறாய். தந்தை சொல்வது உண்மையென்று தெரிவித்தேன். அது தப்பிதமாய் இருந்தால் மன்னித்துக்கொள். பணத்தைவிட குணமே பதின்மடங்கு மேன்மை என்பது யாருக்கும் தெரிந்த விஷயம்.

கோம:- எல்லாம் அப்பனுக்குப் பிள்ளைதானே! வேறெப்படி இருக்கும். அப்படித்தானிருக்கும்.

சுப்பிர:- அம்மா! வீணாக என்மேல் ஏன் கோபிக்கிறாய். நான் என்ன செய்கிறது. அவர்பாடு, உன்பாடு. அப்பா எப்படிச் சொல்லுகிறாரோ அப்படியே செய்கிறேன். நீ வீணாக என் தகப்பனாரை நிந்தித்தால் என் மனம் மிகவும் வருத்தத்தை அடைகிறது. நான் போய் வருகிறேன். என்று ஓட்டமாய் ஓடிவிட்டான். கோமளாங்கி அழுதுகொண்டே இருந்தாள்.

உடனே ஒரு அரை நிமிஷ நேரத்திற்கெல்லாம் ஸமீபத்திலிருந்து கல்யாணப்பெண் சுலோசனா, அவள் தாயார் பத்மா, ஸகோதரிகள் தகப்பனார், இன்னும் அநேக உறவினர்களுடன் சம்பந்திமார்களெல்லாம் வந்திறங்க, பிரபு சென்று எதிரழைத்து அவர்களையும் ஓர் பங்களாவில் இறங்கச் சொன்னார். வந்திருக்கிற சம்பந்திமார்களின் அகம்பாவமும், மமதையும், மினுக்கும் தளுக்கும், ஏதோ கொஞ்சம் நகையும் அணிந்திருப்பதையும், அவர்கள் கொண்டுவந்திருக்கிற சீரையும்கண்டு ஆனந்தமுற்ற கோதண்டராமன் அதிக குதூகலத்தோடு ஓடோடிவந்து, அம்மாமி! அம்மாமி!! என்று கூப்பிட்டான்.

கோம:-என்னடா ! என்ன ?

கோத:- பெரிய சம்பந்திகள் எல்லாம் வந்துட்டா அம்மாமி.

கோம:- எங்கேடா ! எப்போ வந்தா !

கோத:- இப்போதான் அம்மாமி அதோ! அந்த பங்களா விலேதான் இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு ஜோரா யிருக்கா தெரியுமா? ஜரிகை வேஷ்டியும், ஷர்ட்டும் கோட்டும், காலருட், டையும், ஜரிகை துப்பட்டாவும், பூட்ஸும், தலை முண்டாசும் அடேடே அப்பா! பாபு அதிர்ஷ் டம்தான் பமேல அதிர்ஷ்டம் என்று கூத்தாடினான்.

கோமளாங்கியின் ஆனந்தத்தைக் கேட்பானேன். அத்து டன் நித்யதர்மர் ஞாபகமும் வந்துவிட்டது. கண்ணால் நீர் சொரிந்து, "என்டா கோதண்டம்!, ஒரு பொய்கூடச் சொல் லத்தெரியாத உங்கள் மாமாவுக்கு இவ்வளவு பொய் எங்கிருந்து வந்தது. என்ற கேள்வியை விடுத்தாள்.

கோத:- ஏன்? அவர் என்ன பொய் சொன்னார்.

கோம:- ஏன்டா ஒன்றும் தெரியாதவன்போல் பேசுகிறயே ! நித்திய தர்மருடைய சொத்தை யாராலும் அளவிட முடி யாதென்று சொல்லவில்லையா ?

கோத:- ஓஹோ! அதைத்தான் பொய்யின்னு கணக்குப் பண் ணினேளோ! சரித்தான். சரிதான் நீங்கள்தான் ஏமாந் தேளே தவிர, அவர் பொய் சொல்லலே. ஒரு பைசா கூட இல்லாத, பைசா பாப்பராயிருக்கிறவாகிட்ட இவ்வளவு ரூபாய் இருக்குன்னு எப்படி அளவிடமுடியும். ஏதோ கொஞ்சமாவது பணமிருந்தால் இத்தனையிருக்கு அத்தனை இருக்குன்னு கணக்குப் பண்ணலாம். அங்கே தான் அறங்கையும், புறங்கையுமாயிருக்க, ஒரு சல்லிகூட கைபறாமிருக்கே. என்னத்தை அளவிடுகிறது. அவர் பொய்-கிய் சொல்லலே. நீங்கள்தான் ஏமாந்தேள்.

கோம:- என்டா கோதண்டம்! இந்த சமாசாரத்தை அப்பவே சொல்லக்கூடாதடா? நான் கல்யாணமேவேண்டாமென்று தடுத்திருப்பேனேடா ?

கோத:- இப்போதான் எனக்கும் தெரிஞ்சுது. இதுக்கு முந்தி யாருக்குத் தெரியும். மாமா சமத்து இவ்வளவுகோசரம்னு யாருகண்டா. என்ன தெரிந்துதானென்ன! தெரியாமலிருந்துதான் என்ன! எல்லாம் நடக்கிறகாரியம் நடந்துதான் தீரும். அதுபோனால் போகிறது. நீங்கள் இவாளுக்காக வேண்டிய காரியத்தைப்பாருங்கோ. என்று சொல்லிவிட்டு தன் வேலையைப் பார்க்கச் சென்றான். கோமளாங்கியும் குணமணியை நினைத்தபோதெல்லாம் வைதுக்கொண்டும் திட்டிக்கொண்டும் அழுதுக்கொண்டுமிருந்தாள்.

இப்படியாக அன்றிரவுபோய் மறுநாள் பொழுது விடிந்ததும், மேள தாள வாத்யம் முழங்க, தாசில் பிரபுவும், கோமளாங்கியும், தன் உறவினரைக்கொண்டு, வெற்றிலைப் பாக்குப் பழம் முதலியதெல்லாம் வெள்ளித்தட்டில் எடுத்துக்கொண்டு, மஹாலிங்கமய்யர் இறங்கியிருக்கும் பங்களாவிற்குச் சென்று அவர்களை அதிக சந்தோஷத்தோடு அழைக்க, மஹாலிங்கய்யர், பத்மா, கமலா, பேபி இன்னும் வந்திருக்கிற உறவினர்கள் எல்லோருமாய் பருப்புத்தேங்காய், திரட்டிப்பால், தேங்குழல், குஞ்சாலாடு, இன்னும் உச்சிதமான லாடுகள், தேங்காய்பர்ப்பி, மைசூர்பாகு, பூரி, சோமாசி முதலிய இன்னும் அநேகவித பக்ஷணங்களும், அஞ்ஜூஸ், ஆப்பிள், கொய்யா, தேன் கதலி, ஒட்டுமா, செவ்வாழை முதலிய பழங்களும், பலாப்பழமும் கூடை கூடையாய் எல்லோரும் வரிசை வரிசையாய் எடுத்துக்கொண்டு சுலோசனாவையும் அதிக அலங்காரத்துடன் அழைத்துக்கொண்டு, தாசில் பிரபுவின் பங்களாவிற்கு வந்து அச்சீருகளை எல்லாம் பந்தலில் இறக்கி, எல்லாரும் அதிக குதூகலத்துடன் பந்தலில் உட்கார்ந்தார்கள். மறுபடியும் நிர்யதர்மரை அழைத்துக்கொண்டுவரப் புறப்பட்டார் தாசில்பிரபு. கோமளாங்கி, பிச்சைக்கார சம்பந்தியைத் தான் அழைக்க வரமாட்டேன் என்று மறுத்து விடுகிறாள். பிரபுவும், இன்னும் உற

வினர்களும், அவரது சகோதரி ஸுகந்தா, சகோதரனின் மனைவி ஸுகுணா முதலியவர்கள் புறப்பட்டு மேள வாத்தியம் முழங்க, நித்யர் இறங்கி இருக்கும் பங்களாவிற்குச்சென்று, அவர்களையும் அழைக்க; சுகந்தா குணமணியைப் பார்த்துவிட்டுத் தன் மதனி ஸுகுணாவிடம் மன்னி! இந்த பெண்ணுடைய முக லக்ஷணத்திற்கே லக்ஷ ரூபாய் கொட்டிக் கொடுக்கவேண்டுமே, இப்பேர்க்கொத்த நாட்டுப்பெண் மதனிக்கு கிடைக்கத்தக்கதா! சுப்பிரகாசன் குணத்திற்கும் அழகிற்கும் ஏற்றவள் இவள்தான், சுலோசனு மோரகட்டையைப்பாரு. எருக்கைவெட்டி அடித்தாற்போல என்றாள். சுகுணா சுகந்தா மதனியை நீ இன்றுதான் பார்த்திருக்கிறாயோ அவளுக்கு எப்பவும் பணம் பணம் என்று பணப்பிசாசு பிடித்தவள். பணம் இருந்தால் போதும்; குணமும் மணமும் எதற்கு என்பாள். இதைப்போல் எனக்கு ஒரு நாட்டுப் பெண்ணிருந்தால் தலையில் வைத்துக் கூத்தாடுவேனே.

சுகந்தா:- இதையெல்லாம் சொல்வானேன். என்னை கொஞ்ச பாடுதான் படுத்திவைத்தாளா? என் கல்யாணத்தின் போது கொஞ்ச சண்டையா நடந்தது. ஆனல், அண்ணா ஒன்றுக்கும் அசையாதவராகையால் அவள் பாச்சா பலிக்கவில்லை. இல்லாவிட்டால் என் கதி என்ன ஆயிருக்கும்! அண்ணாவைப்போல் நல்ல குணம் ஒருவருக்கும் கிடையாது. மன்னியோ அதற்கு நேர். அண்ணாவினுடைய குணத்திற்காக இவ்வீட்டிற்கு வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு கண்ணீர் உதிர்த்தாள்.

சுகுணா:- உனக்கென்ன பைத்தியமா? நானும் உன் மன்னி தானே? உன்மேல் பிரியமாக இருக்கவில்லையா. அதற்கு என்னசெய்வது, அவளுக்கு நாத்தனாரும் வேண்டாம். ஓர் படியும் வேண்டாம். அவள் குணமப்படி. அதற்கேன் வீணில் வருந்துகிறாய். நான் இருக்கிறேன். ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். என்று சொல்லிக் கண்ணீரைத் துடைத்தாள்.

இதற்குள்ளாக வந்திருக்கிறவர்கள் பக்ஷணம், பழம் இவைகளை எல்லாம் வரிசை வரிசையாக எடுத்துக்கொண்டு மேள வாத்

தியம் முழங்க, குணமணியை அழைத்துக்கொண்டு பிரபுவின் மனைக்கு வந்தார்கள். இவர்களைக்கண்ட கோமளாங்கி, நாகம் போன்று சீறியெழும் கோபம்கொண்டாள். ஆனால், செய்வ தென்ன ? வாவென்றழைக்காமலும், அவர்களுடன் பேசா மலும், தன் வாயார வசைமொழிகளால் வாழ்த்தினாள்.

பிறகு பத்மாவிடமும், கமலாவிடமும் குழைந்து குழைந்து பேசுவாள். நடக்குமிடத்திற்குத் தடுக்குப்போடுவாள். அப் படியே தேவலோகத்திலிருந்து அப்சரஸ்திரீயே எதிரில் வந் திருக்கிறதுபோல் நினைத்துக்கொண்டு கூத்தாடுவாள். ஸத்ய ரூபியைப் பார்த்தபொழுது, 'எல்லாம் சுண்டவில்லா மண்டகப் படிதான்.' அந்தோ! பாபம்! ஸத்யரூபியின் மனம் எப்படி யிருக்கும். "பிச்சைக்காரப் பிணங்களுக்கு மரியாதை ஏது ? மானுஷ்யமேது ? மானமேது? வெட்கமேது ? சூடேது? சுரணை யேது" என்று தனக்குத் தோன்றியவாறு ஏசும் வார்த்தை களைக்கேட்ட அவள் மனம் என்னபாடுபடும். ஆனால், ஒன்றும் நமக்கில்லையென்று ஈசனிடம் ஒப்புவித்து அளவற்ற பொறுமை யுடனிருந்தாள். இவைகளைக்கண்ணுற்ற சருணா சுகந்தா இரு வரும்கண்டு மனம்பொறுதவர்களாய் இப்பேர்ப்பட்ட சாதுக் களை நாங்கள் எங்கேயும் கண்டதில்லை. மகாலெக்ஷ்மியைப் போன்ற இவளை இப்படிப்பட்ட வார்த்தைகளை எல்லாம் பேசு கிறாளே! பாழும் பணம் அல்லவா இக்கதிக்கு ஆளாக்குகிறது, என்று சொல்லிக்கொண்டே சத்யரூபியை விட்டகலாமல் அவ ளுக்கு வேண்டிய உபசாரணைகளைச் செய்துகொண்டிருந்தனர்.

பாபுவிற்கும், சுப்ரகாசனுக்கும் விரதம், காசி யாத்திரை முதலியதும் செய்து, முறையே கல்யாணப் பெண்ணும் பிள்ளையு மாய் முறைப்படி மாலை மாற்றி; ஊஞ்சல் ஆடி; மனையிலிருந்து அந்தணர்கள்முறைப்படி மந்திரோபதேசம்செய்து பாபுவிடமும் சுப்ரகாசனிடமும் விலையுயர்ந்த பட்டுகளைக்கொடுக்க, அவர்களும் அதை பஞ்சகச்சம்வைத்து கட்டிக்கொண்டு, மறுபடியும் சுலோ சனாவிற்கும் குணமணிக்கும், பாபு, சுப்பிரகாசனால் கூறைகள் கொடுக்கப்பட்டு, அவர்களும் அதை மடிசார் வைத்துக் கட்டிக் கொண்டு, பாபுவின் வலப்புறம் சுலோசனாவும், சுப்பிரகாசன்

வலப்புரம் குணமணியுமாக உட்கார்ந்து விதிப்படி மந்திரங்களை உச்சரித்து மகாலிங்க அய்யரும், பத்மாவும், சுலோசனாவைப் பாபுவிற்குக் கன்னிகாதானஞ் செய்தார்கள். நித்யதர்மரும், சத்யரூபியும் குணமணியை சுப்ரகாசனுக்கு தாரைவார்க்க சகல பெரியோர்களும் ஆசீர்வதித்து மங்கலாட்சதை இறைக்க, ஆகாயத்தில் தேவ துந்துபி முழங்க, குணமணிக்குத் திருமங்கலிய தாரணம் செய்தான் சுப்பிரகாசன். பிறகு இரு தம்பதிகளும் வலக்கரம்பற்றி அக்னியைச் சுற்றி வலம்வந்து, அம்மி மிதித்து மறுபடியும்மனையில் உட்கார்ந்து பாபுவின் மைத்துனனான மந்துவின் கையால் மூன்று கை பொரியை அக்னியில் அர்ப்பித்தான் பாபு. அவ்வண்ணமே சுப்ரகாசனும் தன்மைத்துனனான ஞான இட்டபட்ட பொரியை அக்கினியில் சமர்ப்பித்தான். உடனே தாசில் பிரபுவும் இரு கல்லிழைத்த மோதிரத்தைக் கொண்டு வந்து மந்துவிற்கும் ஞானமணிக்கும் அளித்தார். பின் இரு தம்பதிகளும் பெரியோர்களை நமஸ்கரிக்க புத்திர, பௌத்திர, களத்திரர்களுடன் சிரஞ்சீவிகளாய் வாழ்வீர்கள் என ஆசீர்வதிக்கப்பெற்றனர். பாபுவும், சுலோசனாவும் கோமளாங்கியை நமஸ்கரிக்க, என் கண்மணிகளே! நீங்கள் அநேக காலம் அமோகமாக இருக்கவேண்டுமென ஆசீர்வதித்தாள். சுப்பிரகாசனும், குணமணியும் நமஸ்கரிக்க, கோமளாங்கி தன் கோபம் ஒருவாறு தணியுமாறு, "முதல் தாரம் இறக்க; மறுதாரம் சிறக்க ஆயிரம் காலம் நீ வாழவேண்டும்" என் வயதில் பிறந்த உனக்கு இவ்வளவுதானா அதிர்ஷ்டம் என்றும், குணமணியை ஒரு உதை உதைத்துத் தள்ளினாள். ஆனாலும் பெண்ணே! உன் சீட்டை எமன் என்றைக்குக் கிழிப்பானோ என்று மனதில் எண்ணிக்கொண்டாள். கோமளாங்கியின் ஆசீர்வாதங்கேட்ட சுப்பிரகாசனின் மனம் பாகாய் உருகிற்று. ஆனால், அவன் பரம பக்தியுடையவனாதலால் ஏ ஜகதீசா! ஜகத்ரக்ஷகா! பரந்தாமா! ஏனோ இக்கொடும் நெஞ்சம். என் தாயின் துர்க்குணத்தை நீக்கி, நற்குணம் தரலாகாதா என மனம் வருந்தினான்.

பிறகு பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று, சுமங்கலிகளால் சோபனம்பாடி, ஆரத்தி சுற்ற இரு தம்பதிகளும்

மனையைவிட்டெழுந்துசென்றனர். பிரபு,வந்திருந்த அனைவருக்கும் எவ்வித குறைவுமின்றி மரியாதைகள் நடத்தியபின் போஜனத்தையும் முடித்துவைத்தார். சாப்பிட்டுச்சென்ற சுப்ரகாசன் மனம் நிம்மதிகொள்ளவில்லை. ஆகையால், அவன் தனியே ஓர் இடத்தில் உட்கார்ந்து, "பணமே! உலகில் பிரதானமாயிருக்கிறதே தவிர வேறொன்றும் பயன்படவில்லையே. பொருள் பொருளையே வேண்டுகிறது. ஏழைகளின் வறுமை என்றைக்கு ஒழியுமோ. ஆனால், என் தகப்பனாருக்குக் கொஞ்சமும் அல்ப புத்தி கிடையாது. எனக்கு ஏன் இத்துர்ப்புத்தி கொண்ட தாய் அமையவேண்டும். அவள் பாபுவின் மாமன் மாமியைக் கண்டால் ஏன் அவ்வளவு நேசமாக இருக்கவேண்டும். எனது மாமன் மாமியைக்கண்டால் அலக்ஷியம் செய்யவேண்டும். எல்லாம் பணத்தின் கூத்தன்றோ! எப்பவும் அவர்கள் காலம் இப்படியே இருந்துவிடுமா? எல்லாம் அவன் செயல். என்று தனக்குள் சொல்லிக்கொண்டு ஏக்கமுற்றிருந்தான்,

சத்யரூபியை போஜனம் செய்யவும் அழைக்கவில்லை. அவளை நினைக்கவுமில்லை. இதை அறிந்த சுகுணனும், சுகந்தாவும் வந்து குழந்தைக்கும், சத்யரூபிக்கும் ஆசார உபசாரத்துடன் போஜனமளித்து, தாம்பூலம் கொடுத்து "அம்மாமி! ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். எல்லாம் அவன் செயல். பகவான் நல்வழி விடுவார்." என்று ஆதரவாய் அன்புடன் பேசிக்கொண்டிருந்தனர். இதைக்கண்ட கோமளாங்கி, தன்னால் அவமதிக்கப்பட்டவளை; அவர்கள் குலாவிக்கொண்டிருப்பதைப் பார்க்க மனம் சகியாதவளாய் கோபம்கொண்டு தனது நாத்தி, ஓர்ப்படிகளையும் சற்று வெறுத்தாள். ஆனால், அவர்கள் அதை லக்ஷியம் செய்யவில்லை. இப்படியாக நான்கு தின கல்யாணமும் நடந்தது. ஆசீர்வாதமானவுடன் வந்திருந்த அனைவரும் பிரபுவினிடமும், கோமளாங்கியினிடமும் விடைபெற்றுத் தம்தம் இல்லம் ஏகினர். சுலோசனனும் அவர்களது பெற்றோர்களும் தம் ஊருக்குச்செல்ல, கோமளாங்கியிடம் விடைபெற்றுக்கொள்ள வந்தனர். கோமளாங்கியும் மனமார வாழ்த்தி வழிகூட்டி அனுப்பிவைத்தாள். பிறகு, கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குணமணியும் தனது பெற்றோர்களுடன் பிரயாணத்

திற்கு ஆயத்தமாய் தனது மாமியாரிடம் சென்று நமஸ்கரித்து விடைகேட்டனள். கோமளாங்கி பொங்கி எழுந்த கோபத்துடன் "நீ திரும்பியும் வரவேண்டுமா? அப்படியே போய்ச் சேர்" என்று ஆசிர்வதித்தாள். பிறகு, மாமனுரையும் வணங்கி விடைபெற்று அவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

இவைகளைக் கண்ணுற்ற சுப்பிரகாசன் மனம் நொந்து, "அடடா! ஐஸ்வர்யத்திற்குத்தான் அதிக மரியாதை என்பது சரியாக இருக்கிறதே. இதுவரை வைதது எல்லாம் போதாதென, போகிறபொழுதும் திரும்பிவராமல்போக வரங்கொடுத்துவிட்டாளே! ஒரு கண் சுண்ணாம்பும், ஒருகண் வெண்ணெயுமா? ஆஹா! என்னே! இந்த உலகம். அந்த நாட்டுப் பெண் மட்டும் கண்ணும்; மூக்காம்; வாயாம்; காதாம். இவள் மாத்திரம் திரும்பிவராமல் போக வேண்டுமாம், என்ன பித்தம் கொண்ட மனமய்யா!" என்று சொல்லி தாயின்மேல் சீற்ற முற்ருன். ஆனல், சுப்ரகாசன் புத்திசாலியாகையால் தாய்மேல் சினங்கொள்ளலாகாதென்று எல்லாவற்றையும் தன் மனதிற்குள்ளேயே அடக்கிக்கொண்டு சாந்தஸ்வரூபியாய் இருந்தான்.

பாபு தன் மனைவியின்மேல் தாய் அதிக பிரியமாயிருப்பதையும், தம்பியின் மனைவியைக் கண்டால் வெறுப்பதையும் கண்டு அதிக ஆனந்தங்கொண்டு "என் தாயாருக்கு என்மேல்தான் பிரியம்; என் ஸம்சாரத்தின்மேல்தான் ஆசை. குணமணியின் முகத்தில் பூசை, சுப்ரகாசனுக்குத் தோசை. என்ன செய்கிறது. நான்செய்த பாக்கியமிப்படி. அவன்செய்த பாவம் அப்படி. நன்ருய் வேணும் இச்சுப்பிரகாசனுக்கு. இப்பொழுது தான் சுப்பிரகாசன் கொட்டம் அடங்கும்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். இவைகளைச் செவியுற்ற சுப்ரகாசன், காதிற் கேட்டும், கேளாதவன்போல் போய் விட்டான்.

## அத்தியாயம் 4.

## நல்லோரின் நட்பு-நன்மையைத்தரும்.

நாட்கள் பலசென்று மாதங்கள் ஆறுமுடிந்தது. ஒருநாள் தபால்காரன், நாலு மூலைகளிலும் மஞ்சள் தீட்டிய கடிதம் ஒன்றைத் தாஸில் பிரபுவிடம் கொடுத்தான். தாஸிலும் கடிதத்தைப்

பிரித்துப் பார்க்க, சுலோசனு புஷ்பவதியானதைக்கண்டு சந்தோஷங்கொண்டு பத்தினி கோமளாங்கியிடம் தெரிவிக்க, வரும்பொழுது, அவள் பாசாங்கு நித்திரை செய்வதைக்கண்டு சற்று புன் சிரிப்புடன் "ஓகோ ரொம்ப ஆக்கமோ! கொறட்டை எல்லாம் ஜாஸ்தியாய் இருக்கிறதே, கோமளா! ஒரே ஒரு சமாச்சாரம். அப்புறம் கொறட்டை இழுக்கலாம் எழுந்திரு. உனக்கு ஒரு வஸ்து கொண்டு வந்திருக்கிறேன். வேண்டுமா? வேண்டாமா? என்றார்." குணமணியின் ஞாபகம் கோமளாங்கிக்கு அதிகரித்திருக்கிறபடியால், சற்று கோபம் கொண்டவளைப்போல் கண்ணை மூடிக்கொண்டிருந்தாள். பின்னும் பிரபு, கோமளா! உன் நாட்டுப்பெண் சுலோசனு புஷ்பவதியாகியிருக்கிறாளாம் என்றார். இந்த வார்த்தையைக்கேட்டதுதான் தாமதம்; கோமளாங்கி ஒரு குதிகுதித்து எழுந்திருந்தாள். அவள் எல்லையில்லா ஆனந்தங்கொண்டு, சரி! மிக்க சந்தோஷம்தான். எதிர்பார்த்திருந்த தினம் வந்துவிட்டது. இனி அரை நிமிஷமும் சுலோசனுவைப்பிரிந்து தனித்திருக்கமுடியாது. எவ்வளவு சீக்கிரத்தில் அழைத்துவரமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவசியமாக அழைத்து வந்துவிடவேண்டுவதே நலம். ஆகையால் அதற்கு வேண்டியதை நீங்கள் செய்யுங்கள். என்று சொல்லிவிட்டு வாயில்மெழுகி, கோலமிட்டு, அவ்வூரில் உள்ள சுமங்கலிகளுக்கு சந்தனம், புஷ்பம், தாம்பூலம் வழங்கினாள்.

குணமணி புஷ்பவதியாகிவிட்டால் ஒன்றாக சாந்திக் கல்யாணம் செய்தால் சீரும் சிறப்புமாக இருக்குமே என்று தாசில் பிரபு எண்ணினார். அதைக் கோமளாங்கியிடம் சொன்னால் அடிச்சு குதிக்க ஆரம்பிப்பாளே என்று, அவள் சொல்லியவற்றிற்கெல்லாம் சரி, எல்லாம் அப்படியே செய்துவிடுவோமென்று தலையை அசைத்துக் கொண்டிருந்தார்.

குணமணி ஒருநாள் பரமாத்மாவின் சன்னதியில் நின்று பக்தி பரவசமாய் உள்ளம் உருகி; தேவனைப் புகழ்ந்து பாட்டு பாடிக்கொண்டிருந்தாள். அது சமயம் அடுத்த வீட்டு சுந்தரி வந்து இவள் பாடிக்கொண்டிருக்கும் கர்ணமிருதபாடலைக்கேட்டு ஆனந்த பரவசமடைந்து, கை குவித்தவண்ணம் கண்ணை மூடிக்கொண்டு ஒரு சிலையாய் நின்றாள். குணமணியும் பாட்டு முடியும்

சமயத்தில் எம்பெருமான் பாதகமலங்களில் வீழ்ந்து, பிரக்ஞையற்றுக் கிடந்தாள். சுந்தரி கண்ணை விழித்து, குணமணி மூர்ச்சையாய் கிடப்பதைக்கண்டு, "அம்மாமி; அம்மாமி! ஓடி வாங்கோ; ஓடி வாங்கோ குணமணி என்னமோ போலிருக்காளே கூப்பிடக் கூப்பிடப் பேசமாட்டேன்கிறாளே? என்ற குரலைக் கேட்ட சத்யரூபி ஓடிவந்து, பக்தி பரவசத்தால் மூர்ச்சித்திருப்பதைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். ஒரு அரை நிமிஷ நேரத்திற்கெல்லாம் குணமணி மூர்ச்சை தெளிந்து, ஹே! க்ருபாநிதே! நின்னையன்றி எனக்கொரு கதியுமில்லை. என்னை அதிசீக்கிரத்தில் ஆட்கொள்ளவேண்டும்" என்று நமஸ்கரித்து, திரும்பிப் பார்த்து, சுந்தரீ! நீ வந்து ரொம்ப நாழி ஆயிற்றே? உட்காரம்மா என்று சொன்னாள்.

சுந்தரி:- குணமணி உன் பக்திக்கு ஈடானவர் ஒருவருமில்லை உன் பக்தியில் எள்ளளவாவது எனக்கிருக்கலாகாதா? அந்தப் பிரபுவிற்கு என்மேல் அன்பில்லையா?

குணமணி புன்சிரிப்புக்கொண்டு, "சுந்தரீ! அல்லும் பகலும் அவரையே தியானித்தால் ஒரு நாளும் அவர் எவரையும் கைவிடார். அவனி பிறவிநோயை அறவே ஒழிக்க, ஐயனின் பக்தியே ஆதாரமாகும். அவரது அருளை அகற்றுறிய ஆயுதமாகும். கற்பே எதிலும் வெற்றிபெறக் காரணமாகும். சத்தியமே ஜெயக்கொடியாகும். ஜீவகாருண்யமே எல்லாவற்றிறிலும் மேன்மையானது. அவருக்கு யாவரும் ஒன்றுதான். நீ வேறு, நான் வேறு என்ற பேதம் அவருக்கில்லை" என்று போதிக்க; சுந்தரியும் அன்றுமுதல் அவ்வண்ணமே பக்தியில் ஈடுபட்டு, காலையிலும், மாலையிலும் நந்தவனத்திற்குச் சென்று நந்தவனத்திலுள்ள மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ஜண்பகம் ரோஜா முதலிய வாசனை மலர்களைக் கொய்துவந்து, குணமணியிடமோ அல்லது சத்யரூபியிடமோ கொடுத்து பூஜிக்கச் செய்வாள். அந்தப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டுதான் போஜனம் செய்வாள். ஓர் நாள் குணமணி பூத்தொடுத்துக் கொண்டிருக்கும்பொழுது சுந்தரி அவளருகில் உட்கார்ந்து கொண்டு "[illegible] ஒரு வார்த்தை கேட்க்

கிறேன். அதற்குச் சரியான பதில் சொன்னால்தான் நீ புத்தி சாலி" என்று கேட்டாள்.

குணமணி:- எதுவாயிருந்தாலும் ஏதோ தெரிந்ததைச் சொல்கிறேன். எதைப்பற்றி?

ஸத்ய.- எல்லாம் நம்மைப்பற்றித்தான்.

குணமணி:- அப்படியானால் சொல். எனக்குத் தெரிகின்றதா பார்ப்போம்.

ஸத்ய:- பிணி என்பது எது?

குணமணி:- ஜனன மரணம்.

ஸத்ய:-உலகில் உபயோகமற்றதெது?

குணமணி:-முன்னம் சரீரமே.

ஸத்ய:- நாம் இச்சரீரத்தினின்றும் செய்யவேண்டிய காரியமென்ன?

குணமணி:-பரோபகாரம், பசித்தோர் முகம்பார்த்து பரிந்து அன்னமளித்தல் ஜீவகாருண்யம், தன்னுயிர்போல் மன்னுயிரை மதித்தல், வஞ்சமற்ற நெஞ்சமொடு கஞ்சமலர்த் தாளன் பாதம் சஞ்சலங்களற்று நாளும் கெஞ்சியே, துதி புரிந்தால், அஞ்சிடாது அய்யன்வந்து ஆண்டருள்வார். அதுவே மேன்மையாகும்.

ஸத்ய:-கண்ணே உனக்கு ஆசை எதில்?

குணமணி:- அண்டளிக்கமுடியாத பிரும்மானந்தமான அருட் பரஞ்ஜோதியில்.

ஸத்:-பரமாத்மாவுக்கு எதன்மேல் பிரியம்?

குணமணி:- நல்லறமும், நட்பும் நன்றென்று, அல்லும் பகலும் அனவரதமும் அவரடி மலரை மறவாது, உள்ளும் புறமும் ஒன்றாய்த் துலங்கும் குற்றமற்ற நெஞ்சுடைய உத்தம பக்தர்கள்மேல்.

ஸத்:- நாம் முக்கியமாக தேடவேண்டிய வஸ்து எது?

குண:- பிறவிப் பெருங்கடலை துற்று, பேதமற்ற வள்ளலின் அடியார்களான கள்ளமற்ற பெரியோர்களின் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் தீனர்சகாயனை ஸ்ரீ தரரின் திருவடிக்கமல ஜோதியில் சேரும் மோக்ஷ சாம்ராஜ்யமே நாம் எக்காலும் தேடவேண்டிய வஸ்துவாகும்.

ஸத்யா, குணமணீ! நீ சொன்ன ஐந்து பதிலும் சரிதான். இப்போது சொன்ன பதிலைமட்டும் தவறுதலாக சொல்லிவிட்டாய். என்ற வார்த்தையைக்கேட்ட குணமணி திடுக்கிட்டு அம்மா! ஏதோ தெரிந்தவரையில் சொன்னேன். இதில் தப்பிதமிருந்தால் அதை மன்னித்து தவறைத் தெரிவிக்க வேண்டும். "நீ மோக்ஷசாம்ராஜ்யத்தையல்லவோ முக்கியமான வஸ்துவென்றாய்" என்று ஸத்யா கேட்க;

குணமணி:-ஆம்! அதுதான் மேலான பதவி.

ஸத்ய:- இல்லை; இல்லை! நீ சொல்வது முற்றும் தவறுதல்.

குணமணி -ஆனால்; அதை எனக்குத் தெரியச் சொல்.

ஸத்யா:- உலகில் பொருளல்லவோ முக்கியம்.

குணமணி:-பொருளா! பொருளா! பொருள் எதற்கு? பொருளிருந்து என்ன பயன்?

ஸத்யா:- உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! பொருள் இல்லாமல் எக்காரியம் நடக்கும்.

குணமணி:- ஏன்! ஜகத்பிரபுவின் அருளிருந்தால் எதுவும் ஒரு நொடிக்குள் நடக்காதா?

ஸத்ய:- என்ன நடந்தால் என்ன? பணமில்லாமல் போனால் நம்மை யார் லக்ஷியம் செய்கிறார்கள்; நாம் லெக்ஷாதிபதியாக இருக்கிறபொழுது எவ்வளவுபேர் நம்மை சுற்றிக்கொண்டிருந்தார்கள்? இப்பொழுது நம்மை யார் திரும்பிப் பார்க்கிறார்கள்

குணமணி:- அம்மா! சர்வலோக சரண்யனான ஸ்ரீமந் நாராயணனின் பாதகமலமே நமக்கு அழியாச் செல்வம் என மதிக்கும் பக்ஷத்தில், நம்மை யார் லக்ஷ்யம் செய்யவேண்டும். யார் கவனிக்கவேண்டும். எம்பெருமான் தயவு உள்ளளவும் நமக்கென்ன குறை?

ஸத்யா:- ஆயிரம் இருந்தபோதிலும் உலகோர்மெச்ச பொருளே முக்கியம்.

என்றுரைத்த வார்த்தையைக் கேட்ட குணமணி; தாயின் வார்த்தையை மறுத்துரைக்கவும் மனமில்லை; அவ்வார்த்தையை ஒப்புக்கொள்ளவும் மனமில்லை. என்ன செய்வாள்! ஸர்வமும் அறிந்த தாயே இப்படிச் சொல்வதினால் அவள் மனதில் அளவற்ற விசனத்தை உண்டுபண்ணியது. மனம் துவண்டாள். மெய் சோர்ந்தாள்; மதிமயக்கம் கொண்டாள்; கீழே விழுந்து மூர்ச்சையானாள். குணமணியின் அந்தரங்க பக்தியைக்கண்ட ஸத்யரூபி உள்ளமிக்க மகிழ்ச்சியுடன் சுத்த ஜலத்தை எடுத்து வந்து முகத்தைத் துடைத்து; "கண்ணே! எழுந்திரு. என் தவக்கொழுந்தே! உன் மனோ பக்தியை உணரவே இவ்வித வசனங்களை வெளிப்படுத்தினேன், நீ மகா புத்திசாலி! என் கற்பகமே! உன்னை எம்பெருமான் கைவிடமாட்டார். அவரே நமக்கழியா பொருளானவர்" என்று சொல்ல; இருவரும் பரமனைத் துதித்தனர். பின் இரண்டொரு தினங்கள் சென்றபின் ஒருநாள் நல்ல சுப முகூர்த்தத்தில்; சுபலக்னத்தில்; நல்ல நாழிகையில் குணமணி புஷ்பவதியானாள். அதையறிந்த ஸத்யரூபி அதிக சந்தோஷத்துடன் விரைந்தோடிவந்து, பதியை நமஸ்கரித்து, மலர்ந்த முகத்துடன் புன்சிரிப்போடு; நாதா! குழந்தை புஷ்பவதியாகியிருக்கிறாள்.

நித்யர்:- அப்படியா! எப்பொழுது?

ஸத்ய:- இப்பொழுதுதான். ஒரு நிமிஷமாகிறது.

நித்யர்:- ஜோதி பகவானிருக்கிறார். பஞ்சாங்கத்தை எடு.

ஸத்யா:- இதோ கொண்டுவருகிறேன்.

என்று உள்ளே சென்று பஞ்சாங்கத்தைக் கொண்டுவந்து நித்யதர்மரிடம் கொடுத்தாள். நாள், நக்ஷத்திரம், லக்னம் யோகம் முதலியதெல்லாம் பொருத்தமாகவும் நல்லதாகவும், இருந்ததைப்பற்றி, நித்யர் மிகவும் மகிழ்ச்சியுடன் ஓர் மஞ்சள் காகிதத்தில் குணமணி புஷ்பவதியான சமாசாரத்தையும், அந்த லக்னத்தையும் எழுதி, தனக்குத் தெரிந்த தாமோதரன் என்ற ஒரு பையனிடம் கொடுத்து, தாசில் பிரபுவிடம் கொடுக்கும்படி சொல்லி அனுப்பினார். அந்தப் பையனும் நாகர் கோவில் தாசில் பிரபுவின் பங்களாவிற்குவர, பிரபுவும் அவரது மனைவியும் ஊஞ்சலில் அமர்ந்து, சுலோசனாவின் சாந்திகல்யாண விஷயமாய் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, வாசற்கதவு சாத்தி இருந்தபடியால் மாமா! மாமா!! என்று கதவைத் தட்டினான். தாசில் பிரபு எழுந்துபோய் கதவைத் திறந்ததும், தாமோதரன் அக்கடிதத்தை அவரிடம் கொடுத்தான். குணமணி புஷ்பவதியான சமாசாரத்தையும், நாள் நக்ஷத்திரம் மிக்க மேன்மையாய் இருப்பதையும், அறிந்த தாசில் பிரபு, அதிக அன்போடு பையனைப்பார்த்து, உன் பெயரென்ன ?

தாமோதர:- மாமா ! என்பெயர் தாமோதரன்.

தாசில்:- உனக்கும் திருவனந்தபுரம்தானே.

தாமோ.- ஆமாம் மாமா !

தாசில்:- ஸரி. நீ இங்கொரு நாள் தங்கிவிட்டுப் போகலாம்.

தாமோ.- இல்லே மாமா ! அவஸியம் போகவேண்டும்.

தாசில்:- அதற்கென்ன! நாளைக்குப் போனால் போச்சு.

தாமோ:- நீங்கள் சொல்வது சரிதான்; எங்கப்பா என்னைக் கோபிப்பார். இல்லாவிட்டால் இருக்கமாட்டேனா?

தாசில்.- சரி; அப்படியானால் சமயலாய்விட்டது. சாப்பிட்டு விட்டுப் போகலாம்.

தாமோ:- மாமா ! நீங்களே இப்படிச் சொல்லுகிறபோது நான் என்ன சொல்லப் போகிறேன்.

தாசில்:- குற்றமில்லை; சாப்பிட்டானதும் போகலாம்.

தாமோ:- ஸரி அப்படியே செய்கிறேன்.

பிரபு உள்ளேவாவென்றழைத்துவந்து ஓர் பெஞ்சியில் உட்காரச்சொல்லிவிட்டு, கோமளாங்கியிடம்சென்று, கோமளாங்கி! ஸுசீந்திரத்திலிருந்து மகாலிங்கமய்யருடைய மாப்பிள்ளை வந்திருக்கிறான். அவனுக்கு நாழி ஆகிறதாம். சீக்கிரம் போகவேண்டுமாம். சாதம் போடு வா.

கோம:- ஏன்? அப்படி என்ன அவசரம். இரண்டுநாள் இருந்துவிட்டுப் போகக்கூடாதா?

தாசில்:- அவனுக்கு அவசரமாய் போகவேண்டுமாம். சீக்கிரம் போடப்போகிறாயா? இல்லையா?

இதோ வந்துவிட்டேனென்று அதிக பரபரப்புடன் சமயலறைக்குவந்து, வெள்ளியிலேபோட்டு அதிக ஆசார உபசாரத்துடன், அறுசுவைப் பதார்த்தங்களைப் பரிமாற தாமோதரனும் போஜனம் செய்தெழுந்து, தாம்பூலம் வாங்கிக்கொண்டு தாசில் பிரபு கொடுத்த சர்க்கரை, கற்கண்டுகளையும் பெற்றுக்கொண்டு தாசில் பிரபுவிடமும், கோமளாங்கியிடமும் விடைபெற்றுக் கொண்டு திருவனந்தபுரம் போனான். தாசில் பிரபுவின் சட்டைப் பையில் ஒரு கடிதம் இடப்பதைக்கண்ட கோமளாங்கி, இது ஏது கடிதம் என்று அதை எடுத்துப் படித்தாள். இரு கண்ணும் கோவைப் பழம்போல் சிவக்க, பெருமூச்செறிந்து, பல்லைக்கடித்து "இதுவோ உங்கள் தொழில். எங்கிருந்து கற்றுக்கொண்டீர்கள் இந்த சாமர்த்தியம். பிச்சைக்கார நித்யதர்மர் அனுப்பியிருக்கிறாரென்றால் நான் உபசரிக்கமாட்டேனென்று; மஹாலிங்கமய்யரின் மாப்பிள்ளை என்று பொய்யையா சொல்லுகிறீர். இந்தப் பொய் எந்த லோகத்திற்கு அடுக்கும். ஓகோ! இவ்வளவு பித்தலாட்டமா? உம், உம் நடக்கட்டும், நடக்கட்டும். இதெல்லாம் மூணே முக்கால் நாழி தான். என்று காச்சுமூச்சென்று கத்தினாள். பிரபுவின் அளவற்ற கோபத்தை உள்ளடக்கிக்கொண்டு, அந்த ஏட்டைத் திருப்பியும் வாசிக்கலாமென்று சொல்லிவிட்டு, வாயை மூடிக்

கொண்டார். பிறகு கோமளாங்கி ஜோஸ்யரை அழைத்துவரும்படி தாசில்பிரபுவிடம் சொல்ல, அவரும் குணமணியின் ஜாதகத்தைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன், கோதண்டத்தைக்கூப்பிட்டு ராமகிருஷ்ண ஜோஸ்யரை அழைத்துவரும்படிச்சொல்ல, அவனும் இதோ அழைத்து வருகிறேன் என்று ஒரே ஓட்டமாய் ஓடி, ஜோஸ்யர் வீட்டு வாசலில்போய் நின்றுகொண்டு ஓய் ராமகிருஷ்ண ஜோஸ்யரே! ஓய் ஜோஸ்யரே! என்று பலமாகக் கத்தினன். இவன் போட்டசத்தம், கொல்லைத்தலைமாட்டில் பயிர் பச்சைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ஜோஸ்யரைத்தூக்கி ஒரே தள்ளாய் தள்ளினது போலிருந்தது. தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு, அலங்கமலங்கலாய்ஓடிவந்து, வேர்வை சொட்ட நிற்கும் கோதண்டத்தைப் பார்த்து, ஏண்டாப்பா நீயார்?

கோத:- நான் யாராய் இருந்தால் உமக்கென்ன?

ராமகிரு:- நீ ஏன் என்னைக் கூப்பிட்டாய்?

கோத:- அப்படித்தான் கூப்பிடுவேன்.

ராமகிரு:- உனக்கென்ன வேணும்?

கோத:-வேணும். வெண்டைக்காயும், பாவக்காயும்.

ராமகிரு:- என்னடா? உளர்றே.

கோத:- என்னமோ உளறுகிறேன். நீர் என்னென்னங்காணும் கேட்கிறது.

ராமகிரு :- அட கஷ்டகாலமே!

கோத:- உமக்குத்தான் கஷ்டகாலம். போங்காணும். சரிதான்.

ராமகிரு:- அடா மண்டு.

கோத:-நீர்தான் குண்டு

ராமகிரு:- என்னடா பெரிய துன்பமாயிருக்கு இது.

கோத:- என்னங்காணும் துன்பம் கின்பங்கிறீர். அப்புறம் தெரியுமா? எங்க மாமா அழைச்சிண்டு வரச்சொன்னு இப்படியா சண்டை போடுகிறீர். உம்.

ருமகிரு:- யாருடா உங்க மாமா?

கோத:- யாரு நீர்தான் சொல்லுமேன்.

ருமகிரு:- எனக்கெப்படியடாத் தெரியும்?

கோத:- ஆமா! ஆமாம்!! உமக்கொன்றுமே தெரியாது. வாயில் விரலை வைத்தால் கடிக்கக்கூட தெரியாது. பாவம்.

ருமகிரு:- ஏண்டா உன்பேரென்னடா?

கோத:- உமக்குத் தெரியாதோ?

ருமகிரு:- தெரிஞ்சா கேட்பேனுடா?

கோத:- என்ன வாயிருந்தா உமக்கென்ன?

ருமகிரு:- இல்லே, நீ ரொம்ப புத்திசாலியாயிருக்கையோ இல்லையே அதனால்தான் கேட்கிறேன்.

கோத:- நான் புத்திசாலின்னு இப்பொழுதுதான் தெரியுமோ?

ருமகிரு:- ஆமாம்! நான் அசடுதானே. அதனால்தான் தெரியல்லே! நீ சமத்தாச்சே. உன் பேர் சொல் பார்ப்போம்.

கோத:- அப்படிக்கேட்டால் நான் சொல்வேன். என் பேர் கோதண்டராமன்.

ருமகிரு:- ஓஹோ! தாசில்பிரபு வீட்டில் இருக்கிற கோதண்டம் தானேடா நீ?

கோத:- ஆமாங்கனும் ஆமாம். எங்க மாமா உங்களை அழைச்சிண்டு வரச்சொன்னார்.

ருமகிரு:- பேஷ் தேவலே! என்னை அழைச்சுண்டுபோக வந்தவனு இப்படி பேசிக்கொண்டிருக்கே. அட பாபமே! சரி இதோ வந்துவிட்டேன்.

கோத:- ஏங்காணும் இப்படி சாப்பாட்டு ராமனுயிருக்கிறீர். எப்படிதான் காலக்ஷேபம் செய்கிறீரோ!

ருமகிரு:- என்னப்பா பண்ணுகிறது? எல்லோருமே சமத்தா இருந்துட்டா லோகம்போற வழியென்ன?

என்று சொல்லி சிரித்துக்கொண்டு, அசடருடன் வாயை கொடுத்தால், சமத்தரும் பைத்தியமாவாரென்ற கதைபோல் இவனுடன் வாயைக் கொடுத்தால் நாம்தான் முட்டாளாவோம் என்றெண்ணி, ஸரி, வா போவோம் என்று இருவரும் தாசில் பிரபுவின் பங்களாவிற்கு வந்தார்கள். தாசில் பிரபுவும் எழுந்து வந்து, வரவேண்டும் வரவேண்டும் என்று அதிக உபசாரமாக அழைத்து, ஆஸனம் கொடுத்து, நமஸ்கரித்து, "பெரியோர் தங்கள் வரவினால் என் மனம் மிக்க சந்தோஷத்தை அடைந்தது. பெரியவாள் சௌக்யம்தானே! என்று வினவ;

ஸ்ரீமகிரு:- எல்லாரும் சௌக்யந்தான். உன் குழந்தைகள் எல்லாம் சௌக்யந்தானே.

தாசில்:- எல்லாம் பெரியவாளுடைய ஆசீர்வாதம். தங்களைக் கொஞ்ச நாளாக காணமுடியவில்லையே?

ஸ்ரீமகிரு:- நான் காசிக்குப் போயிருந்தேன்.

தாசில்:- அப்படியா? எவ்வளவு நாளாகிறது.

ஸ்ரீமகிரு:-நான்போய் இரண்டு வருஷமாகிறது.

தாசில்:- ஓஹோ வந்து எத்தனை நாளாகிறதோ?

ஸ்ரீமகிரு:-இப்போதான் எழெட்டு நாளாகிறது.

தாசில்:- தை மாதம் குழந்தைக்கு கல்யாணம் நடந்தது. நீங்கள் வாராதது எனக்கு ரொம்ப வருத்தம்.

ஸ்ரீமகிரு:- என்ன செய்யறது. அந்த சமயம் நான் காசியிலிருந்தேன். பெரியவனுக்குத்தானே.

தாசில்:-இரண்டுபேருக்கும்தான்.

ஸ்ரீமகிரு:-எல்லாம் பகவானுடைய அனுக்கிரஹத்தால் க்ஷேமமாக இருந்தால் சரி.

தாசில்:- பாபுவின் ஜாதகத்தையும், சுப்ரகாசன் ஜாதகத்தையும் கொஞ்சம் பார்த்தால் தேவலை.

ஸ்ரீமகிரு:- அதற்கென்ன! பார்த்தால் போச்சு. ஜாதகத்தைக் கொடும் என்றார்.

தாசில்:- பாபுவின் ஜாதகத்தை முதலில் பாருங்கள்.

ஞமகிரு:- ஸரி. அவனுக்கு விவாகம் செய்திருக்கும் பெண்ணின் ஜாதகத்தைக் கொடு.

தாசில்:- இந்தாருங்கள்.

ஜோஸ்யர் இருவர் ஜாதகத்தையும் சேர்த்து ராசி போட்டுப் பார்த்து, முகத்தைச் சுளுக்கிகொண்டு, வித்யாவல்லபா! இந்த ஜாதகத்தை விசேஷமாகச் சொல்லமுடியாது. பாபுவின் ஜாதகத்தை ஒருவிதமாகச் சேர்த்துக்கொண்டாலும், அந்தப் பெண்ணுடைய ஜாதகம் பெருமோசம். ஆனால் இந்தப் பெண்ணுடைய தகப்பனார் கொஞ்ச நிலபலன்களுள்ளவராகத்தான் இருப்பார் என்ன இருந்தால் என்ன? அந்தப் பெண்ணால் ஓர் அதிர்ஷ்டமென்று சொல்லமுடியாது. மேலும், அந்தப்பெண் மகா துர்க்குணியாயிருப்பாள் என்றார். சுலோசனாவை துர்க்குணி என்றும், அதிர்ஷ்ட மற்றவளென்றும், சொன்ன வார்த்தையைக்கேட்ட கோமளாங்கிக்கு வந்த கோபம் கணக்கு வழக்கில்லை. ஆவேசம் வந்ததுபோல் உதடு துடிக்க, கண்களில் நீர்பெருக, ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, “ஓய் ஜோஸ்யரே! இந்த ஜாதகத்தை பார்த்ததுபோரும் சுப்ரகாசன் ஜாதகத்தை பாரும் என்றாள். அவரும் சுப்பிரகாசன் ஜாதகத்தையும் குணமணியின் ஜாதகத்தையும் நன்றாய் ராசியிட்டுப் பார்த்துச் சந்தோஷித்து; மெதுவாய் சிரித்துக்கொண்டு, வித்யாவல்லபரே இந்தப் பெண்ணினுடைய ஜாதகத்தைப்போல் மேன்மையானது இதுவரையில் நான் பார்த்ததேயில்லை· சுப்ரகாசன் ஜாதகத்தை விட, குணமணியின் ஜாதகம் மிகவும் மேன்மையாயிருக்கிறது. ஆனால், இந்தப் பெண்ணினுடைய தாய் தகப்பனார் ஆதியில் பணக்கார ராயிருந்தாலும், தற்சமயம் ஜீவனத்திற்குக்கூட அப்படியும் இப்படியுமாகத்தானிருக்கும். இந்த மாதம் 15-ஆம் தேதி ஓர் கிரஹம் மாறுகிறது. சுக்கிரதசையும் சேருகிறது. அதுமுதல் ஓர் பட்டணத்திற்கு ராணியாகி, மகுடம் தரித்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படியான, அதிர்ஷ்டம் வரப் போகின்றது என ஜோஸ்யர் சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்ட தாசில் பிரபுவின் மனதில் அளவற்ற ஆனந்தமுண்டா

யிற்று. கோமளாங்கியினது உள்ளத்தில் குடிகொண்டிருந்த அகங்காரமும், ஆத்திரமும் அளவற்ற கோபமாகப் பொங்கி எழுந்து ஓங்க, ஜோஸ்யரை புலி ஆட்டை விழுங்குவதுபோல் விழுங்கிவிடலாமா என்றெண்ணினாள். இந்நிலையில் அவள் கையில் வாள் இருந்தால் வெட்டி இருப்பாள்; கயிறு இருந்தால் கட்டி இருப்பாள். ஜலம் இருந்தால் கொட்டியிருப்பாள். அவ ரைப் பிடித்த நல்ல காலமோ அல்லது அவரது முன்னோர்கள் செய்த தவப்புண்ணியமோ அவள் கையில் ஒன்றுமில்லை. ஆனால் சுலோசனாவை இகழ்வாகவும், குணமணியை புகழ்வாகவும் சொன்ன ஜோஸ்யரை, கோமளாங்கி சும்மா அனுப்ப மனம் இசைவாளா? கையால் அடிப்பதைவிட வாயால் அடிப்பதுமேல் என்றெண்ணி "ஓய் ஜோஸ்யரே! உம்முடைய ஜோஸியத்தை இத்துடன் நிறுத்தும். எங்கிருந்தய்யா இந்த தலைகீழ் ஜோஸி யம் கற்றுக்கொண்டீர். உம்மைப்பார்த்தபேர், ஜோஸியர் என்று நம்ப பஞ்சாங்கக்கட்டு ஒன்று வைத்துக்கொண்டீரோ! ஜோஸ் யம் என்று பெயர்வைத்துக்கொண்டு, வாயில் வந்ததைச்சொல்லி விட்டு, ஊரைக் கொள்ளையிடலாமென்றெண்ணினீரோ, உம்மை போன்ற அரை குறை ஜோஸியர்களை அழைத்துவந்து கேட் டால் இம்மாதிரிதான் சொல்வார்கள். ராஜாத்தியாம், ராணி யாம், சிம்மாஸனமாம், செங்கோலாம், முடியாம், மகுடமாம். நன்றாய்ச் சொன்னீர். எழுந்திருந்து போகப் போகிறீரா, இல் லையா?" என்று அண்டம் கிடுகிடுக்க, அட்டகாசம் செய்தாள்.

இதுவரையில் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த தாசில்பிரபு அடங்கொணாத கோபத்துடன், "புலிபதுங்கி பாய்வதைப்போல்" அவள் கையைப் பிடித்துக் குலுக்கி, கன் னத்தில் இரண்டு அறை கொடுத்து, "மரியாதையற்ற பைசா சமே! இக்கர்வம் உனக்கெங்கிருந்து வந்தது. நம் தகப்பனா ருக்குச் சரியான இப் பெரியவரை, என்னவார்த்தைகள் சொல்ல லாமென்றெண்ணாமல் அபரிமிதமாய் வாயில் வந்தவாறு, பேசு கின்றாயே? உன் நாவைத் துண்டிப்பேனென்று நீ அறியாய் போலும்! மரியாதையாய் இருந்தால் நீ பிழைத்தாய். இல்லை யேல்? தொலைந்தாய்" என்று மேலும் இரண்டு மூன்று உதை கொடுத்து, கீழே தள்ளினார். ஜோஸ்யர் எழுந்தோடிவந்து;

வேண்டாம், வேண்டாம், வித்யாவல்லபா! போதும், போதும் நிறுத்து" என்று கையைப் பிடித்துக்கொண்டார். இதற்குள் கோமளாங்கி இன்னும் இங்கிருந்தால் ஏதாவது விழுந்துவிடப் போகிறது என்று அழுது கொண்டே உள்ளே போய்விட்டாள். பிறகு வித்யாவல்லபருடைய கோபம் சற்று நீங்கி சாந்தம் ஏற்பட்டது. பாபுவுக்கும், சப்ரகாசனுக்கும் சாந்தி முகூர்த்தம் செய்வதற்கு; முகூர்த்தம் வரிக்கும்படிச்சொல்ல, ஜோஸ்யர் பஞ்சாங்கத்தைப் பார்த்து, 14-ம்தேதி முகூர்த்தமிருக்கிறது. அதில் நடத்துவதே மிகவும் விசேஷமென்று சொல்லிவிட்டு, விடைபெற்றுத் தன் வீடுபோய்ச் சேர்ந்தார். பிரபுவும் அவர் சொல்லியபடி 14-ம்தேதி முகூர்த்தம் வைத்திருப்பதாகவும், அதற்காக தங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் நான்கு நாள் முன்னதாகவே வந்துவிடவேண்டுமென்றும் தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தனது பந்துக்களுக்கும் நிருப மனுப்பினார்.

தனது சம்பந்தியாகிய தாசில்பிரபுவிடமிருந்துவந்த கடிதத்தில் சாந்தி முகூர்த்தம் நிச்சயித்திருப்பதைக்கண்ட மகாலிங்க அய்யர் மிகவும் சந்தோஷம் கொண்டார். அக்கல்யாணத்தின் பொருட்டு தனது பெண்ணுக்கு ஸ்ரீதனமாக கொடுக்கவேண்டிய கட்டில், மெத்தை, திண்டு, தலையணைகள் முதலிய படுக்கை வகையறுக்களும், பாத்திரங்களும், பக்ஷணங்களும் ஜவுளிகளும் ஏதோ இரண்டொரு ஆபரணங்களும் செய்விக்க ஏற்பாடு செய்தார்.

## அத்தியாயம் 5.

### துன்பத்தில் - இன்பம்.

திருவனந்தபுரத்தில் நித்ய தருமர்; கிருஷ்ண பரமாத்மாவுக்கு வழக்கம்போல் அபிஷேகம், பூஜை, நிவேத்தியம், கற்பூரம், முதலிய ஆராதனைகளை எல்லாம் முறைப்படி செய்து, பூஜையை முடித்துக்கொண்டு, பகவத் சந்நிதானத்தில் தன்னையே மறந்து, எம்பெருமானை தியானம் செய்துகொண்டிருக்கும்பொழுது, தாசில்பிரபு எழுதிய கடிதம் கிடைத்தது. அக்

கடிதத்தில் 14-ம் தேதி குணமணிக்கு சாந்தி முகூர்த்தம் வைத்திருப்பதாகவும், பெண்ணை அழைத்துக்கொண்டு எல்லோரும் வந்துசேரும்படி எழுதியிருப்பதைக்கண்டு மனைவியைப் பார்த்து "பிரியே! இந்த மாதம் 14-ம் தேதி குணமணிக்குச் சாந்தி முகூர்த்தம் வைத்திருக்கிறார்களாம்; பெண்ணை அழைத்துக்கொண்டு நாம்போகவேண்டும்" என்று சொன்னார். சத்யரூபியின் மனம் இதற்கெப்படி இடம்கொடுக்கும். கல்யாணத்தின் பொழுது அவள் அடைந்த அவமானமும், குழந்தை ஞானம் பட்ட அடியும், கோமளாங்கி செய்த அவமரியாதையையும், அவள் மறந்தாளில்லை. அல்லும் பகலும் அவள் மனம் அனலிலிட்ட மெழுகாய் உருகிக்கொண்டே இருந்தது.

"நாம் இப்படி ஏழையாயிருப்பதாலன்றோ நம்மை எல்லோரும் ஏளனம் செய்கிறார்கள் என்று வருந்திக்கொண்டிருக்கும் சத்யரூபியா மறுபடியும் இவ்வறுமையுடன் அவர்கள் வீட்டுக்குப்போக சம்மதிப்பாள்? ஆனால், பதியின் வார்த்தையை மறுக்கவும் மனம் இல்லாதவளாய் என்ன செய்வதென்றேங்கி நின்றாள். இவள் வருத்தத்துடனிருப்பதை அறிந்த நித்ய தர்மரும் சத்யா! ஏன் முகவாட்டத்துடனிருக்கிறாய்?

ஸத்யா:- ஒன்றுமில்லை நாதா.

நித்யர்:-ஏன் பித்தம்கொண்டவள்போல் நிற்கிறாய்?

ஸத்யா:- நாதா! என்னை மன்னிக்கவேண்டும் "மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்" என்பது ஒளவைப் பாட்டியின் அழகிய மொழியல்லவா?

0,2:95

நித்யர்:- ஆம் அதற்கென்ன செய்வது?

ஸத்யா:-குழந்தையின் கல்யாணத்தின்பொழுதே அவ்வளவு அலக்ஷியம்செய்து, பிச்சைப் பிரபு, பிச்சைப் பிரபு என்ற நிந்தனை வார்த்தைகளைக் கேட்ட என் காது நொந்து புண்ணாக இருக்கிறது. இன்னமும் இன்று என் வறுமையுடன் அங்குசெல்ல என் மனம் கொஞ்சமும் இடங்கொடுக்கவில்லையே, பிறகு உங்கள் அபிப்பிராயம் எப்படியோ அப்படிச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

34164

நித்ய:- நீ சொல்வது வாஸ்தவந்தான். ஆனால் அவர்கள் சரக்கை அவர்களிடம் ஒப்புவிக்கவேண்டாமா? இனிமேல்குணமணி அவர்களைச் சேர்ந்தவள். அவர்கள் சொல்படிதான் நடக்க வேண்டும். ஆகையால், குணமணியைக் கொண்டுவிட வேண்டியது அவஸ்யமல்லவா.

ஸத்ய:- நாதா! நான் குணமணியை அழைத்துக்கொண்டு போக வேண்டாமென்று சொல்லவில்லையே பிறர் வீட்டு வஸ்துவை நாம் எவ்வளவு நாள் வைத்து அநுபவிக்கமுடியும். அடித்தாலும், பிடித்தாலும், ஆயிரமானாலும், அவர்கள் நாட்டுப்பெண் அவர்கள் வீட்டில்தானிருக்கவேண்டும். ஆனால் இவ்வேழ்மையுடன், நான் அங்குவர என்மனம் எள்ளளவும் சம்மதப்படவில்லை.

நித்யர்:- என்ன செய்யச் சொல்கிறாய்?

ஸத்ய:- தங்களபிப்பிராயம்.

நித்ய:- நீதான் ஒரு யோசனை சொல்லேன்.

ஸத்ய:- தாங்கள் அறியாத யோசனையா நான் சொல்லப்போகிறேன்! குணமணியை அழைத்துக்கொண்டுநீங்கள்மாத்திரம் போய் வாருங்கள். நானும் ஞானமும் இங்கிருக்கிறோம்.

நித்ய:- நல்லது ஆகட்டும், அப்படியே செய்வோம்.

ஸத்யவதி "ஜகன்னாதா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! தீனதயாளா! ஏழைகளுக்கிரங்கும் இளகியநெஞ்சோனே! உன்னால் ஆகாதகாரியமும் ஒன்றுண்டோ? இல்லை, என்று அனைவரும் சொல்ல நான் கேட்டிருக்கிறேனே அப்படி இருக்க என்னை ஏன் வீணில் வதைக்கின்றாய், தற்போது என் அருந்தவச் செல்வ குணமணியை வெறுங்கையுடன் அனுப்பவேண்டியிருக்கிறதே, கொஞ்சம், திரட்டிப்பாலேனும் கூட செய்து கொடுக்க சக்தியின்றி வைத்திருக்கின்றாயே. இது உனக்கு தகுதியோ" என்று சொல்லிக்கொண்டு புலம்பியவாறே நந்தவனத்திற்குள் சென்றாள். சத்யரூபியின் இரு நேத்திரங்களினின்றும் தாரைதாரை

யாய் நீர் ததும்பிற்று. மீண்டும் புஷ்பங்களை கொய்துகொண்டு உள்ளே வந்தாள். புஷ்பங்களை மாலையாக தொடுத்து எம் பெருமான் திருமேனியில் சாத்தி திவ்ய தரிசனத்தைக் கண்டு மகிழ்ந்து, இரு கைகளையும் கூப்பி 'ஹே பிரபோ! உன்னையன்றி யாரைக் கெஞ்சுவேன்; யாரை அண்டுவேன், யாரை வேண்டுவேன்; யாரைப் போற்றுவேன்; யாரைத் தஞ்சம் புகுவேன் யார்காலில் விழுவேன்; யாரைக்கும்பிடுவேன்; யார் என்னை ஆதரிப்பார்; யார் எனக்கருள் புரிவார்; யார் என்மீது இறங்குவர்; யார் என் துயர் தீர்ப்பர்; ஐயனே! நினையன்றி எனக்கொருகதி இல்லையென அறியிலையோ ஹே! கருணாநிதே! நின் திருவருளால் இச்சமயத்தில் எனக்கேதேனுமகப்படலாகாதா! அப்படியும் நீ அருள் புரிவாயா!'' என்று அங்குள்ள அடுக்குபானைகளை எல்லாம் ஒவ்வொன்றாக திறந்து பார்த்தாள். சுமார் 50 பானைவரை சோதனை போட்டாய் விட்டது; ஒன்றும் அகப்படாததால் தாங்கவொண்ணு சஞ்சலத்திலாழ்ந்து, மனம் மெலிந்து, மேனி துவண்டு, கை கால்கள் சோர்வடைந்து, கண்ணபிரானின் சன்னதியில் கண்களில் நீர் சொரிய, பேசவும் நாவு எழாமல் கீழே விழுந்து மதிமறந்தாள். பக்தவத்ஸலனை, ஸ்ரீ ஹரி! இவளது பக்தியைக்கண்டு மனமகிழ்ந்து துயரத்தை சகியாதவராய், ஓர் சர்க்கரை பொட்டலத்தை அவளருகில் வைத்து மறைந்தார். சத்யரூபி பிரக்ஞை தெளிந்தெழுந்து, பக்கமிருந்த சர்க்கரைப்பொட்டணத்தை கண்ணுற்று, மகிழ்ச்சி கொண்டு ஹே! ஜெகத்பிரபு! இதுவும் உன் திருவிளையாடலோ என்றெண்ணி சந்தோஷமுற்றதை எழுத்திலும் எழுதவேண்டுமோ?இந்த சந்தோஷத்தை தன் பதியிடம் தெரிவிக்கவேண்டுமென்ற ஆவலுடன் வாயிற் பக்கம் செல்ல எதிரிலிருந்த மைதானத்தில் ஒருபசு மேய்ந்துகொண்டிருக்கக்கண்ட சத்யரூபி அதி விரைவுடனுள்ளே சென்று, தான் வைத்திருந்த கழுநீரைக் கொண்டு வந்து, வாயலில் வைத்து, ''அம்மா பா, பா'' என்று அழைத்தாள். அப்பசுவும் ஒரு ஓட்டோட்டமாய்ஓடிவந்து அக்கழுநீரை சொட்டுமிஞ்சாமல் குடித்து வாலை சுற்றிக்கொண்டே நின்றது. சத்யரூபி அப்பசுவின் அழகையும் முகலக்ஷணத்தையும் பார்த்து மனம் திகைத்து, ''ஆஹா! என்ன அழகு, என்ன லக்ஷ்மீகரம், என்ன லக்ஷணம்'' என்று வர்ணித்து சுற்றி வலம்

வந்து நமஸ்கரித்து கைகுவித்து நிற்கும் சமயம், ஆகாயத்தினின்று இடி இடித்தாற்போல் ஒரு சப்தம் கேட்க திடுக்கிட்ட சத்யரூபி, ஆகாயத்தை பிரமித்து நோக்க, "உத்தம குணத்தில் சிறந்த சத்தியரூபி, உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக வருவித்த இத்தரும தேவதையின், பாலைக்கறந்து கொள்" என்று ஓர் அசரீரி வாக்குப்பிறந்தது. அதைக்கேட்ட சத்யாவின் உள்ளங்குளிர்ந்தது. உள்ளே நுழைந்து சுத்தி செய்த ஓர் செம்பையும் கொஞ்சம் ஜலத்தையும் கொண்டு வந்து, பசுவின் மடியை அலம்பி, பிரதக்ஷணம் செய்து, நமஸ்கரித்து, "தாயே, லோக மாதா, நீயே என தன்னை, நீயேஎன் தந்தை, நீயே என்குரு, நீயே என்தெய்வம், சர்வமும் நீயே, பாலகிமேல் பகையின்றி பாலளிப்பாயம்மா" என்று பலவாறாய் புகழ்ந்து, பசுவைத்தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டு சொம்பை கீழே வைத்து விட்டு கண்ணை மூடிக்கொண்டு பகவானை தியானித்தாள். ஆவின் மடியிலிருந்து தானாகவே பால் சொரிந்து சொம்பு நிறைந்தது. ஆவும் மறைந்தது. நித்யதருமரும் இருகுடலை புஷ்பத்துடன் வந்தார். தோழருடன் விளையாடிக்கொண்டிருந்த ஞானமணியும்வந்தான். நித்திரைதெளிந்து எழுந்த குணமணியும், தன் தாய் கண்ணை மூடிக்கொண்டு வாயலில் நிற்பதைக் கண்டு அங்கு ஓடிவந்தாள். ஆனால் சத்யரூபி மாத்திரம் தன்னையும் மறந்து சைதன்ய பிரபுவின் சரணாரவிந்த தியானத்திலீடுபட்டிருந்தாள். உலகையும் மறந்தாள். உடலையும் மறந்தாள், உள்ளத்தையும் ஓர் நிலையாய் நிருத்தி உத்தமன்பால்செலுத்தி 'வெட்டிச்சாய்த்த மரம்போல் விழுந்தாள். இதைக்கண்ட குணமணி உள்ளம் நடுநடுங்கி உடலம் துடிதுடித்து கை கால்கள் படபடத்து ஹா! அம்மா! அம்மா! என்று வாய்விட்டலறினாள். உடனே ஞானமணியும், தாயின் மேல் விழுந்து "அம்மா! அம்மா! என் அம்மா விழுந்துட்டே என் பேசமாட்டேங்கிறே உனக்கென்னமா பண்றது எம்மா; கண்ணை மூடிக்கொண்டிருக்கே எம்மா நோக்கு கோபமா" என்று சொல்லி தேம்பி அழுதான். குழந்தை அழுவதைக்கண்ட நித்யதருமரின் கண்களில் நீர் ததும்ப அதை துடைத்துக் கொண்டு, ஞானம், அழாதேயப்பா, அழாதே என்றார்.

ஞானமணி:- அம்மாதான் பேசமாட்டேங்கிருளே அப்பா;

நித்ய:- இன்னும் கொஞ்ச நாழியானுப் பேசுவா.

ஞான:- ஆமா! ஆமா! நீ பொய் சொல்ரே நேக்கு தெரியும்.

நித்ய:- இல்லே நிஜந்தான்.

ஞான:- எல்லாம் பொய்தான் சொல்ரே, அம்மாதான் பேசமாட்டேங்கிருளே, எனக்கு மட்டும் அம்மா வேண்டாமோ?

நித்ய:- அம்மா, அம்மாச்சியை தியானம் பண்ணுரு.

ஞான:- அப்படின்னு இன்னமே என்னேடே பேசமாட்டாளா?

நித்ய:- இன்னும் சித்தநாழி போனு பேசுவா ... ... ...

ஞான:- நிஜம்மாவா பேசுவா!

நித்ய:- உண்மையா பேசுவாடா கண்ணு,

ஞான:- அம்மா, அம்மாச்சியை பூஜை பண்ணுருளாப்பா?

நித்ய:- ஆமாம்ப்பா,

ஞான:- அக்கா அப்பா! சொல்லரது பொய்தானேக்கா?

குணமணி:- அப்பா பொய் சொல்வாளா ஞானம்,

ஞான:- சொல்லமாட்டா, சொல்லமாட்டா, நிஜந்தாஞ் சொல்லுவா, நிஜந்தாஞ்சொல்லுவா. ஆமாம், சரி அப்பன்னு அம்மா செத்துப்போமாட்டாளேன்னு?

போமாட்டாப்பா என்று ஞானமணியை சமாதானம் செய்துகொண்டிருக்கும் பொழுது, சத்யரூபி தியானம் கலைந்து எழுந்தாள். அருகிலிருந்த பசுவைக் காணுதபடியால் திடுக்கிட்டு எங்கே அப்பா? எங்கே என் தாய்? எங்கே என் மாதா? எங்கே என் தர்மதேவதை? எங்கே போய்விட்டாள். என் அன்னையே! நான் உனக்கென்ன அபராதம் செய்தேன்? என்மேல் உனக்கென்ன கோபம்? சேயின்மேல் கோபம் கொள்ளும் தாயும் உலகிலுண்டோ? என் அபசாரத்தை மன்னிக்கவேண்டும்; என்னை ஆதரிக்கவேண்டும்; அம்மையே! அம்மையே!! என்று அங்கு

மின்ரும் ஓட ஆரம்பித்தாள். ஞானம் ஓடிவந்து, அவள் காலை கட்டிக்கொண்டு அம்மா! அம்மா!! ஏம்மா என்னோடு பேசமாட்டேங்கிறே, என்னம்மா இது; என்னன்னமோ உளரரையேம்மா; நான் என்னபண்ணுவேம்மா; என்று குழந்தை அழுவதைக் கண்ட ஸத்யரூபி, வாரிஎடுத்து முகத்தோடணைத்து முத்தமிட்டு, பதியைப்பார்த்து, நாதா இங்குநின்ற பசுமாடு எங்கே சென்றது? தாங்கள் பார்க்கவில்லையா? என்ன? என்று சத்யா வினவ, பசுமாடா எனக்குத் தெரியாதே; நான் பார்க்கவில்லையே; ஏது மாடு? என்று நித்யர் கேட்டார்.

சத்ய:-நாதா குணமணியை அனுப்பும் பொருட்டு. கொஞ்சம் திரட்டிப்பால் கொடுத்தனுப்பக்கூட வழியில்லையே என்று மனம் வருந்தினேன். கருணாநிதியின் திருவருளால் அருகில் ஒரு சர்க்கரைப் பொட்டணமிருப்பதைக் கண்டேன். அதைத் தங்களிடம் தெரிவிக்க ஆவல்கொண்டு வாயிலில் வந்தேன். அங்கோர் மாடு மேய்ந்துக் கொண்டிருப்பதைக் கண்ட யான் உள்ளே இருந்த கழு நீரையும், கஞ்சியையும் கொண்டுவந்து வைத்தேன். அக்காலத்தில் ஒரு மின்னல் தோன்றி "உத்தம குணத்தில் சிறந்த சத்யரூபி! உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக வருவித்த இத் தருமதேவதையின் பாலைக் கறந்துகொள்வாய்" என்று ஒரு அசரீரி வாக்குப் பிறந்தது. உடனே ஒரு சொம்பை எடுத்துவந்து கீழே வைத்துவிட்டுப் பரமனைத் தியானம் செய்து கொண்டிருந்தேன். கண்ணைத் திறப்பதற்குள் மாயமாய் மறைந்து விட்டதே அப்பசு. செம்பும் அதோ இருக்கிறதே என்று திரும்பிப் பார்த்தாள். அச்சொம்பில் நுரையுடன் பால் நிறைந்திருப்பதைக்கண்ட எல்லோரும் மனம் மகிழ்ந்து, ஆஹா! என்ன ஆச்சர்யம்! என் அன்னையே நின் திருவுள்ளமிவ்வாறிருக்குமென்று அறியேன். அம்மையே அடியாள்மீதிறங்கி பாலைக்கறந்து மறைந்தனையா? அம்பிகே அடியேனை முற்றுமிவ்வண்ணமே அருள்வாயென, எல்லோரும் ஸ்தோத்திரம்செய்து, பாலை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று, திரட்டிப்பால் செய்து, பகவானுக்கு நைவேத்தியம் பண்ணிய பிறகு போஜனத்தையும் முடித்துக்கொண்டு, பகவத் சன்னிதானத்தில் சயனித்து, நித்திரை செய்தார்கள்.

## மணிகளின் பிரிவும் - மழலை மொழியும்.

இப்படியாக இரவுமுழுவதும்போய் மறுநாள் பொழுது விடிந்தது. எல்லோரும் எழுந்து காலை கிரியைகளை முடித்துக் கொண்டு, நித்யதர்மர் ஸ்நான-பானம்; பூஜை முதலியவையெல்லாம்முறைப்படி செய்தானபிறகு; நாகர்கோவில் செல்லுவதற்கு வேண்டிய மடிஸஞ்சி; அதில் இரண்டொரு வேஷ்டி, ஓர் கிண்ணத்தில் திரட்டிப்பால் முதலிய சாமான்களெல்லாம் எடுத்துக் கொண்டு, குணமணியைப் பார்த்து அம்மா குழந்தே வா போவோமென்றார். குணமணிக்கு அளவற்ற துக்கமுண்டாகி அன்னையைப் பார்த்து; தேம்பித்தேம்பி அழுதவண்ணம், "அம்மா நீயும் வரமாட்டாயா! நீ வராமல் நான்மட்டும் ஒண்டியாகவா போகவேண்டும்!" என்று கேட்க,

ஸத்ய:- என் கண்ணே! நான்செய்த பாக்கியம் அவ்வளவுதான், உன் சாந்தி கல்யாணத்தை என் கண்ணாரக்கண்டு களிக்க நான் கொடுத்துவைக்கவில்லை.

குண:-அம்மா! நான் அனாதையாய் தனித்துச்சென்றால், என்னை எல்லோரும் நிந்திக்கமாட்டார்களா?

ஸத்ய:- குணமணி! நாமிப்பொழுது அனாதையைப்போல்தானே இருக்கிறோம், என் தங்கமே! அழாதேயம்மா! நீ அழுவதால் அடையக்கூடிய பலன் என்ன?

குண:- அம்மா! சுலோசனா ஆத்திலிருந்து அவள் தாய், தந்தை சகோதரிகள் உறவினர்கள் எல்லோரும் வந்திருப்பார்களே; நம்மாத்திலிருந்து நீ கூட வாராமல், நான் மட்டும் தனியாக அப்பாவுடன் சென்றால், என் மாமி என்னைக் கோபிக்கமாட்டாரா? மேலும், என் மாமி, உங்கம்மா எங்கே? ஏன் வரவில்லை? என்று கேட்டால் நான் என்ன சொல்வேன்?

ஸத்ய:-என் செல்வமே! நாம் கவலைக்கே உடம்பெடுத்தோம். ஈசனும் நம்மை அப்படியே சோதிக்கிறான், அவருக்கும் வேடிக்கையாக இருக்கிறது. இனி அழுவதாலாவதென்ன நாழி ஆகிறது போய்வாம்மா. அம்மா! "நான் யாருமற்ற அனாதி யென்று அவர்கள் வீட்டில் எப்படி நுழைவேன். தாயற்ற பெண்போல தலைகுனிந்து நிற்கும்படி என்கதி

ஆய்விட்டதே. பந்துவற்ற அநாதி என்று என்னை எல்லோரும் ஏசுவார்களே. அத்தனை பேர்களின் மத்தியில் நான் எப்படி ஒண்டியாய்ப் போவேன் என்ன செய்வேன். எப்படிச்செல்வேன், எனக்கொன்றும் தெரியவில்லையே! என் மனம் மிகவும் வருந்துகிறதே. என்னால் தாளமுடியவில்லையே என் செய்வேன் என்று ஏங்கி அழுதாள் குணமணி.

பெண்ணின் மனஸ்தாபத்தை சகிக்கமுடியாத சத்யரூபி, "ஹே! பரமாத்மா! பத்மதள நேத்ரா! பக்தர் மனோவாஸனே! பரம புருஷா! ஏனிந்த சோதனை செய்கிறாய். உன் குழந்தையின்மேல் உனக்கு எள்ளளவும் இரக்கமில்லையா? நீ அளித்த பாலர்களை நீதானே பாதுகாக்கவேண்டும். எனக்கு வேறுயார் துணை; என்று பலவாறாய் பிரலாபித்து குணமணியை பார்த்து, ஸத்யா கண் கொள்ளா நீர் சொரிய; கம்மிய குரலுடன், ' என் மாபெரும் தவக்கொழுந்தே! மனமெய்யும் மாமணியே' சிந்தை மகிழ் செங்கனியே! என்கண்ணே! நீஏன் வருந்துகிறாய்! உன்னை ஆதரிப்பவர், அந்த பரந்தாமனேயன்றி, மற்றொருவருமில்லை. அன்னை, பிதா, பந்துஅனைவரும் அவரே, அனுதினமும் உன்னை ஆண்டருள் அழகரும் அவரே, பொன்னும் அவரே, பொருளும் அவரே, பூமியும் அவரே, அல்லும் பகலும் அனவிரதமும், அவரையே தியானிப்பாயாகில், ஆண்டவருன்னை கைவிடமாட்டார், காத்தருள் புரிவார். அநாதையானாலும்காப்பார். இது நிச்சயம். உண்மையாக " கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதை நீ அறிந்திலாய் போலும், என்று தேறுதல் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, வாயலில் விளையாடிக் கொண்டிருந்த ஞானம் அம்மா, அம்மா என்று, கூப்பிட்டுக் கொண்டே உள்ளே ஓடிவந்தான் அக்கா அழுது கொண்டிருப்பதை கண்டான்.

ஞானமணி:- அம்மா அம்மா அக்கா ஏம்மா அழறா! அக்காவை நீ என்ன பண்ணினேம்மா? அடிச்சையாம்மா? ஏனம்மா சொல்லேம்மா? என்னத்துக்காம்மா அழறா? ஏம்மா அக்காவை அடிச்சே? எங்கக்கா பாவம்! வெறுந்தியானு அடிக்கிறா என்று அவனும் அழ ஆரம்பித்தான்.

ஸத்யா அவனுக்கு என்ன பதில் சொல்வாள். ஒன்றும் தோன்றாமல் மௌனமாயிருந்தாள். குணமணிக்கு ஒருவாறு அடங்கியிருந்த துக்கங்களெல்லாம் ஒன்று பதின்மடங்காக அதிகரித்தன. இரு கண்களிலும் அகண்ட காவேரியைப்போல் கண்ணீர் பெருக, விம்மிவிம்மி அழுதுக்கொண்டே குழந்தையை எடுத்து தோள்மேல் சாத்திக்கொண்டு முகத்தைத்துடைத்து முத்தமிட்டாள்.

ஞான:- அக்கா! ஏனக்கா என்னோடே பேசமாட்டேங்கிறே? அம்மா அடிச்சாளாக்கா? போனாப்போறதுக்கா; அழாதே அக்கா; நீ அழுதாக்க அப்பறம் நானும் அழுவேன்...... ஊ ........ஊ என்றழுதான்.

குணமணிக்கு அளவற்ற துக்கமுண்டாகி, என் கண்ணே! கற்பகமே! என் முத்தே! என் மாணிக்கமே! தேடக்கிடைக்கா என் செல்வக் களஞ்சியமே! உன்மேல் எனக்கென்னடா கோபம். என் கண்ணே!

ஞான:- பின்னே ஏன் அழுமே.

குணமணி:- அழல்லியே!

ஞான:- அப்படின்னா கண்ணிலே ஏன் தண்ணீ வருது.

குணமணி - ஒண்ணுமில்லேப்பா, என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

இதேப்பில் மடிஸஞ்சியுடன் நிற்கும் தந்தையைக்கண்ட ஞானம், தன் பிதாவும், சகோதரியும் எங்கேயோ போகப் போகிறார்கள் என்றறிந்து, குணமணியைப்பார்த்து, அக்கா! நீ எங்கேக்காபோறே; நானும்வரேன் அக்கா என்றான். இதைக் கேட்ட குணமணிக்கு மென்மேலும் வருத்தம் அதிகமாகி, அம்மா! நீதான் வரவில்லை. குழந்தையையாவது அனுப்ப மாட்டாயா?

ஸத்ய:- குணமணீ! நீ ஒன்றுமறியாதவள்போல் பேசுகிறாயே. உன் கல்யாணத்தின்பொழுது குழந்தையை உன் மாமி

என்ன பாடுபடுத்தினுள். அவன் முதுகு காய்ங்கூட இன்னும் ஆறவில்லையே. நான் இருக்கிறபோதே அப்படியானுல் நானும் இல்லாமல் நீமட்டும் தனியாக அழைத்துச் சென்றால் இன்னும் எப்படியோ என்பதை நீயே யோஜித்துப் பார். நீ அறியாத புத்தியா நான் சொல்லப்போகிறேன். என் செல்வமே சென்றுவா!

ஞான:-நான்மாட்டேன். ஏண்டியம்மா நான்மட்டும் இங்கே இருக்கணும், அக்காள் மட்டும் தனியா போகணுமோ. அதெல்லாம் முடியாது. நானுந்தா போவேன்.

ஸத்:- அக்கா எங்க போறுன்னு தெரியுமா கண்ணு? அந்த தெருவிற்குன்னு போறுளாம்,

ஞான:- ஒண்ணுமில்லே நேக்கெல்லாந் தெரியும். நீ புளுகிறே.

ஸத்யா:- பின்னே எங்கே போப்போறு நீ தாஞ்சொல்லேன்,

ஞான:- அக்காக்கு நாளைக்குக் கல்யாணம். அதுக்காக நாகர் கோவிலுக்குப் போப்போறு. எனக்கெல்லாந் தெரியும்.

ஸத்:- சரி நாஞ் சொல்றதை கேக்கறையா!

ஞான.- அதெல்லாம் முடியாது நானுந்தான் பேவேன்...கு...கு

ஸத்.- நீ சமத்தோன்னே. நாஞ் சொல்றதை கேக்கணும்.

ஞான:- நீ என்ன சொல்ல போறையாம். எல்லாம்போகவேண்டாமென்று சொல்லுவே.

ஸத்:-இல்லே இல்லே அப்பாவும் அக்காவும் இப்பபோகட்டும்.

ஞான:- ஏண்டிம்மாவோ நா மட்டும்.

ஸத்:. நீயும் நானும் நாளைக்கு போகலாம்.

ஞான:. ஆமா ஆமா நீ என்னை ஏமாத்த பாக்ரையோ. நான் மாட்டேன்.

ஸத்:- நெஜம்மா அழைச்சண்டு போறேன்.

ஞான:- ஊஹும் நீ பொய்சொல்றே. நாளைக்கொண்ணும் அழைச்சிண்டு போமாட்டே. நீ போம்மா நான் மட்டும் போகவேண்டாமா.

ஸத்ய:- என் கண்ணன்ஞே. அழாதே. கட்டாயம் அழைச்சிண்டு போறேன்.

ஞான:- அப்பரம் என்ன ஏய்க்கப்படாது.

ஸத்ய:- நா அம்மால்லே. நாஞ் சொல்றதை கேட்கமாட்டே.

ஞான:- அப்பன்ஞ நிஜம்மா அழைச்சிண்டுபோறையா.

ஸத்ய:- நிச்சயமா. அழைச்சிண்டு போறேன்.

ஞான:- அப்பன்ஞ சரி அக்கா போகட்டும். அக்கா? அப்பாவும் நீயும் இன்னிக்கி போங்கோ அம்மாவும் நானும் நாளைக்கி வரோம்.

குண:- அதாஞ்சரி என் தங்கமே என்று சொல்லி குழந்தையை முத்தமிட்டுக்கொண்டு கண்ணபிரான் அருகில் சென்று அவர்ப் பாதங்களில் புஷ்பங்களை எடுத்து அர்ச்சித்து, அவர் பிரசாதத்தைப் பெற்று சற்று கண்களில் ஒற்றிக் கொண்டு, பிரதட்சண நமஸ்காரங்கள் செய்து, "ஹே பக்த பராதீன! ஹே பக்தரக்ஷகா! பக்தவத்ஸலா! பரமபுருஷா! ஆதி நாராயண! உன்னையன்றி வேறு ஒருவரும் துணையில்லை. என்னை தனியாய் அனுப்புவது தர்மமாகுமா? தேவா நீயே என்னை ஆதரிக்கவேண்டும்." என்று பலவிதமாய் புலம்பி வாடிய முகத்துடன் தாயிடம் விடை பெற்றுக் கொண்டு, ஸத்யரும், குணவும், பழைய மடிஸஞ்சியுடன் வெளியேறி னார். அதுவரையில் மிகப் பொறுமையாயிருந்த குழந்தை ஞானம் ஹோ என்று அழ ஆரம்பித்தான். குணமணியின் பிரிவினையும், அனாதை அனுதைபோல் அனுப்புவதையும் சகிக்கக் கூடாமல் சத்யரூபி நடக்கவும் சக்தியற்றவளாய் மெலிந்து மயக்கமுற்று, கீழே விழுந்தாள்.

## அத்தியாயம் 7.

### அறிவற்றூர்க்கு - ஐஸ்வர்யமே மேல்.

நிற்க ஸுசீந்திரம் மகாலிங்கய்யரும் ஸுலோசனவின் சாந்தி கல்யாணத்தை முன்னிட்டு, கல்யாணத்திற்கு வேண்டிய சகல சாமான்களை யெல்லாம் வண்டியிலேற்றிக் கொண்டு மகா லிங்கமப்பர், மனைவி பத்மா, பெண் ஸுலோசன, பேபி கமலா,

இன்னும அவாகளது உறவினர்கள் அனைவரும் வண்டியில் ஏறிக்கொண்டு நாகர்கோயில் சென்றனர். அவர்கள் வரவைக் கண்ட தாசில் பிரபுவும் அதி உபசாரத்துடன் அழைத்து, ஓர் பங்களாவில் இறங்கச்சொல்லி, அச்சாமான்களையும் அப்பங்களாவிலேயே இறக்கி வைத்து விட்டு கோமளாங்கியிடம் வந்து விஷயத்தை தெரிவித்தார். கோமளாங்கியும் பரம சந்தோஷத்தோடு கோதண்டத்தை கூவி, "ஏய் கோதண்டா சம்பந்தி யெல்லாம் வந்துட்டாளாண்டா"

கோ:- எந்த சம்மந்தி அம்மாமி.

கோமளம்:- நம்ம சம்மந்திதாண்டா.

கோ:- நம்ம சம்மந்திதானா? அதுதானா இத்தனை கொண்டாட்டம்; எந்த கருமந்தி வந்தாலென்ன? எல்லாம் என் பிராணனை வாங்கத்தானே!

கோம:- அட கழிச்சல், உன் வாயிலே நல்லதே வராதாடா.

கோ:-என்னம்மாமி நான் கழுச்சல்லேபோனா,உங்களுக்குளென்ன நான் நன்னாயிருப்பது பிடிக்கல்லையோ?

கோம:-என்னடா கோதண்டம் இப்படியெல்லாம் பேசறே காப்பி போடடா நாழியாச்சு.

கோத:- இந்தக் கல்யாணம் கருமாந்தரம் வந்தாலும் வந்தது, என் பிராணன்தான் அறுபடறது. இருந்தாலும் உங்கள் போல் வஞ்சனைக்கார அம்மாமியை நான் பார்த்ததே இல்லை. அடுத்தாற்போல் சுப்ரகாசனோடெ மாமியார், மாமனாருக்கு மனசோடே கொஞ்சம் தூத்தம் கொடுக்கிறேளா? பாபுவோடே மாமியார் வந்துட்டாக்கா, என்ன காப்பி, என்ன பக்ஷணம், என்ன சமையல், என்ன சாப்பாடு. ஐயோ! ஐயோ! என்னால் முடியவே முடியாது. நான் மாட்டவே மாட்டேன். நீங்க காப்பிதான் போடுங்கோ இல்லை அரப்பிதான் போடுங்கோ. எனக்கென்ன வாசலைப் பார்க்கப் போயிடறேன்.

கோம:- என்னடா கோதண்டம் இப்படிப் பண்ணறே. அவாளுக்கு டிபன் கொண்டுவைக்க வேண்டாமாடா?

**கோத:**-என்னடா இது கஷ்டகாலமாக இருக்கு. காலே சுத்தின பாம்பு கடிச்சாலொழியப் போகாது போலிருக்கே. அம்மாமி! அந்த சம்மந்தியைப்போல் இந்த சம்மந்தியும் இருக்கப்படாதா. என் பிராணனை வாங்காதிருப்பேளே: இந்த எழவெடுக்க என்னுல் முடியல்லே போங்க

**கோம:**- என்னடா எழவு எழவுங்கிறே, சொல்லாதேடா.

**கோத:**- அப்படி என்னம்மாமி ரொம்பத்தான். காப்பி எழவு, தோசை எழவு, அந்த எழவு, இந்த எழவு, என்ன பேரெழவு வேண்டியிருக்கு. இந்தப் பெரிய எழவெடுக்க யாராலே இருக்கு. என்னுல் முடியாது போங்கோ.

**கோம:**- போருப்போறதுடா! கோவிச்சுக்காதேடா!! நம்ம ஆத்து கல்யாணத்துக்கு நம்மதானேடா செய்யணும்.

**கோத:**- சரி, சரி, என்ன டிபன் எழவு பண்ணணும். சொல்லித் துலையுங்கோ

**கோம:**- அதிகமாக ஒன்றும் வேண்டாம். சேமாய் கேசரி, வாழைக்காய் பஜ்ஜி, உருளைக்கிழங்கு போண்டா, ரவா உப்புமா, காப்பி. முடிஞ்சா மைசூர் பாகு இத்தனையும் பண்ணிஞப் போரும்.

**கோத:**-இன்னும் ஊரில் உள்ள பக்ஷணங்களெல்லாம் சொல்லிப் பிடுங்கோ. என்று தூற்றிக்கொண்டே சமையலறைக்குச் சென்றுன்.

கோமளாங்கி பட்டுப்புடவை, ரவிக்கை, பலவித ஆபரணங்களும் அணிந்துகொண்டு தனக்கு தோன்றியபடி அலங்கரித்துக்கொண்டு ஒரு வெள்ளித் தட்டில் கொழுந்து வெற்றிலையும் நல்ல களிப்பாக்கும், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு, லவங்கை பட்டை முதலான வாசனை திரவியங்களும், ஓர் சீப்பு வாழைப்பழமும், ஒரு பந்து பூவும் எடுத்துக்கொண்டு சம்பந்தி இருக்கும் பங்களாவிற்குச்சென்று சிரித்த முகத்துடன், பத்மா, கமலா, பேபி, சுலோசனு முதலியோரைக்கண்டு அதிகப்பிரியமாய் அவர்களின் யோக க்ஷேமங்களையும் விசாரித்தாள்.

சுலோசனாவை தழுவிக்கொடுத்து முத்தமிட்டுக்கொண்டு "என் கண்ணே! நான் உன்னைபார்த்து எத்தனை நாளாகிறது, இத்தனை நாளாக உன்னைப் பார்க்காமல் என் கண்களெல்லாம் பூத்துப்போகிறது. எப்பொழுது பார்ப்போம் எப்பொழுது பார்க்கப்போகிறோம் என்று ஏக்கமடைந்திருந்தேன். இனிமேல் உன்னை அரைக்ஷணம்கூட பிரிந்திருக்கமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டாடிக்கொண்டிருக்கும்பொழுது, கோதண்டனும் தான்செய்த டிபன் பதார்த்தங்களைக் கொஞ்சம் ருசி பார்த்துவிட்டு, பிறகு மகாலிங்கமய்யர் தங்கியிருக்கும் பங்களாவிற்குள் பலகாரங்களைக் கொண்டு வைத்தான். அவர்களும் அந்த டிபனை சாப்பிட்டபிறகு; கோமளாங்கி சுலோசனாவிற்கு மட்டும் ஸ்பெஷலாய் டிபன் கொண்டுவந்து கொடுத்து தான் அணிந்து கொண்டிருக்கும், இரண்டொரு நகைகளையும், கழற்றி அவள் கழுத்தில் சுமத்திவிட்டு, ஸுலோசனா முதலியவர்களிடம் குழைந்த குரலுடன் ஆத்திற்கு போகிறேன். ஆத்தில் அத்தனை காரியமும் அப்படியே இருக்கிறது. நான் போய் வருகிறேனென்று சொல்லிவிட்டு பங்களாவிற்குச் சென்றாள். மறுநாள் சாந்திக்கல்யாணத்திற்கு வேண்டிய காரியங்களெல்லாம் செய்ய ஆரம்பித்தாள். உடனே சுமார் பத்து நிமிஷத்திற்கெல்லாம் குணமணியும், நித்திய தர்மரும் வந்துசேர்ந்தார்கள். தாசில் பிரபுவும் அவர்களை அதிக அன்போடு வரவேற்று சம்பந்தியும் நாட்டுப்பெண்ணும் மட்டும் வருவதைக்கண்ட நித்ய தர்மரைப் பார்த்து, ஏன் உங்களது மனைவி வரவில்லையா? குழந்தை ஞானமணி ஏன் வரவில்லை? எனவினவ; நித்யரும்ஏதோசௌகர்யப்படவில்லையாம். என்று பதிலளித்தார். பிரபுவும் மிக்க வருத்தமுற்று, அடடா! என்ன கலிகாலம்! இது பணம் என்றால் பிணம் கூட வாயைத் திறக்கிறதே. நல்லார்–பொல்லார் என்ற நடு நியாயமில்லாமல் போய்விட்டதே. இக் கோமளாங்கியைப் போல் கொடியசுபாவத்தை உடையவர் வேறொருவரும் இருக்க மாட்டார்கள்! இவளுடைய துராங்காரமே ஸத்யரூபி வரா திருக்க காரணம் ஆகும். என்று தீர்மானித்து இக்கொடிய எண்ணங்களெல்லாம் என்றைக்குத் தொலையுமோ என்று மன வருத்தமுற்று பிம்பம்போல் நின்றார். குணமணியும் மாமனாரை நமஸ்கரித்து உள்ளே சென்றாள். கோதண்டம் கண்டான்.

கோமளாங்கியிடம் ஓடிவந்து, அம்மாமி! நாட்டுப்பெண் வந்திருக்கா.

கோம:- நாட்டுப்பெண் சுலோசனுவாடா.

கோத:-இல்லேம்மாமி குணமணிம்மாமி! குணமணி.

கோம:-அந்தப் பொணம் இங்கென்னத்துக்கு வரது.

கோத:-எல்லாம் உங்கள் கழுத்தை அறுக்கத்தான்.

கோம:-ஐயோ! எமதர்மராஜரே; அந்த மூதேவியின் சிட்டை ஒரு பார்வை பார்க்கமாட்டீரா. என் குழந்தையின் தலையில் இப்படியோ எழுதவேண்டும். இதுவும் என் பாபமோ என்று தலையில்கையைவைத்துகொண்டு அழஆரம்பித்தாள்.

கோதண்டமும் கூட அழுதுக்கொண்டு அம்மாமியம்மாமி அழாதிங்கோம்மாமி, நீங்க அழுதாக்கா நேக்கும் அழுகைவரும் போலிருக்கம்மாமி.

கோம:- ஏண்டா கோதண்டம் என் தலை எழுத்தாடா இது.

கோத:- என்ன செய்யறது அம்மாமி, எல்லாம் உங்கள் ஏழை நாட்டான் தான். அதாங் தெரிந்திருக்கே, எல்லாம் உங்கள் போறாத காலந்தான். அப்படி பண்ணறது, நடந்தது நடந்தாச்சு, இன்னிமே அழுதென்ன செய்யறது அம்மாமி. எழுதின எழுத்தின் படியே குணமணியால் கெட்டதுங்கள் குடியே. என்று ஓர் இராகம் இழுத்தான்.

இவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கும் பொழுது, குணமணியும் கையில் திரட்டிப் பாலுடன், உள்ளேவந்து அத்திரட்டிப்பாலையும், மாமியின் கையில் கொடுத்து, நமஸ்கரித்தாள். கோமளாங்கியின் இருகண்ணும் கோவைப்பழம்போல் சிவக்க, கையில் இருந்த கிண்ணத்தை குணமணியின் மேல் எறிந்தாள். அக்கிண்ணமும் குணமணின் தலையில் விழ, மண்டை உடைந்து, ரத்தம்ததும்பியது. அத்திரட்டிப்பாலும்அவள்தலைக்கே அபிஷேகமாயிற்று. மயக்கமுற்று கீழே விழுந்தாள். இதைக்கண்ட கோதண்டன் ஐயையோ! அம்மாமி அவமண்டை உடைந்தபாட்டிலே அத்தனை திரட்டிபாலையும்கொட்டிபுட்டேளே எங்கிட்டே

குடுத்தா நான் சாப்பிட மாட்டேனே. என்று சொல்லிக் கொண்டே அதை வழிக்க ஆரம்பித்தான் கோமளாங்கிக்கு அடங்கா கோபம் உண்டாயிற்று.

கோமளாங்கி அட கட்டாலே போரவனே. உனக்கு திரட்டி பால் ஒன்றுதான் குறைச்சலா இருந்ததோ? என்றுகன்னத்தில் பளீர், பளீர் என்று இரண்டு அறை கொடுத்தாள். அதையும் வாங்கி கொண்டு கையில் இருந்த திரட்டிபாலை நக்கி தின்று கொண்டே ஓட்டமாய் ஓடி விட்டான்! அப்பவும் ஈரமற்ற நெஞ்சுடையகோமளாங்கிக்குஎள்ளளவேனும்இரக்கம்வருதா "பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்பார்கள்". பேயினும் பெரும்பிசாசாகிய, கோமளாங்கி பின்னையும் குணமணியை இரண்டு உதை கொடுத்துவிட்டு ஓர் வேலைக்காரியை கூப்பிட்டு, இந்தபிணத்தின் காலையும் கையையும் கட்டி ஆற்றில் எறிந்துவிடு என்று குணமணியின் வயித்திலும் ஓர் குத்து குத்தினாள். எஜமானியின் கொடுமையையும், குணமணியின் பரிதாபத்தையும் கண்டு மனம் கொள்ளா மனஸ்தாபத்தோடு, குணமணியை தூக்கி ஓர் ரூமில், கொண்டு வந்து போட்டு, ஜலத்தை முகத்தில் தெளித்து, ரத்தங்களை துடைத்து, விசிறியால் விசிறிக்கொண்டே இருந்தாள். இரண்டு மணி நேரத்திற் கெல்லாம், குணமணிக்கு பிரக்ஞை தெளிந்து, பசியின் கொடுமையால், அவ்வேலைக்காரியை பார்த்து, எனக்கு ரொம்பவும் பசியாயிருக்கின்றது என்றான்.

உடனே அவ்வேலைக்காரியும் சமயலறைக்கருகில் சென்று ஓர்பரிசாரகனிடம், குணமணிக்கு கொஞ்சம் சாதம்கொடுக்கும்படி வேண்ட, அப்பரிசாரகனும் பயந்து ஐயோ, குணமணிக்கா! சாதமா, நாமாட்டேன்; கோமளாங்கி அம்மா காதிலே விழுந்துதோ! என் உசுரே இரவல்தான், எப்பாடா, நான் கொடுக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டான். அச்சமயம் கோமளாங்கியும் அதைக்கேட்டுக்கொண்டே வந்து, வேலைக்காரியைப்பார்த்து "எண்டி காமாக்ஷி குணமணிக்கு சாதம் குடுக்க, நீ என்ன கிபார்சோ, போவெளியே" என்று அதட்டினாள். அவளும் குணமணியின் ரூமினுள் செல்லும்பொழுது கோமளாங்கியும் பின் தொடர்ந்து, அவள் மயிரைப் பிடித்திழுத்து வாயிலில் தள்ளி, கதவைச் சாத்தினாள். காமாக்ஷியும் அழுதுகொண்டே

நீ நாசமாபோவ; கட்டாலேபோவ, கழிச்சலிலே போவ, என்று கையை முறித்து கொண்டே போய் விட்டாள். பசிப்பிணி என்பது யாருக்கும் பொல்லாத தல்லவா, அதிலும் இரண்டுநாளாய் அவளுக்கு, நல்ல ஆகாரமே கிடையாது. தலைக் காயம் வேறு அவளை துன்புறுத்தியது; வயிற்றில் பசியும், தலையில் வலியும், மனதில் வருத்தமும், அளவற்ற வேதனை செய்தால், அச்சிறு பெண்ணால் எப்படி தாங்க முடியும் பாவம், என்ன செய்வாள். காலோ, ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. ஆயினும் என்ன; மெள்ள நடந்து மாமியிடம் சென்று கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டேனும் பசியாறுவோமென்று, மாமியை நாடினாள். அவளையும் காணவில்லை. அங்கு ஓர் பாட்டியம்மா மட்டும் உட்கார்ந்திருந்தாள். அப்பாட்டியம்மா அருகில்சென்று.பாட்டீ என் மாமி எங்கே? உங்க மாமியாரு, அங்கெங்கேயோ போயிருக்கா. உனக்கென்ன வேணும். ஒன்றும்வேண்டாம். ஏன் என்னமோ போல நிக்கறே, எங்கிட்டதாஞ் சொல்லேன். ஒண்ணுமில்லே பாட்டி, பசியாக இருக்கிறது. இவ்வளவுதானே, நான் தாரேன் என்று சமையலறைக்குள் சென்று ஓய் பிராமணப்பிள்ளை! கல்யாணப் பெண்ணுக்கு ஏதானும் கொஞ்சம் ஆகாரம் கொடுங்கோ ஐயோ பாட்டியம்மா இறைஞ்சு சொல்லாதிங்கோ, எஜமானிக்குத்தெரிந்ததோ உங்க காதுஇரண்டும் ஏரவல்தான், ஏங்கணும் அப்படிச் சொல்லாதீர். என்ன சமாசாரம்.

பரிசாரகர்.- ஏன்னுக்க? அந்தப் பெண் விஷயத்திலே ஒத்தரும் தலையிடக்கூடாது.

பாட்டி:- அது என்னத்தினாலே.

பரிசாரர்:-என்னத்துனாலென்ன! அந்தம்மாக்குகோபம்வந்துடும்

பாட்டி:-ஏங்கணும். யாரானும் இப்படி நாட்டுப்பெண்ணை பட்டினிப் போட்டு கொலை பண்ணுவாளாங்கணும்.

பரிசார:- என்னமோ அவாளுக்குள் ஆயிரம் இருக்கும். அதெல்லாம் நாம்ப கேட்டு முடியுமோ.

பாட்டி:- அது முடியாது.

பரிசார:-பின்னேன்ன வந்திருக்கு போங்களேன் வேலையைப் பார்த்துக்கொண்டு.

பாட்டி:- அது வாஸ்தவம். நீங்கள் சொல்றது நியாயம். யாரு பட்டினி கிடந்தா நமக்கென்ன? யாரு பாரணை கிடந்தா நமக்கென்ன ஆகவேண்டியது என்று சொல்லிவிட்டு அவளும் போய்விட்டாள்.

## அத்தியாயம் 8

### ஏழைகளென்றல்—எவருக்கும் ஏளனம்.

நிற்க, நித்ய தர்மர் திண்ணையில் உட்கார்ந்து பகவானை தியானித்துக் கொண்டிருக்கும் சமயம், தாசில்பிரபு உள்ளே சென்று ஓர் பரிசாரகனைக் கூப்பிட்டு நித்யதர்மருக்கு டிபன் கொண்டு வைக்கும்படி சொல்லிவிட்டு, நித்ய தர்மரை அதிக உபசாரத்துடன் உள்ளே அழைத்துச்சென்று டிபன் சாப்பிடும்படி உபசரிக்க அவரும் அதை சாப்பிட்டுவிட்டு திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டு "ஆஹா! நாமிச்சம்சார சாகரத்தில் மூழ்கி மாய்கை எனும் வலையினால் கட்டுண்டு பாபக் களஞ்சியமாகிய இவ்வுலகினில் ஆசை வைப்பது மிகவும் அநீதமே. இப்பவபந்தத்தில் நேசமிருப்பதால் நாம்மிக்க அபராதியாவோம் இப்பாப கோரவனத்தை அழிக்க எம்பெருமான் தீர வைராக்ய நிரந்தர ஞானக்கினியாலன்றி மற்றொன்றாலும் முடியாது. பிறவிப் பெருங்கடலைத் தாண்ட என்னப்பனின் அன்புள்ள அருளே சுப்பலாகும். அக்ஞானம் என்பதை அறவே ஒழித்து அச்சுதனின் பக்தியில் அனுதினமும் ஈடுபட்டு அருட்பெருஞ் சோதியை அடைவதே நம் அழியாச் செல்வமாகும். ஹே ஜகத் பிரபோ! இவ்வடியேனை ஆட்கொண்டு, அவனி பிறவி நோயை துலைத்து என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று கண்ணை மூடிக் கொண்டு நிஷ்டையில் இருந்தார். நிற்க, திருவனந்தபுரத்தில் இருக்கும் ஸத்யரூபி, பதியையும் புதல்வியையும் பிரிந்துடன் தன் அருமைக் குழந்தையின் சாந்திக் கல்யாணத்திற்கு தான் போகவும் சீருகள் செய்யவும் கொடுத்துவைக்கவில்லையே என்று அவள் உள்ளம் அனல் மெழுகாய் உருகிக்கொண்டே இருந்தது. குழந்தை ஞானமும் அவள் மடியில் உட்கார்ந்து கொண்டு, எப்போம்மா அழைச்சிண்டு போப்போறே, அம்மா!

என்னை ஏமாத்தினே, என்று அரிக்கவும் அழவும் ஆரம்பித்தான். ஸத்யரூபிக்குமார மனோவேதனை மேன்மேலும் அதிகமாயிற்று. கண்ணீர் சொரிய கண்ணபிரான் அருகில் வந்து நின்று, அநாத ரக்ஷகா! ஆபத்பாந்தவா! அச்சுதானந்தா! அருளும் முகுந்தா! அனுதினமும் நின் சரணாரவிந்தத்தையே தியானம்செய்யும் அடியோரை ஆதரித்தருள் செய்யாது, இவ்விதம் துன்புறுத்துவது தர்மமா, ஏதுமறியாப்பேதை மீது வர்மமா, ஹே ஜெகத்ரக்ஷகா! நின் செல்வக்குமாரியை, யாருமற்ற அநாதியைப்போல் தனியாக அனுப்பிவிட்டாயே. அவள் மாமியோ, கொடூர சுபாவமுள்ளவளாக இருக்கிறாளே. குழந்தையை என்ன பாடுபடுத்துகிறாளோ தெரியவில்லையே. என் கண்ணுனுக்கு ஆதரவளிக்க ஒருவருமில்லையே, நீ இவ்விதம் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் இவ்வடியோர்களெல்லாம் போம் வழியென்ன? என்னப்பனே! என்னப்பனே; என்று கீழேவிழுந்து மூர்ச்சித்தாள். ஞானமும் அம்மா! அம்மா! என்று அழுது கொண்டே அவள் அருகில் விழுந்து அயர்ந்து நித்திரை செய்தான்.

நிற்க, நாகர்கோயிலில் பசியால் வருந்தும் குணமணிக்கு ஒருவிதத்திலும் ஆகாரம் அகப்படவில்லை. பாவம்! குணமணிக்கு ஆகாரம் என்றால் அங்குள்ளவர்களுக்கெல்லாம் ஓர் பூகம்பமாயிருக்கிறது. கோமளாங்கியின் வாயைக்கண்டால் எல்லோரும் பயப்படுகிறார்கள். ஆனால் என்ன? வருகிறவர்களும், போகிறவர்களும், அவரவர்கள்பாட்டை அவரவர்கள், பார்த்து கொள்கிறார்களே தவிர, குணமணியை ஒருவருகிலும் கவனிக்கவில்லை. கோமளாங்கியோ குணமணியைப் பார்த்த போதெல்லாம், இரு கண்களிலும் நெருப்புப்பொறிபறக்க,உருட்டிவிழிப்பாள்.பல்லைக் கடிப்பாள், ஐயோ இந்த பாதகி பிணத்தைக் கண்டால் என் வயிறு பத்தி எரிகிறதே என்று, படீர், படீர், என வயிற்றிலடித்துக்கொள்வாள்.மறுபடியும் தாசில்பிரபுவருகிறாரோவருகிறாரோ என்று, எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டு, அவர் வராத சமயம் பார்த்து, குணமணியிருக்கும் இடத்திற்கு வந்து, கையில் எது அகப்பட்டதோ அதனால் அவளை இரண்டு மூன்று அடிகளைக் கொடுப்பாள். பசியோ காதை அடைக்கிறது. தலையோ கிறு கிறுவென்று சுத்துகிறது. கண்ணோ இருளடைந்து போகிறது.

அதோடு இவ்வளவு அடியும் உதையும் வாங்கிக் கொண்டால் எப்படி இருக்கும். ஆனால் நாம் கோமளாங்கியைக் குற்றம் சொல்ல இடமில்லை. ஏனெனில், நாட்டுப்பெண் பசியால் வருந்துவதைக்கண்ட கோமளாங்கி, மெத்த இரக்கமுற்று; சோற்றை வார்த்துக் கொடுத்து மென்று மென்று விழுங்குவதற்குள், கொஞ்சம் நாழியாகி விடுமல்லவா, அப்படியில்லாமல், முதலிலேயே சுடச்சுட கொடுத்து விட்டால் தானாகவே சீக்கிரத்தில் வயிறார நிரம்பிவிடும் என்று நினைத்து அப்படி செய்கிறாள் போலும்! இப்பாதகிகளுக்கெல்லாம் பணந்தான் பிரதானம். இவர்களுக்கு நாட்டுப்பெண் எதற்கு, மாப்பிள்ளை எதற்கு? 'கொள் என்றால் வாயைத்திறக்கிறது கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்கிறது' என்பது கோமளாங்கிக்காகவே ஏற்பட்டிருக்கலாம். குணமணியும் பசிபொறுக்கமுடியாமல் கண்ணிருண்டு மெய் சோர்ந்து கீழே விழுந்தாள். அப்படியும் பச்சாதாபமற்ற பாதகியின் மனதில் ஒரு சிறு கடுகத்தனை கூட பரிதாபமிருக்காதா? ஓச்சல், ஒழிச்சல் இல்லாமல், அவள் வாயில் ஏதேனும் தீனி அரைத்துக்கொண்டிருக்குமே தவிர, குணமணியின் பசியைக் கொஞ்சங்கூட கவனிக்கமாட்டாள். இது ஒன்றும் தாசில் பிரபுவுக்கு தெரியாது. இப்படியாக இரவு மணி ஏழாகி விட்டது. சம்மந்திகளுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும், பஞ்ச பக்ஷ பரமான்னத்துடன் போஜனம் தயாராகிவிட்டது. தாசில் பிரபும், கோமளாங்கியும், மகாலிங்கய்யர் பங்களாவிற்கு சென்று அவர்களை எல்லாரையும் அழைத்துக் கொண்டு வந்து, மகாலிங்கமய்யர் அவர்களும், அவர்களுடன் வந்திருக்கிற பந்துக்கள், தாசில் பிரபுவின் உறமுறையோர்கள் முதலான புருஷர்களெல்லோருக்கும், பந்திபந்தியாய் இலைபோட்டுப்பரிமார, பிரபுவும் திண்ணையிலிருந்த நித்யரை அழைத்து வந்து அவருக்கும் பரிமாரச் சொல்ல, தானும் உட்கார்ந்து எல்லோருமாக போஜனம் செய்தனர். பிறகு தாம்பூலம் தரித்து அவரவர்கள் இருப்பிடம் சென்றார்கள். நித்யரும் அவர் யதாஸ்தானமாகிய திண்ணை ஓரத்தில் உட்கார்ந்து பகவத்ஸ்மரணைசெய்ய ஆரம்பித்தார். பிறகு பத்மா கமலா, சுலோசனை பேபி, முதலான சம்பந்திகளும், கோமளாங்கி ஸுகுணா, சுகந்தா இன்னும் கல்யாணத்திற்கு வந்திருப்பவர்களெல்லோருமாய் போஜனம்செய்து தாம்பூலம் தரித்து சந்தோ

ஷமாய் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் சென்றதும், சம்மந்திமார்களெல்லாம் நாழிகை ஆகிவிட்டது தூக்கம் வருகிறது, போய்வருகிறோம் என்று சொல்லிவிட்டு, அவர்கள் பங்களாவிற்கு போய்விட்டார்கள். மணியும் 10-45 ஆகிவிட்டது. இவ்வளவிலும் குணமணிக்குத்தான் ஓர்பிடி சாதம் பஞ்சமாயிற்று. பரிசாரகர்கள் முதலியோரும் சாப்பிட்டான பிறகு, மிச்ச மீதியுள்ள கறி, குழம்புகளை எல்லாம் குத்திரச்சிக்கும் கொடுத்து விட்டு; கோதண்டராமனை கூப்பிட்டு,

கோம:- ஏய் கோதண்டம், மாமா வந்து குணமணிக்கு சாப்பாடு போட்டாச்சான்னு கேட்டா என்ன சொல்றே.

கோத: போட்டாச்சின்னு சொல்றேன்.

கோம:- ஆறு போட்டான்னு சொல்றே.

கோத:- ஆகாசவாணி போட்டான்னு சொல்றேன்.

கோம:- சீ, சீ, அப்படி சொல்லப்படாதுடா, அம்மாமிதான் போட்டான்னு சொல்லணும்.

கோத.- சரி அம்மாமிதான் போட்டாள் என்று சொல்றேன்.

கோம:- எங்கே போட்டான்னு கேட்டா.

கோத:- முதுகிலே போட்டான்னு சொல்றேன்.

கோம:- அட அசட்டு கட்டாலே போரவனே, தத்துபித்துன்னு உளறுதேயடா.

கோத:- பின்னே என்ன பண்ணச்சொல்றேள்.

கோம:- அம்மாமிதான் சாதம் போட்டான்னு சொல்லணும்.

கோத:. அப்படின்னா, இப்பவே போய் சொல்லிவிட்டு வந்துடுறேன்.

கோம:. இப்போ சொல்ல வேண்டாம்.

கோம:- இப்பத்தான் சொல்லணும் அம்மாமி. உங்களுக்குத் தெரியாது. அப்பறம்னா, மறந்து போயிடும், என்று ஓட ஆரம்பித்தான்.

கோம:- (ஐயையோ! ஐயையோ! என்று அலறிக்கொண்டே அவனும் பின் தொடர்ந்து ஓடிப்பிடித்துக் கொண்டு) அடே கோதண்டம் நீ இப்ப நீயா போய் சொன்னையானா பொய்

யின்னுதெரிஞ்சுடுவார் தன்னைக்சட்ட கயறு தானே சம்பா திச்சுக்காதடா.

கோத:- என்னம்மாயிது கயத்தாலேயா கட்டிப்போடபோறேள் என்னாலே முடியாது. நாமாட்டேன் அப்பரம் உங்க காபி வாயிலே மண்ணு தான்.

கோம:- அப்படியில்லேடா.

கோத - பின்னே எப்படி?

கோம:- நீயா போய் சொல்லாதே; அவர் கேட்டா அப்புறம் சொல்லலாம்.

கோதண்டன் சரி,சரி,போங்க. என்று சொல்லிவிட்டுபோய் விட்டான். பிறகு இதையெல்லாம் மறைவாயிருந்து காதில்வாங்கி கொண்டிருந்த சுப்பிரகாசன் அளவற்ற விசனத்துடன் அதையும் வெளிக்காண்பிக்காமல் ஏதோகாரணமாகவந்தவன்போல் கோமளாங்கி இருக்கும் இடத்திற்கு வந்தான். அவளும் தான் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்து தகப்பனாரிடம் சொல்லிவிடுவானோ என்று பயந்தாள். பின்னையும் அவன் பிதாவிடம் சொல்லிவிட்டால் அவன் சொல்வது முழுப்பொய்யென நிரூபித்துவிடலாமென்று தீர்மானித்து சுப்பிரகாசனைப் பார்த்து கண்ணீர் வடித்து கண்ணே சுப்பிரகாசா உன்னைப்பார்த்தால் என்மனம் நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிக்கின்றதே என்றுரைக்க;

சுப்ரகாசன்:- அம்மா, நான்அப்படி என்ன அபசாரதம்செய்தேன்

கோம:- என் தங்கமே நீ ஒரு அபசாரமும் செய்யவில்லை. உன் முகத்தைப்பார்த்தாலும் பசி தீருமே, உன் தலைவிதிமட்டும் இப்படி ஆகுமென்று கனவிலும் அறியேனே என்கண்மணியான சுப்ரா, உன்மேல் எவ்வளவோ ஆசையை வைத்திருந்தேனே, என் ஆசையை தெய்வம் கெடுத்து விட்டதே.

சுப்ர:- அம்மா நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே?

கோம.- எல்லாம் உன் விதிப்பயனை நினைந்துதான் வருந்துகின்றேன்.

சுப்ர:- என் விதி, என்னவாயிற்று ?

கோம:- இன்னும் என்ன ஆகவேண்டும். இப்படி பிரபுவின் வயிற்றில் பிறந்து அருமை செல்வனாய் வளர்ந்து அனாதைப் பிணத்தை மணந்து மாப்பிள்ளையென்று மரியாதை செய்தழைத்து, ஒருவேளை விருந்து பண்ணக்கூட வழியில்லாத மாமனார் மாமியாரையும் படைத்தபோதே தெரியாதா உன் அதிர்ஷ்டம். பிச்சைக்கார மூதேவியைக் கட்டிக் கொண்டு சந்தியில் நிற்க வேண்டுமென்று எழுதியிருந்தால், நான்தான் என்ன செய்யப்போகிறேன்.

சுப்ர:- அம்மா! அதுபோகட்டும். நடந்தது நடந்தாய்விட்டது. இனிமேல் வருந்துவதாலென்ன பிரயோஜனம். ஒருவர் நம்மிடம் ஓர் வஸ்துவை அடைக்கலமெனக் கொடுத்தால் அதை நாம்தானே பரிபாலிக்கவேண்டும். நீ இப்படி அழுதுகொண்டிருந்தால் என் மனம் மிகவும் கவலைக்கிடமாகிறது.

கோம:- ஐயோ! நீ என்ன சொன்னாலும் என் மனம் தேறுதல் அடையவில்லையே. இந்த மூதேவியின் சீட்டை என்றைக்குக் கிழிப்பாளோ தெரியவில்லையே; அது நாசமாய்ப் போகாதா? அது இப்படியே போய்விடாதா! என்று கையை முறித்தாள்.

சுப்ர:—(அளவற்ற துக்கத்தையும் அகத்தில் அடக்கிக் கொண்டு புன் சிரிப்புற்ற முகத்துடன்) அம்மா! வீணாக ஏன் வைகிறாய். காரணமில்லாமல் கோபிக்கிறாயே; பணக்காரர் பெண்ணென்றால் தலையில் இரண்டு கொம்பு முளைத்திருக்குமோ, அன்றி அவர்கள் கொடுத்துதான் நமக்கு நிறையப்போகிறதோ, "ஒற்ற கணவனும் ஒருநெல்லுமுண்டானல் சித்திரம்போல குடுத்தனம் செய்யலாம்" என்ற ராஜகுமாரத்தியின் கதையை நீ அறிந்திலைபோலும் பொருள் இருத்தலும் இல்லாதபோதிலும் நம் செயலோ; அன்றியும் நம் பொருள்தான் நிலைத்து நிற்பது என்ன சாஸ்வதம். எல்லாம் அப்பரமன்செயல். இவ்வற்ப தனத்தையே விரும்புதல் மிக்க அநீதம் என, என் மனத்துள் தோற்றப்படுகிறது. மீண்டும் பணக்காரர்கள் எல்

லாம். பணத்திலேயே லக்ஷ்யமாக மாடிக்குமேல்மாடி, உப்பரிகைக்குமேல் உப்பரிகை, கோட்டைக்குமேல் கோட்டைகளைக்கட்டி, உன்மத்தங்கொண்டு, பாடிப் பரதேசிகளுக்கு ஒரு பிடி அன்னம் அளிக்கவும், ஓர்பிடி அரிசி பிச்சையிடக்கூட மனமின்றி ஏழாவது மாடியில் புஷ்ப மெத்தையின்மீது சயனித்து ஷோக்காய் நித்திரை செய்வதும், பாவம்! ஏழைக்குடிகள் ஓர் குடிசைக்குக்கூட வழியில்லாமல் மழையில் நனைந்து; வெயிலில் காய்ந்து; பனியிலும் - காற்றிலும் அடிபட்டு அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட செயலின்றி திண்டாடுவதும், அவர்களைக் கண்டால் நம்போலொத்தமர் நிந்தனை செய்வதும் என்னே, விபரீதம்! ஏழை பணக்காரர் என்ற வஞ்சனை சாப்பாட்டையும் எட்டிவிட்டதே.

கோம:- ஆம்; ஆம். நீ மெத்த பெரியவனாய் விட்டாய். மஹா ஞானி; இனிமேல் வேதாந்தம் பேசவேண்டியதுதானே.

சுப்ரகா:- அம்மா நான் உன்னிடம் வேதாந்தம் பேசுவதற்கு வரவில்லை. ஆகவே, குணமணி உயிர் துறக்கவும், நான் மறுமணம் புரிந்திருக்கவும்; தடவைக்குத் தடவை ஆசீர்வதிக்கிறாயல்லவா? அதுதான் என் மார்பைத் துளைக்கிறது.

கோம:. அப்பா நீ இதுவா பேசுவாய்; இன்னமும் பேசுவாய் ஊமை குடியைக்கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும் என்றதுபோல வாயைத் திறக்காமலிருக்கும் சத்ய்ரூபி தான் எப்படிப்பட்டவளோ.

சுப்ரகா:- அம்மா நல்லோரை பொல்லாங்கு சொல்லு முன்னேருதல் பஞ்சமா பாதகத்தில் ஒன்றாகும். அதுவே நரகம் சேர அடிப்படையாகும். அந்தோ! என் வீண்பாபத்திற்குள்ளாகவேண்டும். அம்மா என்னை மன்னித்துக்கொள்; நான் சென்றுவருகிறேன் (என்று சொல்லிவிட்டு போய் தனது சயன அறையுட் புகுந்து சயனித்துக்கொண்டான்.)

பிறகு கோமளாங்கி குணமணியை வைது திட்டியவண்ணம் தூங்க ஆரம்பித்தாள். குணமணி பசியால் வருந்தியதுடன் தாகத்திற்கு கொஞ்சம் நீர்கூட கிடைக்காமல் நாவுலர்ந்து சோகமுற்றுக் கீழே விழுந்துகிடந்தாள்.

இஃது இவ்வாறிருக்க, திரு அனந்தசயனத்தில் சத்யரூபியே! தீனபந்து இக்கொடுமைகள் தகுமோ? என்பால் சித்தமிரங்காயோ! ஏழை-எளியோர் என அறிந்தும் அறியாததுபோல் இருத்தல் நீதியாமோ! உன்னை எல்லோரும் உருகியநெஞ்சமுள்ளோன் என்கிறார்களே. ஏழைகளுக்கும், உன் அடியார்களுக்கும் உதவி புரிவாய் என்று சொல்லுகிறார்களே அவைகள் எல்லாம் என்ன பொய்யா? அல்லது என்மட்டில் பொய்யோ? உன் அருள்தான் அகண்ட பிரகாசமாயிற்றே; என்று சொல்லிச்சொல்லி ஏங்குவாள்; அழுவாள். விழுவாள்; எழுவாள். இவ்விதமாக இரவுமுழுதும்கழித்து பொழுதுவிடியுந்தருணம் வந்தது.

நாகர்கோவில் தாசில்வீட்டில் எல்லோரும் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு கலியாண வீட்டில் பரிசாரர்களால் செய்திருந்த காபி, பலகாரம் முதலியவற்றை காலை ஆகாரமாக உட்கொண்டனர். பாபு, சுப்ரகாசன் இருவரும் ஸ்நானஞ்செய்து பட்டாடை உடுத்திக்கொண்டு, பலராம - கிருஷ்ணனைப்போல் தோன்றினர். குணமணியோ விரிந்த கூந்தலுடனும், சோர்ந்த முகத்துடனும் பொன்போன்ற மேனி புழுதியடையப் பெற்றும், அழுக்கடைந்த புடவையொன்று உடுத்திக்கொண்டும் இரண்டுநாள் பட்டினியுடனும், மனமிஞ்சும் தாபத்தோடு 'ஏ! மன்னாதி மன்னா! மாபெரும் மாயா! திவ்யப்பிரதாபா! அனாதரக்ஷகா! ஆபத்சகாயா! ஆயருடன் கூடி ஆவினை மேய்த்தவா! கம்ஸ மர்த்தனா! காளிங்க நர்த்தனா! பார்புகழ் நேயா! பாண்டவர் சகாயா! ஹே! கருணாநிதே! இது நின் திருவிளையாடலோ! இவ்வேழையின் வெந்துயர் நீ அறிந்திலையோ? கரடி புலி வசிக்கும் கானகத்தைக் காண எனது உள்ளம் பதறுகிறதே! இவ்வெம்பசி எப்படித் தொலையுமோ, என்று தான் தணியுமோ! எவ்விதம் தீருமோ? ஆம், அறிந்தேன்! அறிந்தேன். காம, க்ரோத, லோப, மோக மதமாத்ஸல்யம் என்ற அறுவர்களிடமிருந்தும் என்னை மீட்டு, என் பொருளை

என் வசமும் ஒப்புவிக்கும் என் அப்பன் திருக்கழலடிக்கே என் மனமுற்றையும் ஈடுபடுத்திக் கருணைப்பெருங்கடலோனை கணமும் மறவாதிருப்பின் காயுமென் வெம்பசியும் காற்றாய் பறக்குமன்றோ? இகமும் பரமும் எனக்கே சபலமென பசிக்குறிய ஞானப்பாலை பருகிடின் பாரினில் எந்தனுக்கென் குறை நேரிடும், என பரம்பொருளின் நாமாதாரமே தன் ஜீவாதாரமாகக் கொண்டு அவனது அடிமலரே தனது அழியா பொருளென ஊகித்த குணமணியின் பசி; தாபங்களெல்லாம் பறந்தோடியிருக்கும் என்பதற்கையமுண்டோ? ஆனால் மானிடதேகமன்றோ கொஞ்சம் களைப்புமட்டும் இருந்துகொண்டுதானிருந்தது.

அவளுக்குப் பேசவும் சக்தியிருந்ததாய்க் காணப்படவில்லை. அந்தோ பாவம்! பாவம்!! களைப்பினால் வாடி வதங்கி இருந்தாள். இந்நிலையிலாவது கோமளாங்கி சும்மா இருந்தாளா? அவள் சரீரமும், புத்தியுமா இருப்புக்கொடுக்கும். குணமணிக்கு அரை நிமிஷங்கூட தொந்தரவு கொடாமலிராள். சதா சர்வதா நிந்தனைகள்தான். அவளும் நம்மைப்போன்ற பெண்தானே என்ற எண்ணத்துடன் இருக்கிறவர்கள் ஏதேனும் ஆகாரம் கொடுத்தாலுங்கூட, அதையும் பிடுங்கி எறிந்துவிடுவாள். பாவம்! அவளுக்குப் பரிந்துபேச யாரேனும் அங்கு இருந்தால் அவள் அப்படிச் செய்வாளா? எல்லாம் அந்த வெள்ளையப்பன் செய்யும் வேலையல்லவா? அப்பணம் இல்லாக் கொடுமையால் அன்றோ குணமணி இவ்வளவு கஷ்டங்களுக்கும் உள்ளாகவேண்டியிருந்தது. ஆனால், தாசில் பிரபுவிற்கு இது ஒன்றும் தெரியாது. தெரிந்தால்தான் என்ன செய்யப்போகிறார்? கொஞ்சம் அவளைப்பற்றி ஏதேனும் பரிந்தாவது பேசுவார். பாபம்! அவள் அதிர்ஷ்டம் அது அவருக்குத் தெரியாமல் போனது. ஆகையால், அதற்கும் இடமில்லாமல் போயிற்று.

சுகுந்தாவுக்கோ குணமணியின்மீது அங்கலாப்பும், கோமளாவின்மீது அகங்காரமும் ஏற்பட்டது. எந்த விதத்திலேனும் இச்சமாசாரத்தைத் தன் தமயனிடம் தெரிவித்துவிடவேண்டுமென்று எண்ணினாள். இல்லாவிடில் குணமணி ஒருக்கால் கொல்லப்பட்டாலும் படலாம் என்ற சந்தேகமும் அதிகரித்து

விட்டது. ஆகையால் தன் தமையனிடம் இச் செய்தியைத் தெரிவிக்க நல்ல சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

நிற்க, தாசில்பிரபுவின் மற்ற உறவினர்கள் கோமளாங்கி, சுகுந்தா, சுகுணா முதலான சுமங்கிலி ஸ்திரீகளும் மேள வாத்தியம் முழங்க வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்கும், மஞ்சள் தேங்காயும், கிண்ணத்தில் சந்தனமும் எடுத்துக்கொண்டு மகாலிங்கமய்யர் பங்களாவிற்குச் சென்று சம்பந்திமார்களுக்குத் தாம்பூலம் கொடுத்து அழைக்க, அவர்களும் புறப்பட்டார்கள். புறப்படும்போது இரண்டு அண்டா நிறைய தேங்குழலும், முருக்கும் ஒரு ஜோடுத்தவலை நிறைய முத்து ஸாரையும், வென்னீர் தவலை நிறைய குஞ்சாலாடுவும், இன்னும் ஜிலேபி முதலிய அநேகவித பக்ஷண வகைகள் நிறைந்த பாத்திரங்களையும், சந்தன புஷ்ப தாம்பூலமும் கொண்டு பலவித வாத்தியங்கள் முழங்க, அவர்களை ஜனங்கள் சூழ்ந்திருந்தனர். இக்கோலத்துடன் தாசில்பிரபுவின் பங்களா வந்து வரிசை வரிசையாகத் தாங்கள் கொண்டுவந்தவைகளை வைத்துவிட்டு எல்லோரும் அவ்விடமே அமர்ந்தனர்.

முகூர்த்தத்திற்கு நாழிகை ஆய்விடுகிறது; குணமணியை அழைத்துவா என்று தாசில்பிரபு கோமளாங்கியிடம் சொல்ல, "எனது அருமை மகன் சுப்ரகாசனுடன் மணையிலமர அந்தப் பாழும் தரித்திர மூதேவியையா அழைத்துவருவேன் முடியாது" என்று மறுத்துவிட்டாள். பின்பு மிகுந்த கோபங்கொண்டு வேறொன்றும் பேசாமல் குணமணி இருந்த அறையை விசாரித்து சென்று "அம்மா! குணமணி முகூர்த்தத்திற்கு நாழிகை ஆகிறது சீக்கிரம் வா" என்று கூப்பிட்டார். குணமணி மிகுந்த லஜ்ஜையுடன் தலை குனிந்து மெதுவாய் வெளியே வர, அவிழ்ந்திருந்த கூந்தலையும், களைப்புற்ற முகத்தையும் வாடிய மேனியையும், அழுக்காடையையும்கண்ட தாசில் பிரபு தன் இரு கண்களினின்றும் நீரைத் தாரை தாரையாய் உதிர்த்தார். ஆனால் சிறிது நேரத்தில் அந்நீர் நீங்கி, கண்கள் கோபத்தால் தக தக என் எறியும் அனல்போல் மாறிற்று. பின் சகோதரியைத் திரும்பிப் பார்த்து "சுகந்தா! இத்தனை பேர்களும் மரம்போல் நிற்கிறீர்களே? இவ்வளவுபேர் இருந்து என்ன

பயன்? இந்தப் பெண்ணை ஸ்நானம் செய்வித்து, தலை பின்னி, அலங்கரிக்க ஒருவருக்கும் தெரியவில்லையோ? அன்றியும் அவள் இதே ஆடையை மூன்று நாளாய் உடுத்திருப்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையோ? நீங்களெல்லாம் ஸ்திரீகள்தானு அல்லது பைசாசுகளா? பெண்ணென்றால் பேயுமிறங்குமென்பார்களே, நீங்கள் அதிலும் சேர்ந்தவர்களல்ல'' என்று ஓர் கர்ஜனை செய்தார்.

இதைச்செவியுற்ற ஸுகந்தாவுக்குச் சற்று ரோஷமுண்டாகவே, அண்ணு! நீ சொல்வதெல்லாம் வாஸ்தவந்தான். ஆனால் மதனியின் சமாச்சாரங்களை யெல்லாம் உன்னிடம் எப்படிச் சொல்வதென்று சற்று தயங்கினேன். எங்களை நீ திட்டிய பிறகு அவைகளைச் சொல்லாதிருப்பது எனக்கு அழகல்ல. ஆகையால் கேளண்ணு. இரண்டு நாளாய் இந்தப்பெண் பட்டினி. அதிலும் தலையில் இரத்தக்காயம் வேறு. இத்தனை பெரிய வீட்டில்இவள் ஒண்டிக்குத்தானு ஆகாரம்இல்லாமற் போயிற்று, என்றுஎண்ணி நான் சிறிதளவு ஆகாரம் கொடுத்தேன். மன்னி ஓடிவந்து, குணமணியை நாலைந்து அடி கொடுத்து அந்த ஆகாரத்தையும் பிடுங்கி எறிந்து விட்டாள். அத்துடன் என் சாப்பாட்டிலும் மண் விழுந்தது. ஆகாரத்திற்கே இவ்வளவானுல் அலங்காரம் வேறு நடக்குமாவென்று நீயே யோசித்துக்கொள், என்று கண்ணீர் உதிர்த்துக்கொண்டே சொன்னுள். தன் மனைவி சற்று முன் கோபக்காரியென்றும், கோபத்தால் பிதற்றினுலும் வஞ்சகமற்றவளென்றும், "பெண் புத்தி பேதமை" என்ற ஆன்றோர் வாக்கின்படியுடையவளே தவிர பந்தி வஞ்சனை செய்யாளென்றும் எதார்த்தமா யெண்ணியிருந்த தாசில் பிரபுவிற்கு அப்போதுதான் அவள் செய்த அக்ரமங்கள் தெரியலாயின. ஆத்திரமோ பொங்கிற்று. முஹூர்த்தத்திற்குநாழிகையாகிறது. பெண்ணே அந்த நிலையிலிருந்தால் அவமானம்அவருக்கல்லவா? ஆகையால் ஸுகந்தாவை மீண்டும்பார்த்து, "முஹூர்த்தத்திற்கு நாழிகையாகிறது அதிசீக்கிரம் மங்கள ஸ்நானம் செய்வித்து அழைத்துவா" என உத்திரவிட்டார். அவளும் அப்படியே சீக்கிரத்தில் ஸ்நானம் செய்வித்து, தமையனுல் கொடுக்கப்பட்ட புடைவையை கட்டுவித்து, மற்றைய அலங்காரங்களும் செய்வித்து மணையிலுட்காரவைத்தாள். சாஸ்திரிகளும் எதிரில் உட்கார்ந்து, இரண்டு

குடங்கள் நிறைய ஜலம் வைத்து, சந்தனங்குங்குமபொட்டிட்டு, மாவிலை வைத்து, அதன்மேல் தேங்காயைவைத்து, ஜெபஞ்செய் தார்கள். ஜெபஞ் செய்து முடிந்ததும் இரண்டு பலகைகளில் கோலமிடச்செய்து; அப்பலகைகளில் ஸுலோசனா குணமணி இருவரையும் உட்காரச் செய்து பார்புவையும் சுப்பிரகாசனை யும் முறையே அவர்கள் இருவர் தலையிலும் இந்த குடத்திலுள்ள ஜலத்தை கொட்டச் சொல்ல அவர்களும் அப்படியே செய்த னர். உடனே பத்மாவும் கமலாவும் அதிஆதரவுடன் ஸுலோச னாவை அழைத்துச் சென்று வேறொரு புதிய புடவை கொடுத்து கட்டிக்கொள்ளச் செய்து, மீண்டும் அவளை அலங்கரித்தனர். ஸுகந்தா மிகுந்த பிரியத்துடன் குணமணியை அழைத்துச் சென்று விலையுயர்ந்த பட்டுப்புடவை யொன்று கொடுத்து கட்டிக் கொள்ளச் செய்து திரும்பவும் அவளை அலங்கரித்து விட்டாள். பின் மகாலிங்கஅய்யர் அந்தணர் சொற்படி மயில்கண் பத்தாறு பட்டுஒன்றை பாபுவிடம் கொடுத்தார். தாசில்பிரபுவும் மயில்கண் பத்தாறு வெண்பட்டு ஒன்றை நித்யரிடம் கொடுக்க அவரும் மனப்பூர்வமாய் ஆசீர்வதித்து ஸுப்ரகாசனிடம் கொடுத்தார். மீண்டும் இரு தம்பதிகளும் புது ஆடை யுடுத்தி மணையிலமர முஹூர்த்தம் நடந்தது. தாசில் பிரபு பிராமணர் களுக்கெல்லாம் குறைவில்லாமல் எதேஷ்டமாய் சம்பாவனைகள் வழங்கினர். கடைசியில் ஸ்திரீகள் மங்கள ஹாரத்தி சுற்றி மங்க ளம்பாட இருதம்பதிகளும் எழுந்து தம்தம் இடம் போயினர். எழுந்து சென்ற சுலோசனாவை கோமளாங்கி வாரியணைத்து "என் கண்ணே, முத்தே நீ அதிக நேரமாய் பட்டினியிருந்து விட்டாய் ஏதேனும் கொஞ்சம் ஆகாரம் சாப்பிடுவா" என்று கொஞ்சிக்குலாவினள். பின் தன் பக்கத்திலிருந்த பரிசாரகன் ஒருவனை அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படியும் ஆஞ்ஞாபித் தாள். பிறகு அங்குள்ள சம்பந்திமார்களும் மற்றைய எல்லா ஆட வர்களும் போஜனமுண்டனர். அவர்களுக்குப் பிறகுஎல்லா ஸ்தி ரீகளும் போஜனம் செய்தனர். ஆனால் குணாவைமட்டும் பந்தி யில் உட்காரலாகாதென சொல்லி அவளையோர் அறையில்தள்ளி பூட்டிவிட்டாள் கோமளாங்கி, ஸுகந்தா அவர்கள் எழுந்தபின் ஒரு இலையைப்போட்டு சகல பதார்த்தங்களையும் பரிமாற அவ ளும் பயபக்தியுடன் வந்து, "அத்தே! உங்கள் வார்த்தையை

எனக்குத் தட்ட முடியவில்லை. ஆனால் என் மாமிக்குத்தெரியா மல் திருட்டுத்தனமாக ஏன்சாப்பிடவேண்டும், அவர் மனமுடன் போட்டால் சாப்பிடுகிறேன். இல்லாவிட்டால் வேண்டாம். என் னப்பனருளால் எனக்கு பசியே கிடையாது" என்றாள்.

"என் கண்மணியே! உனக்கு ஒருநாளும் குறைவு வராது. அமோகமாயிருப்பாய். நான்தான் உனக்குமாமிஎன்று எண்ணிக் கொள். நான் சொல்லுகிறேன் சாப்பிடு பரவாயில்லை" என்று சொல்ல, குணமணி உட்கார்ந்து ஒருபிடி சாதத்தைகூட வாயில் போடவில்லை வந்துவிட்டாள்கோமளாங்கி. "ஓர்வேளை இவள்தான் இலங்கை லங்கணியோ என்னமோ அவள் சாப்பிடுவதையும் பக் கத்தில் ஸுகந்தாவையும்கண்டுவிட்டாள். கொண்டாள்கோபம்." "அடீ! சுகந்தா! என்னையாரென்று நினைத்தாய், என் உத்திர வின்றி இவளுக்கு சாதம்போட உனக்கென்ன உரிமை வந்து விட்டது? அன்னமிட்டவரை கன்னமிடும்நீலி இறங்குவெளியில்" என்றாள். சுகந்தாவோ மகா ரோசக்காரி. அதிலும் தான்பிறந்த வீடு தனக்குச் சொந்தமில்லை என்றால் யாருக்குத்தான் கோபம் வராது. "ஏமன்னீ! என்தகப்பனார் வைத்த சொத்திற்கு எனக்கு பாத்தியமில்லையானால் உனக்கென்ன பாத்யம்; யாரைப்பார்த்து வெளியில் இறங்கச் சொன்னாய்?" என்று அவளும் ஒரு போடு போட்டாள். கோமளாங்கி இதற்கெல்லாம் சளைக்கப்பட்டவளா? "அடி மானங் கெட்டவளே! என் வீட்டு வாசலை மிதிக்கக்கூட உனக்கு அதிகாரங்கிடையாது. ஊரான் வீட்டுக்குப்போன பின் உனக்கென்ன என் வீட்டில் ஸ்வாதீனம்" என்றாள்.

சுகந்தாவின் கண்களில் நீர் ததும்ப, "அடிமன்னீ! பழைய நிலைமையை சற்றுயோசி. இப்போதென்ன உனக்கு அப்படி பெருவாழ்வு வந்துவிட்டது" என்று சொல்லிவிட்டு இளைய சகோதரனை ரத்னகேசமய்யர் வீட்டில் நுழைய, இவள்மதனி யாகிய ஸுகுணா ஓடிவந்து, அவள் துக்கப்படுவதை கண்டு கண் கலங்கி, "ஏன் அழவேண்டும் உங்களையாரென்ன செய்தார்கள்! மன்னிதான் ஏதேனும் கடுந்து பேசியிருப்பாள். அவள் சுபாவம் நாம் அறியாததா? அது அவள் ஜென்மத்துடன் பிறந்தது. நீங்கள் இங்கேயே இருந்துவிடலாம். இப்போ அங்கு போகவேண்டாம்" என்று கனிந்த வசனங்களால் தேற்றினாள்.

மாமியின் ஆர்பாட்டத்தைக்கண்ட குணமணி, உடலம் நடுக்கமுற்று, எழுந்து கைகளை சுத்தம் செய்து விட்டு ஓர் அறையில் புகுங்கால், கோமளாங்கி பின் தொடர்ந்து அவளை இழுத்து இரண்டு மூன்று அடிகள் கொடுத்து, கீழே தள்ளிவிட்டாள். அந்தோ பாவம் குணமணி வாய் திறந்து ஒன்றும் பேசாமலிருந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு ஏ! ஜெகத் பிரபோ! ஏ ஜகன்னாதா! ஏ பக்த பராதீனா! ஏ தீனபந்து! ஏ அருட் பரந்தாமா! ஏ பரம புருஷா! ஏழைமேல் தயவென்பது சிறிதளவுமில்லையா! கருணையே உருக்கொண்ட தேவா! இப்பேதையின் நிமித்தம் கல்லாய் சமைந்தனையோ! மகானுபாவா! ஏ வேணுகானலோலா சாமளநீலா! சரசகுணாளனே ஏ கண்ணா! கண்ணா என்று கைகுவித்த வண்ணம் பக்தி பரவசத்தால் நின்றாள். ஆகையினால் கோமளாங்கி அடிக்கும் அடிகள் எல்லாம் அவள் உடம்பில் விழுமே தவிர அவளுக்கு ஒருவித இம்சையுமே கொடுக்காது.

## அத்தியாயம் 9

## பணப்பேயின் குதூகலம்-உத்தமர்களின் உருக்கம்.

திருவனந்தபுரத்திலே சத்யா சமைக்காமலும், சாப்பிடாமலும், குழந்தையைக்கூட கவனிக்காமலும், எம்பெருமான் சந்நிதியை விட்டகலாமலும், ஏ தேவாதி தேவா, தேவகி தனயா, யசோதைபாலா, யதுகுலதிலகா, படுயினில் அரவினில் நடமிடும் பாதா, பரிபூர்ண திவ்ய கருணா கடாக்ஷா, நான் என்ன செய்வேன், எவ்விதம் உய்வேன், என்னருமை செல்வியை அனாதையாக்கிவிட்டாயே. அவளை இக்கொடும் சோதனைக்கு உள்ளாக்கி விடுதல் அழகோ. அறியாபாலையல்லவோ? இது தகுமோ, இதுமுறையோ, இது தருமமோ, இதற்கு உன் மனம் இடங்கொடுத்ததோ, நீ பக்த வத்ஸலனல்லவோ, சிஷ்ட ரக்ஷகன் இல்லையோ, நீ துஷ்ட ரக்ஷகனே, நீ பக்ஷபாதனென்று அறியாமல் போனேனே, தீனர்சகாயனென்றிருந்தேனே, நீ இவ்விதம் நின்சிலையாகுவாய் என்று அறியேனே, உன் அன்பர்களை காக்க வருவாயென்றல்லவோ எண்ணினேன், நீ இவ்விதம் சோதனை புரிவாய் என்று நான் கனவிலும் எண்ணவில்லையே, உலகிலேயே கடவுள் இல்லையோ; உலகிலேயே தெய்வமில்லையோ, உலகிலேயே, என் அப்பன் இல்லையோ, இனி இப்பொந்தியில் உயிருடன் இருக்க இசையேன் இனி தாள முடியாது. முடியாது. பெற்ற வயிறு பற்றி எறிகிறதே, என்னால்

சகிக்ககூட இல்லையே என்று அலறி கீழேவிழுந்தாள், எழுந்தாள். கிருஷ்ண விக்ரஹத்தை கட்டிக்கொண்டழுதாள்! முகத்தைத் தழுவிக் கொடுத்தாள். ஓர்பாட்டு பாடினள் மீண்டும் விழுந்தாள். இப்படியாகவே இரண்டுநாளாய் அவளுடைய காலத்தைக்கடத்தினள். குழந்தை ஞானமும் மூர்ச்சைத்தெளியாமலே வீழ்ந்து கிடந்தான்.

நிற்க நாகர்கோவிலில் நித்யதர்மர் ஒருவருடனும்பேசாமல் வாயில் திண்ணையில்கட்டியிருந்த வாழைகளுக்கருகில் உட்கார்ந்து கொண்டு, 'இவ்வுலகமெல்லாம் மாயம். இதை நம்பினல் அதுவே பெரும் அபாயம். மாயப்பிரபஞ்ச முற்றும் பகற்கனவேயாகும். என்னப்பன் திருவடிக்கமலங்களே என்றும் அழியாப்பொருள். மனமே! எம்பிரானை மறவாதே. பூர்ண நம்பிக்கையுடன் இரு." என்று சொல்லிக் கொண்டு இருகண்களையும் மூடிக்கொண்டு ஏகாந்த யோகத்தில் அமர்ந்திருந்தார். அருகிலிருந்த வாழை மரத்தில் அப்படியே ஸ்மரணையற்று சாய்ந்தார். ஆத்ம தெரிசனத்தை கண்ணுற்றார். ஆனந்தம் எய்தினர். தாசில்பிரபுவின் உறவினப் பையன்களான, கோபு, பாலு, ராமு, மாது, சோமு ஜோகு என்ற அறுவரும் நித்யதர்மர் இருக்கிற இடத்திற்கு வந்து ஜோகுவைத்தவிர மற்ற பையன்களெல்லாம், நித்யதர்மரைப் பார்த்து, கையைக்கொட்டி சிரித்தார்கள். கோபு நித்யர் அருகிற் சென்று, "ஏய்பாலு இந்த ரிஷீஸ்வரரோட ஞானவைராக்யத்தை பார்த்தாயாடா? அடடா என்னபக்தி! என்னபக்தி! இன்னும்யார் தலையிலே கை வைக்கலாம்னு பார்க்கிறார். எரச்சப்போடாதீங்கடா. நிஷ்டை கலஞ்சுடப்போறது." என்றான்.

பாலு:- இல்லேடா கோபு, இதைபோல கண்மூடி சன்யாசிகளையெல்லாம் காலையும் கையையும் கட்டி காவேரிலே போட்டாக்கூட தோஷமில்லேடா.

ராமு:- இப்படி நிஷ்டை செய்றவாளுக்கு நாடென்னத்துக்கு, காட்டுக்கு போகிறதுதானே. இதெல்லாம் காசு சம்பாதிக்கிற வழிடா.

ஜோகு:- என்ன விபரீதம். அவரவர்கள் வாயால் வந்தபடி பேசுகிறீர்களே. இந்தமகானுபாவரை இலேசாக எண்ண வேண்

டாம் இவரே கைலாய நிலையைக்கண்ணுற்றவர். இவரேமகா புண்ணியவான். இவரே உத்தமகுரு. இவரேகுற்ற மற்ற நெஞ்சுடையவர். பரம பக்திமான். இப்புண்ணிய புருஷரை நாம் நிந்தனை செய்தால் அகோரபாவம் சம்பவிக்கும் இவரது பக்திப்பெருக்கை வர்ணிக்க எவராலும் இயலாது. பாருங்கள், இவரது முகத் தோற்றத்தை என்ன பரிசுத்தம். என்ன பிரகாசம் ஆஹா!

கோபு:- இவன் சொல்லியதைக் கேட்டு அதிக கோபமுற்று, ஏய் ஜோகு! இங்கே உன்னை யாரடா கூப்பிட்டார்? என்னமோ பிரமாதமாய் ஒளர்ரே. பாவம் புண்ணியம் எல்லாம் உன்கைக்குள் தான் இருக்கோ. அப்படியானல் அதை ஒருகை பார்க்கிறேன். நீ ஒண்ணும் எங்களுக்கு புத்திசொல்ல வேண்டாம் போ போ என்றான்.

ஜோகு.- வீணில் பாபத்திற்குள்ளாகாதீர்கள். வேண்டாம்என்று சொன்னேன் இதற்காக என்னை ஏன் கோபிக்க வேண்டும் நீங்கள் பாபத்தை தேடிக்கொண்டால் என்ன? புண்ணியத்தை சம்பாதித்துக் கொண்டால் என்ன? நல்லதைச் சொன்னல் பொல்லாப்புதான்.

கோபு:- இந்தாடா! ஏய்! என்னடா மறுபடியும் பாவம் பாவம் இங்கிரே; அப்பரம் தெரியுமா? மறியாதையாய்ப் போகப் போகிறயா அல்லது ஏதாவது வேணுமா?

ஜோகு:- நீயா பேசுகிறாய் இல்லை; உன் போராதகாலம் உன்னை பேசச்சொல்லுகிறது.

கோபு:- போறயா கல்தா வேணுமா?

ஜோகு:- அடேகோபு! கூடிய சீக்கிரத்தில் அந்தகல்தா உனக்கே கிடைக்கும். பயப்படாதே. துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்றது போல் நான் போகிறேன். என்று சொல்லி விட்டு எதிர் வீட்டு திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

கோபு:-ஏய்பாலு! அந்த பிசாசு போயிடுத்து நமக்கு போது போகல்லே. ஆசீர்வாதத்திற்கோ இன்னும் ரொம்ப நாழியிருக்கு. வேடிக்கையா போது போரத்துக்கு என்னடா செய்யலாம்.

பாலு:- இல்லே. இல்லே. எனக்கொன்றும் தெரியல்லே நீதான் சொல்லு.

கோபு:- சீட்டாடினு சீக்கிரம் போது போகும்.

மாது:- ஒரு இருட்டுள்ளா பார்த்து இரண்டு கண்ணேயும் மூடிண்டா உடனே போது தானே போகிறது.

சோமு:- மாமாவாத்து கொல்லேலே மாங்கா ரொம்ப காச்சிருக்கு நாமெல்லாம் பறிச்சு திங்கலாண்டா.

கோபு:- இந்தாடா இதெல்லாம் எனக்கு புடிக்கல்லே பாபுவுக்கு வந்த சீரெல்லாம் ஒண்ணுவிடாதே எழுதுவோம்டா.

பாலு:- அதாண்டாசரி நல்ல யோஜனே.

கோபு.- அப்பாம் சுப்ரகாசனுக்கு வந்ததெல்லாத்தையும் ஒரு லிஸ்ட் போட்டுடுவோம்.

மாது:- அதெப்படியடா பீத்த புடவையும் கிழிச மடிசெஞ்சியையும் போட்றது.

கோபு:- அப்படி இல்லேடா மண்டு! உனக்கென்னடா தெரியும் சாப்படத்தான் தெரியும். பாபுவை விட ஸுப்ரகாசனுக்கு இரண்டு மடங்கு ஸ்ரீதனம் வந்திருக்கிறதாக எழுதணும். அப்பத்தான் இந்த மகரிஷியோட தபஸ் எல்லாம் தெரியப்போகிறது. அப்பாம் இவர் இருக்கிற இடமே தெரியாது.

பாலு:- இதெல்லாம் யார் செய்ததாக எழுதுவீரு?

கோபு:- இவரோடே தம்பி மைசூரிலே மந்திரியா யிருக்காரென்று நம்ப மாமா சொன்னாரேடா, அப்படியே உண்மை போல அந்த மந்திரியே செய்ததாக எழுதிவிட வேண்டும்.

பானு :- அதுவே சரியான யுக்தி. பாபு அதிர்ஷ்டந்தாண்டா பலே அதிர்ஷ்டம். ஸப்ரகாசன் ஜாதகம் மகாதரித்திரம்.

கோபு :- அதுக்கென்ன பண்றது; அவந்தலேலே அப்படி யெழுதியிருக்கு. அதுபோகட்டும் இந்தபிரபு எதில் தேர்ந்தவர் தெரியுமா ?

பானு :- தெரியுமே; உஞ்சுருத்தி வாங்குவதில்.

ஆஹ் ஹஹ் ஹா என்று எல்லோரும் நகைத்தனர். பிறகு கோபு, தாசில் பிரபு வைத்திருந்த பேப்பரையும், பேனாவையும் எடுத்துவந்து, லிஸ்ட் எழுத ஆரம்பித்தான். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் எல்லா பையன்களையும் பார்த்து "ஏய் பையன்களே! நான் எழுதியிருப்பதை வாசிக்கிறேன் கேளுங்கள்" என்று படிக்க ஆரம்பித்தான். அது பின் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 4சேர் | வெள்ளி | சந்தன கிண்ணம் | 1 |
| 3 | ஷை | பிளேட் | 1 |
| 4 | ஷை | கூஜா | 1 |
| 3 | ஷை | வெற்றிலைப்பெட்டி | 1 |
| 3 | ஷை | கும்பா | 1 |
| 4 | ஷை | கப்பன் சாஸர் | 1 |
| 4 | ஷை | குத்து விளக்கு | 1 |
| 5 | ஷை | குடம் | 1 |
| 1 | ஷை | டம்ளர் ஜோடி | 1 |
| 1 | ஷை | பேசன் ஜோடி | 1 |

பித்தளைப் பாத்திரம் 1 செட்டு.

| | | | |
|---|---|---|---|
| 25ரூ. | பெருமானமுள்ள | சோபா | 1 |
| 20ரூ. | ஷை | கட்டில் | 1 |
| 15ரூ. | ஷை | மேஜை | 1 |
| 10ரூ. | ஷை | ஈசிச்சேர் | 1 |
| வெல்வெட்டு மெத்தை ஜோடி | | | 1 |

இதெல்லாம் பாபுவோடே சீர். இன்னமே ஸப்ரகாசன் லிஸ்ட்டு எழுத ஆரம்பிக்கணும் என்று எழுத ஆரம்பித்தான்.

நிற்க, மகாலிங்கமையர் பங்களாவில் ஸுலோசனாவிற்குத் தலைபின்னி பூ தைத்து, பட்டுப் புடவை தரிக்கச் செய்து, திலகமிட்டு, ஒட்டியாணம், நாக ஒத்து முதலான நகைகளையும் பூட்டி அலங்கரித்தார்கள். கமலா, பத்மா, பேபி மற்றுமுண்டான பேர்களும் அவரவர்களுக்குத் தக்கவாறு அலங்கரித்துக்கொண்டார்கள். பின் கமலா ஆட்டியசைக்கி, நீட்டி முழக்கிக்கொண்டு கோமளாங்கியின் பங்களாவிற்குச் சென்றாள். அங்கே பாபு தலையை வாரி முடித்து, சந்தனப் பொட்டு இட்டுக்கொண்டு, ஜரிகை வஸ்திரங்கள் உடுத்திக்கொண்டிருப்பதைக் கண்ணுற்று திருப்தியடைந்தவளாய் கோமளாங்கியிடம் சென்றாள். இவளைக் கண்ணுற்ற கோமளாங்கியும் "வா வா" என்றழைத்து, "கல்யாணப் பெண்ணிற்குத் தலை பின்னியாய் விட்டதா? புதுப் புடவை உடுத்தி விட்டாயா?" என்று வரிசை வரிசையாகக் கேட்டாள். கமலாவும் அதிக அகம்பாவத்துடன், எங்க ஸுலோசனாவுக்குத் தலை பின்னி, 'பூ'த்தைத்து ஒரு மாமாங்க மாச்சு,' அவளைப் பாருங்கோ கிளியாட்டமாயிருக்கா. எங்கேயாவது திஷ்டி கிட்டி பட்டுடுமோ என்று பயப்பட்டுண்டிருக்கேன் குணமணிக்குமட்டும் ஏன் இன்னும் தலை பின்னல்லே. நாழியாகல்லையா? மணி அஞ்சாயிடுத்து தெரியுமோன்னோ? என்றாள்.

கோம :- ஏண்டி நீதான் சொல்லுகிறாயே இந்த கதியற்ற பிணத்திற்கு கந்தமென்ன, வாசனையென்ன? அனாதை பிணத்திற்கு பின்னல் என்ன பின்னல்? விளக்குமாற்று கட்டைக்கு பட்டுக் குஞ்சலமாம்! சனீஸ்வரன் பீடைக்கு சாந்தி கல்யாணம்! என்ன வேண்டி கடந்தது. இவளைப் பார்த்தாலே ரொம்ப அழகாய் இருக்காளே, அதிலேவேற இன்னும் அலங்காரம் ஒன்று வேணுமா? அது கடக்கட்டும் சனியன், என் அருமை ஸுலோசனாவிற்கு அலங்காரம் செய்துவிட்டாயோ?

கமல :- ஊம்! அதெல்லாம் அப்பவே ஆயிடுத்து.

கோம :- அதுதான் வேண்டியது. இந்தா கொஞ்சம் காப்பி சாப்பிடு.

என்று சொல்லி ஒரு டம்ளர் காபியைக்கொடுக்க அவளும் அதை வாங்கிச் சாப்பிட்டாள். பிறகு குணமணியைப் பார்த்து "ஏ! தரித்திர மூதேவியே! நீயா என் தங்கைக்கு ஓர்ப்பிடியா வாய்க்கணும்; அவ காலெழுத்தும், உன் தலையெழுத்தும் சரி. இன்னும் எங்களெதிரில் உயிரோடு நிற்கிறாயே? நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விடப்படாது" என்று வாயில் வந்தவாறு பிதற்றலானாள். இதை மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருந்த ஸப்ரகாசன் மனம் என்னபாடு பட்டிருக்குமென்பதை என் சிற்றறிவினால் எழுத இயலவில்லை. வாசகர்களே சற்று யூகியுங்கள். அவனைப்படைத்த அயனாலேயும் அறிய முடியாது என்பது திண்ணம். ஆகா இதென்ன விபரீதம்! அவனை அடிக்கவும், துன்புறுத்தவும், சோறில்லாமல் பட்டினி போடவும், கொஞ்சமேனும் அஞ்சா என் அன்னை ஒருவள் இருப்பது போதாதா? இக் கொலைபாதகி வேறு ஒருவள் முளைத்துவிட்டாளா? இப் பாதகர்களை யெல்லாம் ஏன் இவ்வுலகில் ஈசன் படைத்தானோ யான் அறியேன். என் அருமைக் காதலி அனாதையாய் நின்றழுவதைக் காண, என் அங்கம் பதறுகிறதே. ஏ ஈசா! உனக்குக் கண் இல்லையா? ஏ! மண் பொதுத்தந்தையே! இக் கொடியவர்களின் கைக்கு இரையாக்கவோ இவளை ஸ்ருஷ்டித்தாய்? என்று பலவாறாய்ப் புகன்று கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். தான் போய் குணமணியைச் சற்று சமாதானம் செய்யலாம் என்று எண்ணினான். ஆனால் தன் தாய்க்கு ஒருபுறம் பயந்தும், இன்னும் சரியானபடி சாந்தி முஹூர்த்தம்கூட ஆகவில்லை, அதற்குள்ளேயே தன் தாயிடம் தன் பெண்டாட்டிக்குப் பரிந்து பேசுகிறான் என்ற ஊரார் நிந்தனைகளுக்கும் பயந்து ஒன்றும் செய்ய இயலாதவனாய் தான் வந்ததை ஒருவரும் அறியாவண்ணம் ஓர் அறைக்குட் சென்று பிரக்ஞையற்று உட்கார்ந்துவிட்டான்.

பாபுவின் அட்டகாஸத்துக்குக் கேட்பானேன். அட ஸப்ரகாசா உனக்கு எப்பொழுதுமே அகம்பாவம் உண்டல்லவா? அதுதான் குட்டைக்கேற்ற மட்டை வந்து வாய்த்தது. இன்னுமேயாவது உஷாராயிருந்து மரியாதையா காலத்தைத்தள்ளு. இல்லேயோ அதோகதிதான். நான் எட்டி ஒதச்சாலும் நீ பட்

டுக்கவேண்டியதுதான் தெரியுமா? நான் மிராசுதார்வீட்டு மாப்பிள்ளை, அம்மாவின் செல்லப்பிள்ளை ஞாபகமிருக்கட்டும் என்று இவன் ஒருபுறம் அட்டகாசஞ் செய்துகொண்டிருந்தான். இவைகளையும் செவியுற்ற ஸுப்ரகாசனுக்கு "எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல்" இருந்தது. ஆனால் பொருமைசாலி அவனாதலால் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு கோபமெனும் கொழுந்துவிட்டெரியும் தீயை சாந்தமெனும் குளிர்ந்த நீர்கொண்டு அணைத்துக் கொண்டிருந்தான்.

குணமணியும் அழுதகண்ணும், சிந்திய மூக்குமாக சதா பரமாத்மாவை த்யானம் செய்துகொண்டிருந்தாள். இப்படியாக மணி ஆறு ஆகும் சமயமாய்விட்டது. அடுத்த தெருவிலிருந்து யதார்த்த குப்பிச்சி பிரபுவின் பங்களாவில் பிரவேசிக்க கோமளாங்கி அதிக உபசாரணையுடன் வரவேற்று உட்காரவைத்தாள்.

குப்பி :- ஏண்டீ கோமளம்! உன்பிள்ளைக்கு இன்னிக்கு தொட்சி கல்யாணம்னு கேள்விப்பட்டேனேடி, அது வாஸ்தவந்தான் போலிருக்கே.

கோம :- ஆமாம் ஒங்களைக்கூட கூப்பிடணும்னுதான் எண்ணம் இங்கே ஒரே அமக்களமாயிருந்ததனாலே வரமுடியல்லே.

குப்பி :- அதுபோனா போகட்டும், இரண்டும் இரண்டாயிரமா விளங்கணும் சம்மந்தியெல்லாம் எங்கே இறங்கி இருக்கா?

கோம :- அடுத்த பங்களாவில்தான் ஏறங்கியிருக்கா?

குப்பி :- சரிதான்! அதான் பாத்தூட்டு போவம்னுவந்தேன்.

கோம :- அதுக்கென்ன! அழைச்சிண்டு வரேனே. என்று சொல்லி அதி வேகத்துடன் சென்று ஸுலோசனாவை அழைத்துக்கொண்டு வந்து குப்பிச்சியை நமஸ்கரிக்கச் சொல்ல, குப்பிச்சியும் அவளை ஆசீர்வதித்தாள்; பின்

குப்பி :- ஏண்டீ கோமளா! இவள் சின்னவளா? பெரியவளா?

கோம :- இவதான் என் பெரிய நாட்டுப்பெண், ரொம்ப நல்ல பொண், மனுஷ்யாளிடத்தில் ரொம்ப விஸ்வாஸமாயிருப்ப.

குப்பி :- ரொம்ப சரி! எப்படியேனும் நன்றாயிருந்தா சரி. சின்னவ எங்கே? என்றுகேட்ட மாத்திரத்தில் கோமளாங்கிக்கு வந்த ஆத்திரத்திற்கு ஓர் அளவில்லை. கையை முறித்து பெருமூச்சு எறிய அந்த பணத்தை பிணத்தை யார் கண்டார் அம்மாமி என்றாள். குப்பிச்சிக்கு இதுவோர் ஆச்சரியமாயிருந்தது. மூக்கில் கையை வைத்து, "இது ஏதுடீ! அதிசயமாயிருக்கு. ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்புமா? நன்றாத்தான் இருக்குபோ; அந்த நாட்டுப்பொண்மட்டும் ஒந்தலையிலே கல்லைத் தூக்கி போட்டாளாடீ? இவள் மாத்திரம் சாதிக்கப் போறாளாக்கும்?" என்று சரமாரியாகப் பேசினாள்.

கோம :- அந்தப்பொண் எமபட்டணத்தில்தான் இருக்கும்.

குப்பி :- ரொம்ப நன்றாயிருக்கு, நீ பேசற அழகு. எம பட்டணத்தைப் பார்த்துட்டு வந்தாப்பலே பேசறையே?

கோம :- இல்லே அம்மாமி; அவ போனாத்தான்......என்னங்கிறேன். அவ்வளவு எரியறது என் வயறு.

குப்பி :- போறுண்டீ, போரும், ஒன் கதை! அவ எங்கே சொல்லு?

கோம :- எங்கேயோ! அந்த உள்ளேதான் கிடந்தது என்று சொல்லி, குணமணியிருந்த அறையைச் சுட்டிக்காட்டினாள். குப்பிச்சியும் குணமணியிருந்த அறைக்குள் புகுந்தாள். விரிந்த தலையையும், அழுத கண்ணுமாய் நிற்கும் குணமணியை கண்ட குப்பிச்சி, ஐயோ பாவம் தலையும் பின்னல்லே ஒண்ணும் பின்னெல்லே! என்று பரிதாபத்துடன் ஏண்டீம்மா ஒங்காத்துலேருந்து யாரும் வல்லையா? என்று கேட்டாள்.

"இல்லேம்மாமி" என்று குணமணி பதிலளித்தாள்.

உடனே குப்பிச்சி, கோமளாங்கியைப் பார்த்து, "ஏ! கோமளம் இவளுக்குத் தலை கூட வாரிப் பின்னப்படாதா" என்று கேட்க; கோம—எல்லாம் பின்னித்தான் கடக்கு.

குப்பி :- தாயில்லா பெண்ணுட்டமா தலை பறக்கிறதே. ஒரு தலை பின்னக்கூட நாதியில்லையா? நம்மாத்துக்கு ஒரு பெண் வந்தா அவளை நாமதாண்டி கவனிக்கணும்.

கோம :- ஏன் தாயில்லா பொண்ணுட்டமான்னு மெதுவாய் சொல்றேளே? இருந்தா வந்திருக்கமாட்டாளா? இந்த மாதிரி ஒரு தாயார் இருந்தாலும், இல்லாத போனாலும் ஒண்ணுதான்.

குப்பி :- அதென்னடீ அது அப்படிச் சொல்றே? ஒரு சமயா சமயம் எல்லோருக்கு முண்டுதான். நன்னயிருக்கு நீ பின்னுதபோனு எண்ணெயும், சீப்பும் கொண்டா, நானுவது பின்னிவிடறேன்.

கோம :- போரும்-போரும்; பன்னிக்குட்டிக்கு சங்காராந்தியோ? இங்கே சீப்பையுங் காணும், எண்ணெயுங் காணும்.

குப்பி :- இதென்னடீ அநியாயம்! ஒரு சீப்புக்கு கூடவா பஞ்சம், அழகு சொட்றது. நான் கொண்டு வருகிறேண்டீ வேண்டிய சீப்பு. குப்பிச்சி தன் வீடுசென்று ஒருசீப்புடன் திரும்பிவந்து குணமணியின் தலையை பிண்ணிக்கொள்ளும் படி சொல்ல, குணமணி அதற்கிடங்கொடாமல், அம்மாமி என் மாமியின் மனதிற்கு விரோதமான எந்த காரியத்தை யும் நான் செய்யேன். நீங்களும், அதிற் பிரவேசிப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர் உத்திரவு இல்லாமல் நீங்கள் இக்காரியத்தை செய்தால், நீங்களும் அவர்களுடைய கோபத்திற்குள்ளாக நேரிடும். தவிர என் மாமியின் மன தைப் புண்படச் செய்தால் என்னை வீண்பாபத்திற்கு ஏது வாக்கும். ஆகையால் தயவுசெய்து என்னை மன்னியுங்கள் என்று சொல்லி மறுத்தாள்.

மறுபடியும் குப்பிச்சிக்கி பின்னுமல் போசமனம்வரவில்லை. குணமணியைத் தழுவி என் கண்ணே! ஒன்னைப் பாத்தா எனக்கு ரொம்ப அங்கலாப்பா இருக்கு, என்னத்தை ஆயிரம் இருந்தாலும் கூட இப்படி அனாதையாட்டமா யிருப்பாளா? பகவான் கொஞ்சம் கண் திறந்தா ஒரு நிமிஷத்திலே உன் கஷ்டமெல்லாம் நிவர்த்தியாயிடும். இன்னிக்கு வெய்யரமாமியார் நாளைக்கு உள்ளங்கையிலே வெச்சிண்டு தாங்கப்போறு பாரு, நான் என்னமோ சொல்றேன்னு நினைக்காதே என்று சொல்லி சமாதானஞ் செய்தாள். இது வொன்றும் குணமணியின் காதில் ஏறவில்லை. தாங்க வொண்ணா துக்கம்தான் மேலிட்டது. கம்மிய குரலுடன் நான் தாயற்ற பெண் என்பதற்கும், அனாதை என்பதற்கும், துரதிருஷ்டி என்பதற்கும், கொஞ்சமும் சந்தேகமில்லை. உலகில் படைத்து, ரக்ஷித்து, சம்கரித்து முத்தொழிலும் புரியும் ஆதி பரம்பொருளும், அருட்பரஞ்சோதியுமான அப்பிரபுவே என் பிதா. பரம பக்தர்கள் மேல் பரிபூரண திவ்விய கருணாகடாக்ஷம் பொருந்திய ஜகத் அன்னையாம் ருக்மணியே என் மாதா. தீனர் சகாயனும் ஜகத் பிரபுமான என் அப்பனே என்னை இவ்விதம் துன்பங்களுக்கு ஆளாக்குங்கால் என்னைவிட அபாக்கியவதிகள் வேறு யாரும் உண்டோ? இல்லை. அப் பரமனுக்கு நான் வேண்டாதவளானேன். பாக்கியமற்றேனென்று நெஞ்சம்தாளா சஞ்சலத்துடன் மெய்மறந்து அருகிலிருந்த ஜன்னலில் சாய்ந்தாள். இதைகண்டு மனம் பொறாத யதார்த்த குப்பிச்சி, இந்த பெண்ணோடே பரிதாபத்தை என்னாலே பார்க்க முடியல்லையே: பரமார்த்தத்துக்குப்பழுதுவராதுன்னு சொல்லுவாளே, பகவான்தான் காப்பாற்றணும் என்று சொல்லிக்கொண்டே சற்றுக் கண்ணீர் விட்டவளாய் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள். கோமளாங்கியும் ஏதோ கொஞ்சம் அலுவலாய் சமயலறைக்குட் புகுந்தாள். ஸுலோசனா அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே குணமணியின் அருகில் வந்து அவள் பிரக்ஞையற்று கிடப்பதுகண்டு அவளது தலைச்சிகையை பக்கத்திலுள்ள ஜன்னல் கம்பிகளில் கட்டிவிட்டு, இரு கைகளையும் சேர்த்து ஓர் கயிற்றால் கட்டிய பிறகு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

குணமணி சற்று மூர்ச்சை தெளிந்து கண்களை விழித்துப் பார்க்க, தன் கைகள் கட்டுண்டிருப்பதையும், தலை ஜன்னலோடு சேர்த்துக் கட்டியிருப்பதையும் அப்போதுதான் அவள் உணர்ந்தாள். எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு எழ முயன்றாள், ஆனால் முடியவில்லை. பின் வேறு வழியின்றி ஹே பக்த வத்ஸலா! பரம தயாளா! பார்வதி சோதரா! பக்தர்க்கிரங்கும் பராபரா! உத்தமி எசோதையால் உரலில் கட்டுண்ட நீ உன் பாலகியையும் இச் ஜன்னலில் கட்டுண்டசெய்தனையோ? தூயசக்குபாயிக்காக தூணில் கட்டுண்டனையே? அதற்காக இப்பாலகியை இந்த ஜன்னல் அழியில் கட்டிவிட்டனையோ? இது நின் திருவிளையாடலோ! இதுவும் உனக்கு வேடிக்கையோ! இதுவரையில் நான்பட்ட துன்பங்கள் எல்லாம் போதாதோ? இன்னும் என்ன சோதனை செய்ய காத்திருக்கிறாய்? என் அபராதத்தை மன்னிக்கலாகாதோ? உனது நெஞ்சு என்ன கல்லோ? அல்லது இப்பாலகியின்பொருட்டு அப்படி மாறியதோ? கரும்புபோன்ற உன்மனம் இரும்பாகக் காரணம் என்ன? அளவது மீறிடில் அமிர்தமும் விஷம் என்பதுபோல் இன்னும் என்னை சோதிப்பது அழகோ? என் துன்பங்களை நீ அறிந்திலையோ? இன்னமும் என்னால் பொறுக்க இயலாது. இவ்வபலையை ஏன் இவ்வளவு துன்பங்களுக் கிடையே இப்பூவுலகில் படைத்தாய் இனி உயிருடன் இருப்பது இயலாதகாரியம். ஒரு நாளும் முடியாது; முடியாது. என்று சொல்லிக் கண்ணீர்விட்டுக் கதரிய சப்தம் ஸ—ப்ரகாசனை எட்ட, அவன் மெதுவாய்க் குணமணியின் அருகில் வந்து, கைக்கட்டுகளையும், கூந்தல் முடிந்திருப்பதையும் அவிழ்த்துவிட்டான். பின் அவளைப் பார்த்து, "என் கண்ணே! நீ கவலையுறாதே. உனக்கு இனி ஒரு குறையும் வராது. நம்மைக் கடவுள் கைவிடமாட்டார். ஸதா அவரையே பிரார்த்தி" என்று சொல்லி அங்க வஸ்திரத்தால் அவள் கண்ணீரை துடைத்து சமாதானம் செய்தான். அவ்வமயம் கோமளாங்கியின் குரல் கேட்க, ஸ—ப்ரகாசன் நடுங்கி-ஒடுங்கி ஓசை ஓட்டமாய் ஓடிப்போய்விட்டான்.

கோலி சோடாவும்; ஸ—ப்ரகாசனின் சீர் சாமான்களை பாபுவிற்கு எழுதிய லிஸ்ட்படியே வெள்ளி, பித்தளை பாத்திரங்களை ஒன்றுக்கு மூன்றாக எழுதியும், சோபா, மெத்தை, முதலிய

சாமான்களில் விலையை இரட்டிச்சு எழுதியும், தன் சகாக்களிடம் படித்துக் காண்பித்து இவைகள் எல்லாம் ஸுப்ரகாசனின் இளையராமனுர் கொண்டுவந்த சீராக்கும் என்றான். அடேய் பானு, ஐயர்வாள் எழுதியது எப்படி? என்று கேட்டு நிறுத்தினுன். பானுவும் "நீ எழுதியதில் தப்புகூட வருமா? ரொம்ப நன்னுயிருக்கு" என்று ஆமோதித்தான். "டேய்! நம்ம லிஸ்டு முடிஞ்சுங்கூட இவர் நிஷ்டை இன்னும் ஓஞ்சபாடில்லே பாத்தியா? இவர் பலே பேர்வழிடா! இவர் மூஞ்சியை பாரு! இவர்முகத்திலே முழிச்சாக்கூட போட்டுக்க புகையிலேகூடப்படாதுடா!" என்று சொல்லி காரி உமிழ்ந்தான். ஆனுல்! நித்யர் உலகஸ்மரணையற்று ஏகாந்த தியானத்தில் இருந்ததால் இவைகள் ஒன்றும் அவருடைய காதில் படவில்லை.

பையன்கள் எழுதிய லிஸ்டு காகிதத்தைக் கீழே வைத்தனர். அக்காகிதம் ஜிவ்வென்று பறந்துபோய்விட்டது. பின் பையன்கள் எல்லாம் மேல் மாடிக்குச்சென்று இன்னும் ஏதோ வம்பு பேசலாயினர்.

## அத்தியாயம் 10

### கண்ணன் கனவும்-உண்மை உணர்வும்

மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ஜெண்பகம், ஸம்பங்கி, முதலான மலர்கள் நிறைந்த புஷ்பங்கள் அடர்ந்து இருந்த யமுனை நதி தீரத்தில் பிருந்தாவனத்திலுள்ளதோர் ச்ருங்கார மண்டபத்தில்; பக்கலில் மயில்களாட, குயில்கள் பாட, கிளிகள் கொஞ்சி விளையாட, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சயனித்திருந்த ஆனந்தத்தில் சற்றேநித்திரைகொண்டு கண் அயர்ந்தார். அங்கு அச்சமயம் அவர் கால்புறம் உட்கார்ந்துகொண்டு, "ஹே ஜெகத் பிரபோ! ஏழைமேல் தயவில்லையா? என்னை ஏன் சோதிக்கின்றாய்? என் மீது உனக்கு கனவிலும் இறக்கமில்லையா? நீ என்னை மறந்திருந்தாலும் நான் உன்னை விடேன்; விடேன்.. என்று இருகாலையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஒரு பெண் விம்மி விம்மி அழுவதுபோல் கனவுகண்டு எழுந்து அங்கும் இங்கும் பார்த்து ஒருவரையும் காணுமையால் தன் காதலி ருக்மணி தேவிக்குத்தான் ஏதேனும் விபத்து நேரிட்டு இருக்கிறதோ என்ற ஐயம்கொண்டவராய் ருக்மணியின் அந்தப்புறத்

திற்குச்செல்ல மயில்,குயில்,மான், கிளிமுதலியதும் கிருஷ்ணனை வழிமறித்து ஆடி, பாடி விளையாட, அவை ஒன்றையும்கவனியாத வராய் அதி விரைவுடன் ருக்மணியின் அந்தபுறத்திற்கு வர, ருக்மணி தேவியோ அஸ்மானகிரி மெத்தையில் சயனித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். ஆனால்! ஏதோ தேவி சொல்லிக் கொண்டிருந்தாள். அதை என்னஎன்று கேட்பதின்பொருட்டு பக்கலில் நின்றுகொண்டிருந்தார். தேவி, நாதா! நாதா! புறப்படுங்கள் புறப்படுங்கள் சீக்கிரம் புறப்படுங்கள்; சாரதி! ரதம் கொண்டுவா தாமதம் செய்யாதே; சீக்கிரம் சீக்கிரம் என்று அருகிலிருந்த தலகாணியை கீழே தள்ளினாள். நாதா இன்னும் ஏன் தாமதம்! சாரதியை ரதம் கொண்டுவரச் சொல்லிவிட்டேன் அவனும் கொண்டுவந்துவிடுவான். சீக்கிரம் செல்லவேண்டும். இனி தாமதம் செய்தால் என்ன விபரீதம் சம்பவிக்குமோ! என்று உரத்த குரலுடன் சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் நித்திரையில் இருந்தாள். இதைக்கேட்ட கிருஷ்ண பரமாத்மா ருக்மணி தேவியை எழுப்ப, தன் தூக்கத்திலிருந்து எழுந்த தேவி, வரவேண்டும் வரவேண்டும் நீங்கள் வந்து ரொம்ப நாழியாகிவிட்டதோ என வினவ; கிருஷ்ணன் புன்னகை புரிந்து ருக்மணி! நான் வந்து நாலு நாழிகை ஆகிறது. என்னை வாவென்றுகூட அழைக்காமல் சாவகாசமாய் நித்திரை செய்கிறாயே. இவ்வளவுதானே என் மேலுள்ள ஆசை.

ருக்மணி :- இல்லை நாதா, ஏதோ சற்று அயர்ந்து நித்திரை செய்துவிட்டேன். தயவுசெய்து மன்னியுங்கள் என்று சொல்லி நமஸ்கரித்தாள்.

கிருஷ்ணன் :- அது இருக்கட்டும் ருக்மணி! நீ என்னமோ என்னை எங்கேயோ போகவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாயே எங்கேபோகவேண்டும்?

ருக் :- என்ன நாதா பரிகசிக்கிறீர்கள். நான் இப்பொழுது தூக்கத்திலிருந்து எழுந்ததை பார்த்திருந்தும் என்னை அவ்வாறு கேட்கிறீர்களே?

கிரு :- அது உண்மைதான்! ஆனால் நீ படுத்திருந்தபடியேதான் சொன்னாய். அதைத்தான் கேட்கிறேன்.

ருக்மணி சற்று யோசிக்கவே, தேவிக்கு தான் கண்ட சொற்பனம் அரைகுறையாய் ஞாபகம் வந்தது. கிருஷ்ணனைப் பார்த்து நான் ஏதோ கனவுகண்டேன், அதனால் ஏதேனும் உளறியிருக்கலாம். தவருதலாக ஏதேனும் சொல்லியிருந்தால் மன்னிக்கவும் என்ருள். கிருஷ்ணன், இனி இதுபோகட்டும் உன் தலகாணி, ரதம் கொண்டுவரப்போயிருக்கிறதே ஞாபகம் இருக்கிறதா?

ருக் :- என்ன நாதா பரிகாசம்!

கிரு :- (ஹா:..ஹா . ஹா என்று சிரித்து) இல்லை ருக்மணி எங்கேயோ அவசரமாகப்போகவேண்டுமென்றும், அதி சீக்கிரத்தில் ரதம் கொண்டுவரும்படியும் உன் தலைகாணியிடம் உத்தரவிட்டாயே அதைத்தான் சொன்னேன்.

ருக் :- நாதா! நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே.

கிரு:- அது இருக்கட்டும், ஒரே ஒரு பாட்டுப்பாடு பார்ப்போம் என்ருர்.

ருக் :- இப்பொழுது என்னல் பாடமுடியாது.

கிருஷ்ணனும் கோபங் கொண்டவரைப்போல் முகத்தைத் திருப்பிக்கொள்ள, ருக்மணியும் புன்சிரிப்புடனும் இனிமையான மனத்துடனும் ஒரு பாட்டுப் பாடுகிருள். கிருஷ்ணன் பரமானந்தங்கொண்டு என் காதற்கினிய கண்மணியே! உன் முகாரவிந்தப் பிரகாசமானது என் உள்ளத்தையே கொள்ளைகொண்டுவிட்டது அமுர்தம்போன்ற உன் கீதமானது என் அகத்தை கவருகிறது குயிலினும் இனிய உன் குரலானது என் மனதைப் பிரமிக்கச் செய்கிறது. கண்ணே உனக்கு என்ன வரம் வேண்டும்? நீ கேட்பதை கொடுக்க மனதாயினேன் என்று அருகிலிருந்த புஷ்பசெண்டை எடுத்துதேவியின் கண்ணில் ஒற்றினர். ருக்மணியும் மனம் மகிழ்ந்து, பிராணேசா சர்வலோக சரண்யனை தங்களைப்பதியாக அடைந்த என் பாக்கியமே பாக்கியம்; ஜகமே புகழ்ந்துலக்கும் தங்கள்மனைவியான எனக்கு உங்கள் அன்பைத் தவிற, வேறு என்ன வேண்டும். ஆனல் ஒன்று!

கிரு :- அது என்ன?

"ருக்மணி, நாம் இருவரும்பகடையாடி ரொம்பநாள் ஆகிறது, ஒரு ஆட்டம் பகடையாடவேண்டும்" என வேண்ட, ஸ்ரீபரமாத்மாவும் சம்மதிக்க, இருவரும் பரம சந்தோஷத்துடன் சயன கிருக மஞ்சத்தில் அமர்ந்து வேடிக்கையாகப் பேசிக் கொண்டு பகடையாடினர்.

எப்பொழுது பகடையாடினாலும் ருக்மணிதான் தோல்வியடைவாள். இன்றைக்கு முதல் ஆட்டத்திலேயே கிருஷ்ண பரமாத்மா தோல்வியுற்றார். அதுவும் பரம பக்தியில் சிறந்த குணமணி மிக்க வருந்திருப்பதை கவனியாது, இவர்கள்மட்டும் மனமகிழ்ந்து கொஞ்சி குலாவிக்கொண்டாடுவது தர்மமாகுமா? பக்தவத்ஸலன் என பெயர்படைத்த எம்பெருமான் அடியோர்களை ஆதரியாது, மனைவியின் மோகத்தினுள் மூழ்கி பாராமுகமாய் இருந்தால் குணமணியின் பரிதாபம் வீண் போகுமா? அதுவே அவர் தோல்விக்குக் காரணமாகும். ஆனால் கிருஷ்ணபரமாத்மாவுக்கு இன்னமும் குணமணியின் ஞாபகம் வரவில்லை. ஒருநாளும் இல்லாத் திருநாளாக இன்றைக்கு தான் தோல்வியடைந்த வருத்தமே மேலிட்டிருந்தது சற்றேறமுகவாட்டம் அடைந்தார்.

ருக்மணி சிறித்த முகத்துடன் நாதா! யார் பக்கம் ஜயம் பார்த்தீர்களா? இதுவரையிலும் என்னை ஏமாற்றினீர்களே! இன்றைக்குமட்டும் உங்கள்பாச்சா பலிக்கவில்லை பார்த்தீர்களா? என்று கைதட்டி சிறித்தாள். மறுபடியும் தன் பதி விசனத்துடன் இருப்பதைப் பார்த்து, "என்ன நாதா நீங்கள் என்ன பாப்பாவா? சிறு குழந்தைகளைப்போல் வருந்துகிறீர்களே? பேஷ்! பேஷ்! இதுதான் ஜகத் பிதா என்பதற்கு அடையாளமோ?" என்று பரிகாசம் செய்தாள். கண்ணபிரான் இதை ஒன்றையும் கவனியாதவராய் திண்டில் சாய்ந்துகொண்டு ஆழ்ந்த யோசனையிலிருந்தார். அதுசமயம் ஒரு கடிதம் பரமாத்மாவின் பாதத்தில் சரணமடைந்தது. அதைக்கண்ணுற்ற கண்ணன் அக்கடிதத்தை எடுத்துப் பார்த்து குணமணியின் சாந்தி கல்யாணத்தின் பொருட்டு நித்தியர் ஸ்ரீதனம் ஒன்றும் கொடுக்காததற்காக எழுதிய நிந்தனை லிகிதம் என அறிந்த

வுடன், குணமணியின் பரிதாப நிலைமையையும், அவளுக்கு தம்மீது உள்ள அளவற்ற நம்பிக்கையையும், அவள் படும் துயரத்தையும் நினைந்து நினைந்து மனம் பாகாய் உருக, தன் அன்பு முழுவதையும் அவள்பால் ஈடுபடுத்தி, கருணையெனும் கடலானது அகண்டமாய் பெருக, தன்னையும் மறந்து சற்றுநேரம் மௌனமாயிருந்தார். இதை கவனித்த ருக்மணி பதியின் அருகில் வந்து அமிர்தபிந்து சிதறியதுபோல், நாதா! என்ன விசேஷம்? ரொம்பவும் ஆனந்தங்கொண்டார்போல் தோன்றுகிறதே? என அதி ஆவலாய் கேட்க, எம்பிரமான் மந்தகாசத்தோடு கண்ணே ருக்மணி! நான் பகடையில் தோல்வியடைந்த காரணம் இதுவே. ருக்மணி, நாதா விஷயத்தை விளம்பாமல் வீணாக காலத்தை கடத்துகிறீர்களே? தயவுசெய்து சீக்கிரம் சொல்லுங்கள். கிருஷ்ணன் குணமணியின் பக்தி வைராக்கியத்தை என் வாயால் பேசவும் தகுமோ! அவளுக்கு என்மீதுள்ள உண்மை விஸ்வாசத்தை நினைக்க நினைக்க என் மனம் பரவசமாகிறது.

ருக் :- குணமணியா! யார்?

கிருஷ் :- ஆம்...! நாமிருவரும் ஒருநாள் திருவனந்தபுரத்தில் நித்தியர் வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருக்குங்கால் அங்கு புஷ்பம் கொய்ய ஓர் இளம்பிராயமுடைய பெண் வர, வேடிக்கைக்காக ஓர் சூரியகாந்திமலராய் மாறி, அதைப்பறிக்கவந்த தருணத்தில் நாகமாய் மாறி கடித்து இறந்தபின் அவளை மீண்டும் உயிர் பெறச் செய்தோமே அந்த குணமணிதான்.

ருக் :- ஓ ஹோ! ஞாபகம் வந்து விட்டது. இப்போது அக் குணமணிக்கு என்ன நேரிட்டுவிட்டது.

கிரு :- சொல்கிறேன் கவனமாய்க்கேள். அக்குணமணி தக்க வயது அடைந்துவிட்டாள். அவள் தாய் தந்தையரோ பரம ஏழைகள். ஆனால் ஒரு காலத்தில் பெரிய செல்வர்களாயிருந்தனர். தற்போது தெருதிரமே வாஸம். இந்நிலையில் பெண்ணிற்கு கலியாணம் செய்யவேண்டியிருந்தது. தற்செயலாய் இவர்களின் மேல் திருப்தியுற்ற, நாகர்

கோவில் தாசில்பிரபு என்ற ஒரு சீமான் தன் புத்திரன் ஸுப்ரகாசன் என்ற இளைய பையனுக்கு கலியாணம் செய்துகொண்டார். ஆனால் அவர் மனைவி கோமளாங்கி யோ, பண ஆசையுடையவள். ஆகையால் கலியாணத்தின் போதே குண மணி, அவள் தாய் ஸத்யா, தந்தை நித்யர், தம்பி ஞானமணி அனைவரையும் மிகுந்த கொடுமைக்குள் ளாக்கினாள். தற்போது சாந்திமுஹூர்த்தம் நடக்கிறது அதற்கு ஸத்யாவும், ஞானமணியும் செல்லவில்லை. தன் னிடம் பொருள் இல்லாக் கொடுமையால் தன் பெண் ணிற்கு சீர்செய்யமுடியவில்லையே என்றஏக்கத்துடன் தன் வீட்டிலிருந்துநம்மை நினைந்துநினைந்துவருந்துகிறாள். தவிர புக்காத்துக்குச் சென்ற குணமணியையோ, அவள் மாமி கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பட்டினியாய்ப் போட்டுக் கொல்கிறாள். அவள் ஒரு பக்கம் என்னையும், உன்னையும் நினைந்து வருந்துகிறாள். என் பக்தனான நித்தி யரோ, பூலோக காரியங்கள் எதையும் சிந்தனை செய்யாமல் வாயிற் திண்ணையிலுட்கார்ந்துகொண்டு என்னையேநினைந்து நினைந்து வருந்திக்கொண்டிருக்கிறார்.

ருக் :- அப்பேர்ப்பட்ட பக்தர்களை ஏன் நாதா இவ்வளவு கஷ் டங்களுக்கு உள்ளாக்கினீர்கள் ?

கிரு :- அடீ! பைத்தியமே; எல்லாவற்றிற்கும் வேளை வரவேண் டாமா? அந்த நேரம் இப்பொழுது வந்துவிட்டது. ஆகை யால் இனி தாமதம் செய்யலாகாது. இதோ பார்த்தனையா! குணமணியின் தாய் தந்தையர்கள் சீரொன்றும் செய்ய வில்லை என்று, அக்கல்யாணத்திற்கு வந்த சில துர்மிஷ்டர் கள் நித்யரை கேலிசெய்யும்பொருட்டு இந்த விகிதத்தை தயாரித்திருக்கின்றனர்.

ருக் :- அப்படியானால் அவசியம் குணமணியைக் காப்பாற்ற வேண்டும் அதற்கென்ன செய்யப்போகிறீர்கள் ?

கிரு :- என்ன செய்வதா? குணமணியின் மாமனார் முதலிலேயே தன் பத்னி கோமளாங்கியிடம் குணமணிக்கு ஒரு சிற் றப்பா இருக்கிறாரென்றும், அவர் மைசூர்மந்திரியென்றும்,

சாந்தி கல்யாணத்தின்போது சீர்கொண்டு வருவாரென்றும், சொல்லியிருக்கிறார். ஆகையால் நாமும் நம் சுயரூபத்துடன் செல்லாமல், அவர் சொல்லியதுபோல் சிற்றப்பா, சிற்றன்னையாகவே சென்று அவர்களைக் காப்பாற்றுவோம்.

ருக் :- அதுவே சரியான யோசனை! அப்படியே செய்வோம் என்று சொல்லி, பூர்ணிமா என்ற ஒரு வேலைக்காரியிடம், ரதசாரதியான சாத்தகியை அழைத்துவரும்படி கட்டளையிட்டாள். அவளும் ஒரு நொடிப்பொழுதில் சென்று ஸாரதியிடம் தெரிவிக்க, ஸாரதியும் அதி விரைவுடன் ஓடோடி வந்து கண்ணபிரானது திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து, கை கட்டி வாய்புதைந்து, "பிரபோ! தங்கள் அன்பிற்குரிய அடியேன்மேல் தயை புரிய, காலாலிட்ட வேலையைத் தலையால் செய்ய சித்தமாயிருக்கிறேன்." என்று பணிந்து நின்றான். அவனைப் பார்த்து இரதத்தை சீக்கிரம்கொண்டுவரும்படிச் சொல்ல, அவர்கட்டளையைச் சிரமேற்கொண்டு, குதிரைலாயத்துட் புகுந்து, வாயுவேக மனோவேகமாய் பறந்துசெல்லக்கூடிய நான்கு அஸ்வங்களை பொருக்கி எடுத்து சேணங்களைபோட்டு, வஜ்ஜிரகடிவாளம் மாணிக்க உச்சிக்கொண்டை நெத்தி பட்டை முதலியவைகளை அணிவித்து, சித்திரப் படங்கள், தங்க பதுமைகள், வஜ்ஜிர, வைடூரிய கோமேதக, மரகத, மாணிக்கங்கள் இழைத்த ரத்னஹாரம், புஷ்பமாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்ற இரதத்தில் பூட்டிக்கொண்டு வந்து நிறுத்தினான். தங்க சிகரத்தில் ஜெகஜ்ஜோதியாய் பார்ப்போர் உள்ளத்தை கவருமாறு ஜொலிக்கும் கொடியுடன் இருந்த ரதத்தைக் கண்ணுற்ற கிருஷ்ணபரமாத்மா தன் பத்தினி ருக்மணி தேவியுடன் ரதத்தில் அமர்ந்தார். இரதமும் வாயுவேகமாய் பறந்தது.

தோட்டங்கள், காடுகள், மேடுகள், குன்றுகள், மலைகள், வனாந்திரங்களை எல்லாம்தாண்டி செல்லுங்கால், அங்குள்ளமுனிவர்களும், தவச் சிரேஷ்டர்களும் பரமாத்மா செல்வதை பளீர்

ப்ளீர் என்ற மின்னொளிபோன்ற ஜோதியின் மூலம் அறிந்து ஆனந்தமெய்தினர்.

நிற்க, திருவனந்த சயனத்தில் உண்ணுவிரதத்துடனிருக்கும் ஸத்யாவுக்கு ஆதியில் தாங்கள் சந்ததியின்றி செய்த தான தருமங்களும், நூற்ற நோன்புகளும், செய்த தவங்களும், பிறகு பரமனருளால் குழந்தை பிறந்ததும், எவ்வளவோ அருமையாக நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமாய் வளர்த்ததையும்; அவள் தண்டையும், சிலம்புங் குலுங்கக் குலுங்க ஓடிவந்து தாவி மடியில் உட்கார்ந்திருந்ததும்; தான் அவளைக் கொஞ்சிக் கொஞ்சி எடுத்துக் கூத்தாடிக்கொண்டிருந்ததும்; அவளுக்கு அநேக வேடிக்கைகள் காட்டித் தான் பாலன்னம் ஊட்டியதும்; ஊரிலுள்ளவர்களெல்லாம் தங்கள் குழந்தைகளைக்கூட கவனியாது, குணு! குணு! என்று கொஞ்சிக் குலாவியதும்; அவள் சிறுவயதிலிருந்தே கண்ணபிரான் பக்தியில் ஈடுபட்டிருந்ததும்; சில சமயங்களில் எம்பெருமான் சந்நிதியில் நின்று ஆடி பாடியதும்; புஷ்பமெடுத்து அர்ச்சித்ததும்; தற்சமயம் அனைவரும் நிந்திக்கவும்; தூஷிக்கவும்; அனாதையாய் பரதவிப்பதும்; அவள் மாமியின் எண்ணத்திறனற்ற கொடுமைகளும்; ஒன்றன்பின் ஒன்றாய் ஞாபகம் வரவே, அழுதழுது தொண்டையும் கட்டிவிட்டது. கண்ணோ இருளடைந்தது. நாவோ உலர்ந்துவிட்டது துக்கமோ மேன்மேலும் எழும்பிக்கொண்டே இருந்தது. நெருப்பில் விழுந்த புழுப்போல் துடித்து கிருஷ்ண விக்ரஹத்தின் கால்களைக் கட்டிக்கொண்டு, என்னப்பனே! நீ என்னை இவ்விதம் வருத்துவதழகாகுமோ! என் குழந்தை உன் குழந்தையல்லவா? அவள் அரைநாழிகைப் பசி பொருக்காதவளாயிற்றே! இந்த இரண்டு நாளாய்ச் சரியாய் ஆகாரம் கிடைத்ததுண்டனளோ? என்னமோ தெரியவில்லையே? அவள் மாமிதான் அவளுக்கு ஆகாரம் கொடுத்தாளோ என்னமோ? அவள் மிகக் கொடூர சுபாவமுள்ளவள் அல்லவா? என்னருமைச்செல்வம் அவளிடம் என்ன பாடுபடுகின்றனளோ? இதுவும் உனக்குசம்மதமா? எவ்வளவோ தவம் செய்து உன்னருளால் பெற்ற என்னரும் குணமணியின் சாந்தி கல்யாணத்தை நான் இருந்தும் காணமுடியாமல் இருக்கிறேனே! யாருக்கென்ன தீங்கு புரிந்தேன்? அதனால்

தான் இப்போது இவ்வாறு வருந்த நேர்ந்ததோ? ஆனால் நான் இவ்வூண் எடுத்தபின் அறிந்து செய்த பாதகம் யாதொன்றும் இல்லை. முன்னம் செய்த வினைப்பயனோ? அது எதுவானாலும் நின் கடைக்கண்ணால் பார்த்து, என் துயரை தீர்க்காதவரையில் நான் உன் தஞ்சமெனும் அடிமை என்பது உண்மையானால்; நான் உன் உண்மை பக்திவதியானால்; நான் கற்புடையவள் என்பதுண்மையானால்; நான் உத்தமி வயிற்றிலுதித்த புத்திரி என்பதும் உண்மையானால் நீ எண்ணிய எண்ணமொன்றும் ஈடேறாமல் போகக்கடவது என்று தன் துயரம் தாங்காது பரமனையே சாடமிட்டு மதிமயங்கிக் கீழே விழுந்தாள்.

உத்தமியின் சாபம் வீண்போகுமா? கற்புக்கரசியான ஸ்த்ரீ சபித்ததுதான் தாமதம், வாயுவேகமாய்ப் பறந்து வந்த கிருஷ்ண பரமாத்மாவின் குதிரைகள் திடுக்கென நிற்க நேரிட்டது. சாரதி மிகப்பயந்து அதட்டி, உருட்டி, மிரட்டி ஓட்டிப் பார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை. ஒருவேளை இரத சக்கரங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டிருக்குமோ என்று சந்தேகங் கொண்டு அவைகளைச் சோதனை செய்ய, அவைகள் ஒருவித பழுதுமின்றி செவ்வனே இருந்தன. பரமாத்மாவைப் பார்த்து நமஸ்கரித்து, "பிரபோ! இதுவரையில் வாயுவேகமாய்ப் பறந்து வந்த குதிரைகள், தற்போது திடமொன்று நின்றுவிட்டன. ஒரு அடிகூட நகரவில்லை. இனி ஒரு அடியும் நடவாதுபோலக் காணப்படுகிறது என்னை மன்னிக்கவேண்டுமென்று" சொல்ல, கிருஷ்ணபகவான் இரதத்தை விட்டிறங்கி, குதிரைகளைத் தட்டிக்கொடுத்து, சாரதியைப் பார்த்து இக்குதிரைகளை ஓட்ட நீ அசக்தனாயிருக்கிறாய் போலும், இக்குதிரைகள் உன்னை ஏமாற்றுகின்றனபோலும், இதோபார் நான் ஒருநிமிஷத்தில்இரதத்தைச் செலுத்துகிறேன்! என்று சொல்லி குதிரைகளின் கடிவாளக் கயிற்றைத் தன் கையில் வாங்கி பார்த்தசாரதி என புகழ் படைத்த எம்பெருமான் சாட்டையைக் கையில்கொண்டு ரதத்திலமர்ந்து ஒரு சுழற்று சுழற்றி குதிரைகளை ஓட்டினார். ஆனால் இரதம் நின்ற இடம்விட்டு தப்படியும் அசையவில்லை. மீண்டும் அவர் பன்முறை சாட்டையின் சப்தம் காட்டியும், "செவிடன் காதில் சங்கூதியதுபோல்" அக்குதிரைகளிடம் பயன்படாது கற்சிலைபோல் நின்றன. குதிரைகள்தான் என்செய்யும்? அப்

பதிவிரதா சிரோன்மணியின் சாபம் பழுதுறுமா? பக்தரின் பரிதாபங் கண்டுகொள்ள பரமனை ஏன் பிடிக்காது? இவர் அட்டகாசம் ஒன்றும் அதனிடம் பலிக்கவில்லை. கண்ணபிரான் ஸாரத்தியம் செய்யும்பொருட்டு இரதத்தில் அமர்ந்தால், அவர் மனமறிந்து நடக்கும் அக்குதிரைகள் அன்று ஸத்யாவின் சாபத்துள்ளீடுபட்டு, அவர்செய்த எந்த உபாயமும் பயன்படாது, அசைவற்று நின்றுகொண்டிருந்தன. பின் கொஞ்ச நேரத்தில் இவர் செய்யும் ஹிம்சை பொறுக்கமாட்டாமல் ஓட மனங் கொண்டு ஓட எத்தனித்தன. ஆனால் எதிரில் கொழுந்துவிட்டெரியும் தீ காண்பதுபோலிருந்ததால், அவைகள் அதை தாண்டிச் செல்லமாட்டாதவைகளாய் பின் திரும்பி ஓடத் தொடங்கின. கண்ணபிரான் எவ்வளவோ நிறுத்திப் பார்த்தும், அவரைமீறிக்கொண்டு சுமார் ஒருமைல்தூரம் பின்னால்ஓடி ஸ்தம்பித்துப்போய் நின்றன. கருணாநிதியின் மனதில் ஒன்றும் புலப்படாததால் எந்தவித யோசனையுமின்றி சற்றே சஞ்சலமுடையவர்போல் காணப்பட்டார்.

இதைக் கண்ணுற்ற தேவியும், நாதா! தங்களைப்பார்த்தால் சஞ்சலப்படுவது போல் காண்கிறதே. இந்த அற்பவிஷயத்திற்காக தாங்களே வருத்தப்படுவது நியாயமாகுமா? தங்கள் கட்டளைக்குட்படா ஜீவஜந்துக்களும் இவ்வுலகில் உண்டோ? தங்களை மிஞ்சிய ஜீவன்களும் ஜெகத்திலுளதோ? என்றுரைக்க;

கிரு :- ருக்மணீ! நான் எப்பொழுதும், எத்தனை தடவைகள் சாரத்யம் செய்தாலும் என் மனதிற்கு முரண்பாடின்றி நடக்கும் இக்குதிரைகள், நான் ஓடு என்பதற்குள் பறந்து செல்வதை விடுத்து, இன்று இவைகள் இப்படித் தயங்கக் காரணம் என்ன? என் மகிமைக்கே ஏதேனும் பங்கம் நேருமோ? இவைகள் பின் வாங்குகின்றனவே தவிர முன்னே செல்லவில்லையே! இதுவும் என்னகாலமோ என்று சொன்னார்.

இதைச் செவியுற்ற ருக்மணி தேவி! "பிராணபதே! இது என்ன மாய்கையின் தோற்றம்? தாங்கள் அறியாததொன்றும் உண்டோ? என்னைச் சோதிக்கிறீர்களா? யாவருக்கும்

காலத்தையும், அதன் பலத்தையும் அளிக்கும் ஸ்வபலோக நாதனாகிய தங்களுக்கும் காலமுண்டோ? இது என்ன வேடிக்கை! ஆனால் ஒரு சமயம் இது ஏதேனும் ஒரு பக்தி மிகுந்தவரின் சாபமாயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். என் உடம்பெல்லாம் எரிகிறதே! என்னால் தாளமுடிய வில்லையே. நாதா! குணமணியின் சாபத்தால் பகடையில் தோல்வியுற்றீர்களே அதுபோல் இதுவும் ஓர் காரணமாகயிருக் கலாம் என்று உரைக்க; கிருஷ்ண பரமாத்மாவின் சஞ்சலமும் அரை நொடிக்குள் தீர்ந்தது. தன் உண்மை பக்திவதியாகிய ஸத்யாவின் சாபமேதான் முயன்ற காரியங்களுக்கு முட்டுக் கட்டைகளாயிருக்கின்றன என்று எண்ணினார்.

ஸ்ரீ ச்யாமளரூபன் சரச உல்லாஸத்தோடு, சதியைப் பார்த்து, ருக்மணீ! நீயே என் உற்றமனைவி (கார்யே ஷு தாஸி கர்மே ஷு மந்திரி) என்ற ஆன்றோர் வாக்கின்படி உன் சொல்லால் உண்மை உணர்ந்தேன். நம் பக்த சிரோன்மணி யாகிய சத்யரூபி தன் அருமைப்புதல்வி சாந்தி கலியாணத் திற்கு, தான் போகாததாலும்; அவளைத் தந்தையுடன் தன் னந்தனிமையில் அனாதைபோல் அனுப்பியதாலும்; நான் அவ ளைக் கவனியாதிருந்தமையாலும், தன் பரிதாபம்தாளமாட்டாது எனக்குச் சாபமளித்திருக்கிறாள். அவள் மனதை நோகச் செய்த பாபத்தால் என் மனமும் சற்று சஞ்சலமடையும்படி நேரிட்டது.

ருக் :- ஆம்; பக்தரின் சாபம் நம்மைப்பற்றாதுவிடுமோ? அவள் மேல் குற்றம் இல்லை. நாம் அவளைக் கவனியாது பராமுக மாயிருப்பதற்குத் தக்க தண்டனை விதித்திருக்கிறாள். அவள்மேல் என்ன தப்பு? ஸரி; இனிமேல் ஆகவேண்டிய காரியத்தைப் பாருங்கள். அவளிட்ட சாபத்தை நீக்க உபாயம் தேடுங்கள். தாங்கள் என்ன செய்யப்போவதாக யோசனை?.........இன்னும் யோசனை என்னவந்திருக்கிறது சத்யரூபியின் கிருகத்திற்கேகி அவளுக்கு ஏராளமான பொருள்களும் ஸ்ருஷ்டித்து, அவளையும் நாகர்கோவில் வரும்படி சொல்லி வருகிறேன். பின்பு நாமும் அரை

நிமிஷத்திற்குள் சென்றுவிடலாம் என்று ருக்மணியிடம் விடைபெற்று அந்தர்த்யானமடைந்தார்.

அது சமயம் சத்யரூபியும் தான் பகவானுக் களித்திருக்கும் சாபத்தை நினைந்து மனம் பதறி, ஹே! ப்ரபோ அடங்காத்துயரால் அறிவிழந்தேன் அபராதியானேன். அறியாச் சிறியாள் செய்த அரும்பிழை பொறுப்பாய்; மன்னிப்பாய்; மன்னிப்பாய். உலகின்நாதனாகிய நீ அறியாததொன்றுண்டோ? நீ என்னை மறப்பினும் நான் உன்னை மறவேன்; மறவேன் என்று கதறி வேணுகானன் பாதங்களில் சரணாகதியாய் மூர்ச்சை அடைந்தாள். விக்ரகமும் உண்மைத் துவாரகாநாதனாக மாறி அந்தரங்க பக்தியின் பரிதாபத்தையும், அவள் துயர் தாளாது மூர்ச்சையாய் இருப்பதையும் நன்குணர்ந்த வாஸுதேவன் மிகவும் மனமிரங்கி, பரிபூர்ண அன்புடன் அனுக்ரஹம் செய்தார். என்னப்பன் அருளுக்கு அளவேது; ஆழமேது? கருணைக் கண்ணால் பார்த்ததுதான் தாமதம், இமைப்பொழுதில் குடிசை பங்களாவாகவும், அளவற்ற பொருள்கள் கும்பல் கும்பலாய் குவிந்தும், ஆடையாபரணங்களும், கட்டிலும், மெத்தையும், பங்களாவைச் சுற்றிலும் உன்னதப் பூங்காவனமும், மாடுகளும், கன்றுகளும், வேலையாட்களும், தாதிப்பெண்களும், பரிசாரகர்களும், ஸாரட்டும் நிறைந்து, பகவத் ஸன்னிதானம் சாக்ஷாத் வைகுண்டமே ப்ரத்யக்ஷமாய்வந்ததுபோலவும் கணப்பொழுதில் உண்டாய்விட்டன. கண்ணபிரான் அளவற்ற அன்புடன் மூர்ச்சையாய் இருக்கும் சத்யரூபியை நோக்கி, "ஸத்யா வருந்தாதே! காலம் வரும்வரையில் காத்திருக்கும்படி நேர்ந்தது. என்னைக் கோபிக்காதே; உன் பக்திக்கீடானவர் ஒருவரும் இல்லை. இதோ உனக்கு எதேஷ்டமான பொருளும், அரண்மனையும் கற்பித்திருக்கிறேன். தவிரவும், ருக்மணியும் நானும் குணமணியின் சிற்பிதாவும், சிற்றன்னையுமாக அவளுக்கு ஸ்ரீதனம் கொண்டு நாகர்கோவில் செல்லுகிறோம். நீயும் குழந்தை ஞானமணியுடன் வாயலில் நிற்கும் பீடனில் ஏறிக்கொண்டு நாகர்கோவில் வந்துசேர்வாய்; முகூர்த்த சமயம் வந்துவிட்டது; சீக்கிரம் எழுந்திரு; சீக்கிரம் எழுந்திரு எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

சத்யரூபிக்கு இது எல்லாம் சொற்பனம்போல் தோன்றியது. கண்ணை விழித்துக் கண்ணனைப் பார்த்து கனிந்த வசனங்களாக ஏ கருணைக் கடலே! நீ சொல்வதெல்லாம் உண்மையோ? அப்படியே நடக்குமா? இதுவும் கனவோ, அன்றி என் நினைவோ? நின் கருத்தும் என்மேல் நாடுமோ? நாடுமோ என்று விக்ரகத்தின் முகத்தைத் தழுவுங்கால், தன் கைகளில் நிறைய தங்க வளையல்களும் குலுங்குவதையும், தன் சரீரம் முற்றும் ஆபரணங்களால் துலங்குவதையும், கோடி நேத்ரக் குடிசை, பங்களாவானதும், யதேஷ்டமான திரவியங்கள் மூலை மூலையாய் குவிந்திருப்பதையும், கட்டிலும், மெத்தையும், சோபாக்களும் இருப்பதையும் எம்பெருமான் சந்நிதானமான வைகுண்டமோ என ஐயுறும் தோற்றத்திலும், கோபாலன் கோபிகைகளுடன் நர்த்தனம் செய்வதுபோலும், சுற்றிலும் படங்களாலும், மணிகளாலும், மாலைகளாலும், மனோரம்ய பூச்செடிகளாலும், க்ளோபர்களாலும், பட்டுமேற்கட்டுகளாலும், கண்ணபிரான்மீது எண்ணற்ற ஆபரணங்கள் நிறைந்தும், தேவேந்திர சபையைப்போல் ஜகஜ்ஜோதியாய் பிரகாசிப்பதையும் கண்ணுற்றசத்யாவின் ஆனந்தத்தை யாரால் அளவிட முடியும்?

ஞானமும், ப்ரக்ஞை தெளிந்து எழுந்து, தன் மீது ஆபரணங்களும், பட்டாடைகளும் இருப்பதைக் கண்டு சந்தோஷமுற்றான். அவன் பசி, தாகங்கள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கின. அதிக குதூகலத்தோடு, "அம்மா! அம்மா! உனக்கேதும்மா இவ்வளவு நகைகள்? என்னைப் பாரம்மா எத்தனை நகைகள் போட்டுக்கொண்டிருக்கேன்! நம்ப கண்ணனெ பாத்தியா அம்மா; இந்த பங்களாம்மா, ஏதம்மா?" என்று கேட்டான்.

ஸத்யா :- "ஞானம், எல்லாம் இந்தப் பாமன் செயலே" என மொழிந்தாள்.

ஞானம் :- நம்ப சாமியா, நமக்கு இதெல்லாம் தந்தார்?

சத்யா :- ஆமாண்டா என் கண்ணே!

"ஞானமணி :- இப்பதாம்மா, நீ ரொம்ப அழகாஇருக்கே. நம்ப கண்ணன், எல்லாரையும்விட ரொம்ப அழகா இருக்கார். நா அழகா இருக்கேனேன்னே அம்மா?" என்று கேட்க சத்யா தலையை அசைத்தாள்.

மீண்டும் ஞானம் "அம்மா! அம்மா!! நம்பாத்திலே மூன்னே சமயலுள்ளே இருந்து பாத்தேம்மா நக்ஷத்திரம், அம் புலிமான் எல்லாம் தெரிஞ்சுதேன்னே? இன்னமே நாம்ப அம்புலிமானே பார்க்கணும்ன்னு மாடிமேலே ஏறித்தான் பார்க் கணும் இல்லேம்மா? ஆனுக்கா, நம்ப அக்குணூண்டு ஆத் திலே இருந்தபோதும்மா, நம்பளெல்லாம் சாப்பிடறபோதும்மா மழைவந்துதுன்னு தலேலே கொட்டிண்டிருந்துதோல்லேயோ? இன்னமே நம்ம தலேலே மழை எப்படிக் கொட்டமுடியும்? என்று கொஞ்சிய மொழிகளில் பகர்ந்தான்.

சத்யா :- (சிரித்து, முத்தமிட்டுக்கொண்டாள்.)

ஞான :- அப்பண்ணு அம்மா! இந்தப்பங்களாவெல்லாம் நம்ம அம்மாச்சி கண்ணன்தானே கொடுத்தார்?

சத்யா :- ஆமாண்டாப்பா; அவர்தான் எல்லாங் கொடுத்தார்.

ஞான :- அப்பண்ணு அவரை நான் இன்னும் பூஜை பண்ணட் டுமா?

சத்யா :- உம்! பண்ணு.

கண்ணன் அருகிற் சென்று புஷ்பங்களை எடுத்து பூஜித்து, கன்னத்தில் அடித்துக்கொண்டான். ஞானம் திரும்பவும் கை கூப்பி, அம்மாச்சி கண்ணு! நீ எப்பவும் எங்காத்திலேதா இருக் கணும், வேறெங்கேயும் போகக்கூடாது தெரியுமா? இந்த கையெல்லாம் திருப்பிக் கேக்கப்படாது. இதெல்லாம் எங்க ளுக்கே எங்களுக்கு கொடுத்துட்டரயா? என்று குலாவிய மொழியில் கண்ணனைப் பிரார்த்தித்தான்.

மீண்டும் ஞானம், தனது தாயாரைத் திரும்பிப்பார்த்து;

"ஏ, அம்மா! என்னெ ஊருக்கு அழைச்சிண்டு போரேன்னு சொன்னெயே, இன்னும் ஏ அழைச்சிண்டு போகல்லே? ஏன்னெ ஏமாத்தினையா? இப்ப நீ அழைச்சிண்டு போறெயா? இல்லென்னு உன்னை விட்டுட்டு நா எங்காவது போறேன். உன்னெ ஏமாத்தாமே இருக்கேணு பார்! என்னெ ஊருக்கு அழைச்சிண்டு போகாமே, இந்த நகையெல்லாம் என்னத்துக்காக போட்டே? என்று சொல்லிக்கொண்டே நகைகளெல்லாம் கழற்றிக்கொண்டு, விம்மி விம்மி அழுதுகொண்டே, ஒரு மூலை யில்போய் உட்கார்ந்தான்.

அந்த திரவியக்குவியலைக்கண்டு "அம்மா! அம்மா!! இதைப் பாத்தியாம்மா? எவ்வளவு காசிருக்கு! இந்தக்காசையெடுத் துண்டாவது எங்க அக்காகிட்ட என்னை அழைச்சிண்டு போ யேம்மா. இன்னுமே இங்கே யிருக்கமாட்டே. நேக்கு வேஷ் டியும் வேண்டாம் கிஷ்டியும் வேண்டாம் என்று சொல்லித் தான் கட்டியிருந்த வேஷ்டியையும் அவிழ்த்தெறிந்து விட்டு மீண்டும் அழத் தொடங்கினான்.

"என் தங்கமே நீ அழவேண்டாம்! என் செல்வமே அழ வேண்டாம்" என்று சொல்லி அவனைத்தழுவி முத்தமிட்டு, அவிழ்த்த வேஷ்டியை மறுபடியும் கட்டிவிட்டு, கழற்றிய நகை களையும் போட்டு அலங்கரித்து, குழந்தையைச் சமாதானம் செய்துகொண்டே வாயிற்பக்கம் வருமளவில், குமரவேல் என்ற பெயர்கொண்ட பீட்டனடத்தும் ஒருவன் அவளருகில் வந்து கும்பிட்டு, கைகட்டி நின்றான். பின் "அம்மணீ! நாகர் கோவில் போக பீட்டன் தயாராயிருக்கிறது. அதுவோ அதிக தூரம் இருக்கிறது. சீக்கிரம் எழுங்கள்" என்று வேண்டிக் கொண்டான். சாகரத்தின் எல்லையைக் கண்டாலும் காணலாம் ஆனால் இவ்வார்த்தைகளைச் செவியுற்ற சத்யாவின் ஆனந்தத்தின் எல்லையைக்காண ஒருவராலும் அவ்வமயம் முடிந்திராதென்றே எண்ணுகிறோம். அவள் அங்கம் பூரித்து "அய்யனே நின் திருவுள்ளம் இவ்விதமோ? ஆதிமூலமே! பெண்ணின் மனத்தைத் தான் காணமுடியாதென்றால் உன் திருவுளச் சம்மதத்தை எவ ராலுமே கண்டுபிடிக்க முடியாதுபோல் இருக்கிறதே" என்று

சொல்லிச் சந்தோஷமுற்றவளாய், வீட்டையும் அதிலுள்ள சாமான்களையும் பத்திரமாய்ப்பார்த்துக்கொள்ளும்படி அங்குள்ள சிலரிடம் சொல்லிவிட்டு, பீட்டனில் அமர, பீட்டனும் அதி வேகமாய்ப்புறப்பட்டு நாகர்கோவிலை நோக்கிச்சிட்டாய்ப்பறந்து சென்றுகொண்டிருந்தது.

திருமாலும் தேவியும் மைசூர் மந்திரியும், மனைவியுமாய் வேடந்தரித்து, டில்லிமட்டமென்று பலராலும் போற்றப்படும் ஆயிரம் அன்னங்களுடனும், பல வண்டிகள் நிறைய குணமணிக்கு ஸ்ரீதன சாமான்களும், அனேக ஆள்களுடனும், அனேக வகைச் சிற்றுண்டிகளும், பல தாதிப் பெண்கள் சூழவும், பலவாத்தியங்கள் வாசிக்கவும், ஸாப்தகி அன்னம்போல் அசைந்து அசைந்து இரதம் செலுத்தவும், வந்துகொண்டிருந்தவர்களைப் பார்க்க மிக்க நேத்திரானந்தமாயிருந்தது. அன்னவரின் முன்னே ஏறிவந்துகொண்டிருந்த இரு குதிரை வீரர்கள் வருகிறார் கிருஷ்ண மந்திரி; வருகிறார் கிருஷ்ண மந்திரி! என தங்களிடம் உள்ள ஊதிகளால் ஊதிக்கொண்டே சென்றுகொண்டிருந்தனர்;

## அத்தியாயம் 11

### எல்லையில்லாகண்ணனருளும்-குணுவின்சந்தேகமும்

இஃது இவ்வாறிருக்க, தாசில்பிரபுவின் பங்களாவிலோ பாபுவையும்,கைலாசனுவையும் அலங்கரித்துக்கொண்டு நாழிகையாய் விட்டது; நாழிகையாய்விட்டது என்று ஆசீர்வாதத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருந்தனர். அச்சமயம் ஏதோ கொஞ்சதூரத்திலிருந்து வந்துகொண்டிருந்த பாண்டு வாத்ய சப்தத்தைக் கேட்ட கோபுவும், அவனுடைய சகாக்களும் டேய்! டேய்!! ஏதோ பெரிய அமக்களமாயிருக்குடோ! வாங்கோடா போய் பார்க்கலாம்; என்று சொல்லிக்கொண்டே ஓடி மொட்டைமாடியில் ஏறிப்பார்த்தனர். உடனே "வரிசை வரிசையாய் வண்டியைப்பாருடா" என்றும், "வண்டிக்கு நடுவே வரும் இரதத்தைப் பாருடா என்றும்; ரதத்திலே பறக்கிற கொடியைப் பாருடா என்றும்; அதை ஓட்ர சாரதியைப்பாருடா என்றும்; ரதத்துக்குள்ளேயிருக்கிற தம்பதியைப் பாருடா என்றும்; டேய்! அவாள பார்த்தால் இராஜ தம்பதி

களைப்போல் இருக்குடா! எந்த தேசத்து இராஜ தம்பதியோ தெரியவில்லை'' யென்றும் அவரவர்கள் வாயில்வந்தபடி பேசிக் கொண்டனர். ஊரிலுள்ள மற்றைய ஜனங்களும் இதைப்பார்த்து ஒன்றும் புரியாமல் திகைக்கலாயினர்.

பின் இரதத்தினருகில் நின்ற வில்லைச் சேவகன் ஒருவன் தாசில் பிரபு வீட்டை நோக்கிவரவே, இதைக்கண்ணுற்ற கோபு சகாக்களும் ''டேய்! அதோ ஒரு சேவகன் அக்கூட்டத்திலிருந்து நம்மாத்துக்கு வரான் பார்'' என்று சொல்லிக்கொண்டு மாடியை விட்டிறங்கி . வாசற்பக்கம் ஓடிவந்தனர். சேவகனும் கோபுவைப்பார்த்து ''டேய் தம்பி! தாசில்பிரபு வூடுண்டிருங்களே அது எந்த வூடு தம்பி?

கோபு :- இதுதான் ஸார்.

சேவ :- அவரைக் கொஞ்சம் வெளியே இட்டுகினுவா.

கோபு :- என்னத்துக்கு அவர்?

சேவ :- டேய் தம்பி! கூப்பிடுன்னு சொன்னா, கூப்பிடுவையா? என்னென்னமோ கேக்குரையே என்ரு?

கோபு :- அதெல்லாம் என்னிடம் பலிக்காது. ஒண்ணு அதைச் சொல்லு, இல்லாமப்போனா அந்த இரதத்தில் உள்ளவர்கள் யார் என்று சொல்லு.

சேவ :- என்னடா தம்பி! நீ ரொம்ப பெரிய பேர்வழிதா போலிருக்கு; நாஞ் சொன்ன வேலையெல்லாம் வுட்டுப் போட்டு நீ என்னமோ! வேறே கதைக்கு இஸ்துகினு பூட்டையே.

இல்லாம போனால் பிரபுவைக்கூப்பிடமாட்டேன் என்று கோபு சொல்லவே; சேவகன் தானே உட்பிரவேசிக்கலாமென்று வாயிற்படிகளில் இரண்டடி எடுத்துவைத்தான். ஆனால், கோபுவும், அவனுடைய சகாக்களும், வழியை மறைத்தனர். அதனால், வந்த சேவகன்கோபமுற்று ''டேய்! மரியாதையாய் வழிவுட்டீன்னுபோச்சு, இல்லாட்டி உன்பாடுசட்னியாய்ப்பூடும் பாத்துக்கோ'' என்றான். ''ஊம்! ஊம்!!

உன்னை நன்றாய்த் தெரியுமே! நீ ஒரு பெரிய கில்லாடி கன்ஸ்டேபிளோ?" என்று சொல்லிப் பரிகாசம் செய்தான்: இதைச் செவியுற்ற சேவகன், அடங்காக் கோபம் கொண்டு, கோபுவை இழுத்து ஐந்தாறு அடிகள் கொடுத்து ஒரு கல்தாவில் நடுத்தெருவில் போகும்படி ஏற்பாடு செய்தான். இதைப் பார்த்த மற்ற சகாக்கள் பயந்து, ஒருவன் கதவு முக்கிலும், ஒருவன் குதிருக்கிடுக்கிலும், ஒருவன் பிப்பாயிலும்போய் மூலைக்கொருவனாய் ஓடி ஒளிந்துகொண்டனர். சேவகன் தாசில் பிரபு பங்களாவினுள் நுழைவது போல் பக்கத்திலுள்ள மதகடியில்நின்றுகொண்டிருந்தான்.

கோபு உதைவாங்கியதை அறிந்த ஜோகு, அவனிடம் வந்து, "ஏய் கோபு! அந்த மகானை தூஷித்ததற்கு கைமேல் பலன் கிடைத்தது பார்த்தயா? வினையிட்டவன் வினையறுப்பான்; தினையிட்டவன் தினையறுப்பான்; கல்தா கிடைத்தது உனக்கா எனக்கா? என்று கேட்டான். கோபு அதிக கோபத்துடன் "என்னடா என்ன? நானல்லவோ அவனை கல்தா கொடுத்தேன். அவன் என்னைக் கொடுத்தானா உனக்குத் தெரியுமோ? என்னைக்கண்டாலே அவனுக்கு நடுக்கம் தெரியுமா?" என்று உரத்தக்குரலில் கேட்டான். அதைச் செவியுற்ற சேவகன் மிகுந்த கோபங்கொண்டு, திரும்பவும் வந்து நன்றாய்ப் புடைத்தான். பின் வாழைக்கட்டிய வீட்டினுள் புகுந்து, தாசில் பிரபு! தாசில் பிரபு!! என்று கூப்பிட, அவரும் வெளியே வந்தார். சேவகனைப்பார்த்து யாரெனவினவ, நித்யதர்மப் பிரபுவின் சகோதரரும், மைசூர் மந்திரியுமான, ஸ்ரீ கிருஷ்ண திவான் வந்திருக்கிறார் என்றும், அவர் இறங்க விடுதி வேண்டுமென்றும், தான் அவருடைய சேவகன் என்றும் தெரிவித்தான்.

தாசில் பிரபு, திகைத்து வாயிலைப் பார்த்து, ஆஹா! என் அருமைச் சுப்ரகாசனுக்கு இப்பேர்ப்பட்ட பாக்யமும் கிடைத்ததே! இது உண்மைதானா? நான் காண்பது கனவா? அல்லது நினைவா? என்று தாம் பார்ப்பதையும் நம்பாதவராய், நித்யதர்மரை சாஷ்டாங்க தெண்டனிட்டு, இரு கால்களையும் பிடித்துக்கொண்டு 'அண்ணா! அண்ணா! தங்களுக்கு தம்பியிருக்கிறாரா?' என்று மிக்க ஆச்சரியத்துடன் வினவினார்.

நித்யர், தாஸிலை இருகைகளாலும் தூக்கிவிட்டு, "ஸ்வாமீ! தாங்கள் என்னை நமஸ்கரிக்கலாமா? இது பெரும் அபராத மன்றோ? ஏன் இவ்வளவு பரபரப்பு!" என்று சாவதானமாய் பதிலளித்தார்.

பிரபு, "அண்ணா! அண்ணா!! நான் தங்களை நமஸ்கரிக்கக் கொடுத்துவைக்க வேணுமே. இந்த பாக்கியங்கூட எனக்கு சித்திக்கக்கூடாது என்பது தங்கள் அபிப்பிராயமோ? அது கிடக்கட்டும், உங்களுக்கு ஒரு இளைய சகோதரர் இருக்கிறார்? அவர் மைசூரில் மந்திரியாக இருக்கிறார? இதுகாறும் அதைப் பற்றி ஏன் தாங்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை? இப்போது அல்லவா எனக்கு அது தெரிகிறது. அவர் இங்குக் குணமணிக்குக் கொடுக்க ஏராள சீதனத்துடன் வந்திருக்கிறாரே" என்று சொன்னார்.

அதைக் கேட்ட நித்தியர், சற்று மௌனம் சாதிக்கவே; மதுசூதனன் அருளால் உண்மை விளங்க, தேவ இரகஸ்யம் வெளிப்படக்கூடாது என எண்ணங்கொண்டவராய், அப்போது தான் வேறு ஞாபகத்திலிருந்து தாஸிலின் சொற்களுக்கு செவி சாய்த்தவராய், "ஆம்! எனக்கு ஒரு தம்பியிருக்கிறான்; அவன் என்னை இதுகாறும் கவனியாது இருந்தபடியால், நானும் அவனைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் தெரிவிக்கவில்லை. அவன் தற்போது என்னைத் தேடி வந்திருக்கிறானா? எல்லாம் அப்பரந்தாமன் செயல்தான்" என்றுசொல்லிவிட்டு மீண்டும் ஆத்மதெரிசனத்தையே நோக்கங்கொண்டவராய் கண்ணை மூடிக்கொண்டு விட்டார்.

ஆம்! எனக்கு ஒரு தம்பியிருக்கிறான் என்ற சொற்கள் அரைகுறையாய் காதில்வாங்கிய தாஸில்பிரபு; ஓடோடிச்சென்று அதி சீக்கிரத்தில் தங்கத்தட்டொன்றில் தாம்பூலமும், சந்தனப் பேலா முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு, கிருஷ்ண மந்திரியை வரவேற்கத் தயாராயிருந்தார். இதைக் கண்ணுற்ற கோதண்டம், ஒரு ஓட்டமாய் ஓடி கோமளாங்கியிடம் இச்செய்தியை தெரிவிக்க வருங்கால், அவள்குணமணியிருந்த அறையின் வாயிற்படியிலுட்கார்ந்து கொண்டு, "வாடி என் கண்ணே! ரீ

நன்னாயிருக்கணும், அமோகமாய் வாழணும், இந்தப் பீடை ஒழியணும்" என்றுசொல்லிக் கொஞ்சிக்குலாவிக்கொண்டு, சுலோசனாவின் கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் சுலோசனாவோ, மிகுந்த கோபங்கொண்டவளாய், "ரொம்ப நன்னாயிருக்கு நீங்க முத்தமிடறது அழகு! கன்னமெல்லாம் ஒரே எச்சலாயிப் போயிடுத்தே! நாட்டுப்பெண் என் உயிரோடிருக்காள், எச்சத்தழும்பு வந்து சாகட்டுமென்னு பாக்கறேளா? ஒங்க புள்ளைக்கு வாக்கப்பட்ட சவரணைக்கு அது ஒண்ணுதான் குறைச்சலாக் கிடக்காக்கும்? ஒங்க சின்ன மாட்டுப்பொண்ணைப்போல் என்னையும் அனாதை என்று நினைச்சிண்டேளா? எனக்கு வேண்டிய மனுஷ்யா இருக்கா. போரும் போரும் உங்க அருமை" என்று சொல்லிக் கன்னத்தில் படீரென்று ஒரு அறை கொடுத்துவிட்டு மிகுந்த கர்வங்கொண்டு, வெகு அட்டகாசமாய் நடந்துசென்றாள்.

அப்படி அடிவாங்கியும், கோமளாங்கிக்கு சுலோசனாவின் மீது எள்ளளவும் கோபம் வரவில்லை. இந்தமட்டிலும் தன் நாட்டுப்பெண்ணிற்குப் பேசத்தெரிந்ததே என்று எண்ணிச்சந்தோஷம் அடைந்தாள். ஆனால் அடியுண்டசரீரம் சும்மாயிருக்குமா? சற்றே வலியெடுக்க ஆரம்பித்தது. அதனால் கோமளாங்கி தன்னையும் அறியாமல் அப்பா! அம்மா!! என்று மொனகிக்கொண்டிருந்தாள். இதைக்கண்ணுற்ற குணமணி மனம்பதறி, "ஐயோ மாமீ! உங்கள் கன்னம் சிவந்துவிட்டதே. ரொம்பவும் வலி அதிகமாயிருக்கிறதோ? பெற்ற தாயினும் பதின்மடங்கு அன்பாயிருக்கும் தங்களையோ இவ்வாறு அடிப்பது. என்னை அடித்தாலும் பரவாயில்லை" என்று சொல்லி உண்மையில் உருகிய நெஞ்சத்துடன் அவளது கன்னத்தைத் தடவிக்கொடுத்தாள்.

ஆனால்..........?

கோபமே குணம் கொடுக்கும் : கோபமே குலம் விளக்கும்
கோபமே கல்வி சேர்க்கும் : கோபமே செல்வமீயும்
கோபமே மன உறுதியாக்கும் : உறுதியால் சொர்க்கம் சிக்கும்

என்ற பாட்டின் கருத்தை உணர்ந்து நடப்பவள் அல்லவா? அது குணமணியின் விஷயத்தில் கேட்பானேன். நம்மால் எழு

தவும், நினைக்கவும் கூடாத அளவாய்க் கோபங்கொண்டு, “ அடி கடங்காரியே! ஒன்னை யாருடீ இங்கவாச் சொன்னது? வெற்றிலே பாக்கு வச்சு யாராவது அழைச்சாளா?” “நாயைக் குளிப்பாட்டி நட்டுள்ளே வைத்தால், வாலைக் கொழைத்துக் கொண்டு பீதின்னப்போகுமாம்” என்பாளே அதுமாதிரி, ஒன்னை உள்ளே அழைச்சிண்டு வந்து வைச்சோண்ணையும், மத்யஸ்தம் பண்ண வேறே வந்துட்டையா? அட வெக்கங்கெட்ட பிணமே! அவளைப்பத்தி ஆத்தவேறே ஆரம்பிச்சுட்டையா? அவ கால் தாங்கி பெருவையா நீ?” என்று வாயில்வந்தபடி பேசி, நன்றாய்ப் புடைத்துவிட்டாள். பாவம்! குணமணி விம்மி விம்மி அழுது கொண்டு, தரணிபுகழ் தாமோதரனை நினைந்து, அலைகடல்-துரும்புபோலும், யானைவாய்க்-கரும்புபோலும், கானகத்து-மான்போலும், இராக்ஷஸர் கை-நரன்போலும், பாம்பின்வாய்த்-தேரைபோலும், பல்லிவாய்-எறும்புபோலும், பூனை வாய்-எலிபோலும், நரியின்வாய்ப்பட்ட-நண்டுபோலும், வேடன் கைப்-பறவைபோலும் துடிதுடித்து, “ஏழைமேல் கடுகளவேனும் தயவில்லையா? ஹே! சர்வலோகங்களையும் காக்கும் கண்ணா! ஸர்வதேவ பூஷணா! ஸர்வேஸ்வரா!” எனப் பரமனைத் தியானித்தவாறிருந்தாள்.

இதை மற்றோர்புறத்தில் மறைவிலிருந்து கண்ணுற்ற ஸுப்ரகாசன் தன் மனைவியின் பொறுமைக் குணத்தையும், தன் தாயின் வஞ்சனைச் செயலையும் கண்டு, தன்தாயை அப்படியே வெட்டி வீழ்த்திவிடுவோமா என்று எண்ணினான். ஆனால் தன் தாயாயிற்றே என்ற எண்ணம் பூண்டவனாய் கோபத்தை சாந்தம் செய்துகொண்டான்.

இதற்குள்ளாக, கோமளத்தை தேடிவந்த கோதண்டம் அங்கு வந்து சேர்ந்தான். அவசர அவசரமாய் “ அம்மாமீ! அம்மாமி!! ” என்று கூப்பிட்டு “ வாசல்லே பாருங்கோ.” என்றான்.

கோம:- என்னடா வாசல்லே? பச்சக் குழந்தையாட்டமா விளையாட்றே! என் வயிற்றைப் பத்திண்டு எரியற-

கோத :- வயத்தை பத்திண்டு எரிஞ்சா, இந்தாங்கோ ஒரு சொம்பு ஜலந்தரேன், கொட்டிங்கோ ஸரியாய்ப்போயிடும்.

கோம :- போடா! அசட்டுக்கட்டாலே போஸி. நீ பேசறது நான் இந்த மாட்டுப் பொண்ணை பொடச்ச லக்ஷணம் போலிருக்கு.

கோத :- இந்தாங்கோ அம்மாமீ! இப்படி சும்மா சும்மா நாட்டுப் பெண், நாட்டுப்பெண்ணுன்னு கரிக்காதிங்கோ! இது அவாளுக்குத் தெரிஞ்சுதோ ஆபத்துதான்.

கோம :- என்னடா ஆபத்து? என்ன ஆபத்து?

கோத :- என்னவா? வாசல்லே போய்ப்பாருங்கோ.

கோம :- என்னத்தே பாக்றது? சொல்லியேழன்.

கோத :- நித்தியதர்மரோடே தம்பியாம்; அவர் ஆம்படையாளாம் வந்திருக்கா.

கோம :- வந்தூட்டாளோ இல்லையோ! கல அரிசித் தவலே நிமித்த வேண்டியதுதான்.

கோத :- என்ன கஷ்டகாலண்டாப்பா இது? ஏ அம்மாமீ! சோறு சோறுன்னு ஏ அடிச்சிக்கிறயோ?

கோம :- எண்டா பித்துக்குளி பட்டுவிழுவே! நீ ஒருபக்கம் வயத்தெரிச்சலை கொட்டிக்கிறே.

கோத :- நானு? நீங்களா?

கோம :- என்னடா ஒண்ணும் புரியல்லையோ?

கோத :- எனக்கு ஒண்ணும் புரியாமெ இல்லே. ஒங்களுக்குத் தான் ஒண்ணுமே புரியல்லே.

கோம :- என்னடா புரிஞ்சிருக்கு, மட்டைக்கு இரண்டு கீத்தான்னு? எந்தப்பயல் வந்திருந்தா எனக்கென்ன?

கோத :- ஐயையோ! அவரைப் பயல்னு சொல்லறேள்! இன்னிக்கு வந்துது மோசம் உங்க உயிருக்கு. அவர் யாருன்னூ ஒங்களுக்குத் தெரியுமா? அவர் மைசூர் மந்திரியாக்கும், ஸாமான்யமில்லே தெரியுமா?

இவ்வார்த்தை கோமளத்தின் காதில் விழுந்ததோ இல்லையோ, கோமளாங்கியைத் தூக்கி வாரிப்போட்டாற்போல இருந்தது. உடனே அவள் எழுந்து, "என்ன? என்ன? மைசூர் மந்திரியா! நெஜம்மாவா," என்று கேட்டாள்.

கோத :- இல்லே பொய்யா! வாசல்ல போயி பாருங்கோளேன் திமிலோகப்பட்றது.

"அப்படியா! என் குழந்தைக்கு வந்த அதிர்ஷ்டம்னு அதிர்ஷ்டம்!! என்னமோ நாலு நகையை போட்டுண்டேட்டம்னு என்ன அகம்பாவம் அந்த சுலோசனைக்கு. எங்கன்னத்திலேயே இடிச்சுபிட்டு ஓட்றது சனியன்" என்று முன்னம் குணமணி ஏழ்மையாயிருக்கிறாள் என்று எண்ணித் தான் வாயால் செய்த லெக்ஷார்ச்சனை போன்ற வசை மொழிகளை சுலோசனைவிடம் திருப்பிவிட ஆரம்பித்துவிட்டாள்.

பின்பு பிரபுவும், கோமளாங்கியும், இன்னும் அனேக பந்து மித்திரர்களும் மேள வாத்தியங்கள் முழங்க, கிருஷ்ண மந்திரியை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்டார்கள். இதையறிந்த குணமணி மிக ஆச்சர்யமடைந்து, என்ன என் சிறியதந்தையாம் சிற்றன்னையாம்; மைசூர் மந்திரியாம்; எனக்காக ஸ்ரீதனம் கொண்டுவருகிறாராம்; என்ன கற்பனை இது? எனக்குச் சித்தப்பா ஏது? சித்தி ஏது? அப்படியிருந்தால், இத்தனை நாளாய் ஒரு தடவையாது நான் அவரைப் பார்த்திருக்க மாட்டேனா? ஒரு வேளையிருந்தும் நாம் ஏன் பார்க்காமல் இருந்திருக்கக் கூடாது. எல்லாம் தானாய்த் தெரிகிறது. நாம் ஏன் அவசரப்படவேண்டும். என்று எண்ணியவாறு தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள்.

இவ்வனைத்திற்கும் நித்யதர்மமட்டும் இருந்த இடம்விட்டு எழாமல், "அடைத்திட்ட வாசலின்மேல் மனம்வைத்து
படைத்தவன் தன்னையே பார்."

என்ற ஔவைப்பாட்டியின் அழகிய சொற்கிணங்க, ஒன்றையும் கவனியாதவராய், கண்மூடி மௌனமாய்த் தன் ஞானக் கண்ணிடையே பரந்தாமனின் திவ்விய தெரிசனத்தைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தார்.

தாசில், கோமளாங்கி மற்றுமுள்ள பந்துக்களனைவரும், அநேக வண்டிகளிலுள்ள ஸ்ரீதனத்தையும், குதிரைகளையும், யானைகளையும், வஜ்ரவைடூர்ய மிழைத்த இரதத்தையும், இவ்வுலகையே விலைமதிக்கலாமென்ற ஆபரணங்களை அணிந்த கிருஷ்ண மந்திரியும், அவர் மனைவியையும் பார்த்துப் பார்த்து பரவசமானார்கள். மந்திரிக்குத் தாசில் பிரபுவும், அவரது மனைவிக்கு கோமளாங்கியும், சந்தனம் தாம்பூலம் கொடுத்து, மாலை சூட்டி வரவேற்க. இருவரும் இரதம் விட்டிறங்கி அதி உல்லாஸத்தோடு தங்களைச் சூழ்ந்துள்ள திரள்திரளான ஜனங்களைக் கடைக் கண்ணால் பார்த்து, புன்னகை கொண்ட வதனங்களுடன், அன்னநடையுடன் வர, அக் காட்சியைக் கண்ட அனைவரும் அளவற்ற ஆனந்தங்கொண்டு, இமை கொட்டாமல் அத்தம்பதிகளை பார்த்துக்கொண்டிருந்தனர்.

கிருஷ்ண மந்திரி பந்தலுட் புகுமளவும், நித்யர் கண்ணை விழிக்கவேயில்லை. அவர் ஆத்மதெரிசனத்தை கண்ணுற்றிருப்பதையறிந்த கண்ணன் அதை மறைத்துவிட்டார். நித்தியரும் திடுக்கென்றெழுந்து, அங்குமிங்கும் சுற்றிப்பார்க்க, கிருஷ்ண மந்திரியின் உருவம், சங்கு சக்ரதாரியாய்த் தோற்றக்கண்டார். உடனே கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று ஓடிப்போய்க் கட்டிக் கொண்டார். "கண்ணா! என்னை மறந்தனையோ" என்று சொல்லிக் கிருஷ்ண மந்திரியின் முகத்தைப் பார்க்கவே, அப்போது அவருக்குச் சாதாரணமாய் கிருஷ்ணமந்திரியாகவே காணப்பட்டார். அவர் திடுக்கிட்டு தேவரகஸ்யம் வெளியிடலாகாது என, "கிருஷ்ணா! உனக்கு இதுவரையிலும் என் ஞாபகமே இல்லையோ?" என்று கேட்டார்.

"அண்ணா! எனக்கு உன் ஞாபகம் இல்லாமலில்லை. நான் உன் உடன்பிறந்த சோதரனாயிருந்தும், உன்னை இவ்வளவு நாளாய்ப் பார்க்காதது தப்பிதமே. ஆனால் அதுவும் என்பேரில்

தப்பிதமில்லை. ஏனெனில் எனக்கு மிகுந்த வேலைத் தொந்திரவு என்பதுதான் தங்களுக்குத் தெரிந்ததாயிற்றே'' என்று பதிலளித்தார்.

நித்யர் :- ஆமாம் கண்ணா! உன் வேலைக்குத் தான் ஒழிவுநாளே யில்லையே.

கிரு :- அண்ணா! அதற்கென்ன செய்வது? நான்வந்த வழி.

நித்யர் :- உனக்கு வழி வேறு? கபடநாடகனன்றோ நீ.

கிரு :- என்னையும் கபடநாடகன் என்று தீர்மானித்து விட்டீர்களோ? ஆம் வாஸ்தவந்தான். தங்களுக்கு ஒரு கடிதங் கூடப் போடாதது என்னுடைய குற்றமே. அக்குற்றங்கள் எல்லாவற்றையும் என்மீதுள்ள அன்பினால் மறந்துவிடுங்கள் அது போகட்டும், மதனி எங்கே!

நித்யர் :- என்னை ஒன்றையும் கேட்காதே. உன் கபடத்தனமெல்லாம் எனக்குத்தெரியாது.

கிரு :- என்ன அண்ணா என்மேல் இவ்வளவு கோபம்? நான் உன் தம்பியல்லவா? என்னை மன்னியாவிடில் அது பாவம் அல்லவா? நான் தங்களைக் கவனியாமல் இருந்த குற்றத்தைத்தான் ஒப்புக்கொண்டு விட்டேனே. இனிமேலாவது மன்னிக்கலாகாதா?

நித்யர் :- சரி! அது போகட்டும், இனிமேல் ஆகவேண்டிய காரியத்திற்கு ஏற்பாடு செய்.

ஸத்யாவும், குழந்தை ஞானமணியுடன் புறப்பட்டுவந்தாள் என்று முன் சொன்னோமல்லவா? அவளும் நாகர்கோயில் வந்து தாசில் வீட்டையடைந்து, பீட்டை விட்டிறங்கி வர, ருக்மணி தேவி ஓடிவந்து, "மதனீ! மதனீ!!" என்று கட்டிக்கொண்டு, குழந்தை ஞான மணியைத் தூக்கியெடுத்து அதியன்போடு முத்தமிட்டாள். ஸத்யரூபி முன் பதியை நமஸ்கரித்துப் பின் கிருஷ்ணபகவானையும், ருக்மணி தேவியையும், கொழுந்தன்—ஓர்ப்படி

என்ற முறையிலிருந்ததால் நமஸ்கரிப்பது சந்தேகத்திற்கிடமாகுமென எண்ணி, ஒருவரும் அறியாமல் மனதினால் உள்ளன்போடு நமஸ்கரித்தாள். நித்யரும் ஸத்யாவும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர்.

பின் அங்குள்ளோர் அனைவரும் கிருஷ்ண மந்திரியும், அவரது மனைவியும் நித்தியர், சத்யாவிடம் பழகிக்கொண்ட முறையைப்பார்த்து, அண்ணன்-தம்பி என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும். உற்றார் உறவினர் என்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும். அவர் இருக்கும் அந்தஸ்து என்ன? அவர் பழகும் மாதிரி என்ன? இப்பேர்ப்பட்டவர்களின் சம்பந்தம் அல்லவோ சம்பந்தம் ஆகும். அவ்விஷயத்தில் தாசில்பிரபு கொடுத்துவைத்தவர்தான். அதிலும், அவர்பிள்ளை ஸுப்ரகாசன் இவர்களது பெண், குணமணியைத் தன் மனைவியாகக்கொண்டது பூர்வஜென்மத்தில் அவன் செய்த பூஜாபலனேயாகும் என்று சொல்லிப் புகழ்ந்தார்கள்.

மேலும், அங்குள்ள சிலர் இதுவரை நித்யரையும், அவர் பத்தினி சத்தியாவையும் தனக்கு நினைத்தபடி கோமளாங்கி நிந்தித்துக்கொண்டிருந்தாளே, இப்போது அவள் தன் தலையை எங்கு கொண்டுபோய் வைத்துக்கொள்வாள்; காலம் ஒருதடவை இருந்ததுபோல் இருக்குமா? எப்பொழுதுமே தான் தான் உலகில் பணக்காரன் என்று கர்வம் கொள்ளக்கூடாது. தான் தான் மிராசுதார் மாப்பிள்ளை என்ற கர்வத்தினால், சுப்ரகாசனை ஏளனம்செய்துகொண்டிருந்த பாபுவின் பல்லை பிடுங்கியதுபோல் ஆகிவிட்டது. இப்பொழுது என்ன செய்யப்போகிறான். இவர்களது ஆஸ்தியில் ஆயிரத்திற்கு ஒருபங்கு அச்சம்பந்திகளுக்கு இருக்குமா? இவர் தலைப்பா ஒன்றே போதுமே; அவரது மனைவியின் வணக்க ஒடுக்கத்தைப் பாருங்கள். நிறைகுடம் நிறைந்துதான் நிற்கும், குறைகுடம் கூற்றுதான் ஆடும். அவளைப் பாருங்கோ சாக்ஷாத் லெக்ஷ்மிதேவியே பிரசன்னமானதுபோல் இருக்கிறாள். ஒருவேளை வைகுண்ட நாதரே பிரத்தியக்ஷமாய் வந்துவிட்டாரோ என்று சந்தேகிக்கத்தக்கதுடன் இருக்கிறார்கள். குபேரனுக்கு மேலான இவர்களை, தம்பியாக அடைந்த

நித்தியதர்மரின் பெருமையே பெருமை. என்று அவர் அவர்கள் இஷ்டப்படி பேசிக்கொண்டிருந்தனர்.

இங்கு இவ்வாறிருக்க ருக்மணியும், ஸத்யாவும் குணமணி இருக்கும் இடம் சென்று, அவள் அறைதையாய் இருப்பதைக் கண்ணுற்ற இருவரும் சற்று மனம் வருந்தினர். குணமணியின் வியாகூலங்கள் எல்லாம் கணப்பொழுதில் நிவர்த்தியாய்விட்டது. ஆனால் அவள் சந்தேகம்மட்டும் நீங்கியபாடில்லை. தன் அன்னையைக் கேட்டறியலாமென்றாலோ அவள் ருக்மணியை விட்டு சற்றும் அகலவில்லை. அவளுக்கு விஷயம் புலப்படாததால் அவள்மனம் அலைகடல் துரும்புபோல் அலைந்துகொண்டிருந்தது.

ருக்மணி சட்டென்று குணமணியைத் தழுவி, மலர் கரத்தால் அவளது உடலின்மேல் படிந்திருந்த புழுதியைத்துடைத்த மாத்திரத்தில் அவளது தேகம் பத்தரைமாத்து பசும்பொன் போல் பிரகாசிக்கப்பட்டது. அவளுக்கு உணவுகொடுத்து அவளது பசியையும் போக்கினாள். பிறகு கருவண்டுபோல் பாதம் வரையிலும் புரளும் கூந்தலுக்கு ஜகத்தையே தூக்கும் வாசனையுடைய தைலங்களை தடவி, ராக்கொடி, சடைகொச்சு வைத்து பின்னவிட்டு தங்க ஜடை நாகம், வைரப் பட்டம் சூட்டி, சூரிய பிரபை, சந்திரபிரபை, கம்மல் குண்டலம், கமல சரம், காசி மாலை, வைர அட்டிகை, மாங்காய் மாலை, மகரகண்டி, வித வித சங்கிலிகள், முகப்பு இழைத்த முத்து மாலை, பச்சை, சிகப்பு நீலம், வைரம் இழைத்த வங்கி, நாகஒத்து, ஒட்டியாணம், கை வளைகள் பத்துவிரலுக்கு பத்துவித மோதிரங்கள், பாதசரம் ஒரே சரிகையினால் கண்ணைப் பறிக்கும் பீதாம்பரம், அதற் கேற்ற ரவிக்கை முதலியதால் மன்மதனும் மெச்சும்படி அலங்கரித்தாள். ரதியும் லச்சையுறுமாறு தங்கபாவைப்போல் கஸ்தூரி திலகமுடன் ஜொலிக்கிறாள் குணமணி.

மந்திரியின் உத்திரவினால் சில பணியாளர்கள் (காரியஸ்தர்கள்) மாப்பிள்ளை சுப்ரகாசனுக்கு தலைவாரிமுடித்து, பட்டுடை தரித்து, முத்துமாலை, கல்லிழைத்த மோதிரங்கள், வைரக் கடுக்கன்கள் அணிவித்து, தலையில் ஜரிகை தலைப்பாகை, முதலியதால் வானவரும்புகழ அலங்கரித்தார்கள். ரம்பை, ஊர்வசி, மேனகை,

திலோத்தமை என்ற இந்திர சபா நடன மாதர்களும் இவனைக் கண்டு மோகிக்கத்தக்க ஜவ்வாது பொட்டுடன் தேவேந்திரன் போல் விளங்கினான் சுப்பிரகாசன்.

இவ்வளவு நடைபெற்றதும் பாபுவிற்கு ஒன்றுமே தெரியாது. முட்டாள் பாபு தன் பெருமையையும் மனைவியின் பெருமை-மகிமையையும்; ஸுப்ரகாசனின் சிறுமையையும், குணமணியின் வறுமையையும், தன் மனைவியின் அழகையும், குணமணி அழகற்றவளென்றும், ஏதோ பிரமாதமாய் பிரகஸ்பதிபோன்ற தன் தோழன் சுப்பணியிடம் தன் வாயில்வந்தவாறு உளறிக் கொண்டிருந்தான். இவையனைத்தும், பக்கத்து அறையை ஜோடனை செய்துகொண்டிருந்த சேடிகளின் காதிற்பட, அவர்கள் சென்று பாபு அறியாவண்ணம் அவன் பின்னால் ஒளிந்துக் கொண்டார்கள். இதையறியாத பாபுவும் சுப்பணியும் கீழ்வருமாறு சம்பாஷித்தனர் :—

பாபு:- டேய் சுப்பணீ! எனக்குத்தானே அதிர்ஷ்டம்?

சுப்பணி :- அதுக்கென்னடா சந்தேகம்.

பாபு :- ஸுப்ரகாசன் அற்பந்தானே?

சுப்ப :- ஆம்! அதிலும் தடையா?

பாபு :- நான்தானே யோகசாலி?

சுப்ப :- அதுகூட சந்தேகமா?

பாபு.- என் தம்பி தரித்திரந்தானே?

சுப்ப :- நிச்சயமாய்.

பாபு :- பாத்தியாடா! என் மெத்தையெல்லாம் சில்க்குடா; எவ்வளவு ஜோராயிருக்கு பார்த்தியா!

சுப்ப :- ஆம்! ஆம்!! ரொம்ப நன்றாயிருக்கு.

பாபு :-தவிர என் ஆம்படையா என்ன பண்ணினாலும் எங்கம்மா ஒண்ணுஞ் சொல்லவே மாட்டா. அது ஒனக்குத் தெரியுமோ?

சுப்ப :-ஓ! எனக்குத் தெரியுமே.

இருவரும் இப்படி பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட சேடிகள் மிகுந்த கோபங்கொண்டவராய் திடுதிடு என்று ஏக காலத்தில் நாலைந்து பேருமாய் பின் இருந்தபடியே பாபுவை மெய்யப் புடைக்கவே, சுப்பணி தனக்கும் ஏதேனும் விழுந்து விடுமோ என்று பயந்தவனாய் பாபுவினிடம் கூடச் சொல்லாமல் கம்பி நீட்டி விட்டான். ஒருவருக்கும் தெரியாமல் ஒரு ஓட்டமாய்ஓடி கொல்லைத் தலமாட்டிலிருந்த முருங்கைமரத்தில் ஏறிக் கொண்டான். பாபுவோ அவ்வளவு அடிகளையும் பெற்றுக் கொண்டு தன் நண்பன் சுப்பணி சகாயம்கொண்டு திருப்பி அவர்களைத் தண்டிக்கலாமென்ற எண்ணங்கொண்டவனாய்ப் பார்க்க சுப்பணி இல்லாது போகவே, தான் இனி ஒருவனாய் அங்கு நின்றால் மேலும் என்ன நடக்குமோ என்ற அச்சம் மேலிட்டு மாடியை விட்டிறங்கிக் கீழே வந்தான். அங்கு குணமணியையும், சுப்ரகாசனையும் சர்வ அலங்காரத்துடனும், குணமணியின் சிற்றன்னையையும், அவர்கள் பக்கத்தில் குண மணிக்கு ஸ்ரீதனம் கொடுக்கும்பொருட்டு வைத்திருந்த பொருள் களையும் கண்டு, ஒரு புறம் பொறாமையும், மற்றொரு புறம் ஆச் சர்யமும் கொண்டவனாய் ஆந்தை போல் விழித்துக் கொண் டிருந்தான்.

பாபுவை அடித்து விரட்டியபின், அச்சேடிகள் சிரித்துக் கொண்டு, அவனுக்காகப் போடப்பட்டிருந்த கட்டில், மெத்தை, முதலியவற்றைப் பக்கத்திலுள்ள வாழைத் தோட்டத்தில் வீசி எறிந்துவிட்டு, கோமளாங்கியால் குணமணிக்கும், சுப்ரகாசனுக் கென்று போடப்பட்டிருந்த கந்தல்பாயையும், கிழிந்த தலைகாணி களையும் கொண்டுவந்து பாபுவின் சயன அறையில் போட்டார் கள். பின் சுப்ரகாசன் அறைக்குச் சென்று, தந்த அம்பாரி கிரிக் கட்டிலும், வெல்வெட்டு மெத்தையும், தெண்டு தலை காணிகளும், பட்டுமேற் கட்டிகளும் போட்டு, குளோபர் விளக்குகளும், ரஸகுண்டுகளும், புஷ்ப முத்து சாங்களும், பூ மாலைகளும், பலவித பதுமைகளும், பற்பல படங்களும் நிலக்கண்ணாடிகளும் கொண்டு, பார்ப்போர் மயங்க அதி விசித்திரமாய் அலங்கரித்தனர். மேலும் ஓர் தந்த மேஜை போட்டு, அதன்மேல் ஒரு சந்தனப்பேலாவும், பன்னீர் சொம்பு, தாம்பூலம், அத்தர், புனுகு, ஜவ்வாது முதலிய வாசனைப்பொருள் களையும்கொண்டுபோய் வைத்தனர். மந்திரியுடன் வந்திருந்த சில

பரிஜாரகர்கள் தாங்கள் கொண்டுவந்திருந்த பலவகைப் பலகாரங்களையும், பழதினுசுகளையும், தங்க கூஜாவில் பால்முதலியவற்றையும் அவ்வறையினுட்கொண்டுபோய் வைத்தனர். இத்துடன் நின்றதா? மாடிமுழுவதும் ஒரே படங்களும், பூமாலைகளுமாக, மாடம் தவறாமல் மெழுகு வத்திகளும், அனேக ஊதுவத்திகளும் நிறைந்து ஒரே வாஸனை ஜமாய்க்க தேவலோகமாய் விளங்கப்பட்டன.

இவைகளையெல்லாம் பார்க்கப்பார்க்க பாபுவிற்கு இன்னது செய்வதென்றே விளங்கவில்லை. பாவம் தன் வாலைச் சுருட்டிக்கொண்டு தான் இருக்குமிடமே பிறர் அறியாவண்ணம் மிகுந்த அடக்க வொடுக்கத்துடன் ஒருபக்கம் உட்கார்ந்துகொண்டான். இச்சம்பவங்கள் எல்லாவற்றையும் கேள்வியுற்ற கமலா, தான் குணமணியைத் துன்பப்படுத்தியது வெளியாயின் தன் உயிருக்கே ஏதேனும் ஆபத்து நேரிடினும் நேரிடலாம் என அஞ்சி ஒருவருக்கும் சொல்லாமல் ஊர்போய்ச் சேர்ந்தாள். இதைப்போல குணமணியைத் துன்புறுத்திய சுலோசனாவின் உறவினர்களில் பலர் தங்கள் செய்கை வெளிப்படின் அவமானமேற்படுமே என்றெண்ணி தங்களுக்கு உடம்புசரியில்லை என்ற சாக்குபோக்குகள் சொல்லி அவரவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடம் விட்டு தாசில்பிரபுவின் பங்களாவையே நாடவில்லை. கோமளாங்கியோ தற்போது குணாவைச் சொல்லிய வசைமொழிகளெல்லாவற்றையும் சுலோசனாவின்மீது திருப்பிக் கொண்டிருந்தாள். மூன் ஏடு திரும்பிவிட்டதால், மகாலிங்க அய்யரும், பத்மாவும், முன்பு செய்த அட்டகாசங்களை யெல்லாம் அடக்கிக் கொண்டு, பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடந்தனர். ஸுலோசனாவின் தலை கர்வமும் இறங்கிற்று.

நிற்க, கிருஷ்ணமந்திரி தாசில் பிரபுவிடம் வந்து, குழந்தை கல்யாணத்தின்போது நான் வராததால் இப்பொழுது ஓர் ஊர்வலம் ஒன்றையும் நடத்துவோமா என்று யோசிக்கிறேன் என்று சொல்ல, அவரும் ஒப்புக்கொண்டார். உடனே குணமணிக்கும், ஸுப்ரகாசனுக்கும் புஷ்பமாலை சூட்டி, மந்திரி வந்த இரதத்திலேயே அமரச்செய்து, ஞானமணியையும் அதிலுட்கார்த்தி பாண்டு வாத்தியங்கள் முழங்க, ஊர்வலம்புறப்பட்டது. இதற்கு

முன்னால் மலர்சரம்போல் கியாஸ்லைட்டுடன், ஆங்காங்கு சில இடங்களில் அனேகவித வான வேடிக்கைகளும நடந்தன. கிருஷ்ணமந்திரியும், நித்தியரும் அதியன்போடு யோகக்ஷேமங் களை விசாரித்துக்கொண்டு மெதுவாய் நடக்க, தாசில் பிரபுவும் மற்றுமுள்ளோரும் திரள்திரளாய் வர, ஹம்சம்போல் அசைந்து வரும் இரதத்தின் பின் ருக்மணி தேவியும், சத்யாவும் கை கோர்த்துக்கொண்டு அடிமேல் அடி எடுத்துவர, அவர்களைச் சுற்றி ஸுகுணா, சரஸா, ஸுகுந்தா, கோமளாங்கி இன்னும் அனேக ஸ்திரீகளும் வர, பின்னும் அனேக வண்டிகள் நிறைய ஸ்ரீதன சாமான்களும் வர, ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது. இவ் வளவு கூட்டத்தின் மத்தியில் அன்னம் போல் அசைந்து-அசைந்து வரும் ஸ்வர்ணரதத்திலிழைத்திருக்கும் நவமணிகளும் தங்கப்பதுமைகளும் புதைத்துள்ள கண்ணாடிகளும் ஒளி வீச ஜிலுஜிலுவென்று ஜொலிக்கும் கொடியுடன், தகதக என பிர காசிக்கும் பிரகாசத்தில், தந்தப்பதுமைகள் போல் கையிற் பூச் செண்டுடன், விண்மீன்களுக்கிடையே பிரகாசிக்கும் சந்திரன் போன்ற தம்பதிகள், இந்திராணி இந்திரன் போலவும், வள்ளி வேலனைப் போலவும், லெக்ஷ்மி நாராயணன் போலவும், ரோகணி சந்திரன் போலவும் காணப்பட்டனர்.

ஆயிரம் தலைகண்டால் அன்று செய்தபாபம் போகும் என்று பெரியோர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறோம். குண மணியின் ஊர்வலத்தில் லக்ஷக்கணக்கான தலைகள் தோற்றப்படு வதால் அவ்வூர்வாசிகளனைவருக்கும் ஆயுள்காலம் வரையில் செய்த பாவங்கள் அன்றுடன் நிவர்த்தியாயிருக்கும் என நினைக் கலாம்; இவைகள் அனைவற்றையும் நடத்திவைப்பது யார் என நித்யர்-ஸத்யாவை தவிற மற்றெவருக்கும் தெரியாது. கருணை யங்கடல் என பலராலும் போற்றப்படும், அப்பரந்தாமனின் திருவிளையாடல்களை யாரே அறிவர். அவர்களது பக்தியை கடைசிவரையில் சோதனை செய்தார். அவர் பக்தி உண்மை யானது என்றுணர்ந்தார் அவர்களை காப்பது தன் கடமை என்று எண்ணினார். அவர்களது துன்பத்தை போக்கி இன் பத்தை கொடுத்தார். அவரது கடமைக்கு பாத்திரமான அம் மூவருமே பாக்யசாலிகள், அதுபோல் யாருபினும் சரி. பிராம ணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், ஹரிஜனங்கள்

மற்ற இராஜாதிகள் என்றபேதமே அவருக்கு கிடையாது. பெரியோர்கள் கூறியிருக்கிறபடி "அரிது அரிது. மானிடராய்ப் பிறப்பது அரிது" அதிலும் கூன், குருடு, செவிடு முதலிய இல்லாமற் பிறப்பது அரிது. ஆகையால் உலகத்திற் பிறந்த மானிடரும் தன்னால் இயன்ற அளவு கடவுள் வணக்கத்திலீடுபடுதல் வேண்டும். ஆனால், வெளிநடையில் மட்டும் நடப்பது போதாது. "எத்தான் புரினும் என்னப்பனை மறவேன்" என்று உள்ளன்போடு எவரொருவர் கடவுளை வழிபடுகிறார்களோ அவர்கள் அவருடைய கருணைக்குப் பாத்திரமாவார்கள் என்பது நிச்சயம். ஆகவே கலியுகம், துவாபரயுகம் இக்காலத்திலாவது கடவுளைப் பார்க்கவாவது, அவர் நம்மைக் காப்பாற்றவாவது என்றெண்ணி உங்களையே நீங்கள் பாழ்படுத்திக்கொள்ளாமல் அவரவர் சக்திக்கேற்றவாறு கடவுள் பக்திபண்ணி அவரது கருணைக்கு பாத்திரமாவீர்கள் என்று நம்புகிறோம்.

நிற்க, இப்படியாக ஊர்வலம் முடிந்து குணமணியும், ஸுப்ரகாசனும் மனையிலமர்ந்தனர். பிரபுவின் உத்திரவுப்படி பாபுவைத் தேடிக்கொண்டு வந்த கோமளாங்கியும், மாடியின் ஒரு மூலையில் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்த. பாபுவைக் கண்டாள். உடனே அவனைப் பார்த்து "ஏய் பாபு ஆசீர்வாதத்திற்கு நாழியாயிடுத்து எழுந்து சீக்கிரம் வாடா" என்றாள்.

"அம்மா! அம்மா! அந்த ஸுப்ரகாசன் ஆட்கள் என்கட்டில் மெத்தை எல்லாத்தைதம் வாழைத்தோட்டத்திலே தூக்கி எறிஞ்சு விட்டு, பீத்தல் பாயையும், கிழிசல் தலகாணியையும் எனக்குப் போட்டிருக்காளே அது தேவலையா?" என்று கேட்டழுதான்.

கோம:- நீ ரொம்ப சமத்தோல்லியோ ஒஞ் சமத்தெல்லாம் அவாள் கிட்டே காமிச்சிருப்பே. அதான் அந்த மாதிரி செஞ்சிருக்கா.

பாபு:- அதெல்லாம் முடியாது. அதெல்லாம் கொண்டு தரச் சொன்னால்தான். இல்லாமற்போனால் நான் சாந்திகல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன்.

கோப:- அப்பா அழகு சொட்டாது போரும் என்மானம்போறது வாயை மூடிக்கோ. வேலைக்காரன் வரட்டும், கொண்டுவந்து கொடுக்கச் சொல்றேன். அவியப்படாதே, ஆசீர்வாதத்துக்கு காத்திண்டிருக்கா! வா!

இதைக்கேட்டு திருப்தியுற்ற பாபு மெத்தையை விட்டிறங்கி மணையில் வந்து உட்கார்ந்தான். சுலோசனாவும் அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். பின்முறைப்படி பிராமணர்கள் மந்திரோபதேசம் செய்து, வேதம் ஓதி, அவரவர் இஷ்டப்படி மணப்பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், பணம், வேஷ்டி, புடவை மோதிரம் முதலியன கொடுத்தார்கள். பிறகு கிருஷ்ண மந்திரி குணமணிக்கு வெள்ளிப் பெட்டியும் தங்க சாவி கொத்தும் ஓதயிட்டார். பின் கிருஷ்ண மந்திரி, நித்யர், தாசில்பிரபு முதலியோர்களாலும், மற்றுமுள்ள பெரியோர்களாலும் இந்த தம்பதிகளும் ஆசீர்வதிக்கப் பெற்றனர். பிறகு இரு தம்பதிகளையும் அவரவர்களுக்கென்று ஏற்படுத்திய சயன அறைகளுக்குள் அனுப்பப்பட்டனர். வழக்கம்போல் ஸ்திரீகள் பாட்டு பாடினார்கள்.

இது முடிவடைந்தபின் வந்திருந்த அனைவரும் அன்றிரவு வயிறுபுடைக்க சாப்பிட்டுத் தங்கள் தங்கள் இல்லம் ஏகினர். எல்லோரும் சென்ற பின்னர், கிருஷ்ணமந்திரி தான் ஊர்போக தாசில் பிரபுவிடம் விடைகேட்க, பிரபு, இன்னும் இரண்டுதினங்கள் இருந்துவிட்டுப் போகலாமென்று சொல்ல, அதை மறுத்து மறுநாள் மைசூர் ராஜதர்பார் என்றும், தான் அவசியம் அங்கு இருக்கவேண்டுமென்றும், தன்னை நிர்ப்பந்திக்க வேண்டாமென்றும் சொன்னார். அதைக் கேட்டு பிரபுவும் ஒன்றும்சொல்ல முடியாதவராய் அவருக்குத் தாம்பூலம் கொடுத்தார். பின் கிருஷ்ணமந்திரி தன் பத்தினியுடன் ஊருக்குப் பிரயாணமானார். அவர்களை வழியனுப்பும்பொருட்டு, நித்தியதர்மர், ஸத்யரூபி, ஞானமணி, தாசில் பிரபு, காமளாங்கி, ஸுகுந்தா முதலிய பேரும் அங்குள்ள இன்னும் பலரும் அவருடன் புறப்பட்டுப் போயினர்.

## அத்தியாயம் 12

### நிர்மல பக்தருக்கு-நிஜரூப ஸேவை.

இப்படியாகக் கொஞ்சதூரம் சென்ற பிறகு கிருஷ்ணமந்திரி தன்னுடன்வரும் கூட்டங்களைப்பார்த்து அன்பர்களே! நீங்கள்

அனைவரும் "என்பொருட்டு ரொம்பவும்சிரமத்தை அடைந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்மீதுள்ள அன்பைப்பற்றி மிக்க சந்தோஷம் அடைகிறேன். நீங்களனைவரும் ஸுகஜீவிகளாய் வாழவேண்டுமென நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்." என்று பலவாறாய் புகழ்ந்துரைத்தார். இத்தகைய மொழிகளைக் கேட்ட அனைவரும் அகமகிழ்ந்து "நாங்கள் உங்களைக் கண்டது முதல் எங்கள் மனம் மிக்க சந்தோஷமடைகிறது. நீங்கள் அநேக காலம் நீடூழி வாழவேண்டும். எதோ இந்த ஏழைகளை மறவாமல் எங்கள்பொருட்டும், உங்கள் பெண் பொருட்டும் இங்கு அடிக்கடி வந்து போகவேண்டும். நீங்கள் இங்குவந்து போவதால் நாங்கள் எல்லோரும் சந்தோஷமுறுவோம்" என்று அவரை மெச்சிப் பேசிக்கொண்டே மேலும் அவரைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

மந்திரி சிரித்த முகத்துடன், "அன்பர்களே! உங்கள் இன்புற்ற வசனங்களால், என் மனம் மகிழ்ப்பெற்றது. நானுங்களை ஒரு நாளும் மறவேன். நீங்களும் என்னை மறக்கமாட்டீர்கள் என நம்புகிறேன். எனக்கும் ரொம்பதூரம் போகவேண்டியிருப்பதால் சீக்கிரம் விடை கொடுத்தனுப்புங்கள்," என்று கனிந்த வசனங்களால் மொழிந்தார். இதைக்கேட்ட ஜனங்களெல்லாம், 'கிருஷ்ணமந்திரிக்கு ஜே! ருக்மணி மந்திரிணிக்கு ஜே!' என்று ஒரே ஜெயகோஷம் செய்தனர். ஜே! ஜே! என்ற கோஷம் ஒலிக்க, கிருஷ்ண மந்திரி தாசில் பிரபுவிடம் விடைபெற்று, அவருக்கும் சிலவு கொடுத்து, அண்ணாவுக்கும், மன்னிக்கும் ஏதோ சமாசாரம்சொல்லவேண்டியிருப்பதாகவும் அதைச் சொல்லிவிட்டு பிறகு அனுப்புவதாகவும் சொல்லி, அண்ணா, மன்னி, ஞானமணி, ருக்மணி சமேதராய் இருந்து கொண்டு மற்றையோரை நாகர்கோவிலுக்குப் போய் வரும்படி கட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே அவரைப் பிரிய மனமின்றி வாடிய வதனத்துடன் நாகர்கோவிலுக்குத் திரும்பினர்.

கிருஷ்ண மந்திரி, நித்யர், ருக்மணி, ஸத்யா, ஞானம் முதலியோர்கள் மெதுவாய் நடந்து இன்னும் கொஞ்சதூரம் வந்தனர். நித்யரும், சத்யாவும் கண்ணனைப்பார்த்து, கண்ணில் நீர்

சொரிய, "ஹே! பரம புருஷா! பக்தவத்ஸலா! முரளீகாணா! ஹே கிருஷ்ணா! எங்களிடத்தில் இன்னமும் மாயமாகுமா? இம்மாயா ரூபத்தை மறைத்து ஜோதிரூப சேவையளிக்கலாகாதா? என்னப்பனே! உன் வழிபாடு ஒன்றையே நாங்கள் கடைப்பிடித்தோமென நீ அறியவில்லையா? கண்ணா! இன்னுமேன் தாமதிக்கிறாய்; எங்களால் தாள இயலாது இயலாது" என்று வேண்டினர். இதைச் செவியுற்ற கண்ணபிரான் வயிறு குலுங்கச் சிரித்து "அண்ணா! மன்னீ! ஆக்கப் பொறுத்த உங்களுக்கு, ஆறப் பொறுக்கவில்லையோ? நானுங்களுக்கு தெரிசனம் அளிக்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று கேட்டார்.

"கண்ணா! இப்பொழுதே உயிர்துறக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றனர்.

கிருஷ் :- அது எப்படி ?

நித், ஸத்ய :- எல்லாம் உன் தயவால்.

கிருஷ் :- ஆஹா! என்ன வைராக்யம்! உங்கள் பக்திக்கு ஈடானவர் ஒருவருமில்லை.

நித் :- கண்ணா! ஏன் பேச்சை மறைக்கிறாய்? உன் இந்திரஜாலங்களெல்லாம் எனக்குத் தெரியும். என்னை ஏமாற்றப் பார்க்கிறாயே? நான் உன்னை விடமாட்டேன்; விடமாட்டேன்.

கிரு :- விடாமல் என் செய்வாய்?

சத்ய, நித் :- விடுவோமா? ஊம்.........பக்தியென்னும் கயிற்றால் உன்னைக் கட்டிப்போடுவோம்.

கிரு :- உங்களுக்குத்தான் மாடமாளிகைகளும், ஆடை ஆபரணங்களும், இன்னும் சகல ஐஸ்வரியங்களும் ஏராளமாய் கொடுத்துவிட்டேனே. இன்னமும் என்னை ஏன் தொந்திரவு செய்கிறீர்கள்.

நித் :- கோபாலா ! அந்த மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் உனக்கல்லவோ வேண்டும். எனக்கெதற்கு?

கிரு :- சுகமாயிருக்கத்தான்.

நித் :- சுகம்! சுகம்!! எதிற் சுகம்? உன்னை பூஜிப்பதில் சுகம்; உன்னைப் போற்றுவதில் சுகம்; உன்னைப் பார்ப்பதில் சுகம்; உன் பஜனையைக் காதால் கேட்பதுஞ்சுகமே தவிர கேவலம் இந்தப் பொருளிலா சுகம்? இல்லை. ஒருநாளும் ஏற்படப் போவதில்லை இல்லை. எண்ணற்ற தேஜோமயமே எனக்குறிய பேரின்ப சுகம். அதையே விரும்புகிறேன். பாரில் பிறவிநோயைப் பஸ்பமாய் எரித்து, எங்களைப் பாதுகாக்கவே உன்னையண்டினோம்.

இந்த அமிர்த வசனங்களானது கிருஷ்ண பரமாத்மாவுக்கு மலர்ந்த மலரில் குளிர்ந்த பன்னீரைத் தெளித்ததுபோலிருந்தது. அளவற்ற மகிழ்வு கொண்டு சங்கு சக்கர முறளிதரனும், ஸாக்ஷாத் ருக்மணி தேவியுமாய் காக்ஷி கொடுத்தனர். நித்யதருமரும், ஸத்யரூபியும் எண்ணவியலாத பேரின்ப சாகரத்தில் மூழ்கி, ஆனந்த பரவசமாய் அருட் பரஞ்சோதியைத் தெரிசித்து, ஆனந்த பாஷ்பம் பெருக, சாஷ்டாங்க தெண்டனிட்டு, கை குவித்து, "ஹே! கருணைக் கடலே!! கார்முகில் மணியே! எங்களுள்ளங் கவர்ந்த தெள்ளமுதே! கள்ளமற்ற வள்ளலே! இவ்வேழைகள் மேல் மனமிறங்கி, சங்கு, சக்ர, பீதாம்பர வனமாலதரனாய் காக்ஷி கொடுத்தாய். நின் தேஜோ மய காந்தியை தெரிசித்த நாங்களே பாக்யவந்தர்கள். இனி இந்த மாயவாழ்வினை நம்பி இப்பாரினில் உயிர்தரியோம். என்னப்பனே! நின் துளபமணி மார்பில் எங்களுக்கிடம் கொடுப்பாய்" என்று வாய் விட்டுச் சந்தோஷம் பொங்கக் கூறினர்.

கண்ணபிரான் அளவற்ற கருணையுடனும், சிறித்த வதனத்துடனும், "நித்யதர்மா, ஸத்யரூபி; உங்கள் உத்தம பக்திக்கு மெச்சினேன். உங்கள் உத்தம புத்திரனோடும், உயர்மிகு புத்திரியோடும், நீங்களிருவரும் மங்காது விளங்குவீர்களாக. இன்னும் மகிழ்ச்சியுடன் கொஞ்ச நாள் இருங்கள்" என்று ஆசீர்வதித்தார். இது கேட்ட நித்யரும், ஸத்யாவும் மனம்வருந்தி, "பிரபோ! இன்னும் இப்பாழும் உலகில் இருக்கவேண்டுமா? இம்மாய்கையைக் கண்டு மகிழவேண்டுமா? இதுவா உன்சித்தம்?

இன்னும் என்ன சோதனை செய்யப்போகிறாய்?" என கல்லும் கரையுமாறு மொழிந்தனர்.

கண்ணன் அன்போடு, "நித்யதர்மா, கவலைப்படாதே; சத்ய ரூபி, கவலையுறாதே. நீங்களிருவரும் இதுவரையில் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாயிருந்தும், அதைப் பாராட்டாமல் என் பக்தியையே உங்கள் அழியாச்செல்வமென மதித்து வந்ததுபற்றி ரொம்பவும் சந்தோஷம். இனிமேல் அனேக சுகங்களை அனுப வித்து, மனங்கொள்ளா மகிழ்வுபூண்டு, என் வழிபாடுகளிலும் குறைவுறாது உங்கள் வாழ்நாளைக் கழியுங்கள். சிறிது காலத்திற் குப்பின் உங்கள் மனம்போல் உங்களுக்கு மோக்ஷமளிக்கிறேன்" என்று பகர்ந்தார்.

"கண்ணா! உன்னை தெரிசித்த பின்னுமா இவ்வுலக வாழ்க் கையை விரும்புவோம்? இல்லை, ஒருநாளுமில்லை. இந்த வாழ்வு வேண்டாம்" என்று நித்யரும், சத்யாவும் மீண்டும் சொல்லிக் கண்ணீருதிர்த்தனர்.

"நித்யா, சத்யா!! உங்களிருவருக்கும் என்மேல் உண்மை யான அன்பிருக்கும் பக்ஷத்தில் என் சொல்லைத் தட்டமாட்டீர் கள்" என்று கண்ணபிரான் சொல்லவே, "கண்ணா! நாங் உன் வார்த்தையை மறுக்கேன். ஆனால் உம்மைப் பிரிய எங்கள் மனம் வரவில்லை" என்று நித்யர் புகல,

கிருஷ் :- சரி! நீங்கள் என்னைப்பிரிந்து போவதாக நினைக்கவேண் டாம். உங்கள் அருகிலேயே நான் இருப்ப தாக நினைத்துவாருங்கள். உங்கள் ஹிருதய கமலத்தில் வாசம்செய்யும் நான், உங்களைவிட்டு எப்படி அகல முடி யும்? யோஜியுங்கள்; அன்றியும் இவ்வுலகத்தினின்றும் நீங்கள் செய்யவேண்டிய காரியத்தில் குறைவிட்டு வர லாமா? பாரிலுள்ள பாமரர்களுக்குப் புத்திமதி புகட்டி, பலருக்கும் ஞானோபதேசம் செய்து, இன்னும் அனேக தான தருமங்களையும், குறைவின்றி எதேஷ்டமாய் நடத்தி, அனைவருக்கும் தம்மாலியன்றளவு நன்மை செய்து, வயது முதிர்ந்தபின் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதே நலம் என்று பகர்ந்தனர்.

நித் :- பிரபோ! சித்தம்.

இருவரும் கிருஷ்ணபரமாத்மாவையும், ருக்மணி தேவியையும் நமஸ்கரித்து எழுந்திருந்து, இருவரும் அந்தரங்க பக்தியுடன் "தாயே! லோகமாதா! நீயே இந்த உலகுக்குப் படியளக்கும் என்னன்னை. அம்மையே நாங்களென்ன அபராதம் செய்திருந்தாலும், அதைப்பொருட் படுத்தாது, எங்கள்மேலன்பு கூர்ந்து எக்காலும் எங்கள்பால் தயைபுரியவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர்.

"நித்யா, சத்யா உங்கள் அந்தரங்கபக்திக்கு மிகவும் மெச்சினேன். சத்யா! பதிசொல் தவறாது பணிவிடை புரிந்து தன் புருஷன் மனதிற்கு முரண்பாடின்றி நடந்து, பெரியோர் பணிவிடையிலும், ஜீவகாருண்யத்திலும், பகவத் பக்தியிலும் சித்த முழுமையும் காட்டியிருக்கும் சத்யா!! நீயே உத்தமி. நீயே கற்புக்கரசி, நீ என்றும் இம்மகிமை குன்றாது விளங்குவாய்" என்றாசீர்வதித்தாள் ருக்மணிதேவி.

இதையெல்லாம் பார்த்த ஞானமணி, கையைத் தனது மோவாக்கட்டையில் வைத்துக்கொண்டு, "அடடா! என்னடா யிது? எங்க சித்தப்பா வந்து அம்மாச்சி கண்ணைப் போயிட்டாரே! ஏ அம்மாச்சிக் கண்ணே! நீ சித்தப்பாவாயிருந்தை யோன்னே? இப்பமட்டும் ஏன் அம்மாச்சியாயிட்டே? நீ தானே எங்களுக்கு இந்த நகையெல்லாந் தந்தே?" என்று கொஞ்சும் மழலை மொழியில் பேசினான்.

கிருஷ்ணபிரான் பரம சந்தோஷங்கொண்டு குழந்தையைத் தூக்கி முகத்தோடணைத்து முத்தங்கொடுத்து, "என் கண்ணே நீ வயதில் சிறுவனாயிருந்தாலும், புத்தியில் மிகப் பெரியவனே! அறியாப்பாலனாயிருந்தாலும், அறிவிற் பெரியவனே! பக்தியிலும் சிறந்தவனே. உன்பெயருக்கேற்ப ஞானமும், உன்னிடம் பிரகாசிக்கிறது. ஆகையால் நான் உன்னை "ஞானப் பிரகாசன்" என்றழைக்கிறேன். நீ உலகம்புகழ அமோகமா யிருப்பாய் என்று ஆசீர்வதித்தார்.

"'அம்மாச்சி கண்ணு' ஒப்பக்கத்திலேயிருக்காளே அவ யாரு? என்று கேட்க, கண்ணபிரானும் அவள்தான் ருக்மணி என்று மொழிந்தார்.

ஞா :- ருக்மணின்னு யாரு? அவ எங்க சின்னம்மாவா?

ருக் :- ஆமாப்டா கண்ணே.

ஞா :- அப்பிடீன்னு நான் ஒங்கிட்டயேதான் இருப்பேன். அம்மாவோடே போமாட்டேன்.

குழந்தை கொஞ்சின வார்த்தைகளானது ருக்மணியின் மனதை உருக்கின. ஞானப்பிரகாசனை வாரியெடுத்து, முத்தமிட்டு "என் அருமைச் செல்வ ஞானப்பிரகாசா! உனக்கு ஒரு குறையும் வாராது. நீ நன்றாய் கலைகளில் விருத்தியடைந்து தக்க பருவம் எய்தினபின் உனக்கேற்ற ஓர் நற்கன்னிகையை மணந்து அளவற்ற ஐஸ்வர்யத்துடன் சுக சம்பன்னனாய் வாழ்வாய்" என்று ஆசிகூறினாள்.

ஞா :- நா மாட்டேட. ஊ......கூ.........ம் நா மாட்டேட. அம்மாவோடே ஊருக்குப் போமாட்டே. நா ஒங்கூடதானிருப்பேன்.

ருக் :- என் செல்வமணியேயான்றோ? நான் சொல்வதைக்கேட்க மாட்டாயா?

ஞா :- ஊ ........கூ..........ம் நாமாட்டேட. அப்பரம் ஒன்னே எப்படிப்.பாக்கறதாம்? நீ எப்ப வருவையோ?

ருக் :- எப்பவும் பார்க்கலாம்.

ஞா :- இல்லே நீ பொய் சொல்றே. நீதான் ஊருக்குப்போப்போறேன்னு சொன்னையே. அப்பறம் உன்னேயும் அம்மாச்சி கண்ணேயும் எப்படிப் பாக்கறதாம்?

ருக் :- உனக்குத்தான் ஊர்லே ஒரு அம்மாச்சி கண்ணனிருக்காறே.

ஞா :- அவமெங்கே பேசறார். பேசமாட்டேங்கறாரே. இவர்தான் பேசறார்.

ருக் :- நீ தினம் பூஜை பண்ணினு அவரும் பேசுவார்.

ஞா :- ஊ ...கூ...ம் நீ பொய்தான் சொல்றே.

ருக் :- நெஜம்மா பேசுவார்.

ஞா :- அப்படீன்னு சரி; அம்மாச்சி கண்ணன்தானே இருக்கார். நீ இல்லையே. ஒன்னப்பாக்கணும்னு என்ன செய்றது.

ருக் :- நீ எப்பொழுது நினைக்கிறயோ அப்பொழுதுவருகிறேன்.

ஞா :- அதெப்படி முடியும். வண்டிவர நாழியாகாதோ?

ருக் :- நீ சமத்து. நீ கண்ணை மூடிக்கொண்டு, அம்மா ருக்மணி! அம்மா ருக்மணி! அம்மா ருக்மணி! என்று மூன்றுதரங் கூப்பிடு நான் வந்துவிடுகிறேன்.

ஞானமணி, நெஜம்மவா? என்று கேட்டு வாய்மூடுமுன், கிருஷ்ண பரமாத்மாவும். ருக்மணிதேவியும் அந்தரத்யானமாய் மறைந்துவிட்டனர். கிருஷ்ணனையும், ருக்மணியையும், குழந்தையின் தர்க்கத்தையும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த நித்யரும், சத்யாவும் அவர்கள் அந்தரத்யான மடைந்ததைக் கண்டு, மனம்பதறி திடுக்கிட்டு, ''பிரபோ! என்ன மாயம்! தேவா? ஏன் மறைந்தாய்? கிருஷ்ணா! எங்குசென்றாய்! மாயா எங்களைப்பிரிய உன் மனம் எப்படித் துணிந்தது? எப்படித் துணிந்தது? என்றுபித்தம் பிடித்தவர்கள்போல் கூத்தாடினார்கள், அத்துடன் ஞானப்பிரகாசனும், ''ஏ சின்னம்மா! ஏ சித்தப்பா! என்னை விட்டுட்டு எங்கேயோ போயுட்டேளே. இன்னுமே நான் என்னபண்ணுவே என்று சொல்லியழுதான். இங்கு புலம்பி நிற்கும் மூவரையும், திருவனந்தபுரத்தி லுள்ள அவர்களது வீட்டில் கொண்டுபோய் சேர்க்கும் பொருட்டு கிருஷ்ணனுடைய மாய்கையால் பத்தடி தூரத்திற்கு அப்பால் கிருஷ்ண பரமாத்மாவின் உருவம் தோன்ற மூவரும் ஓடிச்சென்று அவரைக் கட்டிப்பிடிக்கும் தருணம் அது ஓர் ஆலமரமாய் காணப்பட்டன. மறுபடியும் கொஞ்ச தூரத்திற்கப்பால் கண்ணன் நின்று, நித்யா-சத்தியா அங்கே ஏன் நிற்கின்றீர்கள். இங்கேவாருங்கள் என்று அழைக்க அவரும் செல்லுங்கால், அது ஓர் தென்னமரமாய் மாறிற்று. இப்படியாக அங்குள்ள செடிகளும், மரங்

களும் கிருஷ்ண பரமாத்மாவாக தோன்ற ஒவ்வொரு மாத்திலும் விழுந்து எழுந்தனர். பின்பக்கத்திலிருந்து கிருஷ்ணன் ஓடுவதை கண்ட மூவரும், அவரைப் பின் தொடர்ந்து, கண்ணா! உன்னை விடுவேனா, என்னை நீ பிரிவாயோ, நீ எங்கு ஓடினாலும் நாங்கள் உன்னை விடமாட்டோம் என்று கூச்சலிட்டுக்கொண்டே ஓடிவர, தாகில் வாசலில் நின்றுகொண்டிருந்த சாரட் (சத்தியரூபி, நாகர்கோவிலுக்கு வந்த சாரட்) டில் கிருஷ்ண உருவம் ஏறிக்கொண்டதை கண்ணுற்ற அம்மூவரும், கண்ணா அகப்பட்டுக்கொண்டாயா! இனிமேல் உன்னை விடமாட்டோம், விடமாட்டோம் என்று அவர்களும் சாரட்டில்ஏறிக்கொள்ள, கிருஷ்ணனும் மறைந்தார். நித்தியரும், சத்யாவும் ஆத்ம தெரிசனத்தை கண்ணுற்றிருந்தார்கள். சாரட்டும் காற்றாய்ப் பறந்து நித்தியதர்மரின் பங்களாவை அடைந்தது.

அவர்கள் தங்களது பங்களாவிற்குள் பிரவேசிக்கும் தருணம், கோவில் உஷக்கால மணியடிப்பதும் சரியாயிருந்தது. அச்சமயம் உள்ளிருந்து நான்கு தாதிமார்கள் வந்து, அவர்களுக்கு காலலம்பி, உள்ளே அழைத்துச்சென்று, ஸ்நானஞ்செய்வித்து, குடலையில் புஷ்பங்கொண்டுவந்து கொடுத்து நித்தியரை பூஜைசெய்யச்சொல்லிவிட்டு,மற்றையோர்களுக்கும் வேண்டிய பணிவிடைகளை பணியாளர்கள் செய்தனர். ஆனால், அவருக்கு இது ஒன்றிலும் புத்தி நாடவில்லை. பரந்தாமன் திருவடியில் ஞாபகம்கொண்டு, பரமானந்தங்கொண்டிருந்தார்.

## அத்தியாயம் 13

### எதிர்பாரா — பெருமகிழ்வு.

இங்கு இப்படியிருக்க, நாகர்கோவிலில் இரவு முழுதும் தூக்கமில்லாமல், “நம் சித்தியும், சித்தப்பாவும் நம்மிடத்தில் இவ்வளவு நேசமாயிருப்பவர்கள், இதுவரையில் நம் கிரகத்திற்கு வராமலும், நம்மைப் பார்க்காமலும் இருக்கக் காரணமென்ன? அவருக்கு இராஜாங்க வேலை அதிகமாயிருந்தாலுங்கூட ஒரு கடிதமாவது போடமாட்டாரா! அன்றியும்சகோதரரைப்பார்க்க வேண்டுமென்று நான்கு தினங்களுக்கு லீவு வேண்டுமென்றால் லீவு கொடுக்கமாட்டார்களா? என் சித்தப்பாவுக்கும் குழந்தை

கள் இல்லையாம், என்னையும், ஞானத்தையும் தங்கள் குழந்தைகளாகப் பாவிப்பதாய் என் சிற்றன்னை கூறுகிறாள். இவ்வளவு பிரியமுள்ளவர்கள் ஒருமுறையாவது வந்திருக்கமாட்டார்களா? எனக்கு விபரம் தெரிந்தது முதல், என் தாய் தந்தையரையும், கிருஷ்ண பரமாத்மாவையும் தவிர, வேறொரு பந்துக்களையும் நான் பார்த்ததில்லை. இன்றைக்கு இதுவோர் புதுமையாக இருக்கிறது. அதுவும், ஜெகத்பிரபுவான என்னப்பனும், என் அம்மையும் என்பால் மனமிறங்கி, என் மாதா, பிதா என உருக்கொண்டு வந்தனரோ? அப்படியும் இருக்குமோ? நான் என்ன அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறேனா? இல்லையே, புஷ்பம் கொய்வதும், பூஜை செய்வதையும் தவிர, வேறொன்றும் யான் அறியாதவளாயிற்றே. ஆனால் என் தாய் தந்தையரின் பக்திக்கு இறங்கி, அப்பரமனே வந்திருக்கலாகாதா! எப்படியாயினும் சரி, பற்பல யோசனை ஏன்? பொழுது விடிந்ததும் அன்னையிடம் கேட்டு விஷயத்தை தெரிந்துகொள்ளலாம். ஏன் பதருகிறாய் மனமே! தைரியத்தைக் கைவிடாதே" என்று தன் மனதோடு பேசிக்கொண்டே அன்றிரவைக் கழித்தாள். அருண உதயத்தை எதிர்பார்த்திருந்தாள்.

மறுநாள் அருணனும் தனது செங்கதிர்களை விரித்துக்கொண்டு, வயல்வெளிக்குப் போவோர்களை போவென்று சொல்வது போலவும், கரும் இருட்டொழித்து பளீர் என்ற வெளிச்சம் தோற்ற, அடிவானத்தில் பிரகாசிக்கவே, குணமணி தன் பதியைய நமஸ்கரித்து, பாதங்களைத் தொட்டு, கண்ணொற்றிக்கொண்டு, சயன அறையினின்றும் வெளியேறினாள். மாடியை விட்டு கீழிறங்கினாள். ஒவ்வொரு அறையிலும் நுழைந்து நுழைந்து பார்த்தாள். எங்கு தேடியும் அவள் சிற்றன்னையையும், சிறிய தகப்பனாரையும் கண்டுகொள்ள இயலவில்லை. அவள் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. இன்னமும் சமயலறைக்குள்ளிருப்பாளோ என்றும், அங்குபோய் அதையும் விடாமல் தேடினாள். தேட வரும்பொழுது கோமளாங்கி சமயலறையிலுட்கார்ந்துகொண்டு பக்ஷணம் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். கிணற்றின் கரையில் ஸ்நானம்செய்துகொண்டிருந்த கோதண்டம், "அம்மாமீ! அம்மாமீ!" என்று பலதடவை கூப்பிட்டான். ஆனால்,

அது அம்மாமியின் காதில் விழுமா? விழுந்தாலும் சீக்கிரத்தில் கோமளாங்கி அதற்கு பதில் கொடுத்துவிடுவாளோ? அவள் பேசாமலே இருந்தாள். இதைக்கண்டு கோபமுற்ற கோதண்டம், ஈரவேஷ்டியுடன் அங்கோடிவந்து, "ஏ அம்மாமீ! எத்தனை தடவைகள்தான் கூப்பிடுவது? ஏன் என்றுக் கேக்கக்கூடாது? உங்களுக்கென்ன அப்பேர்ப்பட்ட வாழ்வு வந்துடுத்து. ஒங்க உயிர் தப்பியது என்னால்தான். ஞாபகமிருக்கட்டும்" என்று கேட்டான்.

கோம :- என்னடா! என்ன? எனக்கென்ன வந்துடுத்து? என்னை என்ன பேர்ழிலேயா தூக்கிப் போட்டிருந்தது?

கோத :- இல்லே! இல்லே!! சக்கூலிலேதான் தூக்கிப் போட்டிருந்தது. குணமணியைப் படாதபாடு படுத்தினதிலே பேச்சு வேறையா; பேச்சு? அவ சித்தப்பாட்டே நான் சொல்லிக் கொடுத்திருந்தேன்னு உங்க கதி என்னவாயிருக்கும்? அது நான் செய்யலேன்னுதானே என்னை அலட்சியம் பண்றேள். வேண்டியதுதான், இந்தக்காலம் கடக்கிற கடையப்படி? உங்கபேர்லே குற்றமில்லே. இருக்கட்டும், பார்த்துக்கிறேன். அந்த மந்திரி இன்னும் எப்பவாவது ஒரு தடவை வரமாட்டாரா? அல்லது நீங்க படுத்தின பாட்டை, ஒரு லெட்டரிலாவது எழுதி போட்டு, ஒங்க தலையை ஒரே சீவலாக சீவிவிடச் சொல்றேன்" என்று சொல்லி அட்டகாசம் செய்துகொண்டிருந்தான்.

தான் குணமணியைப் படுத்தியபாட்டை, கோதண்டம் லெட்டர் எழுதிவிடப்போகிறானே என்ற பயம் கோமளாங்கியை வதைத்தது.

கோம :- அடே! அடே கோதண்டா!! சொல்லாதேடா. நான் பக்ஷணஞ் சாப்பிட்டிண்டிருந்ததுனாலே பேசமுடியல்லே, நீ சொல்லாதேயிருந்தாயானால் நான் ஒனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைப்பேன்.

கோத :- இன்னும் கல்யாணம் ஒண்ணுதான் குறைச்சல். ஒங்களைக் கட்டிக்கிண்டு, மாமா படற கஷ்டம் போறாதா?

இன்னும் என்னைவேறே கழுத்தில் கட்டிக்கொண்டு அழேய சொல்றேளோ? நீங்கசெய்யராப்பலேதான் அவளும் ஏதாவது செய்வாள். தலெலெ எழுத்துதான். குணமணிதான் பணக்காரியாயிட்டாளே, படுத்திவைக்க வேறு யாருமில்லேன்னு பாக்கறேளோ? போதும்; போதும் உங்கள் சவரணை.

கோம :- கோவிச்சுக்காதேடா. அதுபோகட்டும்; அண்ணு, மன்னி இருவரையும், பின்னால் வரச்சொல்றேன். நீங்களெல்லாம் மின்னாடிபோங்கோன்னாரே, அப்புரம் அவாளே கண்ணுலேயே காணுமேடா?

கோத :- ஆமாம்; இதெல்லாம் உங்களுக்கொரு வியாக்யானம் அவாளையும் அப்படியே மைசூருக்கு அழைச்சிண்டு போயிருப்பார்,

இதை கவனித்த குணமணி, மாமியிடம் ஓடிவந்து நமஸ்கரித்து; மாமீ! என் சித்தப்பா, சித்தி, அம்மா, அப்பா எல்லோரும் எங்கே? என்று கேட்டாள்.

கோம :- ஒங்க சித்தப்பாவும், சித்தியும் இரவே போகணும்னு பிடிவாதம் பிடிச்சா, நாளைக்கு மைசூரிலே தர்பாராம்; அதுக்காக அவர் அவஸரப்பட்டுக்கொண்டு, சாப்பிடாமல் கூட போய்விட்டார். ஒங்க அம்மாவும், அப்பாவும் அவரோடேயே போனார்கள். இன்னும் திரும்பி வரவேயில்லே.

குணமணியின் சந்தேகமும் அரைப்பங்கு நிவர்த்தியாயிற்று கையைப் பிசைந்து, "தேவா! என் தாய் தந்தையரையும், சகோதரனையும் உன்பால் சேர்த்துக்கொண்டாயோ? நான் மட்டும் உனக்கு வேண்டாதவளோ? நான் மட்டும் பாதகியோ? என்னையும் அழைத்துக்கொள்ளமாட்டயோ?" என்று தன்னையு மறியாமல் வாய்விட்டலறினாள். கோமளாங்கி நடுநடுங்கி, இருந்த இடம் விட்டசையாமல் ஓர் கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள். கோதண்டமோ அவ்விடத்திலேயே நில்லாது கிணற்றிற்கு ஓடிவிட்டான். வாயலிலிருந்து கோபு கோமளாங்கியிடம் ஓடிவந்து, "அம்மாமீ! நேத்திராத்திரி மந்திரியோடே நித்யர் மாமா

ஸத்யா மாமீ, குழந்தை ஞானம் மூணுபேரும் போலுமேளா இல்லேயோ, அவர்கள் மூவரும் கொஞ்ச தூரிக்கெல்லாம் திரும்பி வந்து, "கிருஷ்ணா! உன்னை விடமாட்டோம், விடமாட்டோம் ன்னு சொல்லிக்கொண்டே பீடனில் ஏறிக்கொண்டு திருவனந்த புரத்துக்குப் போய்ட்டா" என்று சொன்னான்.

இதைக்கேட்ட கோமளம், "அப்படீன்னு அவா திருவனந் தபுரம் போயிட்டான்னு சொல்லு" என்று பச்சாத்தாபப் படுவதுபோல் கேட்டாள். குணமணியின் சந்தேகம் முக்கா லும் நிவர்த்தியாய்விட்டது.

"ஆம்; ஆம்! என் மதுஸூதனனைத் தவிர, மற்றெவரு மில்லை. என்னப்பனே வந்திருக்கிறார் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. கண்ணா! கார்முகில் வண்ணா! பக்த பரிபாலா! பரமதயாளா! ஆயர்குலக் கோனே! கிருஷ்ணா! கிருஷ்ணா!!" என்று பிரமைதட்டியவள்போல் புலம்பிக்கொண்டு, புறக்கடை சென்று பூந்தோட்டத்திலுள்ள ஓர் மேடையின் மீது உட்கார்ந் தவள் தன் பிரக்ஞையற்று வேரற்ற மரம்போல், கீழே சாய்ந்து மூர்ச்சையாயினள். அதுசமயம் ஸூப்ரகாசனும் அத்தோட் டத்தில் வந்து சௌந்தர்ய தேவதையான தன் காதலி, கண் ணீர் சொரிய மதிமயங்கி யிருப்பதைக் கண்டு மனம் வருந்தி திகிலடைந்து, அவளருகில் வந்து தட்டி எழுப்ப, அவள் சற்று கண்ணைத் திறந்தபின்தான் அவனுக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற் பட்டது. அவளருகில் உட்கார்ந்து, கண்ணைத் துடைத்து, "என் உள்ளத்தைக் கவர்ந்த அன்னமே! உன் மந்தகாசமுகம் வாட்டமடைந்திருக்கக் காரணமென்ன?" என்று வினவினான்.

குண :- நாதா! என் மாயன் என்னை ஏமாற்றிச் சென்றார்.

ஸூப் :- யார் அது?

குண :- அவர்தான். அருமை யாதவன்!

ஸூப் :- என்ன! யாதவனா இங்கு வந்தார்?

குண :- ஆம் நாதா! கோபாலன், மாதவன், கிருஷ்ணன், துவா ரகநாதனெனப் பல பெயர்களைப் பூண்டவர், என்னைப் பரி பாலித்தவர், உலகையே பரிபாலிப்பவர். என் பொருட் டுள்ள அன்பை வாயால் பேசவுந் தகுமோ? நாதா என் சித்

தப்பா, சின்னப்பாவாக வந்து எனக்கு ஸ்ரீதனம் கொண்டு வந்தார்களே அவர்கள் யார் தெரியுமா?

ஸாப் :- ஊம்; நன்றாய்த் தெரியும். அனைவரும் சொல்லினர் அவரும் சொன்னார், மைசூர் மந்திரியென்று! ஏன்?

குணா :- ஊம்; மைசூர் மந்திரியா! இல்லை இல்லை, உலக ரக்ஷகராகிய, கிருஷ்ண பரமாத்மா.

ஸாப் :- என்ன இது! நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே. கிருஷ்ண பரமாத்மாவாவது, உன் சிற்றப்பாவாவது? இது என்ன விந்தையிலும் விந்தையாயிருக்கிறதே!

குணா :- ஆம் நாதா! நான் சொல்வது முற்றிலும் உண்மையே. அவருக்குத் தன் பக்தர்களை காப்பதே கடமை. அவருக்கு எந்தவித பேதமும் இடையாது. தாயும் அவரே, தந்தையும் அவரே. அண்ணனும் அவரே, தம்பியும் அவரே. பக்தரைப் பாதுகாக்கும் நிமித்தம் எந்த ரூபம் வேண்டுமானாலும் எடுப்பார். அவரே என் சிற்றப்பாவாக வேடந்தரித்து வந்திருக்கிறார்.

ஸாப் :- குணமணி! இது கலியுகமென்பதை மறந்தாயோ?

குணா :- பக்தரைப் பரிபாலிக்க எந்தயுகமானாலென்ன?

ஸாப் :- குணா! பகவான் நேரில் வந்தார் என்பது இக்கலியுகத்தில் நடக்கக்கூடிய காரியமோ? அந்தர்யாமியாகு மீசன் மறைவாயிருந்து சகலகாரியங்களையும் நடத்துவாரே தவிர எதிரில் வரார்.

குணா :- நாதா! கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான என் கண்ணன், எத்தனை பக்தர்களுக்கு இக்கலியுகத்திலும் எவ்வளவோ வேடிக்கைகளை செய்திருக்கிறார். அதில் இதுவு மொன்று.

ஸாப் :- இது என்ன பிரேமை! மைசூர் மந்திரியை கிருஷ்ண பகவானென சாதனை செய்கிறாயே! இதை நான் நம்புவதற் கில்லை.

குணா :- பிராணபதி! தங்களுக்கு இன்னும் ஏன் இந்த அவநம்பிக்கை அந்த கோபிகாலோலனைத் தவிர, எனக்கு சித்தப்பாவுமில்லை, சின்னப்பாவும் இல்லை. அவரே என்னாவலை நிறைவேற்ற வந்த கருணையங்கடல்.

ஸாப் :- இது என்ன வீண் பிடிவாதம்; உனக்கு பித்தம் தலைக்கேறிவிட்டதோ?

குண :- ஆம்; ஆம் தாங்கள் சொல்வதிலும் பிழையில்லை. நான் பித்தங்கொண்டவளேயாம்! என் சித்தப்பாவும், சின்னம்மாவும் இன்னார் என்று அப்பொழுதே அறியாமல் மதிமயக்கமுற்றிருந்த அறிவிலிதானே நான். பைத்யக்காரி என்பதற் கென்ன தடை.

ஸாப் :- என் கண்ணே குணமணீ! இன்னமும் நீ சொல்வதையே சொல்லுகிறாயே! எனக்கோ உண்மை தெரியவில்லையே! இந்த தர்மசங்கடமான நிலைக்கு என் செய்வேன்.

குண :- நாதா! மன்னிக்க வேண்டும். என் சந்தேகம் முற்றும், தெளிந்தபின் தான் என் புத்தி ஸ்வாதீனமடையும். என் மனோ சஞ்சலத்தை நிவர்த்தி செய்துகொள்ளாமல், இனி இங்கொரு க்ஷணமும் உயிர்தரியேன். நான் சென்று வருகிறேன் என்று ஓட ஆரம்பித்தாள். ஸாப்ரகாசனும் பின் தொடர்ந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "குணமணீ! என்ன இது பைத்யம் முத்திவிட்டதா? எங்கே ஓடுகிறாய்?" என்று மீண்டும் கேட்டான்.

"ஆம், ஆம்! என்னப்பன் பைத்தியம் முற்றிவிட்டது. இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளவே போகிறேன். ஆகையால் தடைசெய்யாது உத்தரவளித்து அனுப்புங்கள், வது இவள் பிடிவாதம் பிடிக்கிறாள் என்று கொஞ்சமும் எண்ணாதீர்கள். அதைத் தெரிந்துகொள்ளாவிடில் என் இருதயம் பிளந்துவிடும் போலிருக்கிறது. ஆகையால் சற்றும் தடை செய்யாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே மேலும் நடக்க ஆரம்பித்தாள். இதைக்கண்ணுற்ற ஸாப்ரகாசனும், இவளைத் தனித்து இங்கு இருத்துவதால் ஏதேனும் விபத்து நேரிட்டாலும் நேரிடலாமென்ற ஐயம் ஓங்கவே, "சரி" என்று சொல்லி, தானும் வருகிறேன் என்று, இரு குதிரைகள் பூட்டிய பீட்டன் ஒன்றை கொண்டுவரச்சொல்லி, இருவரும் திருவனந்தபுரம் புறப்பட்டனர்.

பீட்டன்னடத்தும், குமாரஸிங்கின் ஸாமர்த்தியத்தால், குதிரைகளும் காற்றாய்ப் பறந்தன. ஆனால் என் செய்வது; வெகு

தூரமாயிருந்தபடியால், மத்தியானம் சுமார் 12 மணிக்குத் திருவனந்தபுரத்தில் நித்தியர் வாசம்செய்யும் வீதியை அடைந்தனர். அங்கு விசித்திரமான பங்களா ஒன்று என்றுமில்லாமல் தன் வீடு இருந்த இடத்தில் இருந்தபடியால், அதைக்கண்ணுற்ற குணமணி திகைத்து, உற்றுப்பார்த்து, அது தன்னுடைய வீடாயிருக்க முடியாதென்றும், அதில் தன் தாய்-தந்தையர்கள் வசிக்க முடியாதென்றும், ஆகையால் இத் தெருவே நாம் வசித்துவந்த தெருவில்லையோ என்ற சந்தேகம் கொண்டு, பீட்டனைத் திருப்பச் சொன்னாள். பீட்டன் திரும்புமளவில், அவள் தோழியான சுந்தரி, ஏதோ அலுவலாக தெருவில் வந்துகொண்டிருப்பதைப் பார்த்த குணமணி, பீட்டனிலிருந்து கீழே யிறங்க, சுந்தரி ஓடிவந்து, குணமணியைக் கட்டிக்கொண்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். குணமணி அவளைப் பார்த்து, "என் னுயிர்க்குயிரான சுந்தரி, நம்தெரு இதுதானே?" என வினவ,

சுந்தரி :- ஆமாம், அதிலென்ன சந்தேகம்! நீ புக்காத்துக்குப் போனதும், தெருவைக்கூட மறந்துட்டேயோ? இனுமே மனுஷ்யாளை மறக்கக் கேட்பானேன்.

குண :- இல்லேடீ, நானுன்னை மறப்பேனா? என்னுயிர் உள்ள வரையில் மறவேன்.

சுந் :- ஆமாம் ஆமாம்! நாளுநாளுக்குள்ளே தெருவே தட்டுகிட்டுப்போச்சு. இன்னுங் கொஞ்ச நாள்போனா எப்படியோ?

குண :- இல்லை சுந்தரி! கூரை வீடாயிருந்த யிடத்தில் பங்களா யிருப்பதால் சந்தேகம் ஏற்பட்டது. இந்த பங்களா இங்கே எப்படி வந்தது?

சுந்த :- உன்னுடைய கண்ணாந்தான் உனக்கு இதெல்லாம் கொடுத்திருக்கார். உனக்குத் தெரியாதா?

குண :- உண்மையாகவா? என்று கேட்டதற்கு, அவளும் உண்மையென்று சொல்லவே, குணமணியின் சந்தேகம் அறவே நீங்கிற்று. குணமணியும், ஸ[illegible]ப்ரகாசனும், சுந்தரியும் மூவரும் பங்களாவிற்குள் பிரவேசிக்க, அங்கிருந்த தாதிகள் அனைவரும் குணமணியை அதிக ஆவலுடனும், உபசாரத்துடனும் வரவேற்றனர். அச்சமயம் குணாவும், ஸ[illegible]ப்ரகாசனும் ஒருவரையொருவர் பார்த்து திகைத்து நின்றுகொண்டிருந்தனர்.

அச்சமயம், சுந்தரியும் ஏதோ தனக்குக் கொஞ்சம் அலுவல் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இவர்கள் வரவை சேடிகள் மூலம் அறிந்த சத்யாவும், நித்யரும் விரைந்தோடி வந்து, சுப்ரகாசனை நித்யர் அதி உபசாரத்துடன் அழைத்தார். உடனே சுப்ரகாசன் அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, "மாமா, உங்கள் மகிமையை ஆயிரம் நாக் கொண்ட ஆதிசேஷனும் வர்ணிக்க இயலாது என்றால், ஒரு நாக்கைப் படைத்த மனிதனால் எப்படிச் சொல்ல இயலும். நான் தங்களை மாமனாராக அடைய என்ன பாக்யம் செய்தேனோ என்பது எனக்கே தெரியவில்லை" என்றான்.

நித் :- எல்லாம் அவனருள் என்று சொல்லி, சுப்ரகாசனைப் பகவத் சந்நிதானத்திற் கழைத்துச் செல்ல, அவனும் மிகுந்த பக்தியோடு, பரந்தாமனை பஜித்து நின்றான்.

நித்யருடன் சென்ற சத்யாவோ, குணவை அதிக ஆவலுடன் கட்டி முத்தமிட்டு, "என் கோடித் தவமணியே உன் பெருமையே பெருமை" என்றனள்.

குண:- அம்மா, இந்த மாளிகை இங்கே எப்படி ஏற்பட்டது?
சத் :- எல்லாம் அவன் திருவிளையாடல்.

குண :- என் சிற்றன்னை. சிறிய தந்தையாக வந்தவர்கள் யார்?
சத் :- நீ யாரென்று நினைக்கிறாய் ?

குண :- பூவுலகிற்கும், தேவலோகத்திற்கும் அதிபதியான, ஸ்ரீமந் நாராயணன் என்பதே என் நினைவு.

சத் :- ஆம்! அம்மகானுபாவன் தான்.

குண :- நிஜந்தானா! . நிஜந்தானா!!

சத் :- ஆம். உண்மையில் அவன் தான்.

குண :- அப்படியானால், அவர் உங்களுக்குத் தெரிசனம் கொடுத்தாரா ?

சத் :- ஏன் கொடுக்காமலென்ன? கொடுத்தார். சங்கு சக்ராய், ருக்மணி சமேதராய், கெருட வாகனத்துடன் காக்ஷி கொடுத்தார்.

குண :- ஆஹா! அம்மா! நீங்கள் தெரிசித்ததைப்பற்றி நான் மிக்க சந்தோஷமுறுகிறேன். ஆனால், என்னைப்பற்றி நினைத்தால், எனக்குள்ளே பற்பலகேள்விகள் உதயமாகின்றன. அம்மா! நான் மட்டும் என்ன பாபியா? கொடியவளா? எனக்கு நரகந்தானோ கதி?

சத் :- எங்கள் குறையைத் தீர்க்கவந்த இன்னமுதே! நீ அழுவதேன்; ஒன்றுக்கும் கவலையுறாதே. நீதான் அனைத்திற்கும் காரண கர்த்தா; நீயே பாக்யவதி.

குண :- அம்மா! என்னையா பாக்யவதி என்கிறாய்; சொன்னாலும் பாபம் பற்றுமே.

சத் :- கவலையுறாதே. உள்ளே வந்து பகவானைப், பார், அவர் சன்னிதி எப்படி அமைந்திருக்கிறது பார்? சாக்ஷாத் எம்பிரானே நின்றுகொண்டு பேசுவதுபோல் தெரியும்.

அதுசமயம், ஞானப்பிரகாசன் வந்து "அக்கா! அக்கா! எப்போக்கா வந்தே, நம்ம அம்மாச்சிக்கண்ணன் எவ்வளவு ஜோராயிருக்கிறார் பார்த்தியோ? அவர் ராத்திரி என்னோடே பேசினாரே ஒனக்குத் தெரியுமோ? ஒன்னோடே பேசினாரோ?" என்று கொஞ்சும் மொழியில் கேட்டான். என் தங்கமே என்று ஞானப்பிரகாசனை வாரி அணைத்துத் தூக்கிக்கொண்டு மூவரும் வீட்டினுள் பிரவேசித்தார்கள். இந்திர சபையோ என்று ஐயுறுமாறு பதின்மடங்கு அலங்காரத்துடன் பரந்தாமன் சந்நிதானத்தைக் கண்ணுற்ற குணமணி அகங்கொள்ளா மகிழ்ச்சியுடன், ஆனந்தக்கூத்தாடினாள். நான்கு புறங்களிலும் படங்களும், மேல் கட்டிகளும், குளோபர்களும், விதவிதமான மணி சரங்களும், பளீர் பளீரென கண்ணைப்பறிக்க, முன்பு முழ உயர பீடத்தில் இருந்த கிருஷ்ணன், இப்போது சித்திரப்பூச் செங்கல் பரவிய பதினாறு படிக்கட்டுகளையும், நாற்புறமும் வேலைப்பாடமைந்த சித்திரப் பதுமைகள் சூழவும், அப் பதினாறு படிகளிலும் கல்விழைக்கப்பெற்றும், சொர்ணப்பீடத்தில், ஸ்ருங்கார பில்லாங்குழலுடன் நிற்கும், ஸ்ரீதர மூர்த்தியைக் கண்டு, படிக்கொரு ஸ்தோத்திரம் பாடி, பக்தி பரவசத்தால் தன்னையும் மறந்து, அபிநயத்துடன் பதினாறு படியையும் தாண்டி, பரந்தா

மனிருக்கும் பீடத்தினருகில் உட்கார்ந்து, கைகுவித்து, "ஹே! சர்வதேவ சோஸ்திர புனிதா! சர்வலோக சரண்யா! ஸர்ப்ப சயனு! ஸர்பாலங்கார சந்திரசூடன் மைத்துனு! பார் புகழும் நேயா! பாண்டவர் சகாயா! கோபிகா லோலா! கோவர்த்தன கிரியை குடைபிடித்த குணனே! அபயம் என்று சொன்னவர்களுக்கு அபயம் அளிக்கும்வள்ளலே! உன் சேவையைக்காண நான் மிக்க ஆவல் கொண்டேன். ஏ கோகுலநாதா, மனமிரங்கலாகாதா! உம் மனம் இறங்காதா? இப்பேதை மேல் வாதா? நானென்ன உமக்கு வேண்டாதவளா? நீதான் எல்லோரையும் சமமாகக் கருதுவாய் என்று சொல்கிறார்களே! வேண்டுபவரும் வேண்டாதவரும் உமக்குண்டோ? ஹே கோபாலா, பெண்ணென்றால் பேயும் இறங்குமென்பார்களே! உன் நெஞ்சம் என்ன கல்லோ? இரும்போ? அபயங் கேட்பவருக்கு அபயம் அளிக்கும் வள்ளல் என்று சொல்கிறார்களே, அது எம்மட்டில் பொய்யோ? அப்படியாயின் என்னை ஏன் படைத்தாய்? இனி என்னால் பொறுக்க முடியாது. உன்னையே சரணம் புகுந்தேன். ரக்ஷித்தாலும் நீயே, பக்ஷித்தாலும் நீயே. உன்னையன்றி எனக்கு வேறு கதியில்லை, சுற்றமில்லை" என்று பரந்தாமனின், விக்ரஹத்தின் திருவடியில் பணிந்து இரு காலையும் கெட்டியாய் பிடித்துக்கொண்டு, "ஹே கிருஷ்ணு! கிருஷ்ணு! நீ தெரிசனம் தாராவிடில், உன் காலை விடப்போவதில்லை." என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள்.

சர்வலோக சரண்யனுகிய எம்பெருமானும், அவள் பால் அன்புகூர்ந்து, விக்ரஹத்தை மறைத்து தன் ஸ்வரூபத்துடன் தோன்றி, "உன் அழுகை போதும், என் அருந்தவப் புதல்வியே! உன் பக்திக்கும், வைராக்யத்திற்கும் மெச்சினேம். என் குணச் செல்வமே எழுந்திரு; என்னைப்பார்" என்றார். குணமணி யெழுந்து நமஸ்கரித்து, உள்ளம்பூரித்து, பாதகமலங்களை கண்ணிலொற்றிக்கொண்டு, அண்டொளிக்கவொண்ணு ஆனந்தத்தில் மூழ்கி, ஆஹா "என்னப்பனே! நீ கிருபைகூர்ந்தது என் பாக்யமே! ஹே பிரபோ! இவ்வளவு அழகோ உன் ரூபம். உன்னை வர்ணிக்க என் ஒரு நாப்போதாது. ஏன், அந்த ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனும் இயலாது. உன் தெரிசனத்

ணைக் கண்டபின் அல்லவோ விளங்குகிறது. நின் விஷயத்தை ஒன்பதுவிதமாய்ச் சொல்லப்படுஞ் சமர்த்தரான, கவிவாணரும் கிரந்தகர்த்தாக்களும் புகழ்ந்திருப்பது போதாதென்று, நான் ஒரு நாவால் செந்தாமரைமலரை ஒத்த திருவடியை புகழ்வேனோ, ஜெகம் எங்கும் பிரகாசிக்கும் பீதாம்பரத்தை புகழ்வேனோ, கருணையான மணிமார்பை புகழ்வேனோ, அம்மார்பை பிரியா லக்ஷிமியின் மகிமையை புகழ்வேனோ, அன்பாம் அடியோற் குறிய அபயஹஸ்தங்களை புகழ்வேனோ, சங்குபோன்ற கழுத்தில் அணிவன மாலையைபுகழ்வேனோ, பூர்ணசந்திரன்போன்ற முகத்தைப் புகழ்வேனோ, கமலதளம் போன்ற செங்கனிவாயை புகழ்வேனோ, நற்முத்துபோல் தந்த ஒளியை புகழ்வேனோ, கருணையாம் நேத்திர மணி ஒளியை புகழ்வேனோ, மதனன் கை வில் போன்ற புருவங்களைப் புகழ்வேனோ, தினர்கள் போற்றிவரும் திலகமதை புகழ்வேனோ, சித்ரானந்த ரத்ன மகுடமதை புகழ்வேனோ, கர்ணகுண்டல தடுக்கன் ஜொலிப்பை புகழ்வேனோ, மந்தகாச புன்னகைப்பை புகழ்வேனோ, சாமள வர்ண மேனியை புகழ்வேனோ, சிங்கார பில்லாங்குழலை புகழ்வேனோ, அடியாரின் மீதுற்ற நின் அன்பை புகழ்வேனோ, ஹே! வேணுகானலோலா! உன் திருவிளையாடலை இச்சிறுமியால் எவ்வாறு புகழமுடியும்! என்னப்பனே சரணம்; சரணம்; சரணம் பிறவிப் பெரும்பிணியை அகற்றுவாய்" என்று இறைஞ்சி வேண்டினாள்.

கண் :- குணமணி! உன் பக்திக்கும், புத்தி சாதுர்யத்திற்கும், யாம் மெச்சினோம். உனக்கு வேண்டும் வரங்களைக் கேள்.

குண:- ஹே மாயா! இன்னுமா உன் சோதனை? உன்னை தெரிசித்த கண்கள் பின் வேறு யாரையும் தெரிசிக்காமல், உன் தேஜான் மயத்துடன் கலக்கும் வரம் ஒன்றே எனக்கு வேண்டும்.

கண் :- என் குணச் செல்வமே, எதெது எப்போது நடைபெற வேண்டுமோ அப்போதுதான் நடைபெற வேண்டும். ஆகையால் வீணில் பிடிவாதம் ஏன்? நீ இந்த இளம் பிராயம் வீணாகாமல், உன் பதியுடன் அனுபவிக்கவேண்டிய சுகங்கள் அனைத்தையும் அனுபவித்து, பிறகு நீ மோக்ஷ

சாம்ராஜ்யத்தை அடைவதுதான் சரியான காரியமாகும். இல்லையேல் எனக்குத்தான் அபவாதம் ஏற்படும்.

குண :- என்ன? உனக்குமா அபவாதம் ஏற்படும். ஆம் எனக்குத்தான் முன்பு. அதெப்படி உனக்கு ஏற்படும்?

கண் :- அதெப்படியா; பரந்தாமனை பூஜை செய்ததின் பலனை நல்ல யௌவன காலத்தில், உலகில் அனுபவிக்கவேண்டிய சிற்றின்ப சுகங்களைக் கெடுத்து, பால்மணம் வயதுடைய ஒரு மங்கையை, பாரிலிருந்து வாழவொட்டாமல் பாசதியளித்தானும். இவனை போற்றுவதும் இதற்குத்தானோ? இப்படியா மோசம் செய்வது. இம் மோசக்காரனையோ பகவான் பகவான் என கொண்டாடுவது; என்று அவரவர் அவரவருக்கு நினைத்தபடி சொல்ல நேரிடும். எனக்குப் பின் நைவேத்திய பூஜை கிடைப்பதுகூட அறிதாகிவிடும்.

குண :- கண்ணா! உன்னைத் தூற்றுபவரும் உலகில் உண்டோ! அல்லது என்னை சோதிக்கிறாயா?

கண் :- நான் உன்னை சோதிக்கவில்லை. உண்மையைத்தான் சொன்னேன்.

குண :- இனிமேல் இந்த மாய வாழ்வில் ஈடுபட நான் சம்மதியேன். என்னைக் கோபிக்காதே.

கண் :- உன் பிதாவான என் வார்த்தையை நீ தட்டி நடத்தல் தர்மமாகுமா?

குண :- அப்படியானால் என்மீது இன்னும் தயவு பிறக்கவில்லை போலும்; இதுவும் உன் சித்தமா?

கண் :- இனி மேல் உனக்கு ஒரு குறைவும் ஏற்படாது. இச்சிறு வயதில் ஸாகித்ய பதவிக்கேகினால், உன் பிரிவாற்றாது உன் பதியும் உயிர் துறப்பான். தாய் தந்தையரும் ஜீவனை விடுவார்கள். பின் இப் பாவங்களெல்லாம் என்னைத்தானே சேரும். அதற்கு நான் உடன்படுவது சம்மதமா?

குண :- வேண்டாம் வேண்டாம்; கண்ணா நீ எப்படிச் சொல்கிறாயோ அப்படியேச் செய்கிறேன்.

கண் :- என் குணச்செல்வமே, உன் ஆழ்ந்த புத்திக்கு மெச்சி னேன். நீயே பாரதநாட்டின் தவப்புதல்வி. நீயே பாரத நாட்டை முன்னேற்ற வந்தவள், நீயே கற்பின் சக்கரவர்த் தினி, அநேக துஷ் கிருத்யத்தை செய்ய முயல்வோரும், உன்னை பார்த்தளவிலேயே அல்லது உன் பெயரை கேட் டளவிலேயோ சத்கிருத்தியத்தில் திரும்புவார்கள். தேச பக்தர்கள் அநேகரும் உன்னைகொண்டாடும்படி கிழக்குமலை அடிவாரத்தில், குணவதிபுரமெனும் ஒரு பட்டணம் சிருஷ் டித்திருக்கிறேன். நீயும் உன் பதியும் அப்பட்டணத்திற்கு சென்று, மகுடம் தரித்து, செங்கோல் செலுத்தி, பிரா மணர்களின் ஆசீர்வாதம் பெற்று, ஹரிஜனங்களுக்கும் ஓர் வித குறைவின்றி, எவ்வித பேதமுமின்றி, அனைவரும் புகழ, இராஜ்ய பரிபாலனம் செய்வீர்களாக.

குண :- தேவத் தலைவனே, உன் ஆக்ஞையை சிரமேற் கொண் டேன்.

இப்படி கிருஷ்ணனும், குணமணியும் தர்க்கமாடுவதை இமை கொட்டாமல், பார்த்திருந்த சுப்ரகாசன், அதி ஆச்சரிய மடைந்து, பக்திபரவசமாய் பரந்தாமனின்பாதங்களில் சரணாகதி அடைந்தான். கண்ணபிரானும் சித்தம்குளிர்ந்து, சுப்ரகாசனைப் பார்த்து, “ சுப்ரகாசா! உன்மனமொத்த மனைவியுடன் குண வதிபுரம் அரசனாக பட்டம் தரித்து, அரசாக்ஷி புரிந்து, புத்திர பௌத்திரர்களோடு பல நூற்றாண்டு வாழ்ந்திருந்து பின் எம்மை வந்தடைவீர்கள்” என்று கிருஷ்ணன் ஆசீர்வதித்தார். குணமணி சுப்ரகாசன், நித்யதருமர், சத்யரூபி, ஞானப்பிரகா சன், ஆகிய ஐவரும், கைகூப்பி வணங்க, திருமாலும் அந்தர்த் தியானமானார். மறு விநாடியில் பழைய விக்ரஹமே தோன் றிற்று. அமலன் மறைந்து விக்ரஹமாய் நிற்பதைக் கண்டு ஐவ ரும் சற்று விசனமடைந்தனர். ஆனால் அவர் இட்ட கட்டளைப் படி நடப்பதே நம் கடமை என உணர்ந்து, ஐவரும் புண்ணிய நதியில் நீராடி நந்தவனத்தினின்றும் புஷ்பத்தைக் கொய்து வந்து, பகவத் சந்நிதானத்தில் நக்ஷத்திரங்களைப் போல நூற்றுக் கணக்கான தீபங்களைஏற்றி, கிருஷ்ணபரமாத்மாவுக்கு சந்தனம், பன்னீர், பால், தயிர், நெய், தேன், இளநீர் இவைகளால் அபி

ஷேகம் செய்து, புஷ்பங்களால் அலங்கரித்து, நிவேத்ய ஆரு தனை செய்து, பகவத் பிரசாதங்களை விநியோகம் செய்து மிஞ் சிய பதார்த்தங்களை அவ்வைவரும், புசித்து, பரமனை புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர்

## அத்தியாயம் 14
## பொருத்தார்-அரசாள்வார்.

அச்சமயம் நாலைந்து புருடர்கள் வந்து, சுப்ரகாசனை தேடு வதாக, சுந்தரி, குணமணியிடம் தெரிவித்தாள். இதை செவி யுற்ற சுப்ரகாசன், வாயலிற்சென்று அவர்களை யாரென வினவ, அவர்களும் குணவதிபுர வாசிகளென்று சொல்லி, குணவதி புரத்தில் செங்கோல் செலுத்த, பட்டத்தை ஏற்றுக்கொள்ளு மாறு சுப்ரகாசனை வேண்டினர். அவனும் சம்மதித்து, அந் நகரை விமரிசையாய் அலங்கரிக்க உத்தரவிட்டான். அவர் களும் அவ்வுத்திரவை சிரமேற்கொண்டு, அதிவேகமாய் குண பதிபுரம் சென்று,குடிகளை அழைத்து "நாளையதினம வெள்ளிக் கிழமை காலை ஆறுமணிக்கு சுப்ரகாச மகாராஜாவும், குணமணி மகாராணியாரும் நம் நகரத்திற்கு வந்து. முடிசூட்டிக்கொள்ளப் போவதால், நீங்கள் வீட்டுக்கு ஒருவராக வந்து, நம் நகரை அலங்கரிக்கவேண்டும் என்று சொல்லி நீண்டதோர் பிரசங்கம் செய்தனர். அவ்வாறே அவ்வூரிலுள்ள குடிகள் திரள்திரளாய் சேர்ந்து வீதிகளை அலங்கரித்தனர். ஒவ்வொரு வீடும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விதவிதமான வில்வட்டு மேற்கட்டி களும், குளோபர் லைட்டுகளும், இடையிடையே கையில் பூ மாலை ஏந்திய கைகளையுடைய சித்திரப் பதுமைகளையும் வைக்கப்பட்டு, முல்லை, ரோஜா, மருக்கொழுந்து, வெட்டிவேர், முதலான புஷ் பங்கள் தொடுத்த கதம்ப மாலைகளாலும், இருபுறங்களிலும் வாழைகள் தூணுக்கு தூண் கட்டப்பெற்றும், பார்ப்போர் மனம் கவர்ச்சியுறுமாறு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. அம்மண் டபத்திலுள்ள தரையை அன்னம், மயில், குயில், கிளி, யானை, குதிரை, தேர், விதவிதமான பூச்செடிகளும் அதில் வண்டு களும், தும்பிகளும், பறந்தோடி வந்து, தேனைப் பருகுவது போல் எழுதிய, கம்பளங்களால் அலங்கரித்தனர். அம்மண்ட பத்தின் மத்தியில் வஜ்ஜிர வைடூரிய மிழைத்து. இருபுறத்தி

னும், கன்றினன் போடப்பெற்று, சிங்காசனத்தின் அருகில் முத்துக்குடையை நிறுத்தி, ஜோதி அரும்பகளை பரப்பி, மண்டபம் முழுதும், நெய்த்தீபங்களால் நிறைத்தார்கள்.

நிற்க, நாகர்கோவிலில், குணமணியையும், சுப்ரகாசனையும் காணாமல், எங்கெங்கேயோ ஆள்களைவிட்டுத் தேடச் சொல்லியும், அவர்கள் போன இடம் தெரியாமல் தவித்து, தாசில்பிரபு தன் மனைவியிடம் வந்து, பிள்ளையையும், நாட்டுப்பெண்ணையும் காணாத விஷயத்தை தெரிவிக்க, பணக்கார நாட்டுப்பெண்ணை இழந்துவிடுவோமோ என்ற எண்ணம் ஒருபுறமும், தனது அருமைப்புதல்வனுக்குதான் ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற ஏக்கம் ஒருபுறமும் சூழ்ந்து கோமளாங்கியின் மனதை வதைக்கலாயிற்று. அப்படி ஏதேனும் நேர்ந்துவிட்டால், மைசூர் மந்திரிக்கு என்ன பதில் சொல்வது என்று எண்ணி, ஏங்கி வருந்தலுற்றாள்.

தாசில் பிரபும் என்ன செய்வதென்றறியாமல், திகைத்தார் ஒருசமயம், தன் மகனும் மருமகளும், திருவனந்தபுரத்திற்கு போயிருப்பார்களோ என்று ஐயங்கொண்டு, இருவரும், அவ்வூரை நாடிச் சென்றனர். எதிரில் நான்கு குதிரைகள் பூட்டிய பீட்டன் ஒன்றுவருவதைக்கண்ணுற்று, இது நம்சம்மந்தியின்பீட்டன்போலிருக்கிறதே என சற்று சந்தேகித்து, தாங்கள் சென்ற வண்டியை நிறுத்தினர். அவ்வமயம், பீட்டனில் வந்துகொண்டிருந்த சுப்ரகாசன் தன் தாய் தந்தையர் வருவதைக் கண்ணுற்று தனது பீட்டனை நிறுத்தி, குணமணி சகிதம் கீழே இறங்கி, தனது பெற்றோர்களை நமஸ்கரிக்க, சுப்ரகாசனையும் குணமணியையும்கண்ட பிரபுவும், கோமளாவும், இறந்தவர் உயிர்பெற்றது போல் உள்ளம் களிப்புற்றனர். என் "கண்மணிகளே! உங்களைக் காணாமல் எங்கள் மனம் படும்பாட்டை என்னவென்று சொல்வோம்" என்று சொல்லி இருவரும் கண்ணீர் உதிர்த்தனர். குணமணி வணக்கத்துடன், "மாமி! தங்கள் உத்திரவில்லாமல் திருவனந்தபுரம் சென்றகுற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று" வேண்டிக்கொண்டாள். "என் கட்டிக் கரும்பே! உன்னைப் பார்க்காத ஒவ்வொரு நிமிஷமும் எங்கள் மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா? என் செல்வமே உன்னைத் தேடிக்

கொண்டு தான் வந்தோம்" என்று சொன்னாள் கோமளாங்கி. சுப்ரகாசனும் பிதாவைப் பார்த்து பயபக்தியுடன், "அப்பா! நான் தங்களைக் கேளாது மாமனார் வீடு சென்றதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்" என்றான்.

"சுப்ரகாசா! பொறுப்பது ஒருபுறமிருக்கட்டும். ஏன் இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டீர்கள்? திடீரென்று இங்கு வர வேண்டிய காரணமென்ன? என்னிடம் கேட்டால் நான் போகவேண்டாமென்று தடுத்து விடுவேனோ?" என்று கேட்டார் பிரபு.

"அப்பா மன்னிக்க வேண்டும். என் இளைய மாமனாராக வந்தவர் ஸ்ரீ கிருஷ்ணபகவானென்றும், அவரை தெரியாது இங்கு இருக்கமாட்டேனென்றும், திருவனந்தபுரம் போக வேண்டுமென்றும் குணமணி விடை கேட்டாள். அப்பொழுது தாங்களும், அம்மாவும் ஆத்திலில்லை. அவளைத் தன்னந்தனிமையில் அனுப்புவது அழகல்லவே என்று நானும் போனேன், தவிர அவள்சொல்லியது போலவே மந்திரியாய் வந்தவர் அவர் தானென அறிந்தோம். அவரையும் சங்கு சக்ரதாரராய்க் கண்டோம். பிரசாதங்களும் பெற்றோம்" என்று சுப்ரகாசன் சொல்ல;

பிரபு மீண்டும், "என்ன! என்ன! மைசூர் மந்திரியா கிருஷ்ணபர்மாத்மா? இது உண்மையா?" என்று கேட்டார்.

"ஆம் அப்பா!" என்கிற ஓர் வார்த்தையை சொல்லி நிறுத்தினான் சுப்ரகாசன்.

"ஆஹா! அறியாமற் போனேன். அறிவிழந்தேன். அவரை சாதாரண மனிதரென்று எண்ணினேன். அம்மகானுபாவனா நம் கிரகத்தை நாடி வந்தார்? அவர் வர என்ன புண்ணியம் செய்தோமோ? குணமணீ! நீயே பாக்யவதி. உன் குணத்தைக் கண்டே இறைவன் அருள் புரிந்தான். உன்னை என் மருமகளாக அடைந்த நானே பாக்யவான்" என்று சொல்லி குணமணியைக் கொண்டாட அவளும், தன் மாமனாரை

நமஸ்கரித்து நின்றாள். திரும்பவும் தன் தகப்பனாரை நோக்கி, " அப்பா அவன் கருணையை என்னென்று புகலுவேன். இன்றும் ஓர் சமாச்சாரம். குணவதிபுரத்தில் நானும் குணமணியும் பட்டம் சூடி அரசாட்சி செய்யும்படி அவர் உத்திரவு. அதைத் தங்களிடம் தெரிவித்து அழைத்துச் செல்லவே நாங்கள் நாகர் கோவிலுக்கு வரும் வழியில் தாங்கள் வருவதை சந்திக்க நேர்ந்தது. உங்களுக்கு இவ்வளவு தொந்திரவு கொடுத்த எங்களை மன்னிக்க வேண்டுகிறேன் " என்று சுப்ரகாசன் வணங்கிறான்.

" எனதருமை மகனே உன் புத்திக்கும், பொறுமைக்குமே இவ்வளவு நலன்களும் ஏற்பட்டது. வா போகலாம் என்று சொல்லி நால்வரும் திரும்பி திருவனந்தபுரம் போயினர்.

சம்மந்திகளின் வரவைக் கண்ட நித்யர் அதி உபசாரத்தோடு வரவேற்றார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இரண்டு மூன்று பேர் வந்து சுப்ரகாசனை வணங்கி கை கட்டி வாய் புதைத்து நின்று, " மகாராஜ் உத்திரவுப்படி எல்லாம் செய்து முடிந்துவிட்டது. எல்லோரும் தங்கள் வரவை எதிர்பார்க்கின்றனர் " என்று சொன்னார்கள். பின்னர் அன்று முழுதும் திருவனந்தபுரத்திலேயே அனைவரும் தங்கி யிருந்தனர்.

இங்கு இப்படியிருக்க குணவதிபுரத்தில் சகல ஜனங்களும் இரவு பகல் தூக்கமின்றி புது அரசன் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். மறுநாள் பொழுது விடியவே எல்லாரும் ஸ்நானபானஞ் செய்து புதிய அரசனை வரவேற்கச் சித்தமாய் சகல ஏற்பாடுகளுடன் அதி சந்தோஷத்துடன் காத்திருந்தனர். அவ்வாறே சுப்ரகாசனும், குணமணியும் காலை 6 மணிக்குத் தன் பந்து, மித்திரர்களுடன் மங்கள வாத்தியம் முழங்க புஷ்ப பல்லக்கிலேறி சுபவேளையில் திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அவளுக்குப் பின் மற்றையோர்கள் வண்டிகளில் வரிசை வரிசையாய் வந்து கொண்டிருந்தனர். இவர்கள் எல்லாரும் குணவதிபுரத்தின் எல்லையில் வருமளவில் அவ்வூர்வாசிகளனைவரும், கையில் ஜெயக்கொடி பிடித்து, தங்க தாம்பாளத்

தில், அனாஸ், ஆப்பிள், கொய்யா, ஆரஞ்சுகளும் சந்தன புஷ்ப தாம்பூலமும் கொண்டு தங்கள் தங்களால் இயன்றபற்ற காணிக்கைகளையும்கொண்டு, ஆலாவிட்டம், சாமரம், உடை, வாள், வெள்ளிப் பிரம்புகள் முதலானவைகளை எடுத்துக்கொண்டு, எமனுடனும் எதிர்த்து போர் செய்வோம் என்று சொல்லத் தக்க அளவில் லக்ஷாதிலக்ஷம் சேனைகளையும் முன்விட்டு, நீலகிரி போல் யானைக் கூட்டங்களையும் முன்விட்டு, குதிரைகளையும் கொண்டு, அஷ்ட கெஜங்கள் பூட்டிய மாணிக்க இரதமொன்றை ஸாரதி ஸாரத்யம் செய்ய, பதினெட்டு வாத்தியங்கள் முழங்க, அரசனையும், அரசியையும், மற்றுமுள்ள அவர்களது பந்து மித்திரர்களையும் எதிர்கொண்டழைத்து, அவர்கள்கொண்டு வந்த காணிக்கைகளை யெல்லாம் ராஜ தம்பதிகளின் முன்னே வைத்து தண்டனிட்டு கைகட்டி நிற்க சுப்ரகாச மகாராஜாவும் குணமணி மகாராணியும் பல்லக்கைவிட்டிறங்கி எல்லோரையும் ஆதரணை செய்து அவர்களால் கொண்டுவரப்பட்ட வெகுமதிகளை யெல்லாம் பெற்று, புஷ்பமாலை, வஜ்ர பதக்கம் முதலியன சூடிக்கொண்டு, மாணிக்க ரதத்தில் ஏறும் சமயம் பட்டத்து யானை தன் துதிக்கையால் இரு ரோஜாமலர் மாலைகளை இருவர் கழுத்திலும் போட்டது. அவர்களும் அவ்யானையின் அறிவைப் பார்த்து ஆச்சர்யமுற்று அதைத் தழுவிக்கொடுத்து, பேரிகை சப்திக்க, பதினெண் வாத்தியங்கள் முழங்க, பிராமணர்கள் மந்திரமோத, கவிவாணர்கள் பாட, தேவதாசிகள் நாட்டியமாடப் புறப்பட்டனர்.

ஏராளமான வேட்டுகளின் சப்தம் ஒலிக்க, எண்ணத் தொலையாத குஞ்சரங்களும், குதிரைகளும், ராணுவங்களும், பல்லக்குகளும் மேனாக்களும், ஸாரட்டுகளும் கூட்டம் கூட்டமாய்வர மத்தியில் கிளி கொஞ்சும் மாணிக்க ரதத்தில் அமர்ந்திருந்த இராஜ தம்பதிகளைப் பார்த்துப்பார்த்து, அங்குள்ள அனைவரும் ஆனந்தமெய்தினர். ஹரிஜனங்களும் அகம் மிஞ்சும் சந்தோஷத்துடன், “இவர்களிருவரும் ஸாக்ஷாத் எம்பெருமானும் பிராட்டியும் போல காணப்படுகிறார்கள். இவர்கள் தேவாம்சமே யன்றி மனிதரல்ல. இவர்களே நம் பாரத தேசத்தை முன்னேற்ற வந்தவர்கள். நம் குலதெய்வ

பாக்கிய முடையவர்களே நம்மீது அன்புகூர்ந்து இவ்விதம் அவ தரித்து, நம் நாட்டை சிறப்பிக்க ஆள வந்துள்ளார் போலும்,” என்று சொல்லிக்கொண்டு கும்பல் கும்பலாய் இராஜ தம்பதிகளை தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர். அங்குள்ள ஸ்திரீகள் எல்லாம் மங்களகரமாய் ஆரத்தி சுத்திக் கொட்டினர். இப்படியாக எல்லா வீதிகளையும் வலம் வந்து அரண்மனை வாயிலையடைந்து ரதம் விட்டிறங்கினர். ஆறை தேங்காயுடைத்து, பூமாரி பெய்து, சகலவித தான தருமங்களும் செய்து, முத்து ரத்தினங்களும் வாரி இறைப்பித்து மங்களமாய்ப் பாண்டு வாத்தியம் முழங்க சகல சம்பிரமத்துடன் இராஜ தம் பதிகள் அரண்மனைக்குள் பிரவேசித்தனர். தன் தாய் தந்தை யர்களும், மாமன் மாமிகளும் மற்றைய பெரியோர்களும் ஆசீர் வதிக்கப்பெற்று இருபுறமும் தாதிகள் வெண்சாமரம்போட ரத்ன சிம்மாசனத்தில் கிழக்கு முகமாய் அமர்ந்தார்கள். வேதியர் களும் வேதகோஷ, புரோகிதரும் சகல மந்திரத்துடன் கிரியை யைச் செய்தார். அங்குள்ள கூட்டத்தைக் கண்டால் அது ஓர் மலைக்காட்சி போன்றும் தோன்றிற்று. அச்சமயம் அங்கு வந்த இராமகிருஷ்ண ஜோஸ்யரும் தான் சொன்னபடி காரியம் நடந்திருப்பதைக் கண்ணுற்று அளவற்ற மகிழ்ச்சிகொண்டு இராஜ தம்பதிகளை ஆசீர்வதித்து பக்கலிலுள்ள கோமளாங்கியை நிமிர்ந்து பார்த்தார். இதை ஜாடையாய் கவனித்த கோம ளாங்கியும் தன் குற்றத்தை இங்கேயுள்ள சபையிற் சொல்லி அவமானப்படுத்தி விடுவாரோ என்ற ஐயம் மேலிட்டு தலை குனிந்தவளாய், வாய்பேசாமலேயே நின்றிருந்தாள். தாசில் பிரபுவோ ஜோஸ்யரை அன்புடன் வரவேற்று, பெரியவரே! தம்முடைய ஆசீர்வாதத்தால் குழந்தைகள் இப்பேர்ப்பட்ட பதவி யைப் பெற்றனர். இப்பெருமை என்றுமழியாதிருக்க தங்கள் கரத்தினாலேயே குழந்தைக்கு முடிசூட்ட வேண்டுகிறேன் என்றார்.

“ வித்யா வல்லபா! பரமதிருப்தி ஒன்றும் குறைவுவராது. அப்படியே ஆகட்டும் ” என்று சொன்னார். உடனே பாங்கி மார்கள் ஸ்வர்ணத் தட்டுகளில் பொற்ஜிகளை விசைத்த இரு ரோஜா புஷ்ப ஹாரங்களும், முத்திரை மோதிரங்களும்

ரத்தின கிரீடங்களும், கொண்டு வந்து கொடுக்க, எல்லோருடைய வேண்டுகோளின் படியும் பிரபுவின் விருப்பப்படியும் இராமகிருஷ்ண ஜோஸ்யரே தம்பதிகளின் அருகில் வந்து; அவர்களை முத்திரை மோதிரம் மாலை முதலியன அணியச் செய்து, கிரீடத்தை இருகைகளாலும் எடுத்து கண்ணிலொற்றிக்கொண்டு அங்குள்ள சபையாரை நோக்கி, "உங்கள் அன்பார்ந்த வேண்டுகோளுக்கிணங்கி சுப்ரகாச மஹாராஜாவுக்கும், குணமணி மகாராணிக்கும் இக்குணவதிபுரத்தின் அரசனரசியாக மகுடம் சூட்ட இவ்வேளையே சுப வேளையாகையால் தற்போது அன்பர்களுடைய கோரிக்கையும் ஈடேற இந்த கிரீடங்களை அவர்கள் சிரசில் தரிக்கிறேன். இன்று முதல் நண்பர்கள் அனைவரும் அரசகட்டளையை மீறாது, சினமின்றி நம் தாய்தந்தையைப் போல் பாவித்துவரின் நம் தேசம் என்றென்றும் குறைவின்றி சீறும் சிறப்புமாய் விளங்கும். நம் மகாராஜரும் பிரஜைகளை பெற்ற பிள்ளைகளிலும் பதின்மடங்காய்ப் பாவித்து விஸ்வாசம்கொண்டு, முறையே ஆறிலொரு பங்கு பகுதிபெற்று, மனுநீதி தவறாமல் ராஜ்ய பரிபாலனம் செய்வாரென்றும், அன்பர்களே நாம் எல்லோரும் எந்தவித வித்யாசமுமின்றி சகலரும் ஒற்றுமையாய் உழைத்து நம்நாட்டை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டுவதும் நம் கடமையாகும்" என்று சொல்லி நிறுத்த, ஒரு பக்கம் மங்கள வாத்தியம் முழங்க மற்றொரு புறம் சுப்ரகாச மஹாராஜருக்கு ஜே! குணமணி மஹாராணியாருக்கு ஜே! ஜே என்று ஜெயகோஷம் செய்து ஆரவாரித்தனர்.

பின்னும், பாரதமாதாவுக்கு ஜே! பாரதநாடு வாழ்க! தேசத் தொண்டர்கள் அனைவரும் வாழ்க! அரசனும் அரசியும் வெகு காலம் சீறும் சிறப்புமாய் வாழ்க! என்று கத்தினார்கள். பதினெட்டுவாத்தியங்களும் அண்டங்கிடுகிடுக்க முழங்க, பேரிகைகள் சப்திக்க, வேட்டுகள் தகர்க்க, வேதியர்கள் வேதங்கள் ஓத, கவிவாணர் கவிகளை பாட, தேவர்களும் மனச் சந்தோஷமேலிட்டு பூமாரி பெய்ய, இராஜ தம்பதிகள் மகுடம் தரித்தனர். இதைக் கண்ணுற்ற தேவர்களும், சபையிலுள்ள பெரியோர்களும் இராஜ தம்பதிகளை ஆசீர்வதித்தனர். கிருஷ்ண பரமாத்மாவும் ருக்மணி, பாமா, சமேதராய் ஆகாயத்தினின்றும் ஆசீர்வதித்

தார். பார்வதி தேவியும், பரமசிவனும், வாணியும், வேதனும், சாயா தேவியும் ஆதித்தனும் இன்னும் மற்றும் தம்பதி ஸமேத ராய் மங்களமாய் வாழக்கடவீர் என்று ஆசீர்வதித்து புஷ்பங் களை வாரி வாரி இறைத்தனர்.

சகலலோகமும் புகழச் செங்கோல் கொண்ட, சுப்ரகாச னும் மணிமுடி துலங்க, இருபுறமும் பெண்கள் வெண்சாமரம் போட, சிம்மாசனத்திலிருந்து தாமோதரனைப் பிரதம மந்திரி யாகவும், ரத்னகேசய்யர் (சுகந்தாவின் புருஷன்) ஸுஜீவன் மற் றையோர்களை மற்ற மந்திரிகளாகவும் கொண்டு, மற்றும் அவ் வூரிலுள்ள ஜனங்களில் பலருக்கு இராஜ உத்தியோகங்கள் கொடுத்தும், இராமகிருஷ்ண ஜோஸ்யரை அரண்மனைப் புரோ கிதராகவும் கொண்டு, அந்தணர்களுக்கு அநேக தானதர்மங் கள் கொடுத்து, இதர ஜாதியார்களுக்கும் ஏராளமான வெகுமதி களை வழங்கி, சமஸ்த பேர்களும் சந்தோஷிக்க, தேவதாஸிகள் அபிநயம், டான்ஸ் முதலிய பலவித நாட்டியங்கள் ஆட, சங்கீத வித்வான்கள் பலரும், கர்ணாம்ருதமான கீதங்களைப் பாடவும், எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான்.

அப்போது அந்நகரில் அஷ்டலக்ஷ்மியும் இஷ்டமுடன் தாண்டவமாட, மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கோட்டை கொத்தளங்களும், புஷ்பவனங்களும், பூந்தோட்டங் களும், ஆறுகளும், அகழிகளும், புண்ணிய நதிகளும் நிறைந்து, சிவலாய, விஷ்ணு ஆலயங்களிலும் ஆறுகால அபிஷேகம், பூஜை அலங்காரங்களும், சோடச உபசாரத்துடன் குடவரி சையும், முறையே நடந்துவர, மங்காத சூரியன்போல் பிரகாசிக் கும் அரசரின் ஆக்ஞையைக்கடவாமல் குணவதிபுர ஜனங்களெல் லாம் ராஜப்பிரியர்களாக வசித்து வந்தார்கள்.

குணமணியும் ஸுப்ரகாசரும் அல்லும் பகலும் அனுதின மும் ஸ்ரீ ஹரிகேசன் பக்தியில் ஈடுபட்டு பெற்றோர் சொல் தவறா மலும், பிராம்மண விஸ்வாசத்துடனும், பிரஜைகளிடத்தில் அதி

அன்புடனும், இருந்துவந்தார்கள். அமராபதியோ அல்லது அழகாபுரியோவென ஐயுறுமாறு குணவதிபுரத்தை பூலோக ஸ்வர்க்கமெனமதித்து அந்நகரவாசிகளும் ராஜ குடும்பத்தவர்களும், சகலஜீவராசிகளும் சுகஜீவியாய் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

ஜயம்!

மங்களம்! மங்களம்! மங்களம்!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

வந்தேமாதரம்.